# இதயத்தின் சாரலாம்

## 1



நாதஸ்வர ஓசையுடன் அந்தக் கல்யாண மண்டபம் களை கட்டியிருந்தது. சீரியல் விளக்குகளால் அலங்கரிக் கப்பட்ட கல்யாண மண்டபத்தின் முன்புறத்தில் 'ஆகாஷ் வெட்ஸ் அனுராதா' என்ற தட்டி வைக்கப்பட்டிருந்தது. ஷாமியானா கட்டப்பட்டிருந்த வாயிலில் வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்தன. இருபுறமும் குலை தள்ளிய அதன் தோற்றம் கரம் குவித்து வரவேற்பது போல் அழகாக இருந்தது. வாசலின் இரு பக்கமும் குத்து விளக்கு ஓவி யத்தின் மேல் பொருத்தப்பட்டிருந்த சீரியல் விளக்குகள்

dsc00550.jpg (3072x2304x24b jpeg)



ஒளிர்ந்தது. பட்டுப்புடவை சரசரக்க திருமண வீட்டின் முக்கிய உறவினர்கள் இங்கும் அங்கும் பரபரப்பாய் நடந்து கொண்டிருந்தனர். தூரத்து உறவினர்கள் மண்டபத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்து கதை பேசிக் கொண்டிருந்தனர்.

வாசல்புறமாய் நீண்ட டேபிளின் மேல் விரிப்பு விரிக்கப்பட்டு அதன் மேல் சந்தனக் கிண்ணமும், குங்குமச்சிமிழும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் அருகில் ஒரு தட்டு நிறைய ரோஜா மலர்களும் இன்னொரு தட்டு நிறைய கற்கண்டும் இருந்தன.

வாயில்புறமாய் நின்று வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தாள் மாப்பிள்ளை ஆகாஷின் தாயார் வசுந்தரா. ஒரு பருமனான பெண்மணி. கழுத்து நிறைய நகைகளும் கைகளில் இடைவெளி இல்லாமல் தங்க வளையல்களையும் அடுக்கிக் கொண்டு காரில் வந்து இறங்க,

''வாங்க அண்ணி.. நீங்கள்ளாம் இப்போதுதான் வருவதா? மூன்று நாளைக்கு முன்னாலேயே வந்து விட வேண்டாமா?'' என்று உபசாரமாய் கூறியபடி வரவேற்றாள் வசுந்தரா.

''நாளைக்குக் காலையில் நடக்கப் போகிற கல்யாணத்துக்கு முதல் நாள் ராத்திரியே வந்து விட்டேனென்று சந்தோசப்படு'' என்றாள் அவள்.

''என்ன அண்ணி இப்படிச் சொல்றீங்க. இப்ப நிச்சயதார்த்தம் நடக்கப் போகுது. அதுக்கு நீங்க இருக்க வேண்டாமா?''

''எதுக்குடியம்மா.. என் மகளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் வேறு இடத்தில் நீ நிச்சயம் பண்ற



வைபவத்தை நான் கண் குளிரப் பார்க்கலை என்கிற குறையா உனக்கு?''

''என்ன அண்ணி செய்கிறது. இங்கே முடியும் என்று யார்தான் நினைத்துப் பார்த்தார்கள்? இன்னார்க்கு இன்னார்ன்னு இறைவன் எழுதி வைத்திருக்கிற கணக்கை யாரால் மாற்ற முடியும்?''

''இறைவன் எழுதி வைத்த கணக்கில்லை வசுந்தரா.. தொண்டைமான் போட்ட கணக்கு. சரியான கிழவரில்ல அந்த ஆளு. உன்னையும் உன் புருசனையும் வளைக்க முடியாதுன்னு ஆகாஷை வளைச்சுப் போட்டு விட்டுப் போயிட்டார்.''

''எதுவாக இருந்தால் என்ன அண்ணி. கல்யாணம் பேசி மணவறை வரைக்கும் வந்தாகி விட்டது. இனிப் போனதைப் பேசிப் புண்ணியமென்ன? நடக்கிறதைப் பார்ப்போம். எங்களுக்கென்ன வேண்டும்? ஆகாஷின் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்.''

''கழுவுற மீனில் நழுவுகிற மீனாய் பதில் சொல்கிற கெட்டிக்காரிதான். இந்தக் கெட்டிக்காரத்தனத்தை பையனின் கல்யாண விஷயத்தில் காட்டியிருந்தால் பாராட்டியிருக்கலாம். அதில் கோட்டை விட்டு விட்டு பெரிதாய் எல்லாம் தெரிந்தவள் போல் பேசிப் பிரயோசனம் என்ன சொல்லு..''

''ஏன் அண்ணி இப்படிச் சொல்றீங்க?''

''பின்னே என்ன வசுந்தரா.. எனக்கும் உன் அண்ணனுக்கும் இருக்கிறதோ ஒரே பெண். மதுரையில் கோட்டை மாதிரி பங்களா, கார். கிராமத்தில் வயல் வரப்பு தோட்டம் துரவு, இருநூறு பவுன் நகை செஞ்சு வைத்திருக்

கிறோம். என் பெண்ணைக் கல்யாணம் பண்ணினால் ராஜா மாதிரி உட்கார்ந்து சாப்பிட்டிருக்கலாம். அதை விட்டு விட்டு இரண்டு அண்ணன் இரண்டு அக்காள்களுக்கு பின்னால் ஐந்தாவதாப் பிறந்த பஞ்ச வர்ணக் கிளியைக் கல்யாணம் பேசி முடிச்சிருக்கயே... இது பெரிய கெட்டிக்காரத்தனமா?''

''பொண்ணு மூக்கும் முழியுமா ரதி மாதிரி இருக்காளே அண்ணி. படிச்சு வேலைக்குப் போறா... நாங்க அதைப் பார்த்தோம்.''

வந்த மகராசி வாயை அடக்கிக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

'ஸ்ஸ் அப்பாடா.. இப்பவே கண்ணைக் கட்டுதே...' என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்ட வசுந்தராவின் அருகே வந்த மருதநாயகம்,

''எதுக்குடி இப்படி ஒரு பெருமூச்சு விடறே?'' என்று வினவினார்.

''மூச்சு விடறது கூடக் குத்தமா?''

''ஏண்டி.. நல்ல நாளும் அதுவுமாய் இப்படிப் பெருமூச்சு விட்டால் அது குத்தமில்லாமல் வேறு என்னடி? நம் வீட்டில் நடக்கப் போகும் முதல் கல்யாணம். நம் மூத்த மகனின் கல்யாணம். சிரிச்ச முகமாய் இருப்பியா... அதை விட்டுவிட்டு சுண்டிப்போன கத்தரிக்காய் போல முகத்தை வைத்துக்கிட்டு இருந்தால் என்ன அர்த்தம்?''

''உங்க சின்னம்மா மகள் ராஜாத்தி வந்திருக்கிறாள்.''

''அதுதான் உன் முகம் வாடிப்போச்சா. அது குணம் தான் உனக்குத் தெரியுமே... நீ ஏண்டி அதுகிட்டப் போய்



''அதுகூட வாய் வளர்க்கணும்னு எனக்கு ஆசை பாருங்க... நீங்க வேறு எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றிக்கிட்டு, வந்த மகராசியை வான்னு கூப்பிட வேணாமா?''

''கட்டாயம் கூப்பிடணும்.''

''அதைத்தான் செஞ்சேன். உடனே மகராசி வாயைத் திறந்திட்டா.. இவளோட அண்டங் காக்கா கருப்பு.. சிற்றானைக் குட்டி மகளை நம்ம ஆகாஷுக்குக் கட்டி வைக்கலையாம்... ஸ்கூல் பக்கமே எட்டிப் பார்க்காத அந்த அழகுப் பைங்கிளி.. இவளோட சொத்துக்கு வாரிசாம். அதை விட்டுவிட்டு கெட்டிக்காரத்தனமில்லாமல் இந்தப் பெண்ணை பேசி முடித்திருக்கிறோமாம்.''

''ஓ... அதுதான் நீ அப்படி மூச்சு விட்டாயா... இந்தா.. இந்த கூல்டிரிங்கைக் குடி. கல்யாண வீட்டிற்கு நாலு பேர் வருவாங்க.. நாலு விதமாய் தான் பேசுவாங்க. நாமதான் சமாளிக்கணும். அதுதானே கெட்டிக்காரத்தனம். அதை விட்டுவிட்டு...''

''போதும்.. போதும்.. சந்தடி சாக்கில் என் கெட்டிக்காரத்தனத்தை குறை சொல்ல வேண்டாம். உங்க பரம்பரைக்கு இருக்கிற கெட்டிக்காரத்தனம் எனக்குச் சுட்டுப் போட்டாலும் வராது...''

''சரி.. சரி.. இப்போது அந்தக் கதை எதற்கு? நம் சொந்தக் கதையை பார்ப்போம். வாங்க மச்சான்.. இப்பத்தான் வருவதா.. நீங்களே இப்படி வந்தால் எப்படி?''

''இப்போதாவது வந்தோமே என்று சந்தோசப்படுங்க. என் வீட்டில் ஒன்றுக்கு இரண்டு பெண்கள் இருக்க ஊரார் வீட்டில் பெண் எடுப்பீர்கள்.. நான் உங்கள் கல்யாணச் சோற்றைச் சாப்பிட ஒரு வாரத்திற்கு முன்னாலேயே வந்துவிட வேண்டும். அப்படித்தானே.''

''அடடா... இதுக்காகவா மச்சான் இவ்வளவு கோபப் படறீங்க. உங்களுக்கு இருப்பதோ இரண்டு பெண். இரண்டில் ஒன்றைக் கல்யாணம் பண்ணினால் இன்னொரு பெண்ணிற்கு வருத்தம் வராதா? அதற்குத்தான் வெளியே பெண் எடுக்கிறேன்.''

''பிழைச்சுக்குவீங்க மச்சான். ஆனால் உங்களைக் குற்றம் சொல்லி என்ன செய்ய? தொண்டைமான் கிட்ட ஆகாஷ் அதிகம் பாசம் வைக்காமல் இருந்திருக்கணும். இப்ப மாட்டிக்கிட்டு விழிக்கறீங்க.''

''இதில் மாட்டிக்கிட்டு விழிக்க என்ன இருக்கு. பெண் பட்டதாரி, அழகானவள்.. நல்ல குடும்பம்.. இது போதாதா?''

''போதும்.. போதும்..''

வந்தவர் அவசரமாய் உள்ளே செல்ல மருதநாயகம் வாயைத் திறந்து 'ஊப்ப்...' என்று மூச்சுவிட்டு ஆசுவாசமானார். அவர் தோற்றத்தைக் கண்டு வாய் பொத்தி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்ட வசுந்தரா.

''இப்போது புரிகிறதா என் அவதி?'' என்று கேட்டாள்.

''புரிகிறது... நன்றாகப் புரிகிறது. அது யாரு கூட்டமாய் வாரது?'' என்று கண்கள் கூர்மையாக வினவினார்.

''பஸ் நிற்கிறது தெரியவில்லையா? அன்னலட்சுமி புரத்துக்காரங்க. பெண் வீட்டில் பஸ் பிடித்து அழைத்து வந்திருக்கிறார்கள். வாங்க அண்ணா, வாங்க மதினி.. உள்ளே போங்க.. அக்கா வாங்க.. மாமா எங்கே நீங்கள் தனியாகத்தான் வந்தீர்களா?'' வசுந்தரா மும்முரமாய் அவர்களுடன் பேசிக் கொண்டே உள்ளே அழைத்துப் போனாள்.



ஆட்டோ ஒன்றிலிருந்து இறங்கிய பெரியவர் ஒருவர் ''என்ன மருதநாயகம் தனியா வாசலில் நிற்கிற? வசுந்தரா எங்கே?'' என்று வினவிக் கொண்டே வந்தார்.

''அன்னலட்சுமிபுரத்துக்காரங்க வந்திருக்காங்க. உள்ளே கூட்டிப்போய் உட்கார வைக்கப் போயிருக்கிறாள்.''

''ஏண்டா.. நீ பெண்ணைப் பெற்றவனா.. இல்லை மாப்பிள்ளையைப் பெற்றவனா?'' இடக்காய் வினவியது பெரிசு.

''இது என்ன பெரியப்பா இப்படிக் கேட்கறீங்க? என் மகன் ஆகாஷுக்குத்தான் கல்யாணம். ஆமாம்.. நீங்க யாருக்குக் கல்யாணமென்று வந்தீங்க?''

''உன் மகன் கல்யாணமுன்னுதான் வந்தேன்.''

''அப்புறம் ஏன் சந்தேகம்?''

''என்னவோ நீதான் பொண்ணு வீட்டுக்காரன் மாதிரி அன்னலட்சுமிபுரத்துக்காரங்களை இந்தத் தாங்கு தாங்குகிறாயே.. அதுதான் கேட்டேன்.''

''ஏன் பெரியப்பா.. பொண்ணு வீட்டுக்காரங்களுக்கு மரியாதை கொடுத்தால் அது ஒரு தப்பா?''

''பின்னே இல்லையாடா? மாப்பிள்ளை வீட்டுக்காரனாய் லட்சணமாய் நடந்துக்க. இல்லைன்னா பின்னாடி உனக்குத்தான் கஷ்டம்.''

''சரி பெரியப்பா... இப்ப நீங்க உள்ளே போங்க.''

மருதநாயகம் வேறு ஒருவரை வரவேற்கப் போய்விட்டார். ரிசப்ஷன் மேஜையின் பின் நின்று கொண்டிருந்த ஆனந்தியிடம் வந்த பரசுராமன்.

''ஹாய் ஆனந்தி.. ஹவ் ஆர் யூ?'' என்றான்.

''பைன் அண்ணா.. ஏன் லேட்..?''

''வேலையிருந்ததும்மா.. ஆகாஷ் எங்கே.. மாப்பிள்ளை ரூமில் தானே இருக்கிறான்...?''

''இல்லை அண்ணா.. மொட்டை மாடியில் இருக்கிறார்.'' ஆனந்தியின் முகத்தில் சங்கடம் தெரிந்தது.

''ஏன் ஆனந்தி.. எனிதிங் ராங்?''

''ம்ம.. அண்ணாவுக்கு இன்றைக்கு நிச்சயதார்த்தம். விடிந்தால் கல்யாணம் பட்.. அவர் மூட் அவுட்டாகவே இருக்கிறார்.''

''சேச்சே.. அப்படியெல்லாம் இருக்காது. புது மாப்பிள்ளை இல்லையா டென்ஷனாய் இருப்பான். நான் போய் விசாரிக்கிறேன். நீ கவலைப்படாதே. அப்பா.. அம்மா எங்கே?''

''இந்நேரம் வரைக்கும் இங்குதான் நின்று கொண்டிருந்தாங்க. இப்போதுதான் உள்ளே போனாங்க.''

''ஒகே.. நான் உள்ளே போய் பார்த்துக் கொள்கிறேன்.''

''அண்ணா...!''

''எனனம்மா...?''

''அண்ணன் மூட் அவுட்டாக இருப்பதை அப்பாம்மாவிடம் சொல்ல வேண்டாம்.''

பரசுராமின் முகம் மென்மையானது. அந்தத் தங்கைக்கு அவளது அண்ணன் மேலிருக்கும் பாசம் அவனை நெகிழ வைத்தது.

''எனக்கும் தெரியும்மா. நான் பார்த்துக் கொள்கிறேன்.''

பரசுராம் மண்டபத்துக்குள் நுழைந்தான். கல்யாண வீட்டிற்கே உரிய ஓர் வாசம்... பெண்களின் கூந்தல்



பூவின் வாசமா.. அவர்கள் உடுத்தியிருக்கும் உடைகளில் வரும் வாசனைத் திரவியங்களின் வாசமா.. சந்தனத்தின் வாசமா.. இல்லை இவை அத்தனையும் கலந்து வரும் வாசமா.. என்று இனம் பிரிக்க முடியாத இதமான வாசம் எங்கும் கமழ்ந்தது.

ஆனந்த ஆரவாரத்துடன் ஒருவரிடம் ஒருவர் பேசிக் கொண்டிருந்த சூழலை ஓர் வினாடி நின்று ரசித்தான் பரசுராம்.

உறவினர்கள் ஒன்று கூடும் இடங்களில் இருக்கும் உற்சாகம் இங்கும் இருந்தது. நலம் விசாரித்தல்.. கேலியும் கிண்டலும் செய்து கொள்தல்.. இது போக திருமணம் செய்து கொள்ளும் முறையில் உள்ளவர்களின் பார்வைப் பரிமாற்றங்கள்... பரசுராமனுக்கு அங்கே சற்று நேரம் அமர வேண்டும் போல் இருந்தது.

ஆனால் யாருடைய கல்யாணத்திற்கு வந்திருக்கிறானோ அவன் மொட்டை மாடியில் தனியே நிற்கிறானாமே...

''டேய்.. பரசு...'' மருதநாயகம் அருகே வந்தார்.

''ஏண்டா இவ்வளவு நேரம் கழித்து மாப்பிள்ளைத் தோழன் வந்தால் மாப்பிள்ளை எப்போது ரெடியாவது.. போ... போ... சீக்கிரம் அவனை ரெடியாக்கு.''

''இதோ போகிறேன்ப்பா.''

''பரசு.. இப்போதுதான் வருவதா..'' யாரிடமோ பேசிக் கொண்டிருந்த வசுந்தரா கத்தலாய் அழைத்தாள்.

''ஸாரிம்மா... லேட்டாகிடுச்சு.''

''எங்கே போகிறாய்? டிபன் சாப்பிடவா.''

''ஆகாஷை பார்த்துவிட்டு வருகிறேன்.''

மாடிப்படியில் ஓடி வந்து கொண்டிருந்த குழந்தைகளின் மேல் இடித்து விடாமல் ஒதுங்கி மொட்டை மாடிக்கு ஏறிச் சென்றான் பரசுராம். யாருமில்லாத மொட்டை மாடியில் தனிமையில் ஆகாயத்தை வெறித்துக் கொண்டிருந்த ஆகாஷை பின்னாலிருந்து நெருங்கினான்.

## 2



பரசுராம் மிக மெதுவாக அவனை அணுகினான். கைகளை முன்புறம் கட்டிக் கொண்டு,

''ஆகாஷ்...'' என்று அழைத்தான்.

ஜீன்ஸ் பேண்டின் இரு பாக்கெட்டுகளிலும் கைகளை விட்டுக் கொண்டு கால்களை அகல விரித்து ஓடும் பஸ்ஸில் பேலன்ஸ் பண்ணுவது போல் நின்று கொண்டிருந்த ஆகாஷ் திரும்பினான்.

பரசுராம் அவன் முன்னால் கையை விரித்து,

''என்னடா இதெல்லாம்?'' என்று வினவினான்.

''எது...''

''நீ பண்ணும் லொள்ளுதான்... ஏண்டா கல்யாண மாப்பிள்ளையாடா நீ? கீழே உன் கல்யாண வேலைகள் நடந்துகிட்டிருக்கு விடிந்தால் கல்யாணம்.. இன்னும் கொஞ்ச நேரத்தில் நிச்சயதார்த்தம் நடக்கப்போகுது. நீ



விண்வெளி ஆராய்ச்சி பண்ணுகிறாய்.. எதுக்குடா..? பிடிக்கவில்லையென்றால் விட்டுத் தள்ள வேண்டியது தானே...''

''எதை விட்டுத் தள்ளச் சொல்கிறாய்?''

''இந்தக் கல்யாணத்தை... அந்த அனுராதாவை...''

''ஏய்ய்...'' ஆகாஷ் பரசுராமன் சட்டையைப் பிடித்து விட்டான். பரசுராம் அசையாமல் அவன் முகம் பார்த்துக் கொண்டே நின்றான். கொஞ்சம் கொஞ்சமாய் ஆகாஷின் கோபம் குறைந்தது. பரசுராமின் சட்டையை விட்டான். அவன் பிடித்ததால் ஏற்பட்டிருந்த சுருக்கங்களை நீவி விட்டான். முகத்தில் குற்ற உணர்வுடன்.

''ஸாரி..'' என்றான்.

''எதற்கு?''

''பரசு...''

ஆகாஷ் மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரில் அமர்ந்து தலையைக் குலுக்கிக் கொண்டான். எல்லையில்லாத வேதனை அவன் குரலில் தெரிந்தது.

''ஆகாஷ் திரும்பவும் சொல்கிறேன். இவ்வளவு மனப் போராட்டத்தோடு அவளை நீ மணக்க வேண்டுமா? வேண்டாமென்றால் விட்டுவிடு.''

''முடியவில்லை.''

''எது முடியவில்லை...''

''அவளை வேண்டாமென்று விட்டுத் தள்ள...''

''அப்படியானால் கலகலப்பாய் கீழே இறங்கி வா...''

''அதுவும் முடியவில்லையே..''

''ஏண்டா... முன்னாலும் போக மாட்டேன். பின்னாலும் போகமாட்டேன்னு அடம் பிடித்தால் எப்படிடா? ஒன்று அவளை வெறுத்து ஒதுக்கிவிடு.''

''பரசு.. எப்படிடா என்னால் அவளை வெறுக்க முடியும்?''

''அப்போது சந்தோசமாய் கல்யாணம் பண்ணிக்கொள்.''

''அதுவும் முடியலைடா..''

''வருவது வரட்டும்ன்னு கல்யாண மாப்பிள்ளையாய் நீ இருப்பதைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் தூக்கிப் போட்டு மிதிச்சிருவேன். ஏண்டா இப்படி கடுப்படிக்கிறாய்? உனக்கு இவ்வளவு சஞ்சலம் இருந்தால் ஏண்டா கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டாய்?''

''வாக்குக் கொடுத்து விட்டேனேடா.''

''யாருக்கு.. தொண்டைமான் தாத்தாவிற்கு கொடுத்த வாக்கைப் பற்றியா சொல்கிறாய்? அவர் வாக்குக் கேட்டால் நீயேன் கொடுத்தாய்? அவரென்ன உனக்கு சொந்தமா? பந்தமா?''

''என் மரியாதைக்கு உரியவர்.''

''மரியாதைக்கு உரியவர் காசு பணத்தைக் கேட்டால் கொடுக்க வேண்டியதுதான். வாக்குறுதியைக் கேட்டால் கொடுத்து விடுவதா?''

ஆகாஷ் உதடு கடித்து மௌனமாக இருந்தான்.

''எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா ஆகாஷ்.''

''என்ன..''

''நீ அவருக்கு கொடுத்த வாக்குறுதிக்கு அவர் மேல் வைத்திருந்த மரியாதை மட்டும் காரணமில்லை...''

S.NO: 2728.



''வேறு என்ன?''

''அவளுடைய பேத்தி மேல் நீ வைத்திருக்கும் காதலும்தான் காரணம்.''

ஆகாஷ் பதில் பேசாமல் மௌனித்தான். பரசுராம் தொடர்ந்தான்.

''கிடைத்த வாய்ப்பை நீ பயன்படுத்திக் கொண்டாய்.. எங்கே இல்லையென்று உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.''

''ச்சு...'' சலித்துக் கொண்டான் ஆகாஷ்.

''அவள்மேல் இவ்வளவு காதலையும் ஆசையையும் வைத்துக் கொண்டு ஏண்டா கிடந்து மறுகுகிறாய்?''

''நான் மட்டும் அவளைக் காதலித்தால் போதுமாடா? என் மனதில் மட்டும் அவள் மேல் ஆசையிருந்தால் போதுமாடா? அவளும் என்னைக் காதலிக்க வேண்டாமா? அவள் மனதிலும் என் மேல் ஆசை எழ வேண்டாமா?''

''நாளைக் காலையில் என்ன நடக்கப் போகிறது?''

''கல்யாணம்தான் வேறு என்ன?''

''அது முடிந்து அவள் கழுத்தில் ஒரு தாலியை நீ கட்டி விட்டால் அதற்கு அப்புறம் அவள் உனக்கு யார்?''

''ஏண்டா... சான்ஸ் கிடைச்சிருச்சின்னு ரம்பம் போடுகிறாயா?''

''காரணமாகத்தான் கேட்கிறேன். பதில் சொல்லுடா.''

''அவள் எனக்கு மனைவி. வொய்ப்.. பெண்டாட்டி... போதுமா..''

''ஆஹா! எவ்வளவு ரசித்துச் சொல்கிறான் பார்...''

''டேய்...''

''உன் பெண்டாட்டி உன்னோடுதானே இருந்தாக வேண்டும்.''

''அடிக்கப் போகிறேன் பார்.''

''ஆகாஷ்... காலம் பூராவும் உன் நிழலில் வாழப் போகிறாள். இதைக் கொஞ்சம் யோசித்துப் பார்.''

''காலம் பூராவும்.. எலியும் பூனையுமாக வாழப் போகிறோம்.''

''மாற்றம் என்றாவது வரலாமில்லையா.''

''எனக்கு நம்பிக்கையில்லை.''

''நம்பிக்கையில்லாதவன் இந்த அளவுக்கு வந்திருக்கக் கூடாது.. எழுந்திரு.. கீழே எல்லோரும் உன்னைத் தேடுவதற்கு முன்னால் போகவேண்டும். வா..''

ஆகாஷ் எழுந்து பரசுராமைப் பின் தொடர்ந்தான். மாப்பிள்ளைக்கு கொடுக்கப்பட்ட அறைக்குள் அவர்கள் நுழைந்தார்கள். பரசுராம் ஆகாஷை பாத்ரூமிற்குள் தள்ளி விட்டான்.

''குளித்து பிரஷ்ஷாய் வெளியில் வா.''

சற்று நேரத்தில் புது உடை அணிந்து மிடுக்குடன் மாடிப் படிகளில் இறங்கி வந்த ஆகாஷை திருமண மண்டப மேடையில் நலங்கு வைப்பதற்காக நாற்காலியில் அமர வைக்கப்பட்டிருந்த அனுராதா நிமிர்ந்து பார்த்தாள். ஆகாஷின் பார்வை அவள் பார்வையோடு கலந்தது. ஒரு கணம் அவளும் பார்வையை விலக்கிக் கொள்ளாமல் அவனையே பார்த்தாள்.

அவன் பார்வையில் அவன் மனதிலிருந்த காதல் இல்லை. அவளை ஆராய்ச்சி பண்ணும் பார்வையாய்



அவன் பார்வை இருந்தது. அவள் மனதை அவள் பார்வை வழி கண்டுபிடிக்க முயல்வது போல அவனது பார்வை அவளை ஊடுருவியது.

அவள் பார்வையில் ஓர் எட்டாத தன்மை தெரிந்தது. பழைய பாடல் ஒன்றில் வருமே...

'சிரிக்கச் சொன்னால் சிரிப்பேன்

பார்க்கச் சொன்னால் பார்ப்பேன்

எனக்கென ஓர் உணர்ச்சி இல்லை தோழி' என்று..

அதுபோல் நடந்து கொண்டிருந்த திருமண நிகழ்வுகளில் எந்தவிதப் பற்றுதலும் இல்லாமல் அவள் அமர்ந்திருந்தாள்.

அவனை யாரோ ஒருவனைப் போல் அவள் பார்க்க அவனது புருவங்கள் முடிச்சிட்டன. பல்லைக் கடித்தவாறு வந்திருந்த உறவினர்களை வரவேற்க அவன் சென்றான். அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஆகாஷ்.. உன்னைச் சின்னப் பிள்ளையாய் இருக்கும் போது பார்த்தது. இப்போது நெடுநெடுவென்று வளர்ந்து கல்யாண மாப்பிள்ளையாக இருக்கிறாய்... எங்கே? யு.எஸ்.ஏ. என்று பெருமையாய் வாழப் போனேன். உறவுக்காரங்களுடன்தான் ஒட்டாமல் போய் விட்டேன். அதுதான் பிடிவாதம் பிடித்து உன் கல்யாணத்திற்கு ஓடி வந்து விட்டேன்.''

அவனது சித்தி கல்யாணி உற்சாகமாய் அவனைக் கட்டிக் கொண்டாள். அவளது பாசத்திற்குக் கட்டுப்பட்டு அவளுடன் பேசிக் கொண்டிருந்தாலும் ஆகாஷின் பார்வை மணமேடையில் அமர்ந்திருந்த திருமணப் பெண்ணையே சுற்றிச் சுற்றி வந்தது.

நீலக்கலர் பட்டுப் புடவையில் முந்தானையின் அரக்குச் சிகப்பில் ஜாக்கெட் அணிந்து ஒரு தேவதையின் அழகோடு அவள் அமர்ந்திருந்தாள். நீண்ட பின்னலில் ஜடை பில்லை வைத்துத் தைக்கப்பட்டு குஞ்சலம் தொங்கியது. காதுகளில் மிகப் பெரிய ஜிமிக்கிகள் தொங்க மாட்டல் மாட்டியிருந்தாள். நெற்றியில் நெற்றிச் சுட்டி. கைகளில் வளையல்கள். கழுத்தினில் அட்டிகை. அதற்குக் கீழே காசு மாலை. இடுப்பினில் ஒட்டியாணம்.

திருமணப் பெண்ணுக்கான அலங்காரத்தில் அவள் அழகு பன்மடங்கு பெருகித் தெரிந்தது. எந்தவித ஒப்பனையும் இல்லாமலேயே அவளைப் பார்த்தால் ஆகாஷின் மனதில் மோகத் தீ பற்றிக் கொள்ளும். இன்று இப்படி ஓர் அலங்காரத்தில் அவளைப் பார்த்தபோது அது கொழுந்து விட்டு எரிந்தது.

மனதில் தாபம் மூள அவளையே பார்த்தான். ஒரு சிறு பார்வை...? ஊஹூம்.. அவள் அவனிருக்கும் திசைப் பக்கம் திரும்பியே பார்க்கவில்லை. ஆகாஷின் முகம் இறுகியது.

'திமிர்.. அன்றிலிருந்து இன்றுவரை மாறாத திமிர். முதன் முதலாய் அவனைப் பார்த்தபோது முறைத்துக் கொண்டு நின்றாளே அதே திமிர்.'

அன்னலட்சுமிபுரம் என்ற அந்த அழகிய கிராமத்திற்கு அவன் போனவேளை நண்பகல் வேளை.

'இந்த வெய்யிலில் இந்தப் பட்டிக்காட்டிற்கு வந்து தொலைக்க வேண்டுமா' என்று அலுத்துக் கொண்டே தந்தை சொன்ன வீட்டைத் தேடினான்.

பெருமாள் கோவிலுக்கு வலது புறத் தெரு... வாசலில் வேப்ப மரம்... வீட்டைச் சுற்றி மரவேலி.. பச்சைக் கலர் பெயின்ட் அடித்த கம்பி கிராஸ் போட்ட வீடு...



அடையாளம் கண்டு வேப்ப மரத்தின் அடியில் தன் காரை நிறுத்தினான். மரக் கதவைத் திறந்து கொண்டு வீட்டு வாசல் படியேறினான். அழைப்பு மணியைத் தேடினான். காணவில்லை. கதவின் தாழ்ப்பாளில் சப்தம் எழுப்பினான்.

''யாரது...'' உள்ளேயிருந்து யாழின் நாதம் கேட்டது.

இவ்வளவு இனிமையான குரலை அவன் இதற்குமுன் கேட்டதே இல்லை. எனவே மீண்டும் அந்தக் குரலை கேட்க விரும்பி பதில் சொல்லாமல் தாழ்ப்பாளை மறுபடியும் சப்தமெழுப்பினான்.

''யாரதுன்னு கேட்பது காதில் விழவில்லை... செவிடா...?''

குரலைத் தொடர்ந்து கொலுசு சத்தம் கேட்டது. பாவாடை தாவணியில் ஓர் பருவச் சிட்டு கதவுக்கு அருகே வந்தாள்.

''ஏன் சார்.. யாருன்னு கேட்டது காதில் விழுகவில்லையா?''

பூப்போட்ட சீட்டிப் பாவாடை. சாதாரண ஷிபான் தாவணி. மிக நீண்ட பின்னல். மெல்லிய செயின்.. மல்லிகைச் சரம்.. ஒல்லியாய் உயரமாய் இருந்தாள். சிவந்த மேனி. அவளது அடர்ந்த கண் இமைகள் அவள் முகத்திற்கு தனி சோபையைக் கொடுத்தது.

முதல் பார்வையிலேயே அவளால் வசீகரிக்கப்பட்டு விட்டவனாய் ஆகாஷ் பேச்சிழந்து நிற்க அவள் அதட்டினாள்.

''காதுதான் செவிடென்றால் வாயும் பேச வராதா? ஊமையா?''

''ராதா... யாரும்மா வாசலில் வந்திருப்பது?'' வினவிக் கொண்டே ஒரு நரைத்த தலைப் பெரியவர் அங்கு வந்தார்.

''இதோ இங்கே நெடுமரம் போல் ஆடாமல் அசையாமல் நிற்கிறாரே.. இவர்தான் தாத்தா.''

''யாருன்னு கேட்டாயா?''

''அதெல்லாம் கேட்டுவிட்டேன். என் வாய் வலித்தது தான் மிச்சம். சார் செவிட்டூமை போல இருக்கிறது. ஒரு பதிலும் வரவில்லை.''

'என்னமாய் நக்கலும் நையாண்டியும் பண்ணுகிறாள்... திமிர்...' அன்று அதை ரசித்துப் பார்த்தான். இன்று அதை நினைத்துப் பல்லைக் கடித்தான்.

''ஆகாஷ் வாடா சீக்கிரம்.. எத்தனை நேரம் கூப்பிடுவது? காது என்ன செவிடா?'' கல்யாணி சித்தி மேடையிலிருந்து அழைத்தாள்.

'செவிடு..' என்ற வார்த்தையைக் கேட்டதும் அனுராதாவின் விழிகள் ஓர் முறை உயர்ந்து அவனைப் பார்த்து விட்டுத் தாழ்ந்தன.

அன்றைய நினைவு அவளுக்கும் வந்திருக்கும். எரிச்சலுடன் நினைத்துக் கொண்டவன் மேடையிலேறி சித்தியின் அருகே சென்று நின்று கேட்டான்.

''என்ன சித்தி..?''

''உன் பெண்டாட்டி ரொம்ப அழகுடா..''

'ரொம்பத் திமிரும் கூட' என்று நினைத்துக் கொண்டவன்,

''இதைச் சொல்லத்தான் கூப்பிட்டீர்களா?'' என்று கேட்டான்.



''உன் பெண்டாட்டிக்கு மோதிரத்தைப் போட்டு விடுடா...''

ஆகாஷின் உடல் சூடேறியது. அனுராதாவைப் பார்த்துக் கொண்டே மோதிரத்தை எடுத்து அவள் விரலருகே கொண்டு போனான். அவள் அவனை நிமிர்ந்தும் பார்க்காமல் விரல் நீட்டினாள். அவள் விரல் தொட்டு மோதிரம் அணிவித்தவனின் மனம் சிலிர்த்தது.

## 3



''ஏன் வசுந்தரா.. நிச்சயதார்த்தத்தை முதலிலேயே ஏன் பண்ணவில்லை?'' மண்டபத்திலிருந்த ஒரு பெண்மணி கேட்டாள்.

''கல்யாண நாள் கிட்டத்தில் இருந்தது. அதுக்குன்னு தனியாய் ஒரு தடவை செய்யாவிட்டால் என்ன? பந்தக்காலிலேயே பரிசம் போட்டு விடலாமென்று விட்டு விட்டோம்.''

''கல்யாண நாள் கிட்டத்தில் இருந்துச்சா? யார் கிட்ட கதை சொல்கிறாய்? தொண்டைமான் பெரியப்பா செத்து ஒரு வருஷம் ஆகி விட்டதே. அவர் சாகும்போது உன் மகன் வாக்குக் கொடுத்துச்சாமே.. அதனால்தான் இந்தக் கல்யாணமே நடக்குதாமே.. ஏன் வசுந்தரா.. தெரியாமல்தான் கேட்கிறேன். உன் மகனுக்கு பொண்ணு கொடுக்க நீ.. நான்னு.. ஆயிரம் பேர் வரிசை கட்டி நிற்கிறாங்க. உங்க வீட்டுக்காரர் ரிட்டயர்டு தாசில்தார்.

dsc00559.jpg (3072x2304x24b jpeg)



உன் மகன் காலேஜ் லெக்சரர். மதுரையில் காரும் பங்களாவுமாய் வளமாய் வாழ்க்கை நடத்தறே. வைகை டேம் பாசனத்தில் வற்றாத தண்ணீர் சுரக்கும் கிணற்றோடு வயல் வரப்பு சிந்துபட்டியில் இருக்கு. வருஷத்துக்கு ஆறு நூறு மூட்டை நெல் அடிக்கிறே.. நீ போய் இந்த இடத்தில் சம்பந்தம் பண்ணனும்னு விதியா. உன் மகனுக்குத்தான் என்ன வந்தது? யாரோ.. எவரோ.. சாகப்போகிற சமயத்தில் கையை நீட்டினா டபக்குன்னு கை அடிச்சுக் கொடுத்து விடறதா.. நான் கண்டாலும் கண்டேன்.. இப்படி ஓர் கூத்தை எங்கேயும் கண்டதில்லை...''

வாயைத் திறந்த பெண்மணிக்கு வாய் மூடும் நினைவில்லை. வசுந்தரா வாசலில் யாரையோ வரவேற்கப் போவது போல் அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.

''என்னம்மா.. இப்படி வேகமாய் வருகிறீங்க...?'' எதிரே வந்து கொண்டிருந்த பரசுராம் வினவினான்.

''உன் பிரண்ட் பண்ணி வச்சிருக்கிற வேலைக்கு நான் ஒரு இடத்தில் நின்று ஓர் ஆளோடு பேச முடிகிறதா?'' வசுந்தரா சலித்துக் கொண்டாள்.

''ஏம்மா... அவன் என்ன பண்ணினான்?''

''என்னன்னு சொல்வேன் பரசு? இந்தக் கல்யாணம் எப்போது முடியும்... இந்த ஜனக் கூட்டத்திலிருந்து எப்போது விடுபடுவேன் என்று இருக்கிறது. ஒற்றை மகனின் கல்யாணம். என் வீட்டில் நடக்கும் முதல் கல்யாணம்.. இப்படியா நடக்க வேண்டும்?''

''என்னம்மா.. நீங்களே இப்படிச் சொன்னால் எப்படி? இந்த இடத்தில் பெண் எடுப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?''



''பெண் அழகானவள்.. படித்தவள்.. எல்.ஐ.ஸி.யில் வேலை பார்க்கிறாள்... எனக்கு அதைப் பற்றியெல்லாம் குறை இல்லை...''

''வேறு என்னம்மா? ஆகாஷின் வேலைக்கும் உங்கள் வீட்டு அந்தஸ்திற்கும் இன்னும் அதிகச் சீர் வரிசையோடு பெரிய இடமாய் பெண் பார்க்க நினைத்தீர்களா?''

''ச்சு... ஒருத்தி கொண்டு வந்துதான் பிழைக்க வேண்டுமென்று ஆகாஷிற்கு தலை விதி இல்லைடா. அவனும் சரி.. அவனின் அப்பாவும் சரி.. வரதட்சணை சீர் என்று அதிகம் எதிர்பார்ப்பவர்கள் இல்லை. ஆகாஷின் அப்பா தாசில்தார்.. நான் என்ன சீர் வரிசையோடு வந்தேன்? இவருடைய குடும்ப வசதிக்கு என் பிறந்த வீட்டு வசதி ரொம்பக் கம்மிதான். என் மேல் ஆசைப்பட்டு இவர் வீட்டில் சொன்னாராம்.. என் மாமனார் வீட்டில் பெரிய மனதுடன் பெண் கேட்டு வந்து என்னை இவருக்குக் கல்யாணம் பண்ணி வைக்கவில்லையா? என் பிறந்த வீட்டு வசதிக்கு இந்தப் பெண்ணின் வீட்டு வசதி அதிகம்தான். பெண்ணோட அப்பா பேங்க் மேனேஜர். அண்ணன்கள் இரண்டு பேருமே என்ஜினியர்கள். அக்காக்களையும் நல்ல இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்காங்க. திருமங்கலத்தில் சொந்த வீட்டில் இருக்கறாங்க. அன்னலட்சுமிபுரத்தில் வயல்.. தோட்டம்.. வீடுன்னு இருக்கிறவங்க. இதிலெல்லாம் குறை இல்லை.''

''வேறு எதில் மனக்குறை?''

''சரியாச் சொன்னேடா பரசு. என் மனதில்தான் குறை. ஆகாஷ் ஆசைப்பட்டேன்னு பொண்ணு கேட்கப் போனால் அந்தக் கதையே வேறு. இல்லை நாங்களாய் நல்ல குடும்பத்துப் பொண்ணு... அழகு, படிப்பு,

வேலையென்று இருக்கும் பொண்ணுன்னு பெண் கேட்டு இந்தக் கல்யாணத்தை நடத்தி வைத்திருந்தால் அதுவும் நன்றாக இருந்திருக்கும். இப்போது அப்படி யெல்லாம் இல்லையேப்பா. அந்தப் பெரியவர் வாக்குக் கேட்டார்... இவனும் வாக்குக் கொடுத்தான். தட்ட முடியாமல் அவங்களும் பெண் கொடுக்கிறாங்க. நாங் களும் பெண்ணைக் கட்டுகிறோம் என்றல்லவா ஆகி விட்டது? கேள்வி கேட்கிற ஜனங்களுக்கு பதில் சொல்லி முடியவில்லை. எதற்குத்தான் இப்படி ஒரு வாக்கைக் கொடுத்தானோ...'' வசுந்தரா அலுத்துக் கொண்டாள்.

அப்போது மாப்பிள்ளையின் அறையிலிருந்த கட்டி லில் படுத்து கைகளை தலைக்குக் கீழ் அண்டை கொடுத்து விட்டத்தைப் பார்த்துக் கொண்டு இருந்த ஆகாஷும் அதையேதான் நினைத்துக் கொண்டிருந்தான்.

'நான் வாக்குக் கொடுத்திருக்கக் கூடாது...'

நிச்சயதார்த்த மேடையில் அவள் விரல் தொட்டு மோதிரம் போடுகிறான். ஒரு நாணம்.. ஒரு சிலிர்ப்பு.. ஒரு புன்னகை... எதுவும் இல்லாமல் உணர்ச்சியற்ற ஜடம் போல் அமர்ந்திருக்கிறாள். இவள் கழுத்தில் தாலியைக் கட்டி எப்படிக் குடும்பம் நடத்துவது? என்றுதான் அவள் இவனது உணர்வுகளைப் புரிந்து கொண்டிருக்கிறாள்? இன்று புரிந்து கொள்ள... என்றுமே அவளுக்கு அவன் மேல் ஓர் அலட்சியம்தான். அன்று முதன் முதலாய் பார்த்தாளே ஓர் அலட்சியப் பார்வை...! இன்றும் நெஞ்சைச் சுடுகிறதே.

''ச்ச்... இந்த வாய்தானே வேண்டாம் என்கிறேன். வந்திருப்பவர்கள் யாரென்று விசாரிப்பதை விட்டுவிட்டு அவர்கள் முன்னிலையிலேயே அலட்சியமாய் பேசுவதா?



முதலில் இவரிடம் மன்னிப்புக் கேள்'' பெரியவர் அன்று அவளைக் கடிந்து கொண்டார்.

''நான்தான் ஒருமுறைக்கு பலமுறை கேட்டேன் என் கிறேனே தாத்தா.. இவர் பதிலே சொல்லாமல் நின்றால் வேறு என்ன சொல்வது?'' அவள் ஆகாஷை முறைத் தாள்.

''சார்.. இவங்க சொல்வது உண்மைதான். இவங்க கேட்டாங்க. எனக்கு லேடிஸ் கிட்டப் பேச கொஞ்சம் சங்கோஜமாய் இருந்தது. அதனால் நான்தான் பதில் சொல்லவில்லை...'' அவன் பார்வையால் அவளை விழுங்கிக் கொண்டே பெரியவருக்குப் பதில் சொன்னான்.

'ஆஹா... பெண்களைக் கண்டால் நாணமாம்... வெட்கமில்லாமல் தாத்தா முன்னாலேயே என்னை சைட் அடித்துக் கொண்டு பேச்சைப் பார் பேச்சை.. ஜெகஜ் ஜாலக் கில்லாடிதான்.'

அவள் அலட்சியமாய் தன் பின்னலை விசிறி பின் னால் தூக்கிப் போட்டுக் கொண்டு பின்னலாட வீட்டின் உள்ளே சென்று மறைந்தாள். தாழ்வாரத்தில் போட்டிருந்த நாற்காலிகளில் ஒன்றைக் காட்டி,

''உட்காருங்க...'' என்று கூறியபடி இன்னொரு நாற் காலியில் அமர்ந்து கொண்டார் பெரியவர்.

பின்னலாட சென்றவளின் பின்னே மனம் ஓட அவள் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தவன் அவர் எதிரே அமர்ந்தான்.

''தம்பி யாரு...?''

''ஐயா.. நான் உங்க ஸ்டூடன்ட் மருதநாயகத்தோட சன்.''

''யாரு.. தாசில்தாரா இருக்கானே.. அந்த மருதநாயகமா?''

''ஆமாம் சார்.''

''நல்லது.. நல்லது.. மருதநாயகம் படிப்பில் கெட்டிக்காரன். எனக்கு விருப்பமான மாணவன்... பட்டப் படிப்பை என்னிடம் படித்தான். இப்போது நல்ல நிலைமையில் இருக்கிறான். ஒரு ஆசிரியனுக்கு என்ன வேண்டும்? அவனிடம் படித்த மாணவன் பெயரோடும், புகழோடும் வாழ வேண்டும்.. அதை கண்குளிர அவன் பார்க்க வேண்டும். அந்த வகையில் மருதநாயகம் எனக்கு மன நிறைவைத் தந்த மாணவன்... நீ என்ன படிக்கிறாய் தம்பி?''

''நான் எம்.பி.ஃல் முடித்துவிட்டு தஞ்சாவூரில் காலேஜ் லெக்சரராக இருக்கிறேன் ஐயா.''

''ராதா.. ராதா..'' பெரியவர் உள்ளே திரும்பி அழைத்தார். ஆகாஷ் ஆவலுடன் அவள் வரும் வழியைப் பார்த்தான்.

கொலுசு சத்தம் முதலில் கேட்க.. பின்னாலேயே அவள் ஒரு தட்டில் இரண்டு பெரிய நீண்ட தம்ளர்களோடு வந்தாள்.

''தம்பிக்கு.. மோர்... அடடே... நான் சொல்லும் முன்னாலேயே குறிப்பறிந்து கொண்டு வந்து விட்டாயா? கெட்டிக்காரப் பெண்...''

''இதில் குறிப்பறிய என்ன இருக்கிறது தாத்தா... நீங்கள் வெளியாள்களோடு பகல் நேரத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது என்னை எதற்குக் கூப்பிடுவீர்கள் என்று எனக்குத் தெரியாதா? நான் சர்வர் மாதிரி வந்து ஆர்டரைக் கேட்டுக் கொண்டு போவதற்கு நான்



கையோடு கொண்டு வந்து விடுவது பெட்டர் இல்லையா?''

''இதுக்கும் ஓர் விளக்கமா? தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள் தம்பி. இது என் கடைக்குட்டி பேத்தி. அனுராதா... பி.எஸ்ஸி., இரண்டாம் வருடம் படிக்கிறாள்.''

''எந்தக் காலேஜ்?'' மோர் தம்ளரை எடுத்துக் கொண்டே வினவினான் ஆகாஷ்.

''விருதுநகர் காலேஜ்..'' பெரியவரே பதில் சொன்னார்.

''இங்கேயிருந்து காலேஜ் போய் வருகிறாங்களா...?''

''இங்கேயிருந்தா..? இல்லை தம்பி... அவளுடைய தகப்பன். அதுதான் என் மகன். திருமங்கலத்தில் பேங்க் மேனேஜர். அங்கேயே வீடுகட்டி அவன் குடும்பத்தோடு இருக்கிறான். இவளுக்கு மூத்தது இரண்டு அண்ணன். இரண்டு அக்காக்கள் இருக்கிறாங்க. எல்லாம் படித்து முடித்துக் கல்யாணம் ஆகி ஆளுக்கொரு திசையில் பிரிந்து செட்டிலாயிட்டாங்க. இவள் படித்துக் கொண்டிருக்கிறாள். திருமங்கலத்தில் இருந்து தினமும் பஸ்ஸில் போய் வருவாள்...''

''அப்போ.. இங்கே யார் உங்களுடன் இருக்கிறார்கள்?''

''யாரும் ஏன் இருக்க வேண்டும்? இது என் வீடு.. நான் பிறந்து வளர்ந்த பரம்பரை வீடு. என் ஓய்வுக் காலத்தை தோட்டம் வயல்ன்னு பார்த்துக் கொண்டு கிராமத்தில் தான் கழிக்க வேண்டுமென்று முடிவு பண்ணியிருந்தேன். கொஞ்சக் காலம் என் மனைவி என்னோடு இருந்தாள். அவளும் போன பின்னால்.. விவசாயம்.. புத்தகங்கள் என்று மீதி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.. மருமகள் டவுனில் இருந்த பழகி விட்டாள்.

மகன் லீவு நாளில் காலையில் வருவான்.. இரவு வரைக்கும் இருந்து விட்டுப் போய் விடுவான். வீடு பெருக்கித் துடைத்துச் சமையல் பண்ணி வைக்க நம்ம தோட்டத்தைப் பார்த்துக் கொண்டு தோட்டத்து வீட்டிலேயே குடியிருக்கும் சின்னானின் மனைவி செல்லி வருவாள். காலையில் வந்து எல்லா வேலைகளையும் முடித்து விட்டு மூன்று நேரத்திற்கும் சமையல் பண்ணி எடுத்து வைத்துவிட்டுப் போய் விடுவாள். துணிகளையும் துவைத்துப் போட்டு விட்டுப் போய் விடுவாள். எனக்கென்ன தம்பி.. நிம்மதியான.. தனிமையான வாழ்க்கை.''

''அப்புறம் உங்கள் கடைசிப் பேத்தி மட்டும் இங்கே எப்படி...?''

''அதுக்கு தாத்தா மேல் பாசமும் ஒட்டுதலும் அதிகம். சின்ன வயதில் இருந்து காலாண்டு, அரையாண்டு, மே மாதம் லீவிற்கு எல்லாம் இங்கே வந்து என்னுடன் தான் இருக்கும். மற்ற நாட்களில் சனி, ஞாயிறு விடுமுறைக்கு என்று வந்து விடும். வருடத்தில் பாதி நாட்கள் இங்கேயே இருப்பதால் அதன் துணிகள், புத்தகங்கள் எல்லாம் இங்கே பாதி.. திருமங்கலத்தில் பாதியென்று இருக்கும்...'' பெரியவர் விவரித்துக் கொண்டிருக்கும் போது,

''நம் வரலாறு அவருக்கு எதற்குத் தாத்தா... அவர் வந்த வேலையென்னவென்று விசாரிப்பீர்களா.. அதை விட்டுவிட்டு நம் வீட்டுக் கதையை ஒப்பித்துக் கொண்டு இருக்கிறீர்கள்'' என்று கடிந்து கொண்டாள் காலி மோர் தம்ளர்களை எடுக்க வந்த அனுராதா.

''ஆமாம்.. ஐயா.. அவங்க சொல்வதும் சரிதான். உங்கள் வீட்டுக் .கதையைக் கேட்டு அதை நான்



நாவலாக எழுதி எழுத்தாளன்னு பெயர் வாங்கி விட்டால் என்ன செய்வது?'' எரிச்சலுடன் கூறினான் ஆகாஷ்.

''தாத்தா.. வீட்டுக்கு வீடு வாசல்படி. நம் வீட்டில் மட்டுமா நாவல் எழுத கதை கிடைக்கும்? அவர் வீட்டுக் கதையை விசாரியுங்கள். அதில் ஆயிரம் நாவல்களை நான் எழுதுகிறேன்... யாருகிட்ட... ம்?'' என்றபடி பின்னலாட உள்ளே சென்று விட்டாள் அவள்.

''கொஞ்சம் குறும்புக்காரி தம்பி.. என் பேத்தி.''

''நான் ஒன்றும் தவறாக நினைக்கவில்லை ஐயா. அவங்க சொன்னதும் சரிதானே. நான் வந்த வேலையை மறந்து விட்டுப் பேசிக் கொண்டிருக்கிறேனே.''

ஆகாஷ் தான் வந்த வேலையைக் கூறினான். 'தன் மாணவனின் மகன்' என்ற வாத்சல்யம் கொண்ட பெரியவரும் அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். விளைவு..?

ஆகாஷ் அனுராதாவை அடிக்கடி சந்திக்க நேர்ந்தது.

## 4



''ஐயா.. நான் பி.எச்.டி. பண்ணப் போகிறேன். அதற்கு உதவியாக சில நூல்களைத் தேடியபோது என் அப்பாதான் உங்கள் பெயரைக் கூறினார். தொண்டைமான் ஐயாவிடம் இல்லாத புத்தகம் எதுவுமில்லையென்றார். அதனால்தான் உங்கள் உதவியை நாடி வந்தேன்..'' மிக பவ்யமாய் கூறினான் ஆகாஷ்.

''அப்படியா...? ரொம்ப சந்தோசம். என்னிடமிருக்கும் புத்தகங்கள் உனக்கு உதவுமானால் அது எனக்கு மகிழ்ச்சி தான். எழுந்து என்னுடன் வாப்பா...'' தொண்டைமான் எழுந்து வீட்டிற்குள் சென்றார். ஆகாஷ் அவரைப் பின் தொடர்ந்தான்.

முன்னாலிருந்த அகன்ற நீண்ட தாழ்வாரத்தை அடுத்து சின்ன நடை வராண்டா இருந்தது. அதை அடுத்து நடுவே முற்றம் விட்டு நாற்புறமும் அறைகள். முன்னாலிருந்த வராண்டாவின் வலது பக்க ஓரமாய் மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகள்.

மருதநாயகம் அதில் ஏறினார். ஆகாஷ் உள்ளே அனுராதா எங்கேனும் தென்படுகிறாளா என்று விழிகளால் துழாவிய வண்ணம் மாடிப் படியேறினான். மாடி ஹாலைக் கண்டதும் வியந்து நின்று விட்டான்.

சுவர்கள் பூராவும் அலமாரிகளாய் தடுக்கப்பட்டிருந்தன. போதாத குறைக்கு மரத்தினால் செய்த ரேக்குகள் வேறு. எல்லாவற்றிலும் வரிசையாய் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு அடுக்கின் மேலும் அந்தப் புத்தகங்களைப் பற்றிய விவரம் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. ஹாலின் ஓரமாய் ஜன்னலை ஒட்டி பெரிய மேஜையும் சுற்றி நான்கு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. வேப்ப மரத்துக் காற்று சிலுசிலுவென வந்து கொண்டிருந்தது. அந்த இடத்தில் நிலவிய அமைதியும் குளுமையும் அவனை மிகவும் கவர்ந்தது.

''படிப்பதற்கு ஏற்ற சூழல்...'' என்றான் ஆகாஷ்.

தொண்டைமான் கண்களில் ஓர் ஒளியோடு அவனைப் பார்த்தார்.



''ஆமாம்... தம்பி... இது படிப்பதற்கு ஏற்ற இடம்தான். அது உங்களுக்குப் புரிந்ததில் எனக்கு நிம்மதி...''

''எதனால் ஐயா இப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''தம்பி.. என் சொத்து சுகமென்று நான் நினைப்பது இந்தப் புத்தகங்களைத்தான். இதுவரை இவற்றைப் பாது காத்து வந்திருக்கிறேன்.. இனிமேலும் என் காலம வரை இவை இப்படியே இருக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறேன்.''

''நான் உங்கள் புத்தகங்களை பாதுகாப்பாய் கையாள் வேன் ஐயா.''

''நிச்சயமாய் அதை நீ செய்வாய்.. எனக்குத் தெரியும்.. அதை இங்கே என் வீட்டிலேயே நீ செய்யலாமே.''

''புரிகிறது ஐயா.. புத்தகங்களை என்னுடன் எடுத்துப் போவதில் உங்களுக்கு விருப்பமில்லை.. இல்லையா?''

''ஒரு வகையில் அப்படித்தான். இங்கே நீ எப்போது வேண்டுமானாலும் வரலாம்.. எத்தனை நாள் வேண்டு மானாலும் இருக்கலாம். நான் சாப்பிடும் சாப்பாட்டை நீயும் சாப்பிடலாம்... என் தனிமையைக் குறைக்க ஒரு ஆள் வந்திருக்கிறாயென்று சந்தோசமே படுவேன். நிச்சயம் இடைஞ்சலாய் நினைக்க மாட்டேன். உனக்கு வேண்டிய புத்தகங்களை எடுத்து அமைதியாய் இங்கு உட்கார்ந்து படிக்கலாம்.''

ஆகாஷிற்கு அந்த ஏற்பாடு மிகவும் பிடித்து விட்டது. அவன் வார இறுதியில்தான் இங்கு வர முடியும்.. அதே நாளில்தான் அவளும் இங்கு வருவாள்...

அடுத்த வாரம் மிகவும் சந்தோசத்துடன் தன் காரை அன்னலட்சுமிபுரத்திற்கு செலுத்தினான் ஆகாஷ்.

வாசலில் காரை நிறுத்திவிட்டு சென்ற முறை செய்தது போல் கதவின் தாழ்ப்பாளை ஆட்டினான் ஆகாஷ்.

கொலுசு சத்தம் ஒலிக்க அவள் வந்தாள் கதவு திறந்தாள்.

''காது கேட்காது.. வாய் பேசாது.. கண் பார்வை எப்படி? குறைபாடு இல்லையே...?'' அவனை அலட்சியப் பார்வை பார்த்தபடி அவள் கேட்டாள்.

'கொழுப்பு.'

அவ்ன் அவளை லஜ்ஜையில்லாமல் மேலும் கீழும் ஓர்முறை பார்த்தான். அவள் உதடு கடித்தாள்.

'என்னமாய் லுக் விடுகிறான் பார்.. பெரிய ரோமியோன்னு நினைப்பு..'

''பார்வையிட்டு முடித்தாகி விட்டதா?'' கிண்டலாய் கேட்டாள்.

''இதெல்லாம் ஓர் நாளில் முடிகிற விஷயமில்லை'' அவன் கண்களில் விஷமம் வழியக் கூறினான்.

''என்னவோ.. பெண்கள் பேச்சுக்கு பதில் பேசக்கூடக் கூச்சம்ன்னு எங்க தாத்தாகிட்ட போன வாரம் கதை அளந்தீங்க... இப்ப அவர் இங்கே இல்லையென்றதும் இந்த சைட் அடிக்கறீங்க.''

''ஹை.. அப்ப உன் தாத்தா வீட்டில் இல்லையா?''

'''உன்'...? ஹலோ... லேடிஸ் கிட்ட மரியாதையாய் பேசத் தெரியாதா?''

''அது லேடிஸ் கிட்ட... உன்னைப் போல் டீன் ஏஜ் கிட்ட இல்லை.''

''இது வேறா..? போன வாரம் தாத்தா முன்னால் வாங்க..



''அது தாத்தாவுடைய பேத்தியிடம் பேசினது.''

''இப்போது சார் யாரிடம் பேசுகிறீர்களாம்.''

''அனுவுடன்.''

''அனுவா..? என் பெயர் அனுராதா சார்.''

''அதை சார்ட்டாய் கூப்பிட்டேன்.''

''அப்படியென்றால் ராதா என்று கூப்பிட வேண்டியது தானே? 'அனு' என்று கொஞ்சலாய் அழைப்பு என்ன வேண்டிக் கிடக்கு?''

'''ராதா' என்பது எல்லோரும் கூப்பிடும் பெயராயிற்றே.. எனக்கு நீ 'அனு'தான்...''

''நான் பார்த்தாலும் பார்த்தேன். உங்களைப் போல் தைரியசாலியைப் பார்த்தது இல்லை. நீங்கள் மட்டும் என்ன 'ஸ்பெஷல்?' ம்ம்..''

''உனக்கு நான் ஸ்பெஷலோ இல்லையோ.. எனக்கு நீ ஸ்பெஷல்தான் ஸோ.. நான் அப்படித்தான் கூப்பிடுவேன். அது சரி, நான் வந்தவுடன் என் கண் பார்வையைப் பற்றி ஏதோ சந்தேகப்பட்டாயே... அது ஏன்?''

''பக்கத்திலேயே காலிங் பெல் இருக்க... கதவைப் போட்டு ஏன் உடைக்கறீங்க. கண் தெரியவில்லையான்னு கேட்க நினைத்தேன். ஆனால் முட்டைக் கண்ணை முழிச்சுக்கிட்டு மேலும் கீழும் என்னை நீங்கள் பார்த்து வைத்த கள்ளப் பார்வையைப் பார்த்த பின் அந்தச் சந்தேகம் பறந்தே போச்சு.''

ஆகாஷ் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அந்நேரம் வாசல் பக்கம் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். தொண்டைமான் வந்து கொண்டிருந்தார். ஆகாஷின்

நடை உடை பாவனைகளில் ஓர் மாற்றம் வந்தது. மரியாதையான முகபாவனையுடன் நிமிர்ந்து நின்றான். அனுராதாவின் உதடுகளில் ஏளன முறுவல் ஒன்று உதித்தது. அதைக் கடைக் கண்ணால் கண்டும் காணாதவன் போல் நின்று கொண்டிருந்தான். தொண்டைமான் உள்ளே வந்ததும்.

''வாப்பா.. தொலைவிலேயே வீட்டு வாசலில் உன் கார் நிற்பது தெரிந்து விட்டது. வேகமாய் வந்தேன். வந்து ரொம்ப நேரமாகி விட்டதா?'' என்று அன்பாய் வினவினார்.

''எதற்கு அவசரமாய் வந்தீங்க ஐயா. மெதுவாய் வரலாமே. நான் நீங்கள் வரும் வரை காத்திருக்க மாட்டேனா?'' பணிவுடன் கூறினான் ஆகாஷ்.

''எதற்காகக் காத்திருக்க வேண்டும்? நீ தயங்கவே வேண்டாம். நேராய் மாடிக்குப் போய் படிக்க ஆரம்பித்து விடலாம்... ஏம்மா ராதா.. நீ தம்பியிடம் இதைச் சொல்ல வேண்டாமா? வாசலிலேயே நிற்க வைக்கலாமா? வளர்ந்து விட்டாய். இன்னும் விவரம் தெரியவில்லையே..'' பேத்தியை கண்டித்தார் தொண்டைமான்.

ஆகாஷின் விழிகளில் குறும்பு கூத்தாடியது. தொண்டைமான் அவன் பக்கம் திரும்ப கண நேரத்தில் விழிகளில் மரியாதையைக் கொண்டு வந்தான்.

''அவங்க மேல் தவறு இல்லை ஐயா. நான் படிக்கப் போக வேண்டுமென்று சொல்லியிருந்தால் தடுத்திருக்கவா போகிறார்கள்? இப்போதுதான் உங்கள் அனுமதி எனக்குக் கிடைத்து விட்டதே.. இனிமேல் பாருங்கள்..''



அவள், 'என்ன செய்வாய்..?' என்பது போல் புருவங்களை உயர்த்தினாள்.

''வாப்பா.. மாடிக்குப் போகலாம்..'' தொண்டைமான் செல்ல லேசாய் தாமதித்து நின்ற ஆகாஷ் அனுராதா விடம்,

''எதையோ சொல்ல விரும்புவதுபோல் இருக்கிறதே...'' என்று வம்புக்கு இழுத்தான்.

''இல்லை.. தாத்தாவின் முன் தாங்கள் காட்டிய மரியாதையைப் பார்த்து வியந்து நின்று விட்டேன்..'' என்றாள் அவள் நாடக பாணியில்.

''அதுதான் சொல்கிறேனே.. உன் தாத்தா வருவதற்கு முன் நீ எனக்கு அனு.. அவர் வந்தவுடன் நீ அவருடைய பேத்தி.''

''என்ன ஓர் தந்திரம்..'' அவள் பல்லைக் கடித்தாள்.

அவன் சிரித்துக் கொண்டே அவளுக்கு கை அசைத்து விட்டு மாடிக்கு ஏறினான்.

அவனுக்குத் தேவையான புத்தகங்களை எடுத்துக் கொள்ளும்படி கூறிய தொண்டைமான் அவனைத் தனிமையில் விட்டு விட்டு கீழே இறங்கிச் சென்று விட்டார். ஆகாஷ் தன் வேலையில் ஆழ்ந்து விட்டான். தன்னிடமிருந்த நோட்டில் குறிப்புக்களை எழுதிக் கொண்டிருந்தவனின் தவத்தை கொலுசு சத்தம் கலைத்தது. நிமிர்ந்து பார்த்தான்.

தன் கால் கொலுசுகளை சப்தமெழுப்பியபடி அனுராதா நின்றிருந்தாள். குறிப்பெடுத்துக் கொண்டிருந்த

முகவாயைத் தாங்கிக் கொண்டு அவளை மோகப் பார்வை பார்த்தான்.

''ஹலோ... என்ன பார்க்கிறீர்கள்?'' அவள் எரிச்சலுடன் வினவினாள்.

''இல்லை.. விசுவாமித்திரரின் தவத்தை மேனகை கலைத்தது போல் என் தவத்தை நீ கலைத்து விட்டாயே..'' அவன் கண்களில் சிரிப்பு இருந்தது.

''தேவைதான் எனக்கு. தாத்தா உங்களைக் கீழே கூப்பிட்டார்.''

''எதற்கு?''

''வந்து பார்த்தால் அல்லவா தெரியும்?''

அவள் முன்னே கிடந்த பின்னலை அலட்சியமாய் பின்னால் தூக்கிப் போட்டுக் கொண்டு திரும்பினாள். அவள் பின்னல் ஆகாஷின் முகத்தில் பட்டு விலக அவன் மெய் மறந்தான்.

''அனு..'' என்று மயங்கிய குரலில் அழைத்தான்.

அவன் குரலில் மாற்றத்தை உணர்ந்தவள் புரியாமல் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் பார்வையிலிருந்த ஏதோ ஒன்று அவளைப் பேச்சிழக்கச் செய்ய மின்னலென மாடிப் படிகளில் இறங்கி ஓடி மறைந்தாள்.

ஆகாஷ் அவள் பின்னாலேயே விரைந்து இறங்கினான். ஆனாலும் அவன் பார்வையில் அவள் தென்படவில்லை.

''வாப்பா... ஆகாஷ்..'' என்று வரவேற்றார் தொண்டைமான்.

''கூப்பிட்டீர்களா ஐயா...'' மரியாதையுடன் அவர் முன் சென்றான்.



''ஆமாம் ஆகாஷ். சாப்பிட்டு விடலாமே.''

''உங்களுக்கு ஏன் வீண் சிரமம்...''

ஆகாஷ் தயக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தபோது,

''தாத்தாவுக்கென்ன சிரமம்? பேத்திக்குத்தான் சிரமம்..'' உள்ளேயிருந்து அனுராதாவின் குரல் வந்தது.

புன்னகையுடன் சாப்பிடும் அறைக்குச் சென்றார் தொண்டைமான். ஆகாஷ் அவர் பின்னால் தொடர்ந்தான்.

சாப்பாட்டு மேஜையில் பாத்திரங்களை வைத்துக் கொண்டிருந்த அனுராதா நிமிர்ந்து ஆகாஷைப் பார்த்துச் சொன்னாள்.

''நான் வந்து விட்டால் தாத்தாவுக்கு என் சமையல் தான். செல்லி மேல் வேலையை மட்டும் பார்த்துவிட்டுப் போய் விடுவாள்.''

''ஓஹோ... அப்படியென்றால் உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? உங்களிடமே சொல்லி விட்டேன். சரிதானே...''

''சிரமம்தான். எங்களிரண்டு பேருக்குமென்றால் சிம்பிளாய் சமைத்திருப்பேன். விருந்தாளி வந்திருக்கிறாராம். ஸ்பெஷல் சமையல் பண்ண வேண்டியதாகி விட்டது.''

''கஷ்டம்தான். மாட்டேன் என்று சொல்லியிருக்கலாமே.''

''சொல்லியிருப்பேன். ஆனால் அது அதைவிடக் கஷ்டமாச்சே.''

''எப்படி?''

''உங்களைப் பார்க்க வைத்துக் கொண்டு நாங்கள்

''ச்ச.. உண்மைதான். நீங்கள் வயிற்று வலியிலிருந்து தப்பிக்க என் வயிற்றுக்கு சாப்பாட்டைப் போடுகிறீர்கள்.''

''தெரிந்தால் சரி.. உட்காருங்கள்.''

அவள் தட்டுக்களைப் போட்டுப் பரிமாறினாள். தொண்டைமான் ஆகாஷுடன் பேசிக் கொண்டே சாப்பிட்டார். உலக அரசியல், இந்திய அரசியல், விளையாட்டு, ஆன்மிகம் எதையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை.

கை கழுவும் இடத்தில் அனுராதா இருந்தாள்... அருகில் தொண்டைமான் இல்லாததை உறுதிப்படுத்திக் கொண்டு,

''உன் கைச் சமையல் பிரமாதம்.. எப்போதையும் விடக் கூடுதலாகவே சாப்பிட்டேன்.. தேங்க்ஸ்...'' என்றான் ஆகாஷ்.

''உங்களுக்கும் தேங்க்ஸ்...''

''எதற்கு?''

''உங்களுடன் சேர்ந்து சாப்பிட்டதால் என் தாத்தாவும் எப்போதையும் விடக் கூடுதலாகவே சாப்பிட்டார். அதற்கு...''

அவள் முகம் கனிந்திருந்தது.

# 5



நிச்சயதார்த்த மேடையில் வசுந்தராவின் அண்ணனும் அனுராதாவின் தாய் திலகவதியின் அண்ணனும் எதிர் எதிரே அமர்ந்தார்கள்... நிச்சயதார்த்த



வாசிக்கப்பட்டது. தாம்பூலத் தட்டை மாற்றிக் கொண்டார்கள். நிச்சயதார்த்த புடவையை பெற்றுக் கொண்ட அனுராதா உடை மாற்ற உள்ளே செல்ல வீடியோ காமிரா வந்திருந்த விருந்தினர் பக்கம் திரும்பியது.

ஆகாஷின் நினைவும் பழைய நாட்களுக்குத் திரும்பியது. அடுத்து ஒவ்வொரு வார இறுதியையும் ஆவலோடு எதிர்பார்த்து... தஞ்சையிலிருந்து மதுரைக்கு வந்த வேகத்திலேயே பெற்றவர்கள் தங்கையிடம் கூட உட்கார்ந்து பேசாமல் அன்னலட்சுமிபுரத்திற்கு ஓடிவிடுவான்.

மெல்ல.. மெல்ல.. அவன் இதயத்தில் அனுராதா குடியேறி நிரந்தரமாய் சிம்மாசனம் போட்டு அமர்ந்து விட்டாள். அவளது வெடுக்.. வெடுக்கென்ற பேச்சில் அவன் தடுக்கி விழுந்து விட்டான்.

அப்போதுதான் அவன் வாழ்வில் ராகினி குறுக்கிட்டாள். ஒரு நாள் மாலைப் பொழுதில் அன்னலட்சுமிபுரத்து வீட்டின் உள் முற்றத்தில் தொண்டைமானின் அருகே நாற்காலி போட்டு அமர்ந்து ஆகாஷ் டீ குடித்துக் கொண்டிருந்த வேளையில் அவள் வீட்டினுள் பிரவேசித்தாள்.

''தாத்தா...''

''வாம்மா.. ராகினி.. எப்ப வந்தாய்.. உன் அப்பா, அம்மா வந்திருக்கிறாங்களா?''

''ஆமாம் தாத்தா.. மே வெகேஷன். அதனால் வந்திருக்கிறோம்.''

''அதைச் சொல்லு.. இல்லாவிட்டால் இந்தப் பட்டிக் காட்டுப் பக்கம் நீ எப்படி வந்திருப்பாய்? கிராமம்

dsc00568.jpg (3072x2304x24b jpeg)



என்பது.. வீட்டுக்கு வீடு வயோதிகர்கள் வாழும் பூமி என்றாகி விட்டது.''

தொண்டைமான் பெருமூச்சு விட்டார். அப்போதுதான் ஆகாஷை கவனித்த ராகினியின் முகத்தில் வெட்கச் சிகப்பு வந்தது.

'ஆள் உயரமாய் செம ஹேன்ட்சம்மாய் இருக்கிறானே.. யார் இவன்..?'

நினைத்ததை வாய்விட்டுக் கேட்டும் விட்டாள்.

''தாத்தா.. இவர் யார்? புதிதாய் தெரிகிறாரே...'' அவள் விழிகளால் ஆகாஷை விழுங்க...

''ஆமாம்.. இப்போதுதான் இவரைப் புதிதாய் செய்து வைத்திருந்தார்கள். கடை வீதிக்குப் போய் வாங்கி வந்து விட்டோம்'' பல்லைக் கடித்துக் கொண்டு பதில் சொன்ன அனுராதாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

ஆகாஷின் மனதில் தென்றல் அடித்தது.

'இவளுக்கு ஏன் இவ்வளவு கோபம்? பொறாமை.. ம்ம்..'

அவனும் ராகினியை ஆர்வமாய் பார்ப்பது போல் நடித்தான். கடைக்கண்ணில் அனுராதாவைப் பார்த்துக் கொண்டே ராகினியிடம் ''நீங்கள் கூடப் புதிதாகத் தெரிகிறீர்களே... நீங்கள் யார்?'' என்று வினவினான்.

ராகினி மகிழ்ந்து போனாள். அனுராதாவின் முகம் கறுத்தது.

''ஐ ஆம் ராகினி.. கமிங் பிரம் திருமங்கலம்..'' என்றாள் ஸ்டைலாக.

''ஏன்ம்மா ராகினி. இதோ பதினைந்து கிலோ மீட்டர்



கிறாய். வெளிநாட்டில் இருந்து வந்தது போல ஏனம்மா பேசுகிறாய்? நீ ஒழுங்காய் பேசுகிறவள்தானே. இன்றைக்கு என்ன வந்தது?'' தொண்டைமான் புரியாமல் கேட்டார்.

''நீங்க வேற தாத்தா.. இன்றைக்கு புதிதாக வேறு ஒன்று அவளுக்கு வந்திருக்கிறதே..'' அனுராதா இடக்காகக் கூறினாள். அவள் பார்வை ஆகாஷை சுட்டெரித்தது.

''என்னவோம்மா நீங்க சின்னஞ் சிறுசுகள் பேசுவது இந்தக் கிழவனுக்கு எங்கே புரியப் போகிறது?'' தொண்டைமான் எழுந்து வாயில் பக்கம் சென்றார்.

இப்போது ராகினியின் பார்வை ஆகாஷின் மேல் தைரியமாய் பரவியது. அனுராதா பல்லைக் கடித்தாள்.

''நான் யார் என்று சொல்லி விட்டேன் நீங்கள் யாருன்னு சொல்லவில்லையே...'' கால்களை ஆட்டியவாறு அமர்ந்த வாக்கில் வினவினாள் அவள்.

''நான் ஒரு ஆசிரியர்.''

''அப்படியா.. வாசலில் கார் நிற்கிறதே.''

''என்னுடையதுதான்.''

''ஓ...'' அவள் கண்கள் விரிந்தன.

''நீங்கள் எந்த ஸ்கூலில் வொர்க் பண்ணுகிறீர்கள்?''

''ஸ்கூலில் இல்லை. காலேஜில்...''

''காலேஜ்...? யு மீன்... யு மீன்...''

அவள் கண்களை அகல விரித்துக் கேட்க அனுராதா அவள் முதுகில் ஓங்கி ஒரு போடு போட்டாள்.

''ஏய்.. சொல்ல வந்ததை ஒழுங்காய் சொல்லாமல் ஏண்டி மீனை வறுக்கிறாய்? இன்றைக்கென்று வந்து

''இன்றைக்கு வந்ததால்தான் நான் இவரை மீட் பண்ண முடிந்தது.''

அன்று மாலை ஆகாஷ் விடை பெற்றுக் கிளம்பும் போது அனுராதா அங்கே இல்லை. விழிகளால் துழாவியவன் ஏமாற்றத்துடன் கிளம்பினான்.

மறுவாரம் அவன் அங்கே வந்த மறுவிநாடி ராகினி,

''ஹலோ லெக்சரர் சார்..'' என்றபடி அங்கு பிரசன்னமானாள்.

அனுராதா அவளை வெறுப்பாகப் பார்த்தாள். அதை சட்டையே செய்யாதவளாய்.

''காலையிலிருந்து உங்களை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேன் தெரியுமா? ஏன் இவ்வளவு லேட்?'' என்று காலம் காலமாய் ஆகாஷுடன் பழகியவள் போல ராகினி சிணுங்கினாள்.

''அவர் லேட்டாய் வருகிறார் என்று உனக்கு எப்படித் தெரியும்? போன வாரம் அவர் கிளம்பும்போது தானே வந்தாய்?'' குத்தலாக வினவினாள் அனுராதா.

அவளது பார்வை ராகினியின் உடையலங்காரத்தை ஆராய்ச்சி செய்தது. மிக இறக்கமாக வெட்டித் தைக்கப் பட்டிருந்த ஸ்லீவ்லெஸ் சல்வார். துப்பட்டாவை நூல் போல் கழுத்தைச் சுற்றிப் போட்டிருந்தாள். கண்களில் தெரிந்த கள்ளத்தனம். உதட்டினில் லிப்ஸ்டிக்.

'மறைக்க வேண்டியதை மறைக்காமல் வேஸ்ட்டாக எதற்குத் துப்பட்டாவை போட்டிருக்கிறாள்?'

அருவெறுத்தாள் அனுராதா. அவள் ஒருத்தி அங்கு இருப்பதையே உணராதவள் போல ஆகாஷிடம் வெகு



''போன வாரம் உங்களைப் பார்த்த மேட்டரை டாடியிடம் சொன்னேனா அவர் அப்படியே ஆச்சர்யப்பட்டுப் போனார்..'' ராகினி அளந்து விட்டுக் கொண்டிருந்த போது அனுராதா கோபத்துடன் குறுக்கிட்டாள்.

''ஏய்.. நில்லு.. டாடின்னு யாரைச் சொல்கிறாய்?'' அவள் விழிகள் ராகினியை வெட்டுவது போல் பார்த்தன.

''பர்ஸ்ட்... நான் நின்று கொண்டுதானே இருக்கிறேன்... இன்னும் உட்காரவில்லையே... ஹா.. ஹா.. அப்புறம் டாடியென்றால் யார் என்று கூடவாத் தெரியாது? மக்கு.. மக்கு..'' ராகினி பதிலுக்கு மட்டம் தட்டினாள்.

''மக்கா..? யார் மக்கு..? டென்த்திலும்.. ப்ளஸ் டூவிலும் ஸ்கூல் பர்ஸ்ட் வந்திருக்கிறேன். காலேஜில் யுனிவர்ஸிட்டி ரேங்க் வருபவர்களென்று எதிர்பார்க்கப் படும் ஸ்டூடன்ஸ் லிஸ்டில் என் பெயர் தான் முதலில் இருக்கிறது. நான் மக்கு... டென்த்திலும் ப்ளஸ் டூவிலும் அறுபது பெர்ஸென்டேஜ் கூட வாங்காத நீ புத்திசாலியா? வெரிகுட்... டாடின்னா அப்பாவென்று எனக்குத் தெரியும்.. போன வாரம் வரை 'அப்பா.. அப்பா'வென்று வாய் நிறைய கூப்பிட்டவள்.. இந்த வாரம் 'டாடி'யென்று புதிதாய் கூப்பிடுகிறாயே அதுதான் ஏனென்று எனக்குத் தெரியவில்லை'' அனுராதா சரியாக பதிலடி கொடுத்தாள்.

ராகினியின் முகம் அவமானத்தில் கன்றியது.

'பாவி... எப்படிப் போட்டுத் தாக்குகிறாள் பார். அதுவும் ஒரு பணக்கார, படித்த, அழகான ஆணின் முன்னால் என் மார்க்கைச் சொல்லிக் காட்டுகிறாள் பார்..'

சாகசக் கலையில் கைதேர்ந்த ராகினி உடனே முகத்தை இயல்பாய் வைத்துக் கொண்டாள்.

''என்ன ராதா இது? நீ பெரிய 'இவள்' மாதிரி இவர் முன்னால் உன்னைப் பற்றிப் பெருமை பீற்றிக் கொள் கிறாய்? நீ என்ன இவரை விடப் படிப்பில் கெட்டியா? இவரை விடப் பணக்காரியா? இவரை விடப் பெரிய ஆளா? இவருக்கு முன்னால் நீ வெறும் தூசு தெரியுமா?''

'இப்போது இவனுக்கும் எனக்கும் என்ன பிரச்னை? இவள் 'மக்கு' என்பதற்கு நான் பதில் சொன்னால் இவளைப் பற்றித்தானே இவள் பீற்றிக் கொள்ள வேண்டும்? இவனை ஏன் பேச்சில் இழுக்கிறாள்? என் வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு என்ன அட்டகாசம் பண்ணுகிறாள் பார்.' அனுராதாவுக்கு கோபம் தலைக்கு ஏறியது.

அப்போது வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டாமல் ஆகாஷ் வார்த்தைகளை விட்டு விட்டான்.

''உனக்குத் தெரியும் என் மதிப்பு மற்றவர்களுக்குத் தெரியவில்லை பார். இப்படியே என்னைப் பற்றிய பெருமைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டு இரு. அப்படியாவது மற்றவர்களுக்கு மண்டையில் ஏறுகிறதா என்று பார்ப்போம்...'' என்று உல்லாசமாய் அனுராதாவைப் பார்வையிட்டபடி ராகினியிடம் சொன்னான் ஆகாஷ்.

அவனுக்கு அனுராதாவின் வாயைக் கிளறி வம்புக்கு இழுக்க வேண்டும். அதற்கு இது ஒரு வாய்ப்பு. அவ்வளவுதான்.

ஆனால் அவனது இந்த வார்த்தைகள் அங்கேயிருந்த இரு பெண்களுக்கும் இருவேறு விதமான உணர்வுகளை உண்டாக்கி விட்டது.

ஆகாஷின் பார்வையும் பேச்சும் அனுராதாவையே வலம் வர ராகினியின் உடம்பு எரிந்தது.



'இவனுக்காக நாள் முழுவதும் மெனக்கெட்டு மேக்கப் பண்ணிக் கொண்டு வந்து முன்னே நின்றால் இவன் என்னவென்றால் இந்த முசுட்டு ராதாவையே முறைக்கி றானே...'

அனுராதாவிற்கோ ராகினியின் சாகசத்தில் எல்லை மீறிய வெறுப்பு உருவாகியிருந்தது. என்றுமே அனுராதா ராகினியைப் போன்ற குணம் படைத்த பெண்களுடன் பேச்சு வார்த்தையே வைத்துக் கொள்ள மாட்டாள். 'என்ன' என்றால்... 'என்ன..' என்று பதில் தருவது கூட அதிகம் என்பது போல் மௌனமாய் விலகிப் போய் விடுவாள்.

அப்படிப்பட்டவளிடம் ராகினி வேண்டுமென்றே வார்த்தையை விட்டு விடுவதோடு நிற்காமல் ஆகாஷை துணைக்கு அழைக்க அவனும் அவளுக்குத் துணை செய்வது போல் பேசவும் அனுராதாவிற்கு மேனி பற்றிக் கொண்டு எரிந்தது.

இவள் யார்? அவன் யார்? அவன் பெருமையை இவள் ஏன் கேட்க வேண்டும்?

''ராகினி... நீ வேண்டுமானால் இவர் பணத்திற்காக இவரிடம் பல்லைக்காட்டு. இவர் படிப்பிற்கு பூப் போட்டு பூஜை செய்.. உனக்குத்தான் இவர் பெரிய ஆள். எனக்கு இல்லை. எனக்கு இவர் வெறும் தூசுதான்...'' கொதிப் புடன் கூறினாள் அனுராதா.

ராகினி மகிழ்ந்தே போய் விட்டாள். அவளுக்கு அனுராதாவின் குணம் தெரியும். எப்படிப் போனால்.. எப்படி அவள் வார்த்தைகளைக் கொட்டுவாள். எப்படி ஆகாஷிற்கு அவள்மேல் வெறுப்பை உண்டாக்கலாம் என்பதை அவளின் சாகசம் நன்கு அறியும்.

ஆகாஷ் அதிர்ந்து விட்டான். இப்போது அவன் என்ன சொல்லி விட்டான் என்று இப்படி வார்த்தைகளைக்

கொட்டிக் கவிழ்க்கிறாள் இவள்? கேலிகூடப் பேசக் கூடாதா? கேலி பேசியதற்கு சாட்டையில் அடிப்பது போல் இப்படி ஓர் பதிலா? ராகினி என்ன நினைப்பாள்? மூன்றாம் மனுஷியின் முன்னால் அவன் காதலிக்கும் பெண் அவனை அவமானப்படுத்தலாமா? அவன் உணர்வுகள் பொங்கி எழுந்தன.

ராகினி அனுராதாவின் கோபத்தீயை எரிய விட்டு அதில் குளிர்காய விரும்பினாள்.

''ராதா.. என்னதான் இருந்தாலும் நீ இவரை இப்படி டீஸ் பண்ணக் கூடாது. உனக்கு இவரைப் பிடிக்கவில்லை என்பதற்காக என் முன்னால் இவரை அவமானப்படுத்தலாமா? மதுரையில் மருதநாயகம் மாமாவின் குடும்பமென்றால் எல்லோருக்கும் தெரியுமாம்.. என் வீட்டில் சொன்னாங்க. அப்பேர்ப்பட்ட குடும்பத்தில் பிறந்த ஒருவரிடம் மரியாதையில்லாமல் எப்படி நீ பேசலாம்? முதலில் இவரிடம் மன்னிப்புக் கேள்...''

எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றினால் பரவாயில்லை. பெட்ரோலை ஊற்றினால் எப்படியிருக்கும்?

''ஏய்... இங்கே பாருடி.. உனக்கு இவரைப் பிடித்திருந்தால் நீயே இவரை உன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் சீராட்டு. இது என் வீடு. இங்கே உட்கார்ந்து கொண்டு எனக்கு உபதேசம் பண்ணும் வேலையை விட்டு விடு. உனக்குப் பிடித்திருப்பவர்களை எனக்கும் பிடிக்க வேண்டுமென்ற அவசியம் ஏதும் இல்லை. மதுரையில் அவர் குடும்பம் பெரியதென்றால் திருமங்கலத்தில் கோவிந்தசாமியின் குடும்பமென்றால் பிறந்த குழந்தைக்குக் கூடத் தெரியும். எனக்கு என் குடும்பம்தான் உயர்த்தி. இந்த அன்னலட்சுமிபுரத்தில் பெரிய



வீட்டுக்காரங்க என்று எங்கள் வீட்டைத் தான் சொல்வார்கள். என் தாத்தா வாழ்ந்த... வாழ்கின்ற வாழ்க்கைக்கு ஈடாகாது யாருடைய வாழ்க்கையும்.. நான் கோவிந்தசாமியின் மகள். தொண்டைமானின் பேத்தி.. என்னைப் பார்த்துத்தான் மற்றவர்கள் பெரிய வீட்டில் பிறந்த பெண்ணென்று சொல்லியிருக்கிறார்கள். நான் வேறு யாரைப் பார்த்தும் அப்படிச் சொல்லியதில்லை. இனிச் சொல்லவும் மாட்டேன்...'' அனுராதா மூச்சு விடாமல் பேசி நிறுத்தினாள்.

கோபத்தில் அவளுக்கு கை கால் நடுங்கியது. மூச்சு வாங்கியது. விழிகள் சிவக்க பத்ரகாளி போல் நின்றாள்.

# 6



அங்கே குண்டூசி விழுந்தால் கூடக் கேட்கும் அளவிற்கு அமைதி நிலவியது. ஆகாஷ் தன்னையே நொந்து கொண்டான்.

இதற்காகவா வாரம் முழுவதும் காத்திருந்தான்? பெற்றவர்கள் முகம் பார்த்து ஒரு வார்த்தை பேசாமல் பெற்ற தாயின் கையால் ஒரு வேளை சாப்பிடாமல் இதற்காகவா இங்கு ஓடி வந்தான்? தங்கையிடம் கனிவாய் கதை பேசாமல் இவளிடம் கதை பேச ஓடி வந்ததற்கு எப்படிப் பட்ட பரிசைக் கொடுத்து விட்டாள்? இவ்வளவு தற்பெருமை உடையவளா அவன் விரும்பிய அனுராதா? அவன் மனம் கசந்தது.

dsc00572.jpg (3072x2304x24b jpeg)



'திமிர்.. இவள் உடம்பெல்லாம் திமிர்.'

அவள் முகம் பார்க்கக்கூடப் பிடிக்காமல் அவன் முகம் திருப்பிக் கொண்ட வேளையில் தோட்டத்திலிருந்து தொண்டைமான் திரும்பி வந்து விட்டார். ஆகாஷைக் கண்டதும் முகம் மலர்ந்தவர்,

''வாப்பா ஆகாஷ்.. நீ வருவதற்குள் வரவேண்டுமென்று பார்த்தேன்... முடியவில்லையே.. வந்து ரொம்ப நேரமாகி விட்டதா? புத்தகங்களில் குறிப்பு எடுக்க ஆரம்பித்து விட்டாயா?'' என்று கேட்டுக் கொண்டே வீட்டிற்குள் வந்தார்.

''குறிப்பா.. என்ன குறிப்பு?'' என்று ஏளனமாய் கேட்டாள் அனுராதா.

''என்னம்மா ராதா.. புதிதாய் கேட்கிறாய்?''

''எல்லாமே புதிதிற்கு மாறி விட்டார்கள் தாத்தா?''

தொண்டைமானின் கூர் விழிகள் பேத்தியை அளவிட்டன.

''ஆகாஷின் ஆராய்ச்சி படிப்பிற்கு குறிப்பு எடுப்பதைப் பற்றித்தானே நான் சொன்னேன். நீ எதைப் பற்றிச் சொல்லுகிறாய்?''

''எதையென்று சொல்ல தாத்தா? படிப்பைத் தவிர அனைத்து ஆராய்ச்சியும் இங்கு நடந்து முடிந்து விட்டது. சார்.. ராகினியுடன் அளவளாவிக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஏன் வீணாய் படிப்பைப் பற்றி அவருக்கு நினைவு படுத்துகிறீர்கள்?''

ஆகாஷ் துணுக்குற்றான். என்ன வார்த்தை சொல்லி விட்டாள் இவள். அவன் மரியாதை வைத்திருக்கும்



தொண்டைமான் ஐயா அவனைப் பற்றி என்ன நினைப்பார்? சங்கடத்துடன் அவன்,

''ஐயா...'' என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்.

''விளக்கமெல்லாம் வேண்டாம் ஆகாஷ்... படிப்பதற்காகத்தான் அன்னலட்சுமிபுரத்திற்கு வரவேண்டுமென்பதில்லை. இந்தக் கிழவனைப் பார்ப்பதற்காகவும் வரலாம். எப்போது பார்த்தாலும் படித்துக் கொண்டிருந்தால் மூளை சூடேறி விடும். அவ்வப்போது அரட்டையும் அடிக்கலாம் அதில் தவறில்லை. நீயே கல்லூரி விரிவுரையாளர். உனக்குப் போய் நான் எடுத்துச் சொல்ல வேண்டுமா... என்ன?''

தொண்டைமானின் வார்த்தைகளால் சங்கடம் விலக்கிய ஆகாஷ் மாடிக்குச் செல்லப் போனான். ராகினியும் ஏதோ பேசிக் கொண்டு அவனைத் தொடர்ந்து செல்ல முற்பட தொண்டைமான்,

''ராகினி.. ஆகாஷிற்கு படிக்கத் தனிமை வேண்டும். நீ தொந்தரவு செய்யாதே. அத்தோடு மாடிக்குப் போவதெல்லாம் என்ன பழக்கம்? நான் உன்னை அங்கேயெல்லாம் அனுமதித்தது இல்லையே..'' என்றார்.

ராகினியின் முகம் சிறுத்து விட்டது. அனுராதாவின் முகம் மலர்ந்து விட்டது. தொண்டைமான் ஆகாஷைப் பார்த்து,

''ஆகாஷ்! என் நூலகத்திற்குள் அன்னியருக்கு அனுமதியில்லை. அந்நியர் என்று நான் சொல்வது புத்தகம் படிக்காதவர்களை.. புத்தகத்தின் மதிப்புத் தெரியாதவர்களை... ராகினிக்கு புத்தகம் படிக்கும் பழக்கம் கிடையாது... அதனால் என் நூலகத்தில் நுழைய அனுமதி

கிடையாது. ராகினியுடன் பேச வேண்டுமானால் கீழேயே பேசி அனுப்பிவிடு.. மாடிக்கு அழைத்துப் போக வேண்டாம்..'' என்று கண்டிப்பான குரலில் கூறினார்.

ஆகாஷ் வியப்புடன் தொண்டைமானைப் பார்த்தான்.

''ஐயா.. ராகினியிடம் பேச என்ன இருக்கிறது? உங்கள் ரிலேடிவ் என்பதால் ஓரிரு வார்த்தைகள் பேசினேன். மற்றபடி ஷி இஸ் நாட் நத்திங் ஸ்பெஷல் டு மீ...'' என்று கூறிவிட்டு ராகினியைத் திரும்பியும் பாராமல் மாடிக்குச் சென்று விட்டான்.

இந்த மாதிரியான நிலைமையில் மற்றவர்கள் எப்படி செயல்படுவார்களோ என்னவோ... ராகினி ஒன்றுமே நடக்காதது போல் செயல்பட்டாள். தொண்டைமானின் வார்த்தைகள் அவளைத் துளிக்கூடப் பாதிக்காதவளாய் அங்கேயே சட்டமாய் அமர்ந்து கொண்டு பேச வேறு ஆரம்பித்து விட்டாள்.

'எருமைத்தோல்...!'

அனுராதா அங்கே நின்றால் அவளை ஏதாவது சொல்லி விடுவோமென்ற பயத்துடன் சமையலறைக்குள் சென்று விட்டாள். தொண்டைமானுக்கு அவள் அப்படிப் பேசுவது பிடிக்காது. கண்டிப்பார். ராகினி தொண்டைமானிடம் ரம்பம் போட ஆரம்பித்தாள். கொஞ்ச நேரம் 'ஊம்' போட்ட தொண்டைமான், பொறுமை இழந்து விட்டார்.

''அம்மா ராகினி... நீ வந்து வெகு நேரமாகி விட்டதே.. உன் வீட்டில் தேட மாட்டார்களா?''

''இதுவும் நம்ம வீடு தானே தாத்தா.''

''இல்லையம்மா.. இது உன் வீடு இல்லை.. நீ என் சொந்தப் பேத்தியும் இல்லை.. இது அயலார் வீடு. கிளம்பு.''



''நான் அயலார் வீடுன்னு நினைக்கவே இல்லையே தாத்தா.''

''நான் நினைக்கிறேன்.. கிளம்பு.''

''எனக்கு உங்கள் கூட பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியவில்லை தாத்தா. என் வீட்டிற்குப் போனால் போரடிக்கும்.''

''உன்னுடன் இன்னும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தால் தலைவலி வந்துவிடும்... இது நான் ஓய்வெடுக்கும் நேரம்.''

''நீங்கள் பாட்டுக்கு ரெஸ்ட் எடுங்கள்... நான் ஓரமாய் உட்கார்ந்து வாக்மேனில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.''

அனுராதா ஏன் பத்ரகாளி போல் நின்று கொண்டிருந்தாள் என்று இப்போது தெள்ளத் தெளிவாக தொண்டைமானுக்குப் புரிந்தது. 'இப்படியும் ஒரு ஜீவன் இருக்குமா?'

தொண்டைமான் கோபத்துடன்.

''ராதா... ராதா...'' என்று அழைத்தார்.

''என்ன தாத்தா?...'' அவள் சமையலறையை விட்டு வெளியே வந்தாள்.

''எனக்கு கம்பெனி கொடுக்கத்தான் உன்னை வரச் சொன்னார் தாத்தா... இல்லையா தாத்தா..'' ராகினி கொஞ்சலாய் கூறினாள்.

''இல்லை.. அந்தப் பூட்டுச் சாவியை எடு.''

எதற்குக் கேட்கிறார்? புரியாமல் அனுராதா எடுத்துக் கொடுத்தாள்.

அதை வாங்கிக் கொண்ட தொண்டைமான் எழுந்து கொண்டார்.

''ராகினி... உன் வீட்டிற்குப் போ.. நான் கதவைப் பூட்ட வேண்டும்.''

''தாத்தா.. நான் சாயங்காலம் தான் வருவேன்னு அம்மாவிடம் சொல்லி விட்டுத்தான் இங்கு வந்தேன்.''

''சாயங்காலம் வரைக்கும் உனக்கு இங்கு என்ன வேலை?''

''என் வீட்டில் மட்டும் என்ன வேலை?''

''ஏன்? எதையாவது வேலை செய்ய வேண்டியது தானே... ராதா எங்கள் வீட்டில் செய்யவில்லையா?''

''அவள் தனியாக ஏன் செய்ய வேண்டும் தாத்தா? ஆகாஷ் வந்தால் அவருக்கு சாப்பாடு பரிமாறும் வேலையை நான் செய்கிறேனே...''

அவளின் திட்டம் புரிய தொண்டைமானிற்குக் கோபம் வந்து விட்டது. இயல்பில்லாத இச்செயல்கள் அவருக்குப் பிடிக்காதவை.

''இப்போது நீ கிளம்புகிறாயா... இல்லையா?''

''என்ன தாத்தா... உங்கள் பேத்தியைப் போய் விரட்டு கிறீர்கள்?''

''நீ என் பேத்தியில்லை... என் பேத்தி ராதாதான். என் பேரன் பேத்திகளை நாங்கள் இப்படி வளர்க்கவில்லை. ராதாவோ அவளுடைய அண்ணன்களும் அக்காக்களுமோ அடுத்தவர் வீட்டிற்கு தேவையில்லாமல் போக மாட்டார் கள். வெட்டிப் பேச்சு பேசி வீணாய் பொழுதைக் கழிக்க மாட்டார்கள்...''

அப்போதும் அவள் வெளியேறாமல் நிற்க... அனுராதாவிற்கு கோபம் வந்து விட்டது. தாத்தாவையே



இந்தப் பாடு படுத்துகிறாளே இவளை என்ன செய்தால் தேவலாம். பூட்டுச் சாவியை அவள் வாங்கிக் கொண் டாள். ராகினியின் கைபிடித்து இழுத்துக் கொண்டு வாசல் பக்கம் விரைந்தாள். வாசல் படியில் அவளை விட்டு விட்டு கேட்டைப் பூட்டி உள் பக்கமாய் பூட்டுப் போட்டு விட்டு திரும்பி வீட்டிற்குள் போய் விட்டாள்.

தொண்டைமான் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டார். நிஜமாகவே அவருக்கு தலையை மிகவும் வலித்தது.

''ராதா... சூடாய் காபி போட்டுக் கொண்டு வாம்மா... இந்தப் பெண் பண்ணிய ரகளையில் எனக்குத் தலை வலியே வந்து விட்டது.''

அனுராதா சற்று நேரத்தில் காபியுடன் வந்து விட்டாள்.

''ஏம்மா ஒரு தம்ளர்தான் போட்டாயா? ஆகாஷிற்கும் போடவில்லை?''

''காபி இருக்கிறது தாத்தா. நான் இன்னொரு தம்ளரில் ஊற்றித் தருகிறேன். நீங்கள் கொண்டு போய் கொடுங்கள்.''

''என்னம்மா இது புதுப் பழக்கம்? நம் வீட்டிற்கு வரும் விருந்தாளியை நாமே அலட்சியம் செய்யலாமா?''

''அலட்சியமெல்லாம் இல்லை தாத்தா. எனக்கு அவருக்குக் கொண்டு போய் கொடுக்க விருப்பமில்லை. விட்டு விடுங்கள்...''

அப்போது தண்ணீர் தாகம் எடுத்ததால் கீழே இறங்கி வந்து கொண்டிருந்த ஆகாஷின் காதுகளில் அந்த வார்த் தைகள் விழுந்தன. அவன் சிலையாய் உறைந்தான். சமாளித்துக் கொண்டு வந்த சுவடு தெரியாமல் மாடிக் குப் போய் விட்டான்.

dsc00575.jpg (3072x2304x24b jpeg)



தொண்டைமான் அனுராதாவின் முகம் பார்த்தார். அது இறுகியிருந்தது. பேச்சை வளர்க்க விரும்பாமல்,

''சரிசரி... இரண்டு தம்ளர்களையும் கொடு. நான் ஆகாஷுடன் சேர்ந்தே காபி சாப்பிட்டுக் கொள்கிறேன்'' என்று கூறி எழுந்தார்.

ஆகாஷ் மேஜையின் முன்னாலிருந்த ஜன்னல் வழி தெரிந்த வேப்ப மரத்தின் கிளைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அனுராதாவின் உதாசீனம் அவன் மனதைப் புண்படுத்தியிருந்தது.

''ஆகாஷ்...''

தொண்டைமானின் அழைப்புக் குரல் கேட்டுத் திரும்பியவன் பதறி எழுந்தான்.

அந்த வயோதிகர் ஒரு தட்டில் இரண்டு தம்ளர்களை சுமந்து கொண்டு வந்து கொண்டிருந்தார். அவசரமாய் அதை வாங்கி மேஜையில் வைத்தவன்,

''ஐயா.. இதை நீங்கள் கொண்டு வரவேண்டுமா? என்னைக் கூப்பிட்டால் நான் வந்து குடித்துக் கொள்ள மாட்டேனா?'' என்று துக்கம் தொண்டையை அடைக்க வினவினான்.

அவன்தான் அனுராதாவின் வெறுப்பை கண்கூடாய்ப் பார்த்தும் கேட்டும் விட்டானே.. அவள் கைகளில் ஒரு தம்ளர் காபி கொண்டு வந்து கொடுக்கக் கூட அவன் தகுதியில்லாதவன் என்று நினைத்து விட்டாளே... அவன் நெஞ்சம் குமுறியது.

தொண்டைமான் அவன் கரங்களில் காபி தம்ளரை திணித்தார். அவன் காபி குடிப்பதையே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தவர் மென்மையான குரலில்,



''என்னப்பா...?'' என்று வினவினார்.

''எதுங்க ஐயா?'' அவன் திடுக்கிட்டுக் கேட்டான்.

''உன் மனதை வருத்தும் விஷயம் என்ன?''

''ஒன்றுமில்லை ஐயா.''

''நான் வயோதிகன் ஆகாஷ். உன் வயதைக் கடந்து வந்தவன். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற பழமொழியின் தாத்பர்யம் புரிந்தவன். இப்போது உன் உள்ளத்தில் புயல் அடித்துக் கொண்டிருப்பதை உன் முகம் எனக்குச் சொல்கிறது. சொல்லப்பா.. எதனால் மனக்கஷ்டப் படுகிறாய்.''

ஆகாஷ் பல்லைக் கடித்துக் கொண்டான். 'என்ன வென்று சொல்வது? நானாய் என் மனதில் கட்டிய கோட்டை இடிந்து விழுந்து விட்டதைப் பற்றி இவர் எப்படி அறிவார்?'

அவன் பதில் பேச முடியாமல் மௌனம் சாதிக்க தொண்டைமானே கேட்டு விட்டார்.

''ராதாவிற்கும் உனக்கும் என்னப்பா பிரச்னை?''

''ஐயா..'' ஆகாஷ் பேச முடியாமல் திணறினான்.

''நீ மாடியிலிருந்து இப்போது கீழே வந்ததைப் பார்த்தேன் ஆகாஷ். ராதா உன்னைப் பார்க்கவில்லை. அவள் பேசியதை நீ கேட்டு விட்டாய் இல்லையா? அதனாலா மனம் வேதனைப்படுகிறாய்?''

''ஐயா... உங்கள் பேத்தி அவங்க மனதில் இருப்பதை வெளிப்படையாய் சொல்லி விட்டாங்க. அவங்க மன திற்கு அவங்க செய்வதுதான் சரி. என் மனம் உடைவது எனது குற்றம். அவர்கள் மேல் குற்றமில்லை.''

dsc00576.jpg (3072x2304x24b jpeg)



தொண்டைமானின் விழிகள் ஆகாஷை கூர்ந்து பார்த்தன. அவன் வேதனையுடன் முகம் திருப்பிக் கொண்டான்.

"ஆகாஷ்.. நீ ராதாவை விரும்புகிறாயா?"

"அவள் என்னை விரும்பவில்லை ஐயா... மாறாக வெறுக்கிறாள்..."

"அப்படி அவள் சொன்னாளா?"

"ஆமாம்."

ஆகாஷ் உதடு கடித்தான். தொண்டைமான் சிந்தனையில் ஆழ்ந்தார்.

# 7



"நீ அவளிடம் உன் காதலைச் சொன்னாயா ஆகாஷ்?"

"வெறுப்பவளிடம் என் விருப்பத்தை எப்படி ஐயா சொல்வது?"

"நான் வேண்டுமானால் உன் சார்பாய் அவளிடம் பேசிப் பார்க்கவா?"

"தயவு செய்து வேண்டாம் ஐயா... உங்களை கரம் குவித்துக் கேட்டுக் கொள்கிறேன். காதல் சிபாரிசு பண்ணி வரக்கூடாது. அது தானாக வரவேண்டும். விருப்பமில்லாதவளைக் கட்டாயப்படுத்த எனக்கு விருப்பமில்லை. என் மனதிலிருப்பது அவளுக்குத் தெரியவே கூடாது. வாக்குக் கொடுங்கள் ஐயா."



ஆகாஷ் தீவிரமான முகத்துடன் தன் கரத்தை நீட்டினான். மறுத்துப் பேசாமல் அவன் கைபிடித்து உறுதி அளித்தார் தொண்டைமான். சற்று நேரத்தில் இருவரும் மதிய உணவிற்குக் கீழே இறங்கிப் போனார்கள்.

அனுராதா மௌனமாய் அவர்களுக்குப் பரிமாறினாள். அவள் முகம் கடுமையாக இருந்தது. ஆகாஷ் அவளை நிமிர்ந்து பார்க்கவும் முனையவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் அவள் பரிமாற அவன் சாப்பிட்டு முடித்தான்.

மதிய உணவிற்கு பின்னர் தொண்டைமான் கண் அயர்ந்தார். அனுராதா ஏதோ சிந்தனையுடன் முன்புற ஹாலில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்திருந்தாள். ஆகாஷ் தன் குறிப்பு நோட்டுடன் கீழே இறங்கி வந்தான். தொண்டைமானிடம் விடைபெறச் சென்றபோது அவர் உறங்கிக் கொண்டிருந்தார்.

'எப்படிச் சொல்லிக் கொண்டு போவது..' அவன் தயங்கினான். நிழலாடவும் நிமிர்ந்து பார்த்த அனுராதா முகம் திருப்பிக் கொண்டாள்.

'இவளிடம் போய் நாமாய் பேசுவதா?'

அவன் எரிச்சலுடன் நினைத்துக் கொண்டான். அப்போது வாசல் புறமிருந்து காலிங்பெல் ஒலித்தது. அந்த சத்தத்தில் தூக்கம் கலைந்து எழுந்தார் தொண்டைமான்.

"யாரும்மா வாசலில்?"

"வேறு யார்.. அந்தப் பிசாசுதான்."

"ராகினியா?"

"ஊம்..."

dsc00577.jpg (3072x2304x24b jpeg)



''இப்போதுதானே போனாள். உடனே வந்து விட்டாளா?''

''என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும் தாத்தா.''

அவள் சலிப்புடன் பின்பக்கம் சென்று விட்டாள். தெண்டைமான் சாவியை எடுத்துக் கொண்டு போய் வாசல் கதவைத் திறந்து விட்டார்.

''ஹாய்... தாத்தா.. தூங்கி எழுந்து விட்டீர்களா?''

''எங்கே நீ தூங்க விட்டாய்..? என்ன விஷயம்?''

''என் தாத்தாவின் வீட்டிற்கு நான் வர விஷயமிருக்க வேண்டுமா?''

ராகினி தொண்டைமானை விலக்கிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள். அவள் கையில் இரண்டு டப்பாக்கள் இருந்தன. உரிமையுடன் ஆகாஷின் கைபிடித்து அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்தவள்,

''என்ன சார் கிளம்ப ரெடியாகிட்டிங்களா? அதனால் தான் நான் ஓடோடி வந்தேன்'' என்று செல்லம் கொஞ்சினாள்.

''எதற்காக.. ஓடோடி வரவேண்டும்.''

''காரணமில்லாமல் இருக்குமா.. ஆனால் அதை உடனே சொல்ல மாட்டேன் சஸ்பென்ஸ்...'' என்று குலுங்கிச் சிரித்தாள் ராகினி.

''ராகினி ப்ளீஸ் டோன்ட் டிஸ்டர்ப் மீ.. நான் ஊருக்குப் போக வேண்டும். உனக்கு என்ன வேண்டும்?''

''நீங்கள்தான் வேண்டும்.''

''வாட்..?''

S. No: 2728.



''யெஸ்.. உங்களுக்காக கஷ்டப்பட்டு என் அம்மா வடையும் கேசரியும் செய்து அனுப்பி இருக்கிறார்கள். அதைச் சாப்பிடாமல் போய் விடுவீர்களா? நான்தான் உங்களை விட்டு விடுவேனா?''

அவள் தான் கொண்டு வந்த டப்பாக்களைத் திறந்து ஒரு தட்டில் அவற்றை பரிமாறி ஆகாஷின் கையில் கொடுத்தாள்.

''ஐயா உங்களுக்கு...?''

''எனக்கு இனிப்பும்.. எண்ணெய் பலகாரமும் ஒத்துக் கொள்ளாது ஆகாஷ். உனக்குத் தெரியாதா?''

''அப்படியா..?'' என்றவன் தன்னிடம் கொடுக்கப்பட்ட தட்டை அப்படியே ராகினியிடம் கொடுத்து விட்டான்.

''என்ன சார்..?''

''ஐயாவுக்கு ஒத்துக் கொள்ளாதது எனக்கும் ஒத்துக் கொள்ளாது ராகினி.. இனிமேல் இதுபோல் எதையும் செய்து கொண்டு வராதே... ஐ டோன்ட் லைக் இட்.''

அவள் பதிலுக்காக காத்திருக்காமல் தொண்டைமானிடம் ''வருகிறேன் ஐயா..'' என்று விடைபெற்றுக் கொண்டு வாசலுக்குப் போய் காரில் ஏறிக் கொண்டான்.

பின்னாலேயே ஓடிய ராகினி கார் கதவின் பக்கம் குனிந்து ''அடுத்த வாரம் வருவீர்களா?'' என்று கேட்டாள்.

''ஏன் கேட்கிறாய்?''

''ஏன் நான் கேட்கக் கூடாதா?''

''கேட்கக் கூடாது.''

ஆகாஷ் காரைக் கிளப்பிக் கொண்டு பறந்து விட்டான். மொட்டை மாடியில் நின்று கொண்டு அவர்கள்

உரையாடியதைப் பார்த்துக் கொண்டு அனுராதா நின்று கொண்டிருந்தாள். அவர்கள் பேசியது அவள் காதில் விழுகவில்லை. ஆகாஷ் பேசியதைக் கவனிக்காதவள் போல் ராகினி கையாட்டி அவனுக்கு விடை கொடுத்து விட்டு வீட்டுக்குள் வருவதைக் கவனித்துக் கொண்டே மாடியிலிருந்து இறங்கி வந்தாள். கீழே ராகினி தொண்டைமான் முன்னே நின்று கொண்டு,

''உங்களால்தான் தாத்தா அவர் டிபன் சாப்பிடாமல் போய் விட்டார்'' என்று குற்றம் சாட்டிக் கொண்டிருந்தாள்.

அனுராதா கோபத்துடன் அவள் தட்டில் வைத்திருந்த டிபனை டப்பாக்களில் மீண்டும் போட்டு மூடி ராகினியிடம் நீட்டினாள்.

''ஏய்.. இந்தாடி நீ கொண்டு வந்த டிபன்.. எடுத்துக் கொண்டு இடத்தைக் காலி பண்ணு. ஒரு செகண்ட் நீ நின்றாலும் நான் உன் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவேன். ஓடி விடு... எங்கே வந்து யார் முன்னால் நின்று கொண்டு பேசுகிறாய். என் தாத்தாவின் முன் நின்று பேசக்கூட யாரும் பயப்படுவார்கள். நீ குற்றம் சுமத்துகிறாய். உன் பல்லைத் தட்டி விடுவேன். போ போ..''

''நீ இருக்கச் சொன்னாலும் இனி இங்கென்ன எனக்கு வேலை?''

''அதுதானே.. நீ நாடகமாடுவதைப் பார்க்கும் ஆள் இங்கில்லை. போயாகி விட்டது.. நீயும் போ...''

ராகினி 'உர்'ரென்று முகத்தை வைத்துக் கொண்டு போய் விட்டாள்.

''எல்லாம் உங்களால்தான் தாத்தா.''



''என்னாலா... நான் என்ன செய்தேன் ராதா?''

''யாரோ பி.எச்.டி. பண்ணுகிறார்கள். பண்ணாமல் போகிறார்கள். உங்களுக்கென்ன வந்தது? நீங்கள் ஏன் கண்டவர்களையெல்லாம் வீட்டுக்குள் விடுகிறீர்கள்? அதனால்தான் இவளை மாதிரி ஆள்களெல்லாம் இங்கே வட்டம் போடுகிறார்கள்'' அனுராதா கோபமாய் பேசினாள்.

''ஆகாஷ் கண்டவனில்லை.. அம்மா.''

''எனக்குக் கண்டவர்தான். எனக்கு அவரைப் பிடிக்கவில்லை தாத்தா...''

அனுராதா கோபமாய் உள்ளே போய் விட்டாள். தொண்டைமான் அவள் போவதையே யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

மறு வாரம் ஆகாஷ் வந்தபோது தொண்டைமான் தோட்டத்திற்குப் போகாமல் வீட்டிலேயே இருந்தார்.

''வணக்கம் ஐயா..''

''வாப்பா ஆகாஷ். பிரயாணம் சௌக்கியமா இருந்ததா?''

''இருந்தது ஐயா.. ஆனால் வெயில்தான் தாங்கவில்லை...''

''ஆமாம் வெயில் சுட்டெரிக்குதே... ராதா.. மோர் கொண்டு வாம்மா..'' தொண்டைமான் உள்ளே திரும்பி சொல்லிக் கொண்டிருக்கும்போது...

''மோரெல்லாம் எதுக்கு தாத்தா.. நான் ஜூஸ் கொண்டு வந்திருக்கிறேனே...'' என்று கூறியபடி ராகினி வந்தாள். அவள் கையில் ஒரு பாட்டிலில் ஐஸ் துண்டுகள் போட்ட ஆப்பிள் ஜூஸ்.

''இந்தாங்க...'' உரிமையுடன் அவள் ஆகாஷிடம் ஜூஸ் பாட்டிலை நீட்டிக் கொண்டிருந்தபோது அனுராதா கையில் மோர் தம்ளருடன் உள்ளேயிருந்து வந்தாள்.

''ராதா.. சார் ஜூஸ் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.. உன் மோரை நீயே வைத்துக் கொள்'' ராகினி ஏளனமாகக் கூற அனுராதாவின் முகம் கறுத்தது.

தொண்டைமானை முறைத்துக் கொண்டே அனுராதா உள்ளே செல்லத் திரும்பினாள்.

''ஐயா.. அவங்களை மோரை என்னிடம் கொடுத்து விட்டுப் போகச் சொல்லுங்க...'' ஆகாஷ் ராகினியின் ஜூஸ் பாட்டிலை இடது கையால் ஒதுக்கித் தள்ளியபடி வலது கையை அனுராதாவிடம் மோரை வாங்க நீட்டினான்.

''கொடு ராதா..'' தொண்டைமானும் கூற வேறு வழியின்றி அனுராதா தன் கையிலிருந்த மோர் தம்ளரை ஆகாஷிடம் நீட்டினாள்.

ஆகாஷ் மோரை வாங்கி அருந்த வாயருகே கொண்டு போகும்போது ஆத்திரத்துடன் ராகினி.

''ஜூஸை விட மோர் உங்களுக்கு உயர்த்தியா..?'' என்றவாறு மோர் தம்ளரை வாங்க முயன்றாள்.

ஆகாஷ் விலக முயற்சிக்கும் முன் மோர் தம்ளர் அவன் மீது கவிழ்ந்து அவன் சட்டை முழுவதும் மோர் கொட்டி விட்டது. ஆகாஷிற்கு கோபம் தலைக்கு ஏறியது. ராகினியை அவன் இமைக்காமல் முறைத்தான்.

அவளா சங்கடம் கொள்வாள்? அவள் அதையும் தனக்குச் சாதகமாக்கிக்



''அச்சச்சோ.. மோர் கொட்டி விட்டதே.. என்ன ராதா மோர் இப்படி ஓர் வாடை அடிக்கிறது? இரண்டுநாள் மோரைக் குடுத்து விட்டாயா? நல்லவேளை.. சார் அதைக் குடிக்கவில்லை. குடித்திருந்தால் அவர் வயிறு கெட்டுப் போயிருக்கும். சட்டையைக் கழற்றிக் கொடுங்கள் சார்.. நான் வாஷ் பண்ணித் தருகிறேன்.''

ராகினி ஆகாஷின் சட்டையைத் தொட முனைய ஆகாஷ் அருவெறுப்புடன் பின்னடைந்தான். தொண்டைமான் சினத்துடன்.

''ராகினி... நீ இடத்தைக் காலி பண்ணு... ஆகாஷ் நீ பாத்ரூமிற்குப் போய் சட்டையைக் கழற்றிப் போட்டு விட்டு வேறு சட்டையை மாற்றிக் கொள்'' என்றார்.

''வேறு சட்டை கொண்டு வரவில்லையே ஐயா.''

''ராதாவின் சின்ன அண்ணனின் சட்டை ஒன்று இங்கே இருக்கிறது. துவைத்து அயர்ன் பண்ணி வைத்திருக்கிறேன். அதைப் போட்டுக் கொள்... ராதா...''

அவர் சொல்லி வாய் முடிக்கு முன் அனுராதா அவனிடம் அவளது அண்ணனின் சட்டையை நீட்டிக் கொண்டிருந்தாள்.

''தேங்க்ஸ்...'' அவள் முகம் பார்த்தான் ஆகாஷ்.

அவள் பதில் சொல்லாமல் உள்ளே போய் விட்டாள். ஆகாஷ் பின் பக்கம் போய் விட்டான். தொண்டைமான் ராகினியின் பக்கம் திரும்பினார்.

''நீ உன் ஜூஸ் பாட்டிலுடன் இடத்தை இன்னும் காலி பண்ணவில்லையா?''

''தாத்தா.. அவர் வந்தபின் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகிறேனே..'' ராகினி சட்டமாய் அமர்ந்து கொண்டாள்.

தொண்டைமான் மௌனமாய் அவளையே பார்த்தார். மற்றவர்கள் என்றால் அந்த ஏளனப் பார்வையில் துடித்தே போய் விடுவார்கள். ஆனால் அவளோ வெள்ளையாய் சிரித்தாள்.

''என்ன தாத்தா அப்படிப் பார்க்கறீங்க?'' என்று ஒன்றும் தெரியாத பச்சைக் குழந்தை போல் கேள்வி வேறு கேட்டாள்.

நிராசையுடன் தலையை ஆட்டிய தொண்டைமான் ஆகாஷ் வரும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்.

ஆகாஷ் வேறு சட்டை அணிந்து வந்து கொண்டிருந்தான்.

''இந்த சர்ட் உங்களுக்கு நன்றாகவே இல்லை தெரியுமா?'' என்றாள் கொஞ்சும் குரலில் ராகினி.

''உன்னைக் கேட்டேனா?'' வள்ளென்று விழுந்தான் ஆகாஷ்.

''நீங்கள் கேட்டால்தான் நான் சொல்ல வேண்டுமா? என் மனதில் பட்டதைச் சொன்னேன். எனக்கு ஒளித்துப் பேசத் தெரியாது.''

''ஆமாமாம்... உனக்கு ஒளிவு மறைவு பிடிக்காது தான்'' என்றாள் அனுராதா வெறுப்புடன் அவள் உடையைப் பார்த்தபடியே.

''ஐயா.. நான் மாடிக்குப் போகிறேன்..'' ஆகாஷ் எழுந்து செல்ல முற்பட...

''இப்போதேவா.. இன்னும் கொஞ்ச நேரம் கழித்துப் போகக் கூடாதா?'' ராகினி அவன்



அவள் தொட்ட இடம் நெருப்பாய் சுட தன்னையறியாமல் அவள் கையை உதறிய ஆகாஷ்.

''வாட் இஸ் திஸ்..'' என்று கோபப்பட்டான்.

''என்ன இப்படிக் கேட்கறீர்கள். இந்த ஒரு வாரமாய் நீங்கள் வரும் பாதையைப் பார்த்து என் கண் பூத்து விட்டது தெரியுமா?'' அவள் விடாமல் கொஞ்ச அந்த நேரம் தான் அது நிகழ்ந்தது.

''தாத்தா நடு வீட்டில் இது என்ன அசிங்கம்?'' அனுராதா தொண்டைமானைப் பார்த்துக் கேட்டாள்.

பெண் பூப்போன்றவள் சில நேரம்.. புயல் போன்றவள் சில நேரம். அவளைப் பூவாக்குவதும் புயலாக்குவதும் சூழ்நிலைதான். அன்று அனுராதா புயலானாள். விளைவு.. ஆகாஷின் நெஞ்சில் மாறாத வடு ஒன்று ஏற்பட்டு விட்டது.

## 8



அனுராதா கேட்ட அந்தக் கேள்வி ஆகாஷை மிகவும் பாதித்து விட்டது. அநாகரிகமாய் நடந்து கொள்வது அவனல்ல.. ராகினி..! அவளை அவனுக்குத் தெரியாது. அவள் தொண்டைமானின் உறவுக்காரப் பெண். அவளாக வந்தாள். அவளாகப் பேசினாள். அவளது செயல்களை ஒரு நாளும் ஆகாஷ் ஆதரித்தது இல்லை. அப்படியிருக்க பொதுவாய் அனுராதா 'அசிங்கம்' என்று குறிப்

''யாரை அசிங்கம் என்கிறாய்? இவர் எவ்வளவு மரியாதையானவர் தெரியுமா?''

''உன்னிடம் அன்றைக்கே சொல்லி விட்டேன். நீ கொஞ்ச வேண்டுமானால் இந்த ஆளை உன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் வைத்துக் கொஞ்சு. என் வீட்டிற்குள் இந்த அசிங்கம் வேண்டாம்.''

'''இந்த ஆளா..' இவரையா 'இந்த ஆள்' என்கிறாய்?''

''ஆமாம்டி.. உன் இவரைத்தான் சொன்னேன்.. இந்த ஆள்.. அந்த ஆள்.. போன் ஆள்.. வந்த ஆள்.. ஆள்.. ஆள்.. போதுமா?''

''பார்த்தீர்களா? இந்த மாதிரி மரியாதை கொடுக்கத் தெரியாதவர்கள் வீட்டிற்கு வந்து போகிறீர்களே...''

''ஏய்ய்.. மரியாதையைப் பற்றி நீ பேசாதே.. உன் பல்லை உடைத்து விடுவேன். யாருக்கு மரியாதை கொடுக்க வேண்டும்.. யாருக்கு மரியாதை கொடுக்கக் கூடாது என்று எனக்குத் தெரியும்.''

''அப்படியென்றால் நீ இவருக்கு மரியாதை கொடுக்க மாட்டாய்.''

''ஆமாம்டி... கொடுக்க மாட்டேன்.''

ஆகாஷ் தாங்க மாட்டாமல் கண்களை மூடிக் கொண்டான். இங்கு என்ன நடக்கிறது? அன்று இவனைப் பிடிக்கவில்லை என்று சொன்னாள். இன்று இவனை ஏகவசனத்தில் 'இந்த ஆள்' என்று பேசி விட்டாள். இனியும் என்ன நடக்க வேண்டும்?

அதற்குள் தொண்டைமான் குறுக்கிட்டார்.



''ராதா.. இது என்னம்மா இவ்வளவு கோபப்படுகிறாய்? பெண்கள் பூமாதேவி மாதிரிம்மா.. அவர்கள் கோபப்பட்டால் பூமி தாங்காது.''

''தாங்கத்தான் முடியவில்லை தாத்தா. இங்கு நடக்கும் நாடகத்தைப் பார்த்து என்னால் தாங்கிக் கொள்ளத்தான் முடியவில்லை. தாத்தா.. எனக்கு இரண்டில் ஒன்று தெரிய வேண்டும்...''

''என்னம்மா...?''

''உங்களுக்கு நான் வேண்டுமா.. இல்லை இந்த ஆள் வேண்டுமா? நான் வேண்டுமென்றால் இந்த ஆள் இங்கே ஒரு கணம் கூட நிற்கக் கூடாது. இந்த ஆள்தான் வேண்டுமென்றால் நான் இந்த வீட்டை விட்டுப் போய் விடுகிறேன்.. இனி எப்போதும் இங்கே வரமாட்டேன்.''

ஆகாஷ் அடுத்து ஒரு கணம் கூட அங்கே நிற்கவில்லை.

''ஆகாஷ்... ஆகாஷ்..'' என்று தொண்டைமான் அழைத்துக் கொண்டே வர அவன் திரும்பியே பார்க்காமல் காரில் ஏறிப் பறந்து விட்டான்.

அதன் பின் மூன்று வருடங்கள் உருண்டோடி விட்டன. அவன் பி.எச்.டி. பட்டம் வாங்கி விட்டான். தங்கை ஆனந்திக்கு மாப்பிள்ளை பார்க்க வீட்டில் ஆரம்பிக்க அவள் அண்ணி வந்த பின்னால்தான் தனக்குத் திருமணம் என்று பிடிவாதம் பிடித்தாள். தஞ்சாவூரில் லோன் போட்டு சொந்தமாய் ஓர் வீடு கட்டி முடித்தான். இடைப்பட்ட காலங்களில் எப்போதாவது அன்னலட்சுமிபுரத்தின் நினைவு எழும்பும். கூடவே அவள் 'அந்த ஆளை வெளியே போகச் சொல்லுங்க' என்றதும் நினைவில் வரும். இதயத்தின் சாளரத்தை இறுக மூடி விடுவான்.

அவன் இதயத்தில் ஒருத்தி இருப்பது அவனது நண்பன் பரசுராமிற்கு மட்டும்தான் தெரியும்.

''ஏண்டா.. அம்மா புலம்புகிறார்களே.. ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டால்தான் என்ன?''

''எப்படிடா பரசு.. அவளை மறக்க முடியலையே...''

''ஏண்டா.. அவளோ திமிர் பிடித்தவள் என்கிறாய். உன்னை அவமானப்படுத்தியவள் என்கிறாய்.. அவள் பின்னால் உன் இதயம் போனால்... உன்னை என்னவென்று நான் சொல்வது?''

''என்னவோ சொல்லிக் கொள். எனக்குக் கல்யாணத்தில் இன்ட்ரெஸ்ட் இல்லை. ஆனந்திக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொல். அவள் கல்யாணமாவது அம்மாவின் மனம் குளிர நடக்கட்டும்.''

இப்படிச் சொன்னவன் தன் கல்யாணத்தை தானே முடிவு செய்ததும் அதைத் தந்தை தாயிடம் வந்து சொன்னதும் ஓர் நாள் நிகழத்தான் செய்தது.

தஞ்சையில் ஆகாஷ் கட்டிய வீட்டை வாடகைக்கு விட்டிருந்தான். அந்த வீட்டின் மாடியறைக்கு வெளியே படி வைத்துக் கட்டப்பட்டிருந்தது. அவன் அந்த அறையில் தங்கி இருந்தான். விடுப்பு நாட்களில் மதுரைக்குப் போய் விடுவான். அன்று அதிகாலை தூக்கத்தில் அவன் இருக்கும்போது செல்போன் அலறியது. எடுத்துப் பார்த்தான் அறிமுகமில்லாத எண். 'யாராக இருக்கும்' என்ற யோசனையோடு எடுத்துப் பேசினான்.

''ஹலோ ஆகாஷ் ஸ்பீக்கிங்.''

''நான் கோவிந்தசாமி பேசுகிறேன்.''



''கோவிந்தசாமி..? எனக்கு யாரென்று தெரியவில்லையே.''

''நான் திருமங்கலத்தில் பேங்க் மேனேஜராக இருக்கிறேன் தம்பி. என் அப்பா பெயர் தொண்டைமான். எங்க பூர்விக கிராமம் அன்னலட்சுமிபுரம்...''

ஆகாஷின் தூக்கம் பறந்தே விட்டது. அவசரமாய் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்.

''என்ன விஷயம் சார்?''

''நீங்கள் உடனே கிளம்பி அன்னலட்சுமிபுரத்திற்கு வர முடியுமா?''

''என்ன ஆச்சு சார்...'' என்றவனுக்கு அந்த நினைவு தோன்றியது.

'அப்படியும் இருக்குமா?..' அதிர்ந்து எழுந்தவன்,

''ஐயா... ஐயாவுக்கு.. எதுவும்.. அவர் நன்றாகத்தானே இருக்கிறார்?''

''இல்லை தம்பி.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''அப்பா மரணப் படுக்கையில் இருக்கிறார். கடைசியாய் உங்களை ஓர் முறை பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். நீங்கள் உடனே கிளம்பி வர முடியுமா?''

''இப்போதே கிளம்பி விட்டேன்.''

அடுத்த ஒரு மணி நேரத்தில் கல்லூரிக்கு விடுப்புச் சொல்லிவிட்டு காரில் ஏறி அன்னலட்சுமிபுரத்திற்கு பறந்தான் ஆகாஷ். புழுதி கிளம்ப தொண்டைமானின் வீட்டிற்கு முன்னால் அவனது கார் நின்றது.

வீடு முழுவதும் ஆட்கள் நிறைந்திருந்தார்கள். தொண்டைமானின் பேரன், பேத்திகள் அவர்களின் குடும்பத்தோடு வந்து இறங்கியிருந்தனர். ஆகாஷ் வாசல்படி ஏறியபோது ஐம்பத்தி ஐந்து வயது மதிக்கத் தக்க ஒருவர் வந்து,

''மிஸ்டர் ஆகாஷ்...?'' என்று வினவினார்.

''யெஸ்...''

''ஐ ஆம் கோவிந்தசாமி.. உள்ளே வாங்க.''

முற்றத்தைச் சுற்றியிருந்த வராண்டாவில் நாற்காலிகள் போடப்பட்டு அதில் ஆண்கள் அமர்ந்திருந்தனர். அந்தச் சூழ்நிலையிலும் ஆகாஷின் கண்கள் அனுராதாவைத் தேடின.. அவள் தென்படவே இல்லை.

''இப்படி வாங்க...'' கோவிந்தசாமி மாடியேறினார்.

''ஐயா.. மாடியிலா இருக்கிறாங்க?''

''ஆமாம் தம்பி.. அவர் உருவாக்கிய நூலகத்தில்தான் அவரது உயிர் போகணும்னு சொல்லி விட்டார். மாடியறையில் கட்டில் போட்டு படுக்க வைத்திருக்கிறோம். நேற்றிலிருந்து உடல்நிலை மிகவும் மோசமாகி விட்டது. கடைசியாய் உங்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார். அதனால்தான் உங்களுக்குப் போன் பண்ணினேன்.''

மாடியில் ஏறியதும் ஆகாஷிற்கு மெய் சிலிர்த்தது. அதே நூலகம். அந்த ஜன்னலோரம் இருந்த மேஜையில் அவன் அமர்ந்திருந்தபோதுதான் அவள் கால் கொலுசுகளை சப்தமெழுப்பி அவன் கவனத்தை ஈர்த்தாள்.

'விசுவாமித்திரரின் தவத்தைக் கலைத்த மேனகை.'



தவத்தைக் கலைத்து விட்டு அவள் நிம்மதியாக இருக்கிறாள். அவன் தான் நிம்மதியை இழந்து தவிக்கிறான்.

''யாரு...?''

தொண்டைமானின் குரலில் அவன் தன்னிலைக்குத் திரும்பினான்.

கட்டிலில் தளர்வாய் படுத்திருந்தவரின் அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்தவன் துக்கத்துடன்.

''ஐயா...'' என்று அழைத்தான்.

அந்த அழைப்பிற்குத்தான் எத்தனை சக்தி...!

''ஆகாஷ்... ஆகாஷா வந்திருக்கிறது...?'' அவர் அவசரமாய் எழுந்து அமர முயன்றார்.

அவரது மனதின் வேகத்திற்கு உடல் ஒத்துழைக்கவில்லை.

''வேணாங்க ஐயா.. அப்படியே படுத்திருங்க.''

''ஆகாஷ்.. என்னை மறந்து விட்டாயா?..''

''எப்படி என்னால் மறக்க முடியும் ஐயா...'' அவன் மனக் கண்ணில் பின்னலை முன்னால் விட்டுக் கொண்டு அனுராதா தோன்றினாள்.

''மறக்கவில்லை இல்லையா.. ஆகாஷ்.. எதையும் நீ மறக்கவில்லை இல்லையா? இதை உறுதியாகச் சொல்லு.''

''என்னங்க ஐயா.. என் வார்த்தைகளில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? நான் எதையும் மறக்கவில்லை. ஐயா.''

ஆகாஷின் இதயத்தில் அவள் சிரித்தாள்.

''அப்படியென்றால் எனக்கு ஒரு வாக்குறுதி தருவாயா..?''

ஆகாஷ் திகைத்தான். வாக்குறுதியா...? என்ன வாக்குறுதி? தொண்டைமான் கோவிந்தசாமியை அழைத்தார். கோவிந்தசாமி வந்து அவர் முகத்தருகே குனிந்தார்.

''என்னப்பா...''

''கீழேயிருக்கும் எல்லோரையும் வரச் சொல்லு... எல்லோரையும் என்றால்.. உன் பெண்டாட்டி. பிள்ளைகள் எல்லோரும்.. இங்கே இப்போது வரவேண்டும்.''

அடுத்த நிமிடம் கீழேயிருந்தவர்கள் அனைவரும் மாடியறைக்கு வந்து குழுமி நின்றனர்.

''அப்பா... எல்லோரும் வந்து விட்டார்கள்.''

''ராதா... ராதா வந்து விட்டாளா.''

ஆகாஷின் இதயத்தின் சாளரக் கதவு படபடவென்று அடித்துக் கொண்டது. அவன் காதுகளில் தேன் பாய்ந்தது போல் அந்த மெல்லிய குரல் கேட்டது.

''நான் இங்கேதான் இருக்கிறேன் தாத்தா.''

ஆகாஷின் தலை திரும்பியது. அந்தக் கூட்டத்தில் அவள் குரல் வந்த திக்கைப் பார்த்தான். அவள் நின்றிருந்தாள். இந்த மூன்றாண்டுகளில் நன்றாக வளர்ந்திருந்தாள். சேலை கட்டியிருந்தாள். முகத்தில் குறும்பு காணாமல் போயிருந்தது. நிதானமும், அறிவுக்களையும் தெரிந்தது.

''ராதா.. கிட்ட வாம்மா...''

அவள் தொண்டைமானின் அருகே வந்தாள். கட்டிலில் அவர் காலடியில் அமர்ந்தாள். அவள் கண்கள் அழுது அழுது சிவந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது.



தாத்தாவிற்குப் பிரியமான பேத்தி.. அவருடன் கடைசி வரை இருந்தவள்... அவள் துயரத்திற்கு அளவிருக்காதுதான்.

''ஆகாஷ்...'' தொண்டைமான் அவனிடம் கரம் நீட்டினார்.

''என்னங்க ஐயா?''

''இவள் என் பேத்தி அனுராதா.. இவளை உனக்குத் தெரியும்.''

''ஆமாங்க ஐயா.''

'இவர் என்ன சொல்ல வருகிறார்.'

''அழகானவள்.. படித்தவள்.. இப்போது எல்.ஐ.ஸி.யில் வேலை பார்க்கிறாள். எந்தப் பிராஞ்ச் தெரியுமா?''

''தெரியாதுங்க ஐயா.''

'வேலை பார்க்கிறாளா? எந்த ஊரில்?'

''தஞ்சாவூரில்தான்.. அது உனக்குத் தெரியாது இல்லையா..''

''ஆமாங்க ஐயா.''

''ஆகாஷ்... நான் உன்னிடம் கேட்கும் வாக்குறுதி இதுதான். நீ என் பேத்தி அனுராதாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும். எனக்கு வாக்குக் கொடு...''

ஆகாஷின் இதயம் ஓர் கணம் நின்று அடித்தது.

''ஐயா...''

''வாக்குக் கொடு ஆகாஷ்...''

''அப்பா.. என்ன இது..'' கோவிந்தசாமி ஆட்சேபித்தார்.

''மாமா.. வாக்கு கேட்டுத் தள்ளி விடும்படி என் மகளிடம் என்ன குறையிருக்கு?'' திலகவதி மனத்தாங்கல் பட்டாள்.

''தாத்தா...'' அனுராதாவின் கூடப் பிறந்தவர்கள் கசமுசவெனக் கத்தினார்கள்.

தொண்டைமான் அவர்கள் யாரையும் பார்க்கவில்லை. அவர் பார்வை ஆகாஷின் மேல் நிலைத்திருந்தது. நீட்டிய அவர் கரம் நீட்டியபடியே இருந்தது.

ஆகாஷின் இதயம் துடித்தது.

'என்ன செய்வது..? அவள் என் இதயத்தில் இருக்கிறாளே அவளையே திருமணம் செய்து கொள்ள என் இதயம் அறிந்த இந்தப் பெரியவர் வாக்குக் கேட்கிறார். வாக்குக் கொடுத்து விட்டால்...? அவள் என் சொந்தமாகி விடுவாள். ஆனால் அவள் அன்று சொன்ன வார்த்தைகள்... அவை அப்படியேதானே இருக்கின்றன.'

ஆகாஷ் தவித்தான்.

## 9



''என்ன ஆகாஷ்.. வாக்குக் கொடுக்க மாட்டாயா?'' தொண்டைமானின் நலிந்த குரல் அவனை உலுக்கியது.

அவன் முன்னால் கட்டிலில் அமர்ந்திருந்தவளின் மேல் அவன் பார்வை ஓடியது. இவளை மறக்க முடியுமா? அவன் முடிவெடுத்து விட்டான். தொண்டை



மானின் கையில் தன் கையை வைத்து சத்தியம் செய்தான்.

''வாக்குக் கொடுக்கிறேன். ஐயா உங்கள் பேத்தி அனுராதாவை நான் திருமணம் செய்து கொள்கிறேன்.''

தன் கைக்குள் இருந்த அவன் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டார் தொண்டைமான். தன் காலடியில் இருந்த அனுராதாவைப் பார்த்தார். விழிகளால் அவளை அருகே அழைத்தார். அவள் தாத்தாவின் அருகே நகர்ந்து அமர்ந்தாள்.

''நீயும் வாக்குக் கொடு ராதா.''

ஆகாஷ் முகத்தைத் திருப்பிக் கொண்டான். என்ன சொல்லப் போகிறாளோ..? அவன் இதயம் தவித்தது.

''வாக்குக் கொடுக்கிறேன் தாத்தா. நான் அவரைத் தவிர வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்...'' அவள் மெல்லிய குரலில் வாக்களித்தாள்.

'அதுதானே பார்த்தேன். இவளாவது.. இவள் வாயால் என்னைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொல்வதாவது... இப்போதும் என்னைத் தவிர வேறு ஒருத்தனை திருமணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்றுதானே சொல்கிறாள்.. பாதகி..'

தன் கரத்தின் மேலிருந்த இருவர் கரங்களையும் ஒன்றாக இணைத்து தன் கரத்தில் அடக்கி முத்தமிட்டார் தொண்டைமான். மெதுவாக அனுராதாவின் முகம் பார்த்தான் அவன் கரம் பற்றியிருக்கும் உணர்வே அவள் முகத்தில் இல்லை.

'சை... என்ன பெண் இவள்.'

அவன் எழுந்து கொண்டான். ஜன்னலோரம் சென்று வேப்பமரத்தைப் பார்த்தான்.

''தாத்தா...'' அடிவயிற்றிலிருந்து அனுராதா ஓலம் எழுப்பினாள். தொண்டைமானின் மேல் விழுந்து கதறினாள். அவரது குடும்பத்தார் கட்டிலைச் சுற்றிக் கொண்டார்கள். ஆகாஷ் பேச்சிழந்தான். இப்போதுதானே அவனிடம் பேசினார். அவனிடம் வாக்குக் கேட்டார்? அவன் கரத்தையும் அவள் கரத்தையும் இணைத்து முத்தமிட்டார்? அதற்குள் அவர் ஆவி பிரிந்து விட்டதா?

இமைக்காமல் இறந்து விட்ட தொண்டைமானின் உடலையே பார்த்துக் கொண்டு நின்றான் ஆகாஷ்.

ஆய்வுக்காக அவர் உதவியை நாடி வந்தான். அன்புடன் அரவணைத்துக் கொண்டார். அவன் மனதில் காதல் பிறந்தது இந்த இடத்தில்தான்... அவன் மனக் கதவைத் திறந்து தன் காதலை தொண்டைமானிடம் சொல்லி வேதனைப்பட்டதும் இந்த இடத்தில்தான்... எந்த ஒரு தருணத்திலும் தன் காதலை அனுராதாவிடம் சொல்லி விடக்கூடாது என்று அவரிடம் அவன் வாக்குறுதி கேட்டதும் இந்த இடத்தில்தான்... தன் வாழ்வின் கடைசி நிமிடங்களில் அவன் கை பிடித்து அவனது காதலியையே அவன் மணக்க வேண்டும் என்று பதிலுக்கு ஒரு வாக்குறுதியை அவர் கேட்டுப் பெற்றுக் கொண்டதும் இந்த இடத்தில்தான்... இப்போது அவர் ஆவி அவரை விட்டுப் பிரிந்து காற்றில் கலந்து விட்டதும் இந்த இடத்தில்தான்... இந்த இடம் அவனைப் பொறுத்தவரை ஓர் நினைவுச் சின்னம்.

அணையப் போகும் விளக்குத்தான் சுடர் விட்டுப் பிரகாசிக்குமோ? தன் மூச்சை இறுக்கிப் பிடித்துக்



கொண்டு அவர் அவனுக்காக காத்திருந்தது போலல்லவா ஆகிவிட்டது? இப்படி ஓர் இனிய நிர்பந்தத்தை அவனுக்கு உருவாக்குவதற்காகவா அவர் அவனைத் தன் கடைசி விநாடிகளில் அழைத்தார்?

அனுராதாவின் துயரம் சொல்லில் அடங்காததாக இருந்தது. தொண்டைமான் பெற்ற மகன் கோவிந்தசாமி கூட அவ்வளவு வருந்தவில்லை. இது இயற்கையின் நியதி என்பது போல் இயல்பாய் காரியங்களை நடத்தினார். மற்றவர்கள் காலா காலத்தில் எல்லாம் முடிந்தால் அவரவர் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பலாமே என்று அவசரம் காட்டினர். தொண்டைமானின் காலடியிலேயே அமர்ந்து கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தவள் அனுராதா மட்டும்தான்.

மரணப் படுக்கையில் இருப்பவரைக் காண வந்தவன்.. அவரது இறுதிக் காரியங்களில் கலந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகிவிட.. ஓர் பெருமூச்சுடன் ஆகாஷ் வாசலுக்கு வந்தான் வேப்ப மரத்தடி நிழலில் நாற்காலிகள் போடப்பட்டிருக்க அவற்றில் ஒன்றில் அமர்ந்தான். பக்கத்தில் அமர்ந்திருந்தவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர்.

''நல்ல மனுசன் பாவம்.. இழுத்துக்காம பறிச்சுக்காம பட்டுன்னு போய் சேர்ந்து விட்டார். இந்த ஒரு வாரம் தான் படுத்த படுக்கையாம்.''

''அவரோட கடைசி பேத்திதான் தஞ்சாவூரிலிருந்து வேலைக்கு லீவு போட்டுவிட்டு இந்த ஒரு மாதமாய் அவர் கூட வந்து இருக்குதாம்.''

''இந்த மூன்று நாட்களாய் அந்தப் பொண்ணு சாப்பிடாமல் கிடக்குதாமே.''

''ம்ம்.. பாசக்காரப் பிள்ளை. இந்தக் காலதில் யார் இப்படி இருக்கிறாங்க?''

அன்று மாலை அவன் அன்னலட்சுமிபுரத்தில் தொண்டை மானின் மோட்டார் தோட்டத்திலேயே குளித்து விட்டு ஈர உடையுடன் வீட்டிற்குள் வந்தான். கோவிந்தசாமியின் மனைவி திலகவதி அவனை சாப்பிட அழைத்தாள்.

''இல்லைங்க... நான் கிளம்பணும்.''

''காலையில் வந்தவங்க... சாயந்திரம் வரைக்கும் பசியோடு இருந்திருக்கீங்க... சாப்பிடாமல் எப்படி காரோட்டுவீங்க.. வாங்க.''

''எனக்கு மனசு வரவில்லைங்க.''

''இங்கே எல்லோருடைய மனதிலும் துக்கம் இருக்கு. அதுக்காக பட்டினி கிடந்து நாமளும் போனவர் கூட போய் சேர்ந்துவிட முடியுமா? மிச்சமிருக்கிற வாழ்க் கையை வாழ வேண்டாமா? இதை உங்களுக்கு மட்டும் சொல்லவில்லை தம்பி. நீங்க கல்யாணம் பண்ணிக் கிறேன்னு என் மாமனாரின் கை பிடித்து சத்தியம் பண் ணித் தந்தீங்களே... உங்க வருங்காலப் பெண்டாட்டி. அவளுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்காமல் குத்துயிரும் குலையுயிருமா கிடந்தால் பெத்தவ மனசு தாங்குமா? கட்டிக்கப் போகிற வளிடம் நீங்கதான் சொல்லனும்.''

இன்று காலை வரை எட்டாக் கனியாக இருந்தவள் இப்போது அவனுக்குக் கிட்டிய கனியாகி விட்டாள். தொலை தூரத்தில் நின்று கண் சிமிட்டியவள்... இப் போது அவன் கைப்பிடியில்... இதை நடத்திக் கொடுத்



தவர் போட்டோவின் பிரேமிற்குள் சிரித்துக் கொண்டே அவனைப் பார்க்க அவர் முன்னால் அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அவன் மௌனமாய் அவள் அருகே சென்று நின்றான். தூணில் சாய்ந்து கொண்டு மௌனமாய் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தவள் ஈரத் தலையில் நீர் சொட்ட அமர்ந்திருந்தாள்.

விரித்து விடப்பட்டிருந்த கூந்தல் தரையில் விழுந்து கிடந்தது.

என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? 'இவன் இங்கு வந்தால் நான் வரமாட்டேன்' என்று சொல்லி அவனை வெளியேற்றியவள் இவள். இவளிடம் எப்படிப் பேசுவது?

அவன் மனப் போராட்டத்திலிருந்து அவனை மீட்க வந்தவர் போல் கோவிந்தசாமி அங்கே வந்தார்.

''அடடா.. ஈர டிரஸ்ஸுடன் இருக்கிறீர்களே... வரதா.. கைலி எடுத்துக் கொடு.. போங்க போய் டிரஸ் சேஞ்ச் பண்ணிக் கொண்டு சாப்பிட வாங்க.''

''அதெல்லாம் வேண்டாம் சார்.''

''சாரா..? மாமான்னு கூப்பிடுங்க. இனி நீங்க எங்க வீட்டு மாப்பிள்ளை. மூன்றாம் மனிதன் மாதிரி எதற்கு கூச்சப்படுகிறீர்கள்? போங்க... டேய் வரதா.. மாப்பிள் ளையைக் கவனி.''

''வந்துவிட்டேன் அப்பா.. வாங்க மாப்பிள்ளை..'' அனுராதாவின் பெரிய அண்ணன் வரதன் அழைத்தான்.

''இல்லை... இவங்க... சாப்பிடவில்லையென்று...''

''யாரு... ராதாவையா? நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். ராதா எழுந்திரு. உனக்காக மாப்பிள்ளை கவலைப்படுகிறார் பார்.''

அனுராதாவின் கைப்பிடித்து எழுப்பி கோவிந்தசாமி உள்ளே அழைத்துச் சென்று விட்டார். வீடு கழுவி விடப்பட்டிருந்தது. உள்ளறை ஒன்றில் வரதராஜன் எடுத்துக் கொடுத்த கைலி... டி.சர்ட்டிற்கு மாறியவன் ஈர உடைகளை அங்கிருந்த பேன் காற்றில் காய வைத்து விட்டு வெளியே வந்தான்.

சூடான இட்லிகளை பரிமாறி சட்னி, சாம்பார் ஊற்றினாள் திலகவதி. பசி வயிற்றைக் கிள்ள பரபரவென்று சாப்பிட்டு முடித்தவன்... திலகவதியிடம் தயங்கித் தயங்கி.

''உங்கள் மகள் சாப்பிட்டாகி விட்டதா?'' என்று கேட்டான்.

திலகவதியின் முகம் மலர்ந்து விட்டது. தன் மகள் மேல் வருங்கால மாப்பிள்ளை காட்டும் அக்கறை கண்டு மகிழ்ந்து போனவள்,

''கவலைப்படாதீங்க... உங்கள் பெண்டாட்டியை அவளுடைய அக்காள்கள் அதட்டி உருட்டி சாப்பிட வைத்து விட்டார்கள்'' என்றாள்.

'பெண்டாட்டி...'

அறைக்குள் பாதி காய்ந்தும் காயாமலும் இருந்த தன் உடைகளை மாற்றிக் கொண்டு வெளியே வந்தவன் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பப் போனான்.



''உங்கள் பெண்டாட்டி கிட்டச் சொல்லவில்லையா...'' அனுராதாவின் அக்கா சொர்ணலதா கிண்டலாய் கூறினாள்.

அவன் தயங்கி நின்று அனுராதாவின் முகம் பார்த்தான். அவள் நிலம் பார்த்தாள்.

'என் முகத்தைப் பார்க்க என்றுதான் உனக்குப் பிடித்தது.' முகம் இறுகிப் போனவனாய் அவளிடம் கூறினான்.

''கிளம்புகிறேன்...''

அவள் பதில் சொல்கிறாளா.. இல்லையா என்பதைக் கூடக் கவனிக்காமல் அவன் வீட்டை விட்டு வெளியேறி காரில் ஏறிவிட்டான்.

அன்று இரவு எதிர்பாராமல் வந்து நின்ற மகனின் வருகை கண்டு மகிழ்ந்து போன மருதநாயகமும், வசுந்தராவும் மகன் எதற்காக வந்திருக்கிறான் என்று தெரிந்ததும் அதிர்ந்து போயினர்.

''என்னடா.. திடீர்னு வந்திருக்கிறாய்.. உடம்பு சரியில்லையா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லைம்மா.''

''வேறு என்னடா.. காலேஜ் லீவா..''

''இல்லைப்பா.. நான்தான் லீவ் போட்டு விட்டு வந்தேன்.''

''ஏண்டா.. உன் முகமே நன்றாக இல்லையே.. எனிதிங் ராங்?''

''அப்பா.. தொண்டைமான் ஐயா இறந்து விட்டார்.''

''அடடா.. என்றைக்கு இறந்தாராம்.''

"இன்றைக்குத்தான் அப்பா.. மதியமிருக்கும்."

மருதநாயகத்தின் முகத்தில் குழப்பம் நிலவியது.

"உனக்கு எப்படித் தெரியும்? அருகிலிருந்து பார்த்தவன் போலக் கூறுகிறாயே..?"

"அருகிலிருந்துதான் பார்த்தேன்..."

"என்ன...?"

"ஆமாம் அப்பா இன்று அதிகாலையில் அவருடைய மகன் எனக்குப் போன் பண்ணினார்..." என்று தொடங்கிய ஆகாஷ் நடந்தவற்றை விளக்கமாகச் சொன்னான்.

"என்னடி வசுந்தரா.. இவன் இப்படி ஓர் குண்டைத் தூக்கிப் போடுகிறான்."

"அதுதானே.. ஆகாஷ்.. நீ அந்தப் பெண்ணின் மேல் ஆசைப் படுகிறாய் என்று சொல்லு. அதில் ஓர் அர்த்தம் இருக்கும். இது என்னடா புதுக் கதையாய் இருக்கிறது. வாக்குறுதியாம். மண்ணாங்கட்டியாம். உனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?"

"அம்மா.. நான் தீர்மானமாய் சொல்லுகிறேன். இந்த ஜென்மத்தில் என் மனைவி என்று ஒருத்தி வருவதாக இருந்தால் அது அந்த அனுராதா மட்டும்தான். நான் வாக்குக் கொடுத்து விட்டேன். அப்புறம் உங்கள் இஷ்டம்."

திருமணத்தை விரும்பாமல் தள்ளிப் போட்டு வந்த மகன் திருமணம் பண்ணிக் கொள்ள இசைந்து விட்டான். என்ன... பெண்ணை அவனே பார்த்து விட்டான். காதல் திருமணம் என்றால் ஒத்துக் கொள்ள மாட்டோமா.. பலவாறாய் சிந்தனை செய்த வசுந்தராவும், மருதநாயகமும் ஓர் முறை திருமங்கலத்தில் இருந்த கோவிந்த



சாமியின் வீட்டிற்குச் சென்று வந்தனர். அனுராதா வார இறுதியென்று திருமங்கலம் வந்திருக்க பெண்ணையும் பார்த்து விட்டனர். அவளின் அழகும், படிப்பும் அவர்களுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. கோவிந்தசாமியின் பொருளாதார நிலையும் திருப்திகரமாய் இருக்க அவர்களது மனக் குறை மறைந்து விட்டது.

ஒரு வருடம் கழித்து திருமணம் செய்வதென்று தீர்மானித்தனர். திருமணத்திற்கு முதல் நாள் நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ள முடிவும் செய்தனர். இரு வீட்டாரும் ஒரு மனதாய் இணைந்து நின்று திருமண ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

இதோ... அந்தத் திருமண நாளும் வந்து விட்டது. நிச்சயதார்த்தம் நடந்து முடிந்து விடிந்தால் திருமணம். ஆனால் வாக்குக் கொடுத்தேன் பேர்வழி என்று காதலித்த மனவளையே கை பிடிக்கப் போகும் மணமகன்தான் மன நிம்மதி இல்லாமல் தவிக்கிறான். பரசுராம் சமாதானம் செய்ய ஒரு வழியாய் தூக்கத்தில் விழுந்தவன் விடியலில் பரசுராம் உலுக்க எழுந்து வேண்டா வெறுப்பாய் குளித்து முடித்து பட்டு வேட்டி பட்டுச் சட்டையுடன் மாலையும் கழுத்துமாய் மணமேடையில் வந்து அமர்ந்தான்.

# 10



மணமேடையிலிருந்த ஹோமப் புகையில் ஆகாஷிற்கு லேசாய் கண்கள் எரிந்தன. மாலையும் கழுத்தைச்

சுற்றிப் போடப்பட்டிருந்த பட்டு அங்க வஸ்திரமும் கசகசப்பாய் இருக்க வியர்க்க ஆரம்பித்து விட்டது. ஐயர் மந்திரங்களைச் சொல்லச் சொல்ல திருப்பிச் சொல்லிக் கொண்டே அவர் கொடுத்தவற்றை அக்கினியில் இயந்திர கதியில் போட்டுக் கொண்டிருந்தான் அவன்.

"பொண்ணை அழைச்சுட்டு வாங்கோ..."

ஐயர் உத்தரவிட மணப்பெண் அலங்காரத்திலிருந்த அனுராதா மணமேடைக்கு அழைத்து வரப்பட்டாள்.

அருகில் அமர்ந்தவளை ஜாடையாகப் பார்த்தான் ஆகாஷ். ஊஹூம்.. அவளிடம் ஓர் அசைவுமில்லை. நிலம் நோக்கியவள்.. நிலம் நோக்கியவள்தான். தலை நிமிரவில்லை.

'திமிர்' பல்லைக் கடித்துக் கொண்டான் ஆகாஷ்.

'இவள் என்ன நிலத்துக்குள் புதையலைக் கண்டு விட்டாளா என்ன? இப்படித் தரையை உற்று உற்றுப் பார்க்கிறாளே... கொஞ்சமாவது கல்யாணப் பெண்ணுக்குரிய நாணம்.. மகிழ்வு... முகத்தில் தெரிந்தால்தான் என்ன? ஜாடையாய் ஓர் பார்வை பார்த்தால்தான் என்ன? குறைந்தா போய் விடுவாள்?'

கெட்டி மேளம் முழங்க நாதஸ்வரம் ஒலிக்க அவள் கழுத்தில் தாலியை எடுத்துக் காட்டும்போது அவன் இதயம் சிலிர்த்தது. மனதில் நினைத்தவளையே அடைந்து விட்டான். அவள் கரம் பிடித்து அக்கினியை வலம் வரும்போது வேண்டுமென்றே அவள் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டான்.

'என்ன விளையாட்டா காட்டுகிறாய்?'



புது மணமக்களை குல தெய்வம் கோவிலை தரிசிக்க வைக்க சிந்துபட்டிக்கு காரில் அழைத்துச் சென்றார்கள். அவன் இயல்பாய் செய்வது போல் அவள் தோள் மேல் கையைப் போட்டு சாய்ந்து அமர்ந்து கொண்டான். அவள் உடல் ஒடுங்கினாள். அவன் கண்டு கொள்ளவே இல்லை.

'உன் திமிரையெல்லாம் காட்ட நான் பழைய ஆகாஷ் இல்லை. நான் உன் புருசன்டி... உன் கழுத்தில் தாலியைக் கட்டியவன்.'

முதல் நாளிரவு வரை அவன் இதயத்தில் சூழ்ந்து நின்ற சோகம் இப்போது காணாமல் போயிருந்தது. திமிறிக் கொண்டிருந்தவளின் திமிரை ஒரு மூன்று முடிச்சில் அடக்கிவிட்ட கர்வம் மனதில் குடி கொண்டிருந்தது.

'யாருகிட்ட.. ம்?..' அன்று அவள் பின்னலாட முறைத்துக் கொண்டு போனது அவன் நினைவில் வந்தது. இன்று அவள் அவனருகில்.. காலமெல்லாம் இனி அவன் நிழலில்தான் அவள் வாழ்ந்தாக வேண்டும். ஓட முடியாது.

அவன் நகர்ந்து அவளுடன் ஒட்டி அமர்ந்து கொண்டான். அவள் உடல் நடுங்க ஆரம்பித்தது. அவனுக்குப் புரிந்தது. ஒரு வகையில் அது அவனுக்குத் திருப்தியாக இருந்தது. அவளை வெற்றி கொண்ட பெருமிதம் அவன் மனதில் எழுந்தது.

'யாருகிட்டடி உன் திமிரைக் காட்டுகிறாய்.. ம்..?'

இவனும் அவள்போல் மனதில் சொல்லிக் கொண்டான். முன் சீட்டில் அமர்ந்திருந்த ஆனந்தி திரும்பி தன் புது அண்ணியைப் பார்த்துக் கூறினாள்.

"அண்ணி... இதுதான் சிந்துபட்டி.. எங்கள் சொந்த ஊர்."

'திமிர் பிடித்தவள்' என்று ஆகாஷ் நினைத்துக் கொண்டிருந்தவள் மென்மையாய் அவன் தங்கையைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"அப்படியா...?"

"அதோ தெரிகிறது பாருங்கள் அண்ணி.. கோவில் கோபுரம்... அதுதான் சிந்துபட்டி வெங்கடாஜலபதி பெருமாள் கோவில்... இந்தக் கோவிலின் சிறப்பு என்ன தெரியுமா?"

"என்ன?"

"திருப்பதியில் பிடி மண் எடுத்து வந்து இந்தக் கோவிலை கட்டி இருக்கிறார்கள். திருப்பதி ஏழுமலையானுக்கு வேண்டிய வேண்டுதல்களை இந்தக் கோவிலில் நிறைவேற்றலாம். அதை ஏழுமலையான் ஏற்றுக் கொள்வாரென்பது ஐதீகம். ஆனால் இந்தக் கோவிலில் வேண்டும் வேண்டுதல்களை இந்தக் கோவிலில்தான் நிறைவேற்ற வேண்டும். வேறு எந்தக் கோவிலில் நிறைவேற்றினாலும் எங்கள் சிந்துபட்டிப் பெருமாள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்."

"ஐ ஸீ..."

ஆனந்தியிடம் சிரித்த முகம் மாறாமல் பேசிக் கொண்டு வந்தாள் அனுராதா.

கோவில் வாசலில் கார் நின்றது. புது மணமக்களை அழைத்துக் கொண்டு கோவிலுக்குப் போனார்கள். வெங்கடாஜலபதி பெருமாளுக்கு அபிஷேக ஆரா



தனைகள் செய்து விட்டு... அவர்களின் பூர்விக வீட்டிற்கு மணமக்களை அழைத்துப் போனார்கள்.

கிராமத்து மக்கள் வந்து போய்க் கொண்டே இருக்க.. சிமெண்ட் போட்ட அந்த வீட்டின் உள்ளறையில் மின் விசிறியின் அடியில் ஆகாஷும், அனுராதாவும் அமர்ந்து இருந்தார்கள். ஆனந்தி அனுராதாவிடம் ஒட்டிக் கொண் டாள்.

"இதுதான் எங்கள் அப்பாவின் பிறந்த ஊர் அண்ணி, அப்பா பாதி நாள் இங்குதான் இருப்பார்.. காலையில் காரை எடுத்துக் கொண்டு வந்து விட்டு இரவு தான் மதுரைக்கு வருவார்.. இங்கே நமக்கு தென்னந் தோப் பெல்லாம் இருக்கு. அதில் ஓரமாய் நானும்... அண்ண னும் இரண்டு மாஞ்செடிகளையும் கொய்யாச் செடி களையும் நட்டு வைத்தோம். அவையெல்லாம் இப் போது பெரிய மரங்களாகி விட்டது. கூடை கூடையாய் காய் காய்க்கும். இன்றைக்கு நாம் போக முடியாது. இன்னொரு நாள் பார்க்கலாம்.. சரியா?"

என்னவோ உடனே அந்தத் தோப்பையும் வயல் களையும் பார்க்க வேண்டும் என்று அனுராதா அடம் பிடித்தது போல ஆனந்தி சமாதானம் சொல்ல அதைப் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டு,

"சரி..." என்றாள் அனுராதா.

'இதைப் பார்றா.. இவளுக்கு என்னைக் கண்டால் தான் ஆக மாட்டேன் என்கிறது போல.. என் தங்கை யுடன் இந்த இழை இழைகிறாளே... ஊரில் எல்லாம் நாத்தனாரைக் கண்டால்தான் ஒரு பெண்ணுக்கு பிடிக் காது என்பார்கள்.. இங்கே எல்லாமே தலை கீழாய் இருக் கிறதே...

''நல்ல நேரம் முடிவதற்குள் அன்னலட்சுமிபுரத்திற்கு போய் சாமி கும்பிட்டு விட்டு மதுரைக்குப் போக வேண்டும்.''

வசுந்தரா மருதநாயகத்திடம் கூறினாள். புது மண மக்கள் அன்னலட்சுமிபுரத்திற்குச் சென்றார்கள். தொண்டைமானின் வீட்டிற்கு போய் அவர் படத்தின் கீழ் ஆகாஷும், அனுராதாவும் வணங்கி எழுந்தபோது ஆகாஷின் கண்கள் கலங்கியிருந்தன. அனுராதா விசும்பினாள். ஆனந்தி அவளை அணைத்துக் கொண்டாள்.

''இன்றைக்கு உங்கள் கல்யாண நாள் அண்ணி. அழக் கூடாது.''

இதமான நறுமணம் அறையில் கமழ்ந்து கொண்டிருந்தது. அறையின் உள்ளே ஆகாஷ் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான். அவன் இதயம் சஞ்சலத்தில் இருந்தது. சற்று நேரத்தில் அனுராதா வந்து விடுவாள். இதுவரை மற்றவர்கள் முன்னிலையில் அவளைத் தொடவும்.. நெருங்கி அமரவும் அவன் தயக்கம் காட்டவில்லை. விரும்பிச் செய்தான். ஆனால் இப்போது... தனிமையில் அவளை எப்படி எதிர்கொள்வது?

அறைக்கு வெளியே கொலுசு சத்தம் கேட்டது. அவன் திரும்பாமல் அவளுக்கு முதுகு காட்டி நின்றான். கொலுசுச் சத்தம் சமீபித்தது. மெதுவாய் திரும்பிப் பார்த்தான். அவள் உள்ளே வந்து நின்றாள். அறைக் கதவு திறந்திருந்தது. அவனுக்குக் கோபம் வந்தது.

''ரூமை லாக் பண்ணிவிட்டு வர மாட்டாயா? இதைக் கூட சொல்ல வேண்டுமா?''



அவள் மௌனமாய் நின்றாள். அவனே போய்க் கதவை அடைத்து விட்டு வந்தான்.

''நின்று கொண்டேதான் இருப்பாயா? உட்கார வேறு சொல்ல வேண்டுமா?''

அவள் பேசாமல் கட்டிலின் நுனியில் அமர்ந்தாள்.

''ஒழுங்காய் உட்காருவதற்கு என்ன? விழுந்து, கை, கால் உடைந்து போனால் உன் வீட்டாருக்கு யார் பதில் சொல்வது? இல்லை.. வேண்டுமென்றே அவர்களிடம் பாட்டு வாங்கி வைக்க வேண்டுமென்ற திட்டம் ஏதாவது வைத்திருக்கிறாயா..?''

அவள் நகர்ந்து சரியாய் அமர்ந்து கொண்டாள். ஆகாஷ் அவள் முகத்தையே பார்த்தான். அவள் பார்வை தரையில் பதிந்திருந்தது.

'சண்டித்தனம் செய்கிறாள்...' அவனுக்கு சினம் மூண்டது.

''தரையை ஏன் பார்த்துக்கிட்டு உட்கார்ந்து இருக்கிறாய்? அங்கே யார் இருக்கிறார்கள்?''

அவள் தலை நிமிரவில்லை. அவன் பல்லைக் கடித்தான்.

''ஏய்ய்... உன்னைத் தாண்டி சொல்லுகிறேன்.. காதில் விழுகிறதா இல்லையா? நீ யென்ன செவிடா?''

அவள் உதடு கடித்துக் கொண்டாள்.

'இன்று இவன் முறையா..?'

''பதில் சொல்ல மாட்டாயா? பேச வராதா? நீ செவிட்டூமையா?''

அனுராதாவிற்கு தெளிவாய் விளங்கி விட்டது.

'இவன் பதிலுக்குப் பதில் கொடுத்துக் கொண்டிருக்கிறான். தாலிகட்டி விட்ட தைரியம்.'

அதற்குள் பதிலின்றி அவள் முகம் திருப்பிக் கொள்ள அவனுக்கு ஆத்திரம் தலைக்கு ஏறியது.

''ஏண்டி.. நான் ஒருத்தன் இங்கே பேசிக் கொண்டிருக்கிறேன். அங்கே யாரோ இருப்பது போல அங்கே என்ன பார்வை? என்னை கண்ணுக்குத் தெரியவில்லையா?''

அவள் பார்வையைத் திருப்பவில்லை.

''அது சரி.. நான் பேசினால் காதில் விழாத செவிடு.. பதில் சொல்ல முடியாத ஊமை.. பத்தாத குறைக்கு கண் பார்வையும் சரியில்லை.. உன்னை உன் தாத்தா என் தலையில் கட்டிவிட்டு அவர் நிம்மதியாகப் போய் சேர்ந்து விட்டார். என் நிம்மதிதான் போய் விட்டது...''

இப்போது பதில் சொல்லாமலிருக்க அவளால் முடியவில்லை. ''தேவையில்லாமல் என் தாத்தாவைப் பேசும் வேலையெல்லாம் வேண்டாம்'' அவனுக்குள் மகிழ்ச்சி குமிழ் விட்டது. 'பேசிவிட்டாள்' கோபத்தைக் கைவிடாதவன் போல் முகத்தை வைத்துக் கொண்டு,

''தேவையில்லாமல் பேசுகிறேனா? ஏண்டி சொல்ல மாட்டாய்? இது பர்ஸ்ட் நைட். அவனவன் முதலிரவை என்னமாய் கொண்டாடி இருப்பான்? நான் உன்னிடம் மல்லு கட்டிக் கொண்டு இருக்கிறேன். எனக்கென்ன தலை விதியா?'' என்று சலித்துக் கொண்டான்.

''இதை என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்? நானா உங்களை என் தாத்தாவிடம் வாக்குக் கொடுக்கச் சொன்னேன்?''



''பின் நானாகவா தஞ்சாவூரிலிருந்து பறந்து வந்து வாக்கு கொடுத்தேன்?''

''நான் உங்களை வரச் சொல்லவில்லை.''

''உன் அப்பாதான் வரச் சொல்லிச் சொன்னார். சும்மாவும் இல்லை. ரொம்பவும் வேண்டிக் கேட்டுக் கொண்டார்.''

''அவர் கேட்டுக் கொண்டதற்கு நானென்ன பிணையா?''

''நான் மட்டும் ஏன் பிணையாக வேண்டும்? உன்னுடன் கல்யாணம் என்பது எப்பேர்பட்ட போராட்டத்தை எனக்குக் கொடுக்கும் என்பதை நான் தெரியாதவனல்ல...''

''இதோ பாருங்கள்.. இதில் என்னைக் குற்றவாளி ஆக்காதீர்கள். எனக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை...''

''கெட்டிக்காரி.. நீ.. என்னவோ சம்பந்தமில்லாதவள் போல் என்னமாய் பேசுகிறாய்.. ஏண்டி.. கல்யாணம் என்றால் உனக்கு விளையாட்டாய் போய் விட்டதா? வாழ்க்கைடி.. உன் கழுத்தில் காலையில்தான் மூன்று முடிச்சு போட்டு உன் கையைப் பற்றி அக்கினியை வலம் வந்து இப்போது பர்ஸ்ட் நைட் ரூமிற்குள் வந்தும் உட்கார்ந்து விட்டேன். நீ நியாயவாதி போல உனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்கிறாய். எனக்கு ஒரு விசயம் தெரிய வேண்டும். நீ சம்பந்தமில்லையென்று எதைச் சொல்லுகிறாய். உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லையென்று சொல்கிறாயா? சம்பந்தமில்லாதவள் எதற்குடி நான் கட்டிய தாலியை கழுத்தில் போட்டுக் கொண்டிருக்கிறாய்?''

அனுராதா அழுது விட்டாள். அவளது விம்மல் ஒலியைக் கேட்டதும் அவன் இதயம் வலித்தது. அதிக மாய் பேசி விட்டோமோ.. மனதில் குற்ற உணர்வுடன் பேச்சை நிறுத்திக் கொண்டான். அவள் கண்ணீரோடு பேச ஆரம்பித்தாள்.

''எப்படி நீங்கள் என் தாத்தாவிற்கு கொடுத்த வாக்குறுதிக்கு கட்டுப்பட்டு என் கழுத்தில் தாலியைக் கட்டினீர்களோ.. அது போல்தான் நானும் என் தாத்தா விற்குக் கொடுத்த வாக்குறுதிக்குக் கட்டுப்பட்டே கழுத்தை நீட்டினேன்.''

''இப்போது என்ன சொல்ல வருகிறாய்? பாதிக்கப் பட்டது என் வாழ்வு மட்டுமில்லை. உன் வாழ்வும்தான் என்கிறாயோ...?''

அவள் மௌனமாய் கட்டிலில் சுருண்டு படுத்து விட்டாள். 'இப்போது என்ன செய்வது..? அவள் என் பெண்டாட்டிதான். தொட்டால் அவள் தடுக்கப் போவ தில்லை. ஆனால் என் தாத்தாவிற்கு கொடுத்த வாக்குறு திக்கு கட்டுப்பட்டுத்தான் உனக்குக் கழுத்தை நீட்டினேன் என்பவளை எப்படித் தொடுவது?'

அவனும் எதுவும் பேசாமல் அவளருகில் படுத்து விட் டான். காலையிலிருந்து மணமக்களாய் நின்ற களைப் பில் அவர்கள் இருவருமே அயர்ந்து தூங்கி விட்டார்கள்.

தூக்கத்தில் ஆகாஷிற்கு கனவு வந்தது. மேகக் கூட்டங்களின் இடையே தேவதை போல் அனுராதா மிதந்து வந்தாள். 'உனக்குத்தான் என்னைப் பிடிக்காதே' என்று ஆகாஷ் முகம் திருப்பிக் கொண்டான். அவள் தோள் தொட்டுத் திருப்பிய தொண்டைமான் தாத்தா



பேத்தியின் கரம் பிடித்து அவன் வசம் ஒப்படைக்கிறார். அவன் அவள் கரம் பிடித்து இழுக்கிறான். அவள் அவன் மேல் பூமாலையாய் விழுகிறாள்.

# 11



அவன் மேல் பூமாலையாய் விழுந்தவளை அவன் இறுகத் தழுவி முத்தமிட்டான். யாரோ கலகலவென்று நகைத்தார்கள். கண் விழித்துப் பார்த்தான். ஆனந்தி சிரித்துக் கொண்டிருந்தாள்.

''ஏண்ணா... டவலுக்குப் போய் முத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறாயே.. என்ன ஆச்சு? தூக்கம் கலையவில் லையா?''

அப்போதுதான் தன் மேலே கிடந்த டவலைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்துக் கொண்டிருப்பதை உணர்ந் தான் அவன்.

'அடச்சே.. இது அவள் இல்லையா? டவலா? இது எப்போது மேலே வந்து விழுந்தது?

''நான்தான் உன் மேல் டவலை போட்டேன். கையால் அடித்துப் பார்த்தேன் நீ எழுந்திருக்கவில்லை. டவலை எடுத்து அடித்தால்.. அதை நீ இழுத்துப் பிடித்து முத்தம் கொடுக்கிறாய்.. ஹா.. ஹா.. அண்ணி.''

''ஏய்.. ஆனந்தி.. ஏய்..''

அவன் அழைக்க அழைக்க ஆனந்தி கீழே ஓடி விட்டாள்.

'இந்த ரெட்டைவால் ஆனந்தி அவளிடம் போய் என்ன சொல்லி இவன் மானத்தை வாங்கப் போகிறதோ தெரியவில்லையே...'

குளியலறையில் பல் தேய்த்து முகம் கழுவி அவன் திரும்பி வந்தபோது அனுராதா காபி கோப்பையுடன் அறைக்குள் வந்தாள்.

'அதற்குள் எழுந்து விட்டாளா இவள்? எப்போது எழுந்தாள்?'

காபியை எடுத்துப் பருகியவாறு அவளைப் பார்த்தான். தலைக்குக் குளித்து ஈரத் தலையை டவலால் சுற்றிக் கொண்டையிட்டிருந்தாள். நெற்றியில் வகிட்டின் மேல் குங்குமம் இட்டிருந்தாள்.

'வேசமெல்லாம் பிரமாதம்.'

காலிக் கோப்பையை எடுத்துக் கொண்டு திரும்பியவளைப் பார்த்தான். மயில் கழுத்து நிறத்தில் மைசூர் கிரேப் சேலை... மஞ்சள் நிற பார்டர். பார்டர் கலரிலேயே ஜாக்கெட் அணிந்திருந்தாள்.

'என்னமாய் அழகாய் இருந்து தொலைக்கிறாள்...'

குளித்து உடை மாற்றிக் கொண்டு தலை வாரினான். அறைக்குள் நுழைந்தவள் அவனது அழுக்குத் துணிகளை சேகரித்துக் கொண்டு திரும்பினாள். இப்போது தலையை காய வைத்துப் பின்னலிட்டு இருந்தாள். நீண்ட பின்னலாட அவள் நடக்க அவள் முதுகை வெறித்தான்.

''என்ன செய்கிறாய்?''

''வேலைக்கார அம்மாளிடம் துணிகளை துவைக்கக் கொடுக்கப் போகிறேன்.''



''தெரிகிறது... இதையெல்லாம் நீயேன் எடுத்துப் போகிறாய்?''

''உங்கள் அம்மா தான் எடுத்து வரச் சொன்னார்கள்.''

''ஓஹோ... சரி நீ போ...''

அவள் இறங்கிப் போய் விட்டாள். அவன் சாப்பிடும் அறைக்குப் போனான். டைனிங் டேபிளில் அனுராதா பாத்திரங்களை வைத்துக் கொண்டிருந்தாள். ஆனந்தி அவளருகில் நின்று கொண்டு எதையோ சொல்லிக் கொண்டிருக்க ரசித்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

'இவளுக்கு சிரிக்கக் கூடத் தெரியுமா? சிரித்தால் எவ்வளவு அழகாய் இருந்து தொலைக்கிறாள். பாவி.. என்னிடம் மட்டும் முகத்தை கருங்கல் போல் வைத்துக் கொள்கிறாளே.'

அவன் உட்காரவும் அவள் தட்டைப் போட்டுப் பரிமாற ஆரம்பித்தாள் வசுந்தரா.

''அனுராதா...'' என்று அழைத்துக் கொண்டே அங்கு வந்தாள்.

''என்னங்க அத்தை?'' பவ்யமாய் கேட்டாள் அனுராதா.

''அத்தையா... யாரைச் சொல்கிறாய்?'' அறியாதவன் போல் கேட்டான் ஆகாஷ்.

''இது என்னடா பைத்தியக்காரத்தனமான கேள்வி? அத்தை என்று என்னைக் கூப்பிடாமல் வேறு யாரைக் கூப்பிடுவாள்?''

''நான் பைத்தியக்காரன்..? ஏன் சொல்ல மாட்டிங்கம்மா. நீங்கள் என் அம்மாவாயிற்றே.. அவள் அத்தை

யென்று கூப்பிடுகிறாளே.. அதனால்தான் கேட் டேன்.''

''என்னவோ.. போ. நீ சொல்வது எனக்கொன்று புரியவில்லை.''

''புரிகிறவர்களுக்குப் புரிந்தால் சரி...''

அனுராதாவிற்குப் புரிந்தது. மாடியில் 'உங்கள் அம்மா' என்று அவள் சொன்னதைச் சொல்கிறான்.. உதட்டை மடித்துக் கடித்தவள்.

''நீங்கள் எதையோ சொல்ல வந்தீர்களே அத்தை..'' என்று பேச்சை மாற்றினாள்.

''உன்னுடைய அப்பா போன் பண்ணினாரும்மா. இப்ப உன் அப்பாவும் அம்மாவும் உங்களை மறு வீட்டிற்கு கூட்டிக் கொண்டு போக வந்து விடுவார்கள் நீயும் சாப்பிட்டு விட்டு ரெடியாக இரும்மா.''

''மறுவீடா.. அப்படியென்றால்..?'' ஆகாஷ் புருவம் தூக்கினான்.

''அடி வாங்கப் போகிறாய் பார்.. மறுவீடு என்றால் தெரியாதா?''

''கல்யாணம் என்றால் என்னவென்றே தெரியவில்லை நீங்கள் மறுவீட்டிற்குப் போய் விட்டீர்கள்'' அவன் கு கொட்டினான்.

''என்னடா உளறுகிறாய்..?'' வசுந்தரா சந்தேகமா அவன் முகம் பார்த்தாள். தாய் மனம் விழித்துக் கொண்டது

'ஏன் மகன் இப்படிச் சொல்கிறான்?'

''ஏன் அண்ணா.. கல்யாணமென்றால் என்னவென்று தெரியாமலா நீ அண்ணி கழுத்தில் தாலியைக்



கட்டியிருக்கிறாய்? அண்ணி.. பார்த்து கவனமாய் இருந்து கொள்ளுங்கள்.. வேறு யாராவது மோதிரம் மாற்றக் கூப்பிட்டால் பின்னாலேயே போய் விடப் போகிறார்...''

ஆனந்தி அனுராதாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

''சரியாகச் சொன்னாய்... யாராவது கூப்பிட்டால் உன் அண்ணன் பின்னாலேயே போகிறவர்தான்...'' அனுராதா சிரிக்காமல் கூறினாள்.

ஆகாஷின் புருவங்கள் முடிச்சிட்டன. இவள் என்ன சொல்கிறாள்? தாயின் முன்னே வாக்குவாதம் வேண்டாமென்று வாய் மூடிக் கொண்டான். அவன் கை கழுவிக் கொண்டிருக்கையில் வசுந்தரா அருகில் வந்து மெதுவான குரலில் கேட்டாள்.

''ஏண்டா.. ஆகாஷ் அப்படிச் சொன்னாய்.''

''சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் அம்மா.''

''பொய் சொல்லக்கூடாது.''

''மெய்தானே சொல்கிறேன்.''

''ஆகாஷ்..'' வசுந்தரா செல்லமாய் முறைத்தாள்.

''அம்மா..'' தாயின் கன்னத்தில் ஈரக்கையை வைத்து விட்டுச் சிரித்தான் ஆகாஷ்.

''எல்லாமே உனக்கு விளையாட்டுத்தான்டா...'' ஈரக் கன்னத்தை துடைத்துக் கொண்டே சிரித்தாள் வசுந்தரா. அவள் மனதில் இருந்த கிலேசம் பறந்து விட்டிருந்தது. நிம்மதியான வதனத்துடன் சென்ற தாயைப் பார்த்த ஆகாஷின் மனம் கனத்தது.

'ஆனால் காதலையும், கல்யாணத்தையும் நான் விளையாட்டாய் நினைக்கவில்லை அம்மா. சீரியஸாகத் தான் நினைத்தேன். நினைக்கின்றேன்... ஆனால் நான் காதலித்து மணந்து கொண்டவளே என்னை முறைத்துக் கொண்டு நிற்கிறாளே அம்மா.. இதை நான் எங்கே சொல்வேன்? உங்களிடம் எப்படி முறையிடுவேன்? இவளுடன் எப்படி என் வாழ்க்கையை வாழ்வேன்?'

கோவிந்தசாமியும், திலகவதியும் மிகவும் மரியாதை யுடன் ஆகாஷை மறு வீட்டிற்கு அனுப்பி வைக்கும்படி மருதநாயகத்திடமும் வசுந்தராவிடமும் வேண்டிக் கொண்டனர்.

''ஆனால் மாமா.. என்னால் ஒரு நாள் தான் இருக்க முடியும்'' என்றான் ஆகாஷ்.

அனுராதா அவனை யோசனையுடன் பார்த்தாள்.

''என்னடா ஆகாஷ்.. உன்னை ஒரு மாதம் லீவ் போடச் சொன்னேனே...'' மருதநாயகம் வியப்புடன் கேட்டார்.

''போட்டேனே அப்பா.. கல்யாணத்திற்கு இரு வாரத்திற்கு முன்னாலேயே இங்கே வந்து விட்டேனே.. லீவெல்லாம் தீர்ந்து போச்சேப்பா.''

''இப்படிச் சொன்னால் எப்படிடா? மறு வீட்டிற்குப் போகத்தான் ஒரு நாள் இருக்குமென்றால்... நாளைக்கே நீ கிளம்ப வேண்டுமா?''

''ஆமாம்.''

''என்ன மாப்பிள்ளை இப்படிச் சொல்கிறீர்கள்? என் மூத்த மகன்கள், மகள்கள் வீட்டிற்கு விருந்துக்குப் போக வேண்டாமா?'' கோவிந்தசாமி மனத்தாங்கலுடன் வினவினார்.



''இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம் மாமா...''

ஆனந்தி வேறு ஒன்றைக் கிளப்பி விட்டாள்.

''ஏன் அண்ணா... ஹனிமூன் என்று ஒன்று இருப்பதை மறந்து விட்டாயா?''

''இருக்கிற வொர்க் லோடில் அது ஒன்றுதான் குறைச்சல்..'' ஆகாஷ் அலுத்துக் கொண்டான்.

இரு பக்க தாய் தந்தையரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மருதநாயகம் மெல்லிய குரலில் கோவிந்தசாமியிடம் சொன்னார்.

''பொறுப்பான வேலை... லீவ் கிடைப்பது கஷ்டம். அவன் சொன்னது போல் லீவ் கிடைக்கும்போது எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டால் போகிறது... என்னங்க நான் சொல்கிறது சரிதானே...''

பெண்ணைப் பெற்றவர் வேறு என்ன சொல்லுவார்?

''நீங்க சொன்னால் தப்பாகவா இருக்கும். ரொம்பச் சரி.''

ஆகாஷும், அனுராதாவும் திருமங்கலத்திற்கு மறு வீட்டு விருந்திற்குப் போனார்கள்.

திலகவதி பார்த்துப் பார்த்துப் பரிமாறினாள்.

''அப்போ.. நீங்கள் நைட்டே கிளம்பப் போகிறீர்களா மாப்பிள்ளை?''

''ஆமாம்... அத்தை..''

''ராதாவும் உங்களுடனேயே வருகிறாளா?''

''தெரியவில்லை...''

திலகவதி கணவனின் முகத்தைப் பார்த்தாள். பின் ஆகாஷிடமே வினவினாள்.

"நீங்கள் அவளிடம் இது பற்றிப் பேசவில்லையா...?"

"எது பற்றியும் பேசவில்லை."

"என்ன மாப்பிள்ளை... இப்படிச் சொல்கிறீர்கள்?"

"எல்லாக் கேள்விகளையும் என்னிடமே கேட்டால் எப்படி அத்தை? கொஞ்சம் உங்கள் மகளிடமும் கேள்வி கேட்கலாமே..."

"என்னடி மாப்பிள்ளை இப்படிச் சொல்கிறார்?" திலகவதி மகளைப் பார்த்துக் கேட்டாள்.

"அவர் டயர்டாக இருக்கிறார் அம்மா. அதனால் அப்படிச் சொல்கிறார். நானும் அவரோடுதான் போகப் போகிறேன்."

'இது என்ன புதுக்கதை...?' ஆகாஷின் விழிகள் அவளைப் பார்த்துக் கேட்டன. அவள் அதைக் கவனிக் காதவள் போல் திலகவதியிடம் கூறினாள்.

"இனிமேல் அவர் எங்கே இருக்கிறாரோ.. அங்கே தானே நானும் இருக்க வேண்டும் அம்மா?"

"அதற்காக நேற்று இந்நேரம் கல்யாணம் முடித்த பெண் உடனே ஓடி விடுவதா? மாப்பிள்ளைக்குத்தான் லீவ் இல்லை. உனக்கு இருக்கிறதே."

"நான் லீவை கேன்ஸல் பண்ணிவிட்டு டியூட்டியில் ஜாயின் பண்ணப் போகிறேன் அம்மா."

"ஏண்டி மாப்பிள்ளை வீட்டை வாடகைக்கு விட்டிருந் தாரே.. அவர்கள்



"ஏம்மா.. எனக்குக் கல்யாணமாகி ஒரு நாள் தானே ஆகிறது. நேற்று பகல் பூராவும் கல்யாண மண்டபத்தில் இருந்தோம். சாயந்திரம் சிந்துபட்டிக்கும் அன்னலட்சுமிபுரத் திற்கும் போய் வந்தாகி விட்டது. நாங்கள் இரண்டு பேரும் உட்கார்ந்து பேச நேரம் எங்கே கிடைத்தது? வீடு காலியாக இருந்தால் வீட்டில் போய் இருக்கிறேன். வீடு காலியாக இல்லா விட்டால் அவர் எங்கே தங்கியிருக் கிறாரோ... அங்கேயே போய் அவருடன் தங்கிக் கொள் கிறேன்... இது ஒரு பெரிய விஷயமா?"

'இங்கே பாருடா... என் இதயப் பைங்கிளி இப்படிப் போட்டுத் தாக்கிக் கொண்டு இருக்கிறாள். இவளுக்கு இப்படியெல்லாம் பேசக்கூடத் தெரியுமா..'

"கவலையே வேண்டாம் அத்தை.. வீடு காலியாகத் தான் இருக்கிறது. போன மாதமே வீட்டைக் காலி பண்ணி விட்டார்கள். ஆள் வைத்து வீட்டை பெயின்ட் அடித்து கழுவி சுத்தம் பண்ணி வைத்திருக்கிறேன். உங்கள் மகள் வந்தவுடன் பால் காய்ச்சி விடலாம். கேஸ் கனெக்ஷன் போன மாதமே வாங்கி வைத்து விட்டேன். மற்ற சாமான்களை இனிமேல்தான் வாங்க வேண்டும்.." ஆகாஷ் தன்மையாய் பேசினான்.

"நல்லாச் சொன்னீங்க போங்க.. நீங்கள் எதற்கு எதையும் வாங்க வேண்டும்? சீர் வரிசை தாத்தானே நாங்கள் இருக்கிறோம். நைட்டே லாரி பிடித்து ஏற்றி விட்டு உங்கள் கூடவே வந்து பால் காய்ச்சி குடி வைத்து விட்டு வந்து விடுகிறோம்" திலகவதி பரபரப்பாய் கண வனைத் தேடிப் போனாள்.

கை கழுவிய ஆகாஷ் கை துடைத்துக் கொள்ள ... வாங்கி கையைத் துடைத்த

வாறு அவளைத் துளைப்பது போல் பார்த்தான். அவள் இரும்பாய் இறுகி நின்றாள்.

''என்னுடனேயே ஏன் வருகிறாய்? உன் வீட்டில் இருந்து விட்டு வரவேண்டியதுதானே...'' ஆகாஷ் அவளிடம் குத்தலாய் பேசிக் கொண்டிருந்தபோது..

''ஏண்டி ராதா! உன் வீட்டிற்கு தேவையான பர்னிச்சர் லிஸ்டைக் கொடு.. அப்பா கேட்கிறார்..'' என்று திலக வதி அவளை அழைத்தாள்.

ஆகாஷைக் குறிப்பாய் வெட்டும் பார்வை பார்த்தபடி தாயைத் தேடிப் போனாள் அனுராதா.

பார்த்துவிட்டுப் போகிறதைப் பார்... இந்தப் பார்வைக் கொன்றும் குறைச்சலில்லை. ஏன் வாய் விட்டுச் சொல்வதுதானே.. இது என் பெற்றவர்களின் வீடு... உன் வீடுதான் இனி என் வீடென்று.. என்னிடம் மட்டும் அதைச் சொல்ல மாட்டாள். அவள் அம்மாவிடம் மட்டும் வாய் கிழியப் பேசுவாள்.. என்னவோ ராமன் பின்னால் போகும் சீதை மாதிரி டயலாக் விடுவதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. கடுகடுப்புடன் நினைத்துக் கொண் டான் ஆகாஷ்.

அன்று இரவு ஆகாஷின் காரில் முன் சீட்டில் ஆகாஷ் காரை ஓட்டிக் கொண்டு வர அருகே அனுராதா அமர்ந்திருந்தாள். பின் சீட்டில் ஆனந்தி அமர்ந்து பேசிக் கொண்டு வந்தாள். கோவிந்தசாமியும் திலகவதியும் மருதநாயகத்தின் காரில் ஏறிக் கொண்டார்கள். இரண்டு கார்களையும் சீர்வரிசை லாரி பின் தொடர்ந்தது.



# 12



வெண்மையாய் நுரையுடன் பால் பொங்கியது. கைப் பிடியைப் பிடித்துத் தூக்கி இறக்கி வைத்தாள் அனுராதா.

''அப்படியே ஜீனி போட்டு பூஜையறைக்கு கொண்டு வாம்மா...'' என்றாள் திலகவதி. அனுராதா கொண்டு போனாள்.

பூஜையறையில் விளக்கேற்றி வைத்து விட்டுக் கண் மூடிக் கடவுளிடம் வேண்டிக் கொண்டு ஒரு நிமிடம் அப்படியே நின்றாள் அனுராதா.

'என்ன வேண்டிக் கொள்கிறாள்...?' யோசனையுடன் பார்த்தான் ஆகாஷ்.

எல்லோருக்கும் தம்ளர்களில் பாலை ஊற்றிக் கொண்டு போய் கொடுத்தாள் அனுராதா. ஆகாஷ் மட்டும் அவளை ஒரு மார்க்கமாய் பார்த்துக் கொண்டே வாங்கிக் கொண் டான்.

'பால் காய்ச்சிப் புதுக்குடித்தனம் வந்து விட்டதை கொண்டாடுகிறாளே.. உண்மையிலேயே சந்தோசப்படு கிறாளா? இல்லை சாஸ்திரத்திற்கு இதையெல்லாம் செய்கிறாளா?'

அவன் சந்தேகம் அவனுக்கு. அவள் அமைதியாய் உள்ளே போய் விட்டாள். கோவிந்தராஜன் தம்பதி யினரும்.. மருதநாயகம் தம்பதியினரும் இரண்டு

நாட்கள் தங்கியிருந்து ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டுக் கிளம்பி விட்டனர். ஆகாஷ் மறுநாளே கல்லூரிக்குப் போய்விட.. அனுராதா மட்டும் லீவிலேயே இருந்தாள்.

''ஏம்மா நீ லீவைக் கேன்சல் பண்ணப் போகிறதாகச் சொன்னாயே..'' கோவிந்தசாமி வினவினார்.

''இன்னும் ஒரு வாரம் தானே அப்பா.. லீவை அவைல் பண்ணிவிட்டு ஜாயின் பண்ணுகிறேன். வீட்டை ஒழுங்கு பண்ண வேண்டுமே அப்பா.'' அனுராதா காரணம் சொன்னாள்.

எல்லோரும் கிளம்பும்போது,

''ஆனந்தி கொஞ்ச நாள் எங்களுடன் இருக்கட்டுமே'' என்று வசுந்தராவைப் பார்த்துக் கூறினாள் அனுராதா.

''வேண்டாம்மா... கல்யாண வேலைகளில் கலகலப் பாய் இருந்த வீடு.. கல்யாணம் முடிந்து நீங்கள் இரண்டு பேரும் கிளம்பி வந்த பின் வெறிச்சென்று இருக்கும். ஆனந்தியும் கூட இல்லாவிட்டால் எங்கள் இருவருக்கும் பைத்தியம் பிடித்து விடும்'' வசுந்தரா கூறியபோது அனுராதாவால் ஏற்காமல் இருக்க முடியவில்லை.

வீடு நிறைய ஆட்கள் இருந்தபோது இருந்த கலகலப்பு அவர்கள் கார் ஏறிப் போனபோது கூடவே போய் விட.. ஆகாஷ்.. அனுராதா மட்டும் இருந்த வீட்டில் அமைதி குடி கொண்டது.

அமைதியிலிருந்து தப்பிக்க ஆகாஷ் கல்லூரிக்குப் போய்விட அனுராதா மட்டும் வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தாள். பர்னிச்சர்களை அழகுறப் போட்டாள். தோட்டத் தில் புதிய செடிகளை நட்டாள். எது செய்தாலும் மாலை ஐந்து மணிக்குள் செய்து முடித்துவிட்டுக் குளித்து



உடைமாற்றி பூ மணக்க வந்து ஆகாஷிற்கு கதவு திறந்தாள். அவன் முகம் கழுவி வரும்போது டைனிங் டேபிளில் சூடாக டிபன் காபியை வைத்துக் கொண்டு காத்திருந்தாள். டிபன் சாப்பிட்டு விட்டு அவன் சற்று நேரம் டி.வி. பார்த்துக் கொண்டு இருக்கும்போது அவள் இரவுச் சமையலில் ஈடுபட்டிருப்பாள். அவன் சாப்பிட வரும்போது பக்கத்தில் நின்று கொண்டு பார்த்துப் பார்த்துப் பரிமாறுவாள். இரவு அவன் குளித்து விட்டுப் படுக்கைக்கு வரும்போது மட்டும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பாள்.

'என்னடா வாழ்க்கை இது' சலித்துப் போய் விட்டது ஆகாஷிற்கு.

'பேசாமல் நானுண்டு. என் காலேஜுண்டு என்று இருந்தேன். மகராசியைப் பெற்ற அப்பன் தேடிப் போன் பண்ணி இவளை என் தலையில் கட்டி வைத்து புண் ணியம் தேடிக் கொண்டு விட்டார். நானல்லவா இப் போது அவஸ்தைப்படுகிறேன்...'

தூங்கிக் கொண்டிருக்கும் மனைவியைப் பார்த்து பெருமூச்சு விட்டபடி தூங்காமல் இரவைக் கழிப்பான் ஆகாஷ்.

''நான் இன்றைக்கு டியூட்டியில் ஜாயின் பண்ண வேண்டும்'' ஆகாஷ் கல்லூரிக்குக் கிளம்பிக் கொண் டிருக்கும்போது அனுராதா கூறினாள்.

''பண்ணு. அதை என்னிடம் ஏன் சொல்கிறாய்..'' விட் டேற்றியாய் பதில் சொன்னான் ஆகாஷ்.

''உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வார் கள்?'' அனுராதா எரிச்சலுடன் கேட்டாள்.

''ஆமாண்டி.. இப்படி வக்கணையாய் கேள்வி கேட்பதில் ஒன்றும் குறைச்சல் இல்லை...'' கழுத்தைச் சுற்றி டையைக் கட்டிக் கொண்டே ஆகாஷ் கூறினான்.

''வேறு எதில் குறைச்சல்...?'' சண்டைக் கோழியாய் தலையை சிலுப்பிக் கொண்டாள் அனுராதா.

டையின் முடிச்சை சரி செய்து கொண்டே அவள் விழியோடு விழி பார்த்தான் ஆகாஷ்.

''ஏன் உனக்குத் தெரியாதா?...'' அவன் பார்வை அவளைக் குற்றம் சாட்டக் கேட்டான்.

''எனக்குத் தெரியாததால்தானே உங்களைக் கேட்கி றேன்.''

''நீ எந்தக் குறையும் எனக்கு வைக்கவில்லை...?'' ஆகாஷ் உள்ளே செல்லத் திரும்பியவளின் தோள் பிடித்து நிறுத்தி அவளை உஷ்ணமாய் பார்த்தபடி கேட்டான்.

அவள் மெதுவாக அவன் கைகளை விலக்கியவாறு பதில் கூறினாள்.

''நான் எதையும் மறுக்கவில்லை...''

அவள் உள்ளே போய் விட்டாள். ஆகாஷ் அசையாமல் நின்றான்.

'புத்திசாலிதான்... போட்டாளே ஒரு போடு.. நீ எதைக் கேட்டாய்.. நான் மறுத்தேன்.. என்று கேட்டாளே ஒரு கேள்வி. உண்மைதானே.. நான் தொட்டு அவள் விலகி னாளா? நான் தான் தொட்டு முயற்சி பண்ணவே இல் லையே.. நான் அழைத்து அவள் மறுத்திருந்தால் நான் குற்றம் சொல்லலாம். நான் அழைக்கவே இல்லையே.



ஆனால் எப்படித்தான் அவளை அழைப்பது? வெறுப்பை வேலியாகக் கொண்டவள் தன் தாத்தாவின் கோரிக்கைக் காக என்னை மணந்தவள்... இவளைப் போய் எப்படி நான் தொட்டு அழைப்பேன்?'

டைனிங் டேபிளுக்கு வந்தான். அனுராதா பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தாள். அவனுக்கும் அவளுக்கும் மதிய உணவை கேரியர்களில் எடுத்து வைத்திருந்தாள். காலை டிபனை தட்டுக்களில் வேகமாய் பரிமாற ஆரம்பித்தாள்.

''ஆபிஸிற்கு எப்படிப் போவாய்?''

''என் ஸ்கூட்டியில்..''

பால் காய்ச்சி வைக்க அனுராதாவின் பெற்றோர் வந்திருந்தபோது அவர்களின் துணையுடன் தான் தங்கி யிருந்த லேடிஸ் ஹாஸ்டலுக்குச் சென்று அறையைக் காலி பண்ணி விட்டு தன் உடைமைகளை கொண்டு வந்து விட்டிருந்தாள் அனுராதா. ஆனால் யாருக்கு வந்த விருந்தோ என்று வீட்டின் நடவடிக்கைகளைக் கண்டு கொள்ளாமல் கல்லூரிக்குப் போய் விட்ட ஆகாஷிற்கு அந்த விவரம் தெரியாது.

''இன்றைக்கும் அப்படித்தான் போக உத்தேசமா?''

''இது என்ன கேள்வி? வேறு எப்படிப் போவது?''

''என்னுடன் வருவது...'' ஆகாஷ் சப்பாத்தியை விண்டு கொண்டே பதில் கூறினான்.

''உங்களுடனா...?'' அவள் யோசித்தாள்.

''என்னடி யோசனை பலமாய் இருக்கிறது. யாரோ ஒரு மூன்றாம் மனிதன் கூப்பிட்டு விட்டது போல் இப்படி

யோசிக்கிறாய். நேற்று வரை நீ தனியாக ஸ்கூட்டியில் போனால் யாரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். இன்று போனால் ஏதாவது சொல்வார்கள்.''

''இன்று மட்டும் புதிதாய் என்ன வந்து விட்டது?''

''உன் கழுத்தில் தாலி வந்து விட்டது. தொட்டுப் பார். தெரியும். கேள்வி மட்டும் உணக்கையாய் கேட்டுவிடு. எதை நான் மறுத்தேன் என்று. கழுத்தில் விழுந்த தாலியை யும்.. நீ என் வொய்ப் என்பதையும் மறந்து விடு.''

''அபாண்டமாய் பேசாதீங்க. ஒரே வீட்டில் குடித்தனம் பண்ணுகிறோம். நான் உங்கள் வொய்ப் என்பதைத் தெரியாமலா ஒன்றாய் வாழ்கிறேன்?''

''என்ன சொன்னாய்..? ஒன்றாய் வாழ்கிறாயா? என்னுடனா? அதுவும் நீயா? குட் ஜோக்... ஏண்டி இதுவாடி வாழ்க்கை...''

''எனக்கு இதுதான் வாழ்க்கை...''

''நீ உன்னிலேயே இரு.. என்னைப் பற்றி யோசிக் காதே... அது சரி.. இதுதானே உன் பிறவிக்குணம்.. அதைத் தெரிந்து கொண்டே உன்னோடு வாதாடிக் கொண்டிருக்கிறேன் பார். நான் ஒரு மடையன்.''

''நீங்கள் ஒரு லெக்சரர்... அதனால் ஸ்டூடன்ஸிற்கு முன் உதாரணமாய் இருக்க காலேஜிற்கு கரெக்ட் டயத்தில் போக வேண்டும். தெரிந்ததா..? கிளம்புங்கள்.. கிளம்புங்கள்...''

''விரட்டுகிறாயா?''

''அதுவும் என் வேலை.. ஐ மீன்.. உங்கள் வொய்பின் வேலைதானே நானும் காலாகாலத்தில் டியூட்டிக்குப்



அனுராதா சாப்பிட்ட தட்டுக்களை சிங்க்கில் போட்டு விட்டு வந்தாள். கை கழுவி துடைத்துக் கொண்டே அவளை பார்வையிட்டான் ஆகாஷ்.

இளம் மஞ்சள் நிற காட்டன் புடவையில் இருந்தாள் அவள். கழுத்தில் தாலிக் கொடி. உள்ளங் கழுத்தில் ஒரு சிறு அட்டிகை. காதுகளில் கம்பிகளால் பூப்போல் பிணைக்கப்பட்ட தோடு வலது கையில் பொன் வளை யல்கள். இடது கையில் வாட்ச். நீண்ட பின்னலில் முல்லைச்சரம்.

'தங்கப் பதுமை...!' தாகத்துடன் அவளைப் பார்த்தான் ஆகாஷ். அவன் பார்வையை உணராதவளாய் தன் ஹேண்ட் பேகை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு அவனைப் பார்த்தாள் அனுராதா.

''போகலாமா...?''

ஆகாஷ் திரும்பி யாரையோ தேடுவது போல் பார்த் தான்.

''யாரைத் தேடுகிறீர்கள்?'' அவள் புரியாமல் விழித் தாள்.

''நீ யாரிடம் 'போகலாமா' என்று கேட்டாய்..?''

அவள் உதடு கடித்தாள். 'இவன் கிண்டல் பண்ணு கிறான்.'

பதில் கூறாமல் வாசல் கதவைப் பூட்டிவிட்டு அவன் கார் கதவைத் திறந்து முன் பக்க சீட்டில் ஏறி அமர்ந்தாள்.

ஆகாஷின் உதடுகளில் திருப்தியான முறுவல் தோன் றியது. 'இதைப் போலவே இவள் எல்லா விதத்திலும் குறிப்பறிந்து செயல்பட்டால் எவ்வளவு நன்றாக இருக் கும்?'

அவன் காரைக் கிளப்பினான். அவளிடமிருந்து வந்த இதமான பூ வாசம் கலந்து வந்த நறுமணம் அவனை கிளர்ச்சியுறச் செய்தது. காரில் அவன் தயாராக எடுத்து வைத்திருந்த கேசட்டைப் போட்டு டேப் ரிகார்டரை ஆன் பண்ணினான்.

என்றாவது ஒரு நாள் அவள் காரில் தனியாக தன்னிடம் மாட்டும்போது போட வேண்டும் என்று அவன் யோசித்து பதிவு பண்ணி வைத்திருந்த பாடல் ஒலித்தது.

'நான் கவிஞனும் இல்லை
நல்ல கலைஞனும் இல்லை
காதலெனும் ஆசையில்லா
பொம்மையும் இல்லை..'

அனுராதா உதடு கடித்தாள். அவன் வேண்டுமென்றுதான் இந்தப் பாடலைப் போட்டு விட்டிருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. அவளையறியாமல் பாடலின் இனிமையும் கருத்தாழமும் அவளை ஈர்த்தது.

'இரவு நேரம் பிறரைப் போலே
என்னையும் கொல்லும்
துணை இருந்தும் இல்லை என்று போனால்
ஊரென்ன சொல்லும்'

தொடர்ந்து ஒலித்த வரிகளை அவள் கேட்கவில்லை. பாடலில் தென்பட்ட கோரிக்கை அவள் மனதை என்னவோ செய்தது. பட்டென்று டேப் ரிகார்டரை அணைத்து விட்டாள். ஆகாஷ் அவளை கேள்வியாகப் பார்த்தான்.



''ஏன் ஆப் பண்ணி விட்டாய்?''

''நான் வேலைக்குப் போக வேண்டாமா?''

''உன்னை உன் ஆபிஸில் விட்டு விட்டுத்தானே காலேஜ் போகப் போகிறேன். அப்புறம் நான் வேலைக்குப் போக வேண்டாமா என்று ஏன் கேட்கிறாய்?''

ஆகாஷ் பாடலைப் போடப் போனான். அனுராதா அவன் கை பிடித்துத் தடுத்தாள். அவளின் ஸ்பரிசம் பட்டவுடன் ஆகாஷின் உடல் சூடேறியது. அவளை ஓர் பார்வை பார்த்தான். அவள் கையை அவசரமாக விலக்கிக் கொண்டாள்.

'முதன் முதலாய் தொடுகிறாள்.' ஆகாஷின் இதயம் துள்ளியது.

''இப்போது இந்தப் பாட்டு வேண்டாமே...'' அவள் தடுமாறினாள்.

''வேறு எப்போது வேண்டும்?'' ஆகாஷ் சரசமாய் வினவினாள்.

''அதைத்தான் பாட்டே சொல்கிறதே..'' அவள் கை லேசாய் நடுங்கியது.

''என்ன சொல்கிறது...'' அவனுக்கு உண்மையிலேயே புரியவில்லை.

''இரவு நேரம்ன்னு சொல்கிறதே...'' அவள் முகம் குங்குமமாய் சிவந்து விட்டது.

''ஏய்ய்...'' ஆகாஷ் சாலையோரமாய் காரை நிறுத்தியே விட்டான்.

''என்ன இது காரைக் கிளப்புங்கள்.''

''கிளப்பலாம். முதலில் இதற்கு பதில் சொல்லு. இரவு நேரமென்றால் ஓகேதானா?''

''ப்ளீஸ்... நான் இறங்கி ஓடியே விடுவேன்.''

''நான் விட்டால்தானே ஓடுவாய்? நான் கேட்டதற்குப் பதில் சொன்னால்தான் காரை எடுப்பேன்.''

''ஓகே...'' அவள் கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள். தன் காதுகளையே நம்ப முடியாமல் ஆகாஷ் அவளை ஆவலுடன் பார்த்தான்.

# 13



நான்கு வருடங்களுக்கு முன் அவன் இதயத்தில் குடியேறிய பாவாடை தாவணி அணிந்த அந்தச் சிறுமி காரணத்தைக் கூறாமல் அவனை வெறுத்தாள். அவனிருக்கும் இடத்தில் தானிருக்க மாட்டேனென்று கூறி அவனை அவமானப்படுத்தி வெளியேற்றினாள். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அவளை அவன் வளர்ந்து விட்ட இளம் பெண்ணாகச் சந்தித்தான். எப்போதும் அவள் குடியிருந்த இதயத்தின் சாளரத்தை அவள் மெல்லத் திறந்து எட்டிப் பார்த்தான். இப்போது அவளை மணக்க வேண்டிய வாக்குறுதியைக் கேட்டார் அவனது மதிப்பிற்குரிய வயோதிகர். அவமரியாதை பண்ணியவளை காதலித்து விட்ட காரணத்திற்காக அவர் கோரிக்கையை தட்டாமல் ஏற்றுக் கொண்டு அவள் கரம் பிடித்தான். வாழ்க்கையில் துணையாய் வந்த பின்னும் அவளது செயல்களில் மாற்றமில்லை. வெறுப்பைக் காட்டியவளிடம் விருப்பத்தைச் சொல்ல அவனாலும் முடியவில்லை.



இன்றோ.. ஒரு பாடல் அவன் மனதை அவளுக்கு உணர்த்தி விட்டது. தீயாய் அன்று பார்த்தவள் தென்றலாய் நாணி முகம் மறைத்துக் கொள்கிறாள். மோகம் கொண்ட ஆகாஷ் அவள் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டு சென்றான். வெட்கத்துடன் அவனைத் தள்ளி விட்டாள் அனுராதா.

''அனு... ப்ளீஸ்.''

''முதலில் இது என்ன இடம் என்று பாருங்கள். மெயின் ரோடு.''

''அப்போ.. வீட்டுக்குப் போய் விடலாமா?''

''ராமா.. உங்களுக்கு ரொமான்ஸ் பண்ண நேரம் காலம் கிடையாதா? இத்தனை நாள் லீவ் போட்டுவிட்டு வீட்டில்தானே இருந்தேன்?'' உங்களை யார் காலேஜிற்கு ஓடச் சொன்னார்கள்?''

''ஆமாண்டி. நான் காலேஜிலேயே குடியிருந்தது போல் பேசுகிறாள் பார். சாயந்திரம் வீட்டிற்கு வரவில்லையா? இப்போது நீ சொல்லும் இரவு நேரம் தினமும் வந்து போகவில்லையா?''

''என்னைக் கேட்டால்...? இப்போது போட்ட பாடலை அப்போது போட்டிருக்க வேண்டியதுதானே.. யார் கைப்பிடித்துத் தடுத்தார்கள்?''

''பிளேட்டைத் திருப்பிப் போடுகிறாள் பார்... ஏண்டி... மனுசன் மேலே இரண்டு டிப்பர் தண்ணீரை ஊற்றிக் கொண்டு வருவதற்குள் கும்பகர்ணி மாதிரி தூங்கி விட்டு... என் மேல் பழி போடுகிறாள்.''

''கண்களை மூடிப் படுத்திருந்தேன்... ஏற்றுக் கொள்கிறேன். தூங்கினேன் என்று உங்களுக்குத் தெரியுமா?''

''தூங்காமல் என்ன பண்ணிக் கொண்டிருந்தாய்?''

''நீங்கள் விடிய விடிய நடை பழகுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''யு... யு... யு...'' ஆகாஷ் அவள் காதைப் பிடித்துத் திருகினான்.

''ஆ... வலிக்குது...'' அவள் பொய்யாய் அலறினாள்.

அவளது அலுவலக வாசலில் இறங்கிக் கொண்டு கை அசைத்தவளுக்கு பதிலுக்கு கை அசைத்த ஆகாஷின் மனம் நிறைந்திருந்தது.

'சின்னப் பெண்.. பாவம்.. அறியாத வயதில் தெரியாமல் பேசி விட்டாள். இப்போது மனைவி என்றான பின்னால் மனம் இசைந்து வாழத்தான் பிரியப் படுகிறாள்.'

நீண்ட பின்னல் ஆட அலுவலகப் படியேறியவளைப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தவனை அவளும் ஓர் முறை திரும்பிப் பார்த்து மீண்டும் கை அசைக்க அவன் மனம் உல்லாச வானில் சிறகடித்தது.

'இப்படியே இவள் திரும்பி வந்து விட்டால்தான் என்ன..?'

ஏக்கத்துடன் காரைக் கிளப்பிக் கொண்டு போனான் ஆகாஷ்.

''ஹாய் ராதா.. என்ன ஹனிமூன் டிரிப்பெல்லாம் முடிந்து விட்டதா?'' எமிலி கண் சிமிட்டினாள்.

பதில் சொல்லாமல் சிரித்துக் கொண்டே ஜாயினிங் ரிப்போர்ட் கொடுத்து விட்டுத் தன் சீட்டிற்குப் போய் விட்டாள் அனுராதா.



மனதில் தாபத்துடன் முகம் நெருங்கிய ஆகாஷின் முகம் தோன்றியது. அவள் உடல் சூடானது.

'பேசாமல் லீவ் சொல்லிவிட்டு வீட்டுக்குப் போய் விட்டால் தான் என்ன?'

ஒரு கணம் தான் லீவ் சொல்லி விட்டு அதை அவனுக்கு போனில் தெரிவித்தால் எப்படிப் பரபரத்துப் போவான் என்று யோசித்தாள்.

'ஏய்.. நிஜமாகவா சொல்கிறாய்.. ஒரு நிமிடத்தில் பறந்து கொண்டு வந்து விடுகிறேன் பார்.'

பறந்து வந்தாலும் வந்து விடுவான். கன்னம் சிவக்க சிரித்துக் கொண்டாள். பையை எடுத்து பிரித்தாள். அதிலும் அவன் முகமே தெரிய,

''ஸ்வீட் ராஸ்கல்...'' என்று வாய்க்குள் முணுமுணுத்தாள். அவளது செல்போன் ஒலித்தது. எடுத்து நம்பரைப் பார்த்தாள். அவளுடைய 'ஸ்வீட் ராஸ்கல்'தான்.

அவனே போனில் தெரிவது போல் உதடு கடித்துக் கொண்டாள்.

'என்னவாம்...'

போனை எடுத்துப் பேசினாள். அவன் குரலில் துள்ளல் தெரிந்தது.

''காலேஜ் வாசலில் நின்று பேசுகிறேண்டி.''

''ஏன் காலேஜ் லீவா...''

''அதெல்லாமில்லை... நான் லீவ் போட்டு விட்டு வந்துவிடவா.''

''நான் டியூட்டியில் ஜாயின் பண்ணி விட்டேனே...''

"லீவு போட்டு விட்டு வா..."

"அது முடியாதே..."

"ஏண்டி என்னை வதைக்கிறாய்?"

"ச்ச்.. பெரிய வார்த்தையெல்லாம் சொல்லக்கூடாது. சமர்த்தாய் இறங்கி காலேஜ் போய் கிளாஸ் எடுத்து விட்டு சாயங்காலம் சீக்கிரம் வந்து விடுவீர்களாம்.. என் தங்கமில்லை..."

"என்ன சொன்னே... திரும்பச் சொல்லு."

அவன் பரபரப்பு குரலில் தெரிந்தது. அனுராதா பாகாய் உருகினாள். எதிரே அவனிருந்தால் அவளுக்கு நாணம் வந்திருக்கும். இப்போது போனில் பேசுவதால் தடையில்லாமல் அவளால் பேச முடிந்தது.

"என்ன சொல்வதாம்."

"நீ இப்போது சொன்னதைச் சொல்லுடி."

"மறந்து விட்டேனே டியர்..."

"என்னவென்று சொன்னாய்..."

"நீங்களென்ன செவிடா மை ஸ்வீட் ஹார்ட்?"

"அனு... ஐ லவ் யூ டி."

"ஐ லவ் யூ ஸோ மச்... ஆகாஷ்."

"எனக்கு இது போதும் அனு.. ஈவினிங் சீக்கிரமே வந்து விடுவேன். ரெடியாய் இரு..."

அவன் என்னவோ அவளது அலுவலக வேலைகளை முடித்துக் கொண்டு தயாராய் இருக்க வேண்டுமென்ற அர்த்தத்தில் தான் சொன்னான். ஆனால் அவளுக்கு கட்டவிழ்ந்த கன்றாக உற்சாகம் தோன்றியிருந்தது. எனவே, "எதற்கு..?" என்றாள் குறும்பாக.



மறுமுனை ஓர் கணம் மௌனமானது.

"ஏய்ய்.. ஏண்டி மனுசனை லீவும் போடவிட மாட்டேன் என்கிறாய்... வேலையும் பார்க்க விட மாட்டேன் என்கிறாய்... உனக்கு இப்படிக்கூடப் பேசத் தெரியுமா?"

"போதும் சார்.. முகத்தில் வழியும் ஜொள்ளை துடைத்துக் கொண்டு போய் வேலையைப் பாருங்கள்."

"யாரிடம் ஜொள்ளு விடுகிறேன் என் பெண்டாட்டியிடம் தானே. இந்த ரோட்டையே கழுவி விடும் அளவுக்கு ஜொள் விடுவேன் தெரியுமா?"

அவள் சிரித்துக் கொண்டே போனை அணைத்து விட்டாள். அன்று முழுவதும் அவள் மனம் உல்லாசத்தில் மிதந்தது. வாய்க்குள் ஏதாவது ஓர் பாடலை ஹம் பண்ணிக் கொண்டே வேலையில் ஈடுபட்டிருந்தாள். மாலையானதும் அவசரமாய் பாத்ரூம் சென்று முகம் கழுவி தலையை சீர் செய்து கொண்டு கண்ணாடியைப் பார்த்துக் கொண்டாள்.

'நன்றாக இருக்கிறேனா..?'

அவள் நன்றாக இருக்கிறாள் என்பதை அவளைவிட ஆகாஷ் நன்கு அறிவான் என்பதை அறியாத அனுராதா கவலைப்பட்டுக் கொண்டாள். கைப்பையை எடுத்துக் கொண்டு அலுவலக வாசலுக்கு வந்தவள் கைக்கடிகாரத்தில் மணி பார்த்துக் கொண்டாள்.

'காலையில் அப்படிப் பறக்கத் தெரிகிறது... சாயந்திரமானால் ஓடி வரவேண்டாமா.. இவ்வளவு நேரமா..?'

பொறுமையிழந்தவளாய் சாலையைப் பார்த்தாள். தூரத்தில் அவனது கார் தெரிந்தது. அவள் கண்களில்

ஒளிவந்தது. உடலின் அனைத்து செல்களும் பரபரத்தன. தாளமாட்டாமல் உதடு கடித்தாள்.

'வந்து விட்டான்.'

கார் அவளருகில் வந்து நின்றது. ஆவலாக காரின் முன் பக்கம் ஓடிக் கார் கதவில் கை வைத்தவள் திகைத்து நின்றாள்.

காரில் ஆகாஷின் அருகே ஓர் அழகிய இளம் பெண் ஒருத்தி அமர்ந்திருந்தாள்.

ஆகாஷ் காரை விட்டிறங்காமல் அவளருகே சாய்ந்து அனுராதாவை சுட்டிக் காட்டி,

''ஷி இஸ் மை வொய்ப் அனுராதா...'' என்றான்.

அவளும் சீட்டை விட்டிறங்காமல்.

''கிளாட் டு மீட் யு...'' என்றாள்.

''அனு... காரில் ஏறு...'' என்றான் ஆகாஷ்.

பொங்கி வந்த உணர்வுகள் பொசுங்கிப் போய் விட ஒரு ஜடம் போல் உணர்ச்சிகளற்ற மரக்கட்டை போல் காரின் பின் பக்க சீட்டில் ஏறிக் காண்டாள் அனுராதா.

# 14



ஆகாஷின் அருகே அமர்ந்திருந்த இளம் பெண் கூந்தலை அழகாக கொண்டையிட்டிருந்தாள். காதோ மாய் ஒற்றை ரோஜா ஒன்றை செருகி இருந்தாள். அவள்



மேல் இனிய நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. வார்த்தைக்கு வார்த்தை குலுங்கிச் சிரித்துக் கொண்டிருந் தாள். ஆகாஷ், அனுராதா என்ற ஒருத்தி இருப்பதையே மறந்தவனாய் அவளுடன் வெகு சுவாரஸ்யமாய் பேசிக் கொண்டு வந்தான்.

''அப்புறம்... எப்படித்தான் அந்த மேட்டரை ஹேண் டில் பண்ணினீங்க?'' என்று ஆகாஷ் வினவ,

''வேறு என்ன செய்வது? அவனிடம் பேசித்தான் சரி பண்ணினேன். ஆக்சுவலி.. ஹி இஸ் எ வெரிகுட் பாய்.. பட் ஏதோ ஒரு இம்ப்ரெஸ்ஸன் என் மேல் விழுந்து விட்டது... நல்லது கெட்டதை எடுத்துச் சொன்னதும் சரியென்று ஏற்றுக் கொண்டு விட்டான்..'' என்று அவள் பதில் கூறினாள்.

''சொல்கிறவங்க சொன்னால் கேட்டுக் கொள்ளத் தானே செய்வார்கள்.'' என்று அவளிடம் கண் சிமிட்டிய ஆகாஷ்.

''டோண்ட் மிஸ்டேக் மி...'' என்று வேறு கூறினான்.

''இது ஒரு வார்த்தையை ஆண்கள் நீங்கள் எல் லோரும் கண்டுபிடித்து வைத்திருக்கிறீர்கள். இசகு பிசகாய் எதையாவது பேசி வைக்க வேண்டியது... அப் புறம் டோன்ட் மிஸ்டேக் மி என்று சொல்வது.. கெட்டிக் காரர்கள்.'' அவள் உதடு பிதுக்கினாள்.

''பட் ஒன் திங் மிஸ் சொப்னா. நீங்கள் இம்ப்ரெஸ் பண்ணும் அழகோடுதான் இருக்கிறீர்கள்..'' ஆகாஷ் புகழ்ந்தான்.

''கேலி பண்ணுகிறீர்கள் என்று தெரிகிறது. ஒரு வகையான ஈர்ப்பு மிஸ்டர் ஆகாஷ். நமக்கு ஒருவரை

அதிகமாய் பிடித்திருக்கும். உடனே அதைக் காதல் என்று சொல்லி விடுவோம்'' அவள் இலகுவாய் கூறினாள்.

''அதிகம் பிடித்திருந்தால் அது காதல் தானே...'' ஆகாஷ் தன் முன்னாலிருந்த கண்ணாடி வழி பின் சீட்டிலிருந்த அனுராதாவைப் பருகுவது போல் பார்த்துக் கொண்டே சொப்னாவிடம் கூறினான்.

வெறுப்பாய் ஜன்னல் வழி வெளியே பார்த்துக் கொண்டு வந்த அனுராதா அதைக் கவனிக்கவில்லை. அவள் மனதில் சூறாவளி சுழன்று கொண்டிருந்தது.

''அதற்காக ஒரு ஸ்டூடண்ட் லெக்சரர் மேல் காதல் கொள்வதா?'' சொப்னா கோபமாய் கேட்டாள்.

''அவன் மனதில் காதல் வந்து விட்டது. அதற்கு மேல் அவன் என்ன செய்வான் பாவம். உங்களிடம் ஒன்று சொல்லவா சொப்னா.. என் சின்ன வயதில் போர்த் ஸ்டாண்டர்டு என்று நினைக்கிறேன். எனக்கு இங்கிலீஷ் கிளாஸ் எடுக்க ரோஸி என்று ஆங்கிலோ இண்டியன் டீச்சர் ஒருத்தங்க வருவாங்க. ரொம்ப ஸாப்ட் லேடி. எனக்கு அவங்களை மிகவும் பிடிக்கும். தினமும் அவங்களுக்கு ரோஸ் கொண்டு போய் கொடுப்பேன். இந்தப் பையனுக்கு உங்கள் மேலிருக்கும் ஈர்ப்பும் அது போலதான்.''

ஆகாஷ் அந்த நாள் நினைவில் ஆழ்ந்து போய் கூறினான்.

அனுராதா பல்லைக் கடித்துக் கொண்டாள். ஒரு நாள் ஒரு பொழுதாவது இந்தக் கதைகளையெல்லாம் இவன் தன்னிடம் சொல்லியிருப்பானா? இவளிடம் எப்படியெல்லாம் இழைகிறான்.



''எல்லாம் சரிதான் சார்... நீங்கள் ரோஸ் கொடுக்கும்போது நீங்கள் சைல்ட்... ரோஸி மிஸ் உங்கள் அம்மா ஏஜில் இருந்திருப்பார்கள். இவன் காலேஜ் ஸ்டூடன்ட்... நான் அன்மேரிட் வுமன். இதை எப்படி நான் அலோவ் பண்ண முடியும்?'' சொப்னா தலையில் அடித்துக் கொண்டாள்.

''ஈஸி... ஈஸி... எத்தனை தடவைதான் தலையில் அடித்துக் கொள்வீர்கள். தலை வீங்கி விடப் போகிறது'' ஆகாஷ் அக்கறையாய் கூற,

'ஏன் நீ போய் தடவி விட வேண்டியதுதானே..' என்று அனுராதா கடுப்புடன் நினைத்துக் கொண்டாள்.

கார் அவர்கள் வீட்டு வாசலில் போய் நின்றது. ஆகாஷ், ''அனு இறங்கிப் போய் கேட்டைத் திறந்து விடு...'' என்றதும் அனுராதாவின் மேனி பற்றியெரிந்தது.

'இவன் பக்கத்தில் ஒருத்தியிடம் கொஞ்சிப் பேசிக் கொண்டு வருவானாம்... நான் பின் சீட்டில் ஒடுங்கி உட்கார்ந்து விட்டு இப்போது இறங்கி கேட்டைத் திறந்து விட வேண்டுமாம். இவன் என்னை என்ன வேலைக்காரி யென்று நினைத்து விட்டானா?'

கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இறங்கி கேட்டைத் திறந்து விட்டாள். அப்படியே கதவைத் திறந்து கொண்டு வீட்டிற்குள் போய் விட்டாள்.

மாடியறைக்குள் சென்றவள் ஹேன்ட்பேகை தூக்கி யெறிந்து விட்டு கட்டிலில் விழுந்தாள். கதவு திறக்கும் சத்தம் கேட்டது. ஆகாஷ் உள்ளே வந்தான்.

''வாட் இஸ் திஸ் அனு... வீட்டிற்கு கெஸ்ட் வந்திருக்காங்க... நீ இங்கே வந்து படுத்துக் கொண்டிருக்கிறாய்.

கொஞ்சம் கூட பொறுப்பே இல்லை உனக்கு. வா... வந்து டிபன் காபி தயார் பண்ணு... கமான்... கமான்.. கமான்..''

'நான் என்ன ரேஸ் குதிரையா? நீ விரட்ட விரட்ட ஓடுவதற்கு வேறு ஆளைப்பார்... அவள் உன்னுடன் உட்கார்ந்து பல்லைக் காட்டிப் பேசிக் கொண்டிருப்பாள். நான் அடுப்படியில் அவளுக்கு டிபன் காபி செய்து கொண்டிருக்க வேண்டும்... எவ்வளவு அராஜகம் பண்ணுகிறாய்...'

மனதிற்குள் பொறுமிக் கொண்டே எழுந்தவள் பேசாமல் சமையலறைக்குப் போய்விட்டாள். பத்து நிமிடங்களில் மணக்க மணக்க ரவா கேசரியும், வடையும் செய்து வைத்துவிட்டு காபி போட ஆரம்பித்தாள்.

''ஹாலுக்கு வாசனை வருதுன்னு சொப்னா சொல்கிறாங்க.. பரவாயில்லை... அவங்களை அசத்திட்டே...'' ஆகாஷ் உள்ளே வந்து பாராட்டுதலாய் கூறினான்.

'உன்னிடம் வழியும் பெண்ணரசிகளுக்கு சமைத்துப் போட்டு பெயர் வாங்கத்தானே நான் பிறந்திருக்கிறேன்..'

அனுராதா பதில் கூறாமல் தட்டுக்களில் வடையையும் கேசரியையும் பரிமாறி அவன் பக்கம் நகர்த்தினாள்.

''ஏன் நீயே கொண்டு வந்து கொடுக்கலாமே.. சொப்னாவிற்கு சந்தோசமாக இருக்குமே...'' ஆகாஷ் யோசனை கூறினான்.

'பேசாமல் எடுத்துக் கொண்டு போ.. இல்லாவிட்டால் எல்லாவற்றையும் குப்பைக் கூடையில் கொட்டிவிடுவேன்.'



தன் ஆத்திரத்தை கட்டுப்படுத்திக் கொண்டு காபி கலக்குவது போல் குனிந்து கொண்டாள்.

''ஓ.. நீ காபி கலக்குகிறாயா? அப்போ சரி.. நானே எடுத்துக் கொண்டு போகிறேன்..'' உதவி செய்யும் பாவனையில் கூறிக் கொண்டு அவன் டிபன் டிரேயை தூக்கிக் கொண்டு போனான்.

அனுராதா காபியை கோப்பைகளில் ஊற்றி வைத்து விட்டுச் சமையல் மேடையை சுத்தம் பண்ணி பாத்திரங்களை சின்க்கில் போட்டுக் கொண்டிருந்தாள். ஆகாஷ் காலி டிபன் தட்டுக்களோடு திரும்பி வந்தான்.

''காபியை ஊற்றி வைத்து விட்டாயா? சரி... வேலை தான் முடிந்து விட்டதே... நீயும் முன் ஹாலுக்கு வாயேன்.... பேசிக் கொண்டிருக்கலாம்...'' ஆகாஷ் கூறிக் கொண்டிருக்கும் போதே அது காதில் விழுகாதது போல் பின்பக்க கதவைத் திறந்து கொண்டு காய வைத்திருந்த துணிகளை எடுக்கப் போய் விட்டாள்.

அவளது ஒதுக்கம் ஆகாஷின் கவனத்திலேயே படவில்லை. அவன் காபிக் கோப்பைகளை டிரேயில் அடுக்கிக் கொண்டு ஹாலுக்குப் போய்விட்டான்.

பின்பக்கம் நின்றிருந்த அனுராதாவிற்கு துக்கம் பொங்கியது. எப்போதும் இதுதான் அவள் விதியா? கடைசிப் பெண்ணென்று செல்லமாய் வளர்ந்தவள்... இரண்டாம் முறையாக ஆகாஷால் அவமானப்படுத்தப்படுகிறாள்.

''அனு... அனு.. இங்கே இருக்கிறாயா.. கமான்.. கமான்.. சொப்னா கிளம்பிக் கொணடிருக்கிறாங்க.. உன்கிட்ட சொல்லிட்டுப் போகணுமாம்...'' ஆகாஷ் அழைத்துக் கொண்டே வந்தான்.

'இரண்டு மணி நேரமாய் கடலை போட்டு முடித்து விட்டு ஒரு வழியாய் கிளம்பிவிட்டாளா?'

அனுராதா முன் ஹாலுக்கு வந்தாள். அந்த சொப்னா ஒயிலாய் எழுந்து நின்றாள்.

''நான் கிளம்புகிறேன் மிஸஸ் ஆகாஷ்..''

அனுராதா மௌனமாய் தலை அசைத்தாள்.

''உங்க டிபன்.. காபி பிரமாதம்..''

''ம்ம்...''

''ஆகாஷ்.. உங்க வொய்ப் எவ்வளவு அமைதியாய் இருக்கிறாங்க. யு ஆர் வெரி லக்கி.''

''இவளா அமைதி..? என்னை முதன் முதலாய் பார்த்தபோது என்னமாய் என்னை ராகிங் பண்ணினாள் தெரியுமா? ஹா... ஹா...''

''ஈஸிட்..? என்ன மிஸஸ் ஆகாஷ்... இதெல்லாம் உண்மையா?'' சொப்னா லேசாய் நகர்ந்து ஆகாஷின் அருகே நின்று கொண்டு வினவினாள்.

''ஒரே தலைவலி...'' என்றாள் அனுராதா. அவள் முகம் ஒரு விதமாய் மாறியிருந்தது. ஆகாஷிற்கு அன்னலட்சுமி புரத்தில் அவனை வெளியேற்றியபோது இருந்த அனுராதாவின் முகம் நினைவில் வந்தது.

## 15



அப்போதுதான் அது உறைத்தது ஆகாஷிற்கு.



'ஒரே தலைவலியாய் போயிற்று உன்னோடு..' என்று சொல்வது போல் அல்லவா அனுராதாவின் குரலும் வார்த்தைகளும் இருக்கின்றன?

'ஏன் இவள் இப்படிச் செய்கிறாள்? வீட்டுக்கு வரும் விருந்தாளியிடம் பேசும் முறையா இது?'

ஆகாஷிற்கு ஒன்று தெள்ளத் தெளிவாய் விளங்கியது. அனுராதாவிற்கு சொப்னாவைப் பிடிக்கவில்லை. அதனால்தான் வேண்டுமென்றே சொப்னாவுடன் அமர்ந்து உரையாடுவதை தவிர்த்திருக்கிறாள். இப்போது இப்படி ஒரு கடுமையான வார்த்தையை பிரயோகிக்கிறாள்.

சொப்னாவிற்கு இது புரியாமல் இருக்க வேண்டுமே என்று அவன் கவலைப்பட்டான். அவள் பாவம்.. அவளது வகுப்பில் படிக்கும் மாணவன் ஒருவன் அவள் மீது காட்டிய அதீதமான அன்பைக் கவனிக்காமல் சிரித்துக் கொண்டே பழகிவிட... அது இப்போது காதலாக மாறிவிட்டதால் நொந்து போயிருக்கிறாள். ஒரு வழியாய் அந்த மாணவனுக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைத்ததை கூறிக் கொண்டிருந்தாள். ஆகாஷ் தன் புது மனைவியைப் பற்றி பேச்சினூடே சொல்ல.. அவனது காதல் மனைவியைப் பார்க்கும் ஆவலில் வீட்டுக்கு வருகிறேனென்று சொல்லிக் கூடவே கிளம்பி வந்து விட்டாள். அவளிடம் இப்படியா பேசுவது?

அன்றும் அப்படித்தான்... அன்னலட்சுமிபுரத்தில் மிகக் கடுமையான மொழிகளைக் கொட்டினாள். அன்று அவள் நாவினால் சுட்ட தீக்காயத்தின் வடு இன்றும் மாறாமல் மறையாமல் அப்படியே அல்லவா நெஞ்சில் நிற்கின்றது? இன்று காலை இன்முகம் காட்டி அவனை

வழியனுப்பி விட்டு இப்போது வன்முகம் காட்டினால் என்ன அர்த்தம்?

நல்லவேளையாக சொப்னா சுருதி பேதத்தை உணரவில்லை. அனுராதாவின் வார்த்தைகளின் மறைபொருள் அவளது அறிவிற்கு எட்டவேயில்லை. எனவே,

''அடடே... தலைவலியா.. டேப்லெட் போட்டுக் கொண்டு ரெஸ்ட் எடுங்கள்...'' என்று உண்மையான கவலையுடன் கூறினாள்.

''இந்த வீட்டில் நானெங்கே ரெஸ்ட் எடுப்பது?'' அனுராதா முகம் திரும்பிக் கொண்டாள். அவள் மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

''ஏன்... பெட்ரூமில்தான் ரெஸ்ட் எடுக்க வேண்டும். ஆனால் அதுதான் உங்களுக்கு கஷ்டமான விசயம் போல இருக்கிறது. ஆகாஷ் ரெஸ்ட் எடுக்க விட மாட்டாரே...''

சொப்னா குலுங்கிச் சிரிக்க அனுராதா கோபத்தை அடக்க வழி தெரியாமல் தவித்தாள்.

'பேசாமல் போய்விடு. நான் பேச ஆரம்பித்தால் நீ தாங்கமாட்டாய். பெட்ரூம் என்பது கணவன், மனைவி இருவரின் அந்தரங்க இடம். அதைப் பற்றி பேசிச் சிரிக்கும் உனக்கு நாகரிகம் என்றால் என்னவென்றே தெரியாதா? பாங்காய் உடை உடுத்தத் தெரிந்தால் மட்டும் போதாது. பண்பாடும் தெரிய வேண்டும்...'

நல்லவேளையாக ஆகாஷ் அவசரமாய் குறுக்கிட்டு சொப்னாவை மேலே பேசவிடாமல் அழைத்துச் சென்று விட்டான்.



''அனு... சொப்னாவை அவங்க வீட்டில் டிராப் பண்ணிவிட்டு வருகிறேன். நீ கதவைப் பூட்டிக் கொள்...''

'ஏன் அவளைக் கையைப் பிடித்து வீட்டுக்கு கூட்டிப் போய் விட்டு விட்டுத்தான் வரவேண்டுமா? அவளாகப் போய் கொள்ள மாட்டாளா?'

காரின் முன்பக்கக் கதவை சொப்னாவிற்கு ஆகாஷ் திறந்து விடுவதைக் கண்ட அனுராதாவின் மனம் வலித்தது.

'இன்னும் நீ எவ்வாறெல்லாம் என் மனம் உடைக்கக் காத்திருக்கிறாய்? இதற்காகவா என்னைத் தேடி வந்து என் மன அமைதியைக் குலைத்தாய்?'

மௌனமாய் மனம் அழுக கதவைச் சாத்திவிட்டு உள்ளே சென்று பூஜையறையில் அமர்ந்து கடவுள் முன் கண்ணீர் விட்டாள் அனுராதா... எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ.. வாசல் அழைப்பு மணி விடாமல் ஒலிக்க பதறிப்போய் எழுந்து வாசல் கதவைத் திறந்தாள்.

ஆகாஷ் அவளை சிவந்த விழிகளால் உறுத்துப் பார்த்த வண்ணம் உள்ளே நுழைந்தான்.

''எவ்வளவு நேரமாய் காலிங்பெல்லை அழுத்து கிறேன். கதவைத் திறக்காமல் எங்கே போனாய்? அலட் சியமா?''

'ஆரம்பித்து விட்டானா?' என்றிருந்தது அனுராதா விற்கு. இவனுக்கு இவன் செய்வது மட்டும் நியாயம். அனுராதா செய்வது எல்லாமே குற்றம்.

பதில் சொல்லாமல் கதவை அடைத்துவிட்டு உள்ளே சென்றாள் அனுராதா. ஆகாஷ் பல்லைக் கடித்தான்.

''ஏய் நில்லுடி.. நான் ஒருவன் இங்கு நின்று கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறேன். நீ இவனுக்கென்ன கணக்கென்று பதில் சொல்லாமல் அலட்சியமாய் உள்ளே போகிறாய்.. என்னடி திமிரா?''

பொறுத்தது போதுமென்று அனுராதா பொங்கி வெடித்தாள்.

''ஆமாம்... நீங்கள் போட்ட சோற்றை உட்கார்ந்து சாப்பிட்டதால் வந்த திமிர். வார்த்தைக்கு வார்த்தை என்னைத் திமிர் பிடித்தவள்ன்னு பட்டம் கட்டும் தகுதி நிச்சயமாய் உங்களுக்கு கிடையாது..''

''வாட் டு யூ மீன்..?''

''ஐ மீன் வாட் ஐ ஸே... உலக மகாத்திமிர் பிடித்தவரென்ற பட்டத்தை உங்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். நீங்கள் என்னைத் திமிர் பிடித்தவளென்று சொல்கிறீர்களா?''

''எனக்குத் திமிரா? குட் ஜோக்... நீ ஒருத்தி தான் இப்படிச் சொல்கிறாய். வேறு யாரும் இப்படி ஓர் வார்த்தையை என்னைப் பார்த்துச் சொன்னதில்லை.''

''எப்படிச் சொல்வார்கள்.. உங்களிடம் வழிகின்ற பெண்ணரசிகள் வாய் திறந்து உங்களைப் போய் திமிர் பிடித்தவரென்று சொல்வார்களா? நான்தான் சொல்வேன்.''

''அப்படி என்னிடம் யார் யார் வழிந்தது...''

''அன்று ராகினி.. அதன் பின்னால் யார் யாரோ..''

''ஓஹோ... அப்படியானால் நீ என்னிடம் வழியவேயில்லை?''

ஆகாஷ் அவளையே பார்த்துக் கொண்டு கேட்டான். அனுராதா உதடுகடித்துத் திரும்பிக் கொண்டாள்.



'வழியவே இல்லையா...
மயங்கவே இல்லையா..? ம
உயிர் தவித்தது. நெஞ்சம் ஓ
நினைத்துப் பார்த்தது.

'மயங்கினேன் சொல்லத் த

உன்னை விரும்பினே

தினம் தினம் உன் தரிசனம்

பெறத் தவிக்குதே ம

இங்கு நீயில்லாத வாழ்வும்

அனுராதா பதில் சொல்
போனாள். ஆகாஷ் அவள் மு
விரித்து மறைத்து நின்றான்.

''இதற்காகத்தான் இதுவ
யிட்டுக் கொண்டிருக்கிறோம்
நானென்ன பதில் சொல்வ
விடு.. நீ என்னிடம் மயங்க

அனுராதா அதை விட்டு
தாவினாள்.

''யார் பேசினாலும் அவர்
பேசுபவர்கள்... எவர் கூப்பிட்
லேயே போகிறவர்கள் எல்
கேட்கக் கூடாது..''

''என்ன சொன்னாய்.. இ
யாணத்திற்கு மறுநாள் ஆனந்
கூப்பிட்டாலும் உன் அண்ண
வர்தானென்று.. அப்படி ய

என்னிடம் நீீ சொல்லியே தீர

டாயம்?''

... கட்டாயம் தான். மனிதனை
றந்து வந்திருக்கிறாய். உன்னை
கண்டனோ.. அன்று என் நிம்மதி
ன்னுடன் போராடிப் போராடியே
லாம் வீணாகக் கழியப் போகிறது.
. எப்போது முறைப்பாய் என்றே
லயடி. ஆழ்கடலின் ஆழத்தைக்
பிடலாம். ஆனால் உன் மனதில்
ளேதைக் கண்டுபிடிக்க ஒருவராலும்
முடியவில்லைடி..'' ஆகாஷ் மூச்சு

பற்ற துயரத்துடன் தொண்டை
ண்டாள்.



ான்ற வெள்ளை மனம் அம்மா
விலும் தீங்கு நினைக்காத பிற
சல்லும் பாதையிலே பூ மலரும்..
நெல் அள்ளிக் கொடுத்தால் அது
க்கு குறையாமல் விளைந்து
ன் மனம் மலரினும் மென்மை



யானது தாயி. அதைப் புரிந்து கொள்ளவும் ஓர் தகுதி இருக்க வேண்டும்...''

பேத்தியின் தலைகோதி தொண்டைமான் தாத்தா அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் இவை.

அந்தத் தகுதி ஆகாஷிற்கு இல்லாமல் போய் விட்டதா? இவள் மனதிலிருப்பதை அறிய முடியாதவனாய் அவனிருக்கிறானா? தன் மனதை உணராத காதலனைப் பெற்ற பெண்ணுக்கு அதை விடத் துன்பம் வேறு எதுவாக இருக்க முடியும்?

''ஏண்டி முகம் திருப்பிக் கொள்கிறாய்? என்னைப் பார்க்கப் பிடிக்கவில்லையா?''

''ஆமாம்... பிடிக்கவில்லை... பிடிக்கவில்லை.... பிடிக்கவில்லை...'' வெறிபிடித்தவள் போல் கத்தினாள் அனுராதா.. கட்டுப்படுத்திய உணர்வுகள் கட்டவிழ்த்துக் கொண்டு வெளியே வந்தன.

''என் கண் முன்னாலேயே இன்னொருத்தியுடன் குழாவும் உங்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை. ராகினியை நான் மறந்து விட்டேனென்று நினைத்தீர்களா...? அவளிடமெல்லாம் நின்று ஓர் வார்த்தை நான் பேச மாட்டேன்... அவள் உங்களைத் தேடிவந்து என்னையும், என் தாத்தாவையும் படுத்தியபாடு.. அப்பப்பா... இதெல்லாம் யாரால் வந்தது. உங்களால் வந்தது. உங்களைக் காணவே.. இன்னும் சொல்லப்போனால் வசதியான மாப்பிள்ளையை வலை வீசிப் பிடிக்கவே அவள் எங்கள் வீட்டிற்கு வந்தாள்... நீங்களும் அவளுடன் சரசமாடினீர்கள்...''

''அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன்... ராஸ்கல்... நான் அவளுடன் சரசமாடினேனா..? அவள் என்னைத்

தேடி வந்ததற்கு என் மேல் குற்றப் பத்திரிக்கை வாசிக்கிறாயா..?''

''அடேங்கப்பா.. இவர் பெரிய நியாயவாதி. உங்கள் மனதில் கள்ளம் இல்லாமலா அவள் இழுத்த இழுப்பிற்கு எல்லாம் போனீர்கள்? இல்லை தெரியாமல்தான் கேட்கிறேன்.. என்னைப் பார்த்த அன்றே உங்கள் நிம்மதி போய் விட்டது என்றீர்களே... எனக்கு மட்டும் உங்களைப் பார்த்த பின்னால் வாழ்க்கை வண்ண மயமானதாக இருந்ததா? அதுவும் கருப்பு வெள்ளைத் திரைப்படம் போல் கந்தல்கோலமாகத்தான் ஆகிவிட்டது. கொஞ்சமாவது மனச்சாட்சியென்று உங்களுக்கு இருந்தால் அதனிடம் கேட்டுப்பாருங்கள். என் முன்னேயே.. ராகினியுடன் ஒற்றுமை பாராட்டி என்னை அவமானப்படுத்தி பேசினீர்களே... அப்போது எனக்கு எப்படி இருந்திருக்கும்? அன்றிலிருந்து இன்று வரை நீங்கள் மாறவே இல்லை...''

ஆகாஷின் தன்மானம் கொதித்தது. இவன் மாறவேயில்லையென்றால் என்ன அர்த்தம்? இவன் என்ன பெண் பித்துப் பிடித்தவனா? ஒருத்தியையே நினைத்து.. அவள் வெறுப்பிற்கும் ஆளாகி.. அவள் வெறுத்தாலும் பரவாயில்லை... அவளை மனைவியாகக் கிடைக்கும் வாய்ப்பை தவற விடக்கூடாது என்று அவள் கழுத்தில் தாலியைக் கட்டி கூட்டி வந்திருக்கிறானே.. இவனைப் பார்த்தா 'நீ மாறவே இல்லை' என்கிறாள்.

''அன்றிலிருந்து இன்று வரையென்றால் என்ன அர்த்தம்? அன்று ராகினியிடம் சரசமாடினேன் என்றாய்... இன்று..?''

''ஏன் அதை என் வாயால் சொல்ல வேண்டுமா?''



''ஆமாம் என்றுதான் வைத்துக் கொள்ளேன். நீ பேசும் தேனினும் இனிய மொழிகளைக் கேட்க உன்னைத்தேடி சாயந்திரம் எப்போது வருமென்று காத்திருந்து ஓடி வந்தேனில்லையா? என்னை நீ ஏமாற்றினால் எப்படி? பேசுடி.. பேசு...''

''ஏன்.. இப்போது உங்களிடம் சல்லாபம் பேச ஆள் இல்லையா? போய் விட்டுவிட்டு வந்து விட்டீர்களா?''

ஆகாஷ் ரௌத்ராமானான். துடிக்கும் கரங்களை அடக்க முயன்று பாண்ட் பாக்கெட்டில் நுழைத்துக் கொண்டவன்...

''யோசித்துப் பேசு... அடுத்த வீட்டுப் பெண்களை அவதூறு பேச உனக்கு எந்த உரிமையும் இல்லை...'' என்று கூறினான்.

''ஆனால் அடுத்தவள் கணவனின் அருகே உட்கார்ந்து கொண்டு கட்டின மனைவியை பின்சீட்டுக்கு அனுப்ப மட்டும் அவளுக்கு உரிமை இருக்கிறதா?''

''ஏய்... காரை அங்கே கிளப்பும்போது இயல்பாய் என் பக்கத்தில் அமர்ந்து விட்டாள் அவள்..'' ஆகாஷின் வேகம் கொஞ்சம் தணிந்தது.

இதை ஏன் அவன் யோசிக்கவில்லை... ஆவலுடன் வந்து அனுராதா காரின் முன்பக்கத்தை எட்டிப் பார்த்தது நினைவில் ஆடியது.

'தவறு செய்து விட்டேனா?'

ஆகாஷ் மனதிற்குள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் போது மனம் பொறுக்காமல் அனுராதா பொறுமிக் கொண்டிருந்தாள்.

''இயல்பாம்...? எது இயல்பு? அவள் இயல்புதான் அப்படியே தெள்ளத் தெளிவாய் தெரிகிறதே.. பெண்களிடம்

பேசச் சகிக்காத இயல்பு... ஆண்களைக் கண்டால் மட்டும் ஈஷிக்கொள்ளும் இயல்பு...''

இன்னும் விட்டால் பேசித் தீர்த்திருப்பாள். அதற்குள் ஆகாஷ் 'பளார்' என்று அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டான். அப்படியே திக் பிரமை பிடித்துப் போனவளாய் நின்றுவிட்டாள் அனுராதா.

பிறந்ததில் இருந்து எல்லோரும் கொஞ்சி வளர்த்த பெண்.. தாத்தாவின் செல்லப் பேத்தி... இன்று இவனிடம் அறை வாங்கிக் கொண்டு நிற்கிறாள்... அன்று யாரோ ஒருத்தியுடன் சேர்ந்து கொண்டு கேலி பேசிச் சிரித்தான்... இன்று வேறு ஒருத்திக்காக அவளை கை நீட்டி அடித்து விட்டான். இந்த உரிமைக்காகவா தாலி கட்டினான்?

அவள் அசையாமல் அடித்து வைத்த சிலை போல் நின்றிருக்க ஆகாஷ் குமுறிக் கொண்டிருந்தான்.

''பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டேன். நீ திருந்துவதாக இல்லை. இப்படி வார்த்தைகளை பேசக்கூட உன்னால் முடியுமா? என்னையே எடுத்தெறிந்து பேசியவள்தானே நீ. எதையும் பேசக்கூடியவள்... இதைப் பேச மாட்டாயா? போய்விடு... உன் லேடிஸ் ஹாஸ்டலுக்குப் போய்விடு.. இந்த வீட்டில் ஒரு கணம் கூட நீ தங்கக் கூடாது. இங்கு உனக்கு இடமில்லை. நான் திரும்ப வரும்போது நீ இங்கே இருக்கக் கூடாது. ஒழிந்து போ...''

கத்தித் தீர்த்து விட்டு கோபத்துடன் காரைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டான் ஆகாஷ். எங்கெங்கோ சுற்றி அலைந்து விட்டு வீடு திரும்ப காரைத் திருப்பினான். மனம் கனக்க சாலை ஓரமாய் காரை நிறுத்தி விட்டு



ஸ்டிரியங்கில் முகம் புதைத்துக் கொண்டான். மனதின் ஓரமாய் அனுராதா வெட்கப் புன்னகை பூத்தாள்.

'இந்தப் பாட்டை இந்நேரமா கேட்பது?'

'வேறு எப்போது கேட்பது...'

'இரவுநேரம்...' என்று கூறி கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள்.

ஆகாஷ் தலை தூக்கி தன்னைச் சுற்றிலும் பார்த்தான். மையிருட்டு கவிழ்ந்திருந்தது.

இப்போது இரவாகி விட்டது. ஆனால் அவள்..? வீட்டில் இருப்பாளா? அவன்தான் அரக்கத்தனமாய் அடித்ததும் இல்லாமல் வெளியே போ என்று சொல்லியும் விட்டானே... மாலையில் எவ்வளவு ஆவலாய் காரருகே ஓடி வந்தாள்.

'நான் பாவி...' ஆகாஷ் தலையில் அடித்துக் கொண்டான்.

'அன்றும் அவளது பொறாமையை தூண்டி விடுகிறேன் பேர்வழியென்று அவள் கண் முன்னே ராகினியுடன் சிரித்துப் பேசினேன். இன்றும் விருந்தோம்பல் பண்ணுகிறேன் பேர்வழியென்று அனுராதாவை விட்டுவிட்டு சொப்னாவுடன் அளவளாவினேன்.. நான் செய்த இச் செயல்களை அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?'

ஆகாஷ் வீட்டை நோக்கி வேதனையுடன் காரைச் செலுத்தினான். வீட்டிற்குள் காரை நிறுத்தி காம்பவுண்ட் கேட்டை பூட்டிவிட்டு வாசல்படி ஏறினபோது வீடு இருளாக இருப்பது மனதில் உறைத்தது.

தவித்தது.

'அனு.. என்னைவிட்டுப் போய்விடாதே...' வீட்டுக் கதவின் மேல் கை வைத்தான். திறந்து கொண்டது. உள்ளே போய் விளக்குகளைப் போட்டுவிட்டு ஒவ்வொரு அறையாகத் தேடினான். அவள் இல்லை... 'ஒரு வார்த்தை கோபத்தில் சொன்னால் அதை உடும்புப் பிடியாய் பிடித்துக் கொண்டு இதுதான் சாக்கென்று போய் விட்டாளா...'

பீரோவைத் திறந்து பார்த்தான். அவளது உடைகள் அப்படியே இருந்தன. சுவர் அலமாரியைத் திறந்து பார்த்தான். அவளது சேலைகள் பிளவுஸ்களுடன் ஹேங்கரில் தொங்கிக் கொண்டிருந்தன. அவளது ஹேண்ட் பேக் அங்கேயே கிடந்தது.

'போகவில்லை.. இங்குதான் இருக்கிறாள்...'

எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்து விட்டான். அவளில்லை. மனதில் பயம் குமிழ் விட்டது.

'ஒருவேளை தப்பான முடிவு எடுத்து விட்டாளோ..' மனம் பதறியது. நெஞ்சம் கடவுளை வேண்டியது.

'என் இதயத்தில் அவள் ஒருத்தி தான் இருக்கிறாள். அவளை என்னிடமிருந்து பிரித்து விடாதே...'

ஏதோ யோசனை தோன்ற மொட்டை மாடிக்குச் சென்று பார்த்தான்.

மொட்டை மாடியின் மூலையில் சுவரில் சாய்ந்து அமர்ந்து கொண்டிருந்த அவள் நிழலோவியமாய் தென்பட்டாள்.

# 17



ஆகாஷ் மெதுவாக நடந்து அனுராதாவின் அருகில் சென்று அமர்ந்தான். அவள் மனதில் ஆசுவாசப் பெருமூச்சு எழுந்தது. இந்த மையிருட்டில் தன்னந்தனியாய் அவள் மொட்டை மாடியில் அமர்ந்திருந்த கோலம் அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. தன்னையே நொந்து கொண்டான். 'இன்றைக்கென்று ஏன் அவனுக்கு இப்படி ஒரு காட்டுத்தனமான கோபம் வந்ததோ...'

"அனு.. என்னை மன்னித்து விடு.."

அவன் காலடியோசையை உணர்ந்ததும் இறுகிப்போய் அமர்ந்து இருந்தவளின் உடலில் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் லேசான அசைவு வந்தது. ஆனாலும் அவளிடமிருந்து பதில் வரவில்லை.

"நான் இப்படிக் கோபப்படுபவன் இல்லை அனு. நீ என்னை என்ன வேண்டுமானாலும் பேசலாம்... திட்டலாம்.. ஏன் அடிக்கக் கூட செய்யலாம். அதற்கு உனக்கு உரிமையிருக்கிறது. நீ என்னில் ஒரு பாதி என்பதை விட நீயே நான்.. நானே நீ.. அப்படித்தான் நான் நினைக்கிறேன். நாம் இருவரும் வேறு வேறு அல்ல. அந்த உரிமையில்தான் நான் உன்னை கை நீட்டி அடித்தேன். இப்போது மன்னிப்பு கேட்பது கூட உன்னை நான் அடித்ததற்காக இல்லை. நான் பேசின.. அதிகப்படி வார்த்தைகளுக்காக.. நான் உன்னை அப்படிப் பேசியிருக்கக்

கூடாது.. நீ என்னை எவ்வளவோ முறை அவமானப் படுத்தியிருக்கிறாய்.. வெளியே போகச் சொல்லியிருக்கிறாய்.. ஏன் இன்று கூட என்னைப் பெண் பித்தன் என்பது போல் பேசினாய்.. அதெல்லாம் மேட்டரே இல்லை... பேசுவது நீ தானே.. நான் கேட்டுக் கொண்டு போயிருப்பேன். அடுத்த வீட்டுப் பெண்ணைப் பேசலாமா? நீ சொன்னது போல் அந்தப் பெண் செய்ததும் தவறுதான். காரில் என் அருகே உட்கார்ந்திருக்கக் கூடாது. நீ வந்த பின்னாலாவது பின் சீட்டிற்கு இடம் மாறியிருக்கலாம். அவள் செய்யவில்லை. அதற்காக இப்படிப்பட்ட வார்த்தைகளையெல்லாம் நீ பேசலாமா? உன் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வந்திருக்கக்கூடாது அனு...''

அவளிடமிருந்து ஏளனச் சிரிப்பு ஒன்று வந்தது. ஆகாஷிற்கு ஏன் அவள் அப்படிச் சிரிக்கிறாள் என்று புரியவில்லை.

''ஏன் அனு இப்படிச் சிரிக்கிறாய்?''

''இப்போதும் மற்றவர்கள் மேல்தானே பழி போடுகிறீர்கள்... ராகினி வந்தவுடன் தாத்தாவும்.. நானும் ஒதுங்கினது போல் நீங்களும் ஒதுங்கிப் போயிருக்கலாமே.. அதை விட்டுவிட்டு அவள்தானே என்னுடன் பேசினாள்.. நானும் பேசினேன்.. அவள்தானே என் கையைத் தொட்டு இழுத்தாள்.. நானும் அவள் இழுத்த இழுப்புக்கு போனேன் என்று கதை சொன்னீர்கள்.. அவளைப் போன்ற குணம் படைத்த பெண்கள் முகத்தையே நிமிர்ந்து பார்த்து நான் பேசமாட்டேன்.... ஆண்கள் என்றால் நான் சொல்லவே வேண்டியதில்லை.. இவ்வளவு பேசுகிறீர்களே இன்றைக்கு மட்டும் நீங்கள் என்ன செய்தீர்கள்.. அந்தப் பெண்ணிடம் பின் சீட்டில் உட்காரு என்று சொல்ல



என்ன தயக்கம்? நான் வந்த பின்னால் நீ என் மனைவியுடன் பின் சீட்டில் உட்காரலாமே என்று நாசுக்காய் சொல்லியிருக்கலாமே. சும்மா சொல்ல வேண்டாம்... என் வொய்பிற்கு கம்பெனி கொடு என்று சொல்லியிருக்கலாமே... ஏன் செய்யவில்லை?

வீட்டுக்கு வந்தவுடன் சோர்ந்து உட்காரப் போன என்னை சமையலறைக்கு விரட்டி விட்டுவிட்டு நீங்கள் இருவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தீர்களே.. அது மட்டும் சரியா? சின்ன வயதில் முதல் வகுப்பு தமிழ் பாடத்தில் படங்களைப் போட்டு கீழே வாக்கியங்களைப் போடுவார்கள்.. அதில் அப்பா சாய்வு நாற்காலியில் படுத்திருப்பார்.. அம்மா சமையலறையில் காய் நறுக்கிக் கொண்டிருப்பாள்.. தம்பி விளையாடி கொண்டிருப்பான். அக்கா வீடு பெருக்கிக் கொண்டிருப்பாள். அதே ஆணாதிக்க மனப்பான்மைதானே உங்களுக்கும் இருக்கிறது...''

''அனு.. இது என்ன இப்படிப் பேசுகிறாய்? நான் இப்படியெல்லாம் நினைத்துக் கூடப் பார்த்தவன் அல்ல...''

''ஏனென்றால் இதெல்லாம் உங்களுக்கு இயல்பான விசயமாய் போய்விட்டது. ஏன் உள்ளே கிச்சனில் என்னுடன் ஹெல்ப் பண்ண வந்திருக்கலாமே...''

''சொப்னா தனியாக உட்கார்ந்திருப்பாளே...''

''இருக்கட்டுமே... அவளுக்கு நீங்கள் ஏன் கம்பெனி கொடுக்க வேண்டும்? நீங்கள் அவளுக்கு கம்பெனி கொடுக்க.. நான் சமையலறைக்குள் வெந்து கொண்டிருக்க... எனக்கு எப்படி இருந்திருக்குமென்று ஓர் நிமிடம் என்னிடத்தில் உங்களை வைத்து யோசித்துப் பாருங்கள்... வேலை செய்வது எனக்குப் பிரச்சனை இல்லை.. உங்களுக்கு செய்வதில் அத்தை மாமாவிற்கு

செய்வதில்... ஆனந்திக்கு செய்வதில்... எனக்கு
விருப்பம்தான்... நான் சந்தோசமாக செய்வேன். பட்,
நீங்கள் ஒரு பெண்ணுடன் அரட்டையடிக்க நான்
உங்களிருவருக்காக டிபன் ரெடி பண்ணுவது என்பது
கொடுமை. நான் தெரியாமல் தான் கேட்கிறேன்.. அந்த
சொப்னா எதற்காக நம் வீட்டிற்கு வந்தாள்...?''

''அது... உன்னைப் பார்த்துப் பேசத்தான்...'' சொல்
லும்போதே அதிலிருந்த அபத்தத்தை உணர்ந்து ஆகா
ஷிற்கு வார்த்தைகள் தடுமாறின.

அனுராதாவைப் பார்க்க வந்தவள் அவள் பக்கத்தில்
காரிலும் உட்காரவில்லை. அவளுடன் பேச வேண்டு
மென்று வீட்டிலும் சொல்லவில்லை. ஆகாஷின் அருகே
அனுராதா உட்கார வேண்டிய இடத்தில் உட்கார்ந்து
கொண்டு வந்தாள். வீட்டிலும் அவளைப் போலவே அனு
ராதாவும் வேலை முடிந்து களைப்பாக வந்திருப்பாளே
யென்ற எண்ணமில்லாமல் 'என்ன ஆகாஷ்.. உங்கள் வீட்
டிற்கு முதன் முதலாய் வந்திருக்கிறேன். ஸ்வீட், காரம்
கிடையாதா.. ஊஹூம் கடையில் வாங்கியது வேண்
டாம்... வீட்டில் செய்ததுதான் எனக்கு பிடிக்கு'மென்று
கேட்டு வைத்தாள். திரும்பிப் போக என்ன செய்வோ
மென்ற எண்ணமில்லாமல்.. 'ஆகாஷ் என்னை வீட்டில்
டிராப் பண்ணி விடுவீர்கள்தானே...' என்று அவளாகவே
அவளுடைய பொறுப்பை ஏற்க வைத்துவிட்டாள். நேற்று
வரை ஆகாஷ் தனி.. இன்று அவனுடைய வாழ்வில் பங்
கேற்க அவனுக்கு என்று ஒருத்தி வந்துவிட்டாள். இப்
போதும் பழையபடியே இயல்பாய் இருக்கிறேன் பேர்
வழியென்று இது போன்ற செயல்களைச் செய்துவிட்டு
அனுராதாவின் மேல் குற்றம் சொல்வது சரியில்லைதான்.



''அனு அப்போதும் சொல்கிறேன். இப்போதும் சொல்
கிறேன். ராகினியுடன் பேசும்போதும் என் மனதில்
சலனம் இல்லை... இன்றைக்கு சொப்னாவுடன் பேசும்
போதும் என் மனதில் கல்மிஷம் இல்லை...''

''அவர்கள் மனதில் இல்லையென்று சொல்ல முடி
யுமா?''

பதில் சொல்ல முடியாமல் திகைத்துப் போனான்
ஆகாஷ். ராகினியின் நடவடிக்கைகள் அவள் நோக்கத்தை
பட்டவர்த்தனமாக தெரிவித்தன. சொப்னா ராகினியைப்
போன்று தரமில்லாமல் பேசியதில்லை... ஆனால்
ஆகாஷை திருமணம் செய்து கொள்ள விரும்பி தன் விருப்
பத்தை நாசூக்காய் தெரிவித்தவள். ஆகாஷ் மறுத்து
விட்ட போதும் இயல்பாய் பழகினாள். அந்த மன இளக்
கத்தாலேயே அவள் அனுராதாவை பார்க்க வீட்டுக்கு
வருகிறேன் என்று சொன்னபோது ஆகாஷால் மறுத்தப்
பேச முடியவில்லை.

''என்ன பதிலையே காணோம்.''

''இது பற்றிய வாக்குவாதத்தை இத்தோடு நிறுத்திக்
கொள்ளலாம். இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்.
வா போகலாம்.''

''எங்கே..?''

''நம் வீட்டிற்குத்தான்...''

''இது உங்கள் வீடு. நான் போக வேண்டிய இடம்
லேடிஸ் ஹாஸ்டல். அப்போதே போயிருக்க வேண்டிய
வள் ஏன் போகாமல் உட்கார்ந்து இருந்தேன் தெரியுமா?
இப்போது நான் கேட்ட கேள்விகளையெல்லாம் கேட்டு
விட்டுப் போவதற்காகத்தான்... உங்கள் மேல் என்ன

தவறு என்று தெரியாமலே இருந்தீர்கள் இல்லையா? உங்கள் தவறை உணர்த்திவிட்டுப் போகத்தான் உட்கார்ந்து இருந்தேன். வருகிறேன்...''

அனுராதா கையில் பெட்டியுடன் எழுந்தாள். அவ்வளவு நேரமும் அவளது பெட்டி அருகில் இருந்ததை இருட்டில் கவனிக்காமல் இருந்த ஆகாஷ் பதறிவிட்டான்.

''பொறு அனு.. என்னைத் தண்டிக்காதே...''

''உங்களுக்கு மட்டுமல்ல... எனக்கும் இந்த தண்டனை தேவைதான். உங்கள் குணம் தெரிந்திருந்தும் தாத்தாவிடம் வாக்குக் கொடுத்தேனே... அவசரத்திற்கு வேண்டிய உடைகளுடன் போகிறேன். மீதியை என் அப்பா அம்மாவுடன் வந்து எடுத்துப் போகிறேன்...''

''அத்தை மாமாவிடம் சொல்லப் போகிறாயா?''

''வேறு என்ன செய்வது? கல்யாணம் என்பது உங்களுக்கு விளையாட்டாகப் போய்விட்டது. போனவாரம் பால் காய்ச்சி புதுக்குடித்தனம் வந்தவளை வீட்டை விட்டு வெளியே போ என்பீர்கள்... நானும் போய் விடுவேன்.. ஊரறிய.. உலகறிய.. நமக்குக் கல்யாணம் பண்ணி வைத்த உங்களைப் பெற்றவர்களுக்கும் என்னைப் பெற்றவர்களுக்கும் யார் பதில் சொல்வது? நானே அதைச் செய்கிறேன்...''

ஆகாஷ் அவள் கையிலிருந்த பெட்டியைப் பிடுங்கினான்.

''தவறு செய்தால் சொல்லித் திருத்து... விட்டுவிட்டுப் போக நினைக்காதே...''

''ஹலோ சார்.. நீங்கள்தான் உங்களை விட்டுவிட்டு ஒழியச் சொன்னீர்கள்...''



''அதுதான் மன்னிப்புக் கேட்டுவிட்டேனே...''

''உங்களையும்... நீங்கள் பேசிய வார்த்தைகளையும் மன்னித்தால் மன்னிப்பு என்ற சொல்லுக்கே மதிப்பு இல்லாமல் போய்விடும்...''

அனுராதா பெட்டியை பிடுங்கிக் கொண்டு விறுவிறுவென மாடிப்படியில் இறங்கினாள். ஆகாஷ் அவளைப் பின் தொடர்ந்து இறங்கினான். வீட்டு வாசலுக்கு வந்ததும் அனுராதா எதிர்பாராத ஒன்றைச் செய்தான் ஆகாஷ்.

## 18



மாடிப்படிகளில் இறங்கிய அனுராதா வாசலில் கால் வைத்த போது பின்னாலேயே வந்த ஆகாஷ் அவள் சற்றும் எதிர்பாராமல் அவளைத் தூக்கிக் கொண்டான். கையில் பெட்டியோடு அவனது கரங்களில் பூமாலையாய் கிடந்தவள் சுதாரித்துக் கொண்டு திமிறுவதற்குள் வீட்டுக்குள் வந்து சோபாவில் அவளைப் போட்டுவிட்டு வாசல் கதவை மூடி சாவியை கைப்பற்றிக் கொண்டான். அனுராதா எழுந்து பின்பக்கம் போகப் பார்த்தாள். அதற்குள் ஆகாஷ் முந்திக் கொண்டு அந்தச் சாவியையும் கைப்பற்றி விட்டான்.

''ஹவுஸ் அரெஸ்ட் பண்ணுகிறீர்களா...?''

''அதை எப்போதோ செய்து விட்டேன்.''

''என்ன உளருகிறீர்கள்...''

''உளறல் இல்லை. உண்மைதான். உன் கழுத்தில் தாலிகட்டி உன்னை கைது பண்ணிவிட்டேனே. அப்புறம் என்னை விட்டு எப்படி நீ போவாய்?''

''அந்த மட்டிலும் உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது ஆயுள் தண்டனையென்பதை ஒத்துக் கொண்டால் சரி...''

''உண்மையை ஒத்துக் கொள்ளத்தானே வேண்டும். நான் மட்டுமா உன்னை கைது பண்ணியிருக்கிறேன். நீயும்தான் என்னைக் கைது பண்ணியிருக்கிறாய். எனக்கும் இது ஆயுள் தண்டனைதான். ஸோ நீயும் நானும் நம் கடைசி மூச்சு வரை ஒருவரை விட்டு ஒருவர் பிரிய முடியாது...''

'இறுதிமூச்சு' அனுராதாவிற்கு இதயத்தை என்னவோ செய்தது. ஏன் இவன் இப்படியெல்லாம் பேசுகிறான்?

''பிரியாமல் ஒருவரிடம் ஒருவர் போராடிக் கொண்டு வாழ வேண்டுமா? அது ஒரு வாழ்க்கையா?''

''புதிதாகவா போராடுகிறோம்? எப்போது இருவரும் சந்தித்தோமோ அப்போதிருந்தே போராடிக் கொண்டு தானே இருக்கிறோம்? இதை மாற்ற வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது...''

''என்ன வழி?'' யோசனையுடன் கேட்டாள் அனுராதா.

''வாழ்ந்து விடு அனு... என்னுடன் வாழ்ந்து விடு. அதன் பின் இப்படி மனதிற்குள் போட்டு குமைந்து கொண்டிருக்க மாட்டாய்... நானும் உன் மனது தெரியாமல் இன்று போல் எதையாவது ஏடாகூடமாய் செய்து விட்டு உன்னிடம் மாட்டிக் கொண்டு விழிக்க மாட்டேன்...'' ஆகாஷின் விழிகள் அவளிடம் தாபத்தைக் கொட்டின.



''அது எப்படி முடியும்...''

''இப்படி... முடியும்...''

ஆகாஷ் அனுராதாவின் கையைப் பிடித்து அருகே இழுத்தான். அவன் இழுத்த வேகத்தில் அவன் மேல் விழுந்தவளை அவன் கரங்கள் சுற்றி வளைத்தன. விடு பட அவள் முயன்றாள். அவனது கரங்கள் அவளை இறுக்கிக் கொண்டு விலக அனுமதிக்கவில்லை. அனுராதாவின் உடலில் ஏதோ மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது. உடல் சூடேற அவனது அணைப்புக்குள் அடங்க உடல் விழைவதைக் கண்டு அவள் அதிர்ச்சி யுற்றாள். அவள் உடலின் ஒவ்வொரு அணுவும் அவன் வேண்டும் என்று துடிப்பதை உணர்ந்த அவளது இதயம் தவித்தது. அவளது இதயத்தை அறிந்து கொள்ளாமல் அவளது உடலை அவன் தொடுவதா? விடுபட அவள் போராட ஆரம்பித்தாள். ஆனால் அவளது போராட்டத்தை லட்சியமே பண்ணாமல் ஆகாஷின் இதழ்கள் அவளது இதழ்களின் மேல் பதிந்தன. அனுராதா தொய்ந்து அவன் கரங்களில் அடங்கினாள். ஆகாஷின் உடலில் ஹார்மோன் களின் உற்பத்தி அதிகமாக அவளை ஆவலுடன் தழுவிக் கொண்டான். மெல்ல அவனது கரங்கள் முன்னேறின. ஓர் நிலையில் அனுராதாவின் புலன்கள் விழித்துக் கொண்டன. அவனை உதறிப் பிரிந்து நின்றாள்.

''ஏய்ய்... கிட்ட வா...'' ஆகாஷ் கள்ளுண்ட வண்டாக மயக்கத்துடன் அவளிடம் நெருங்கினான்.

''வேண்டாம்... கிட்ட வராதீர்கள்..'' அவள் பின்னடைந்தாள்.

''வருவேன்...''

dsc00621.jpg (3072x2304x24b jpeg)



''எனக்கு விருப்பமில்லை...''

''காலையில் ஓகே சொன்னவள்தானே...''

அனுராதா திகைத்து விழித்தாள். ஆகாஷ் வெற்றி யுடன் அவளைப் பார்த்தான். பின்னடைந்த அனுராதா சோபாவின்மேல் விழுந்து விட ஆகாஷ் அவள் மேல் படர்ந்தான். அனுராதாவிற்கு அழுகை வந்தது. காலையில் சரியென்று சொல்லும் போது இருந்த மனநிலையா இப்போது இருக்கிறது? பேசாமல் அப்போதே லீவ் சொல்லிவிட்டு வந்திருக்கலாம். இந்த மனப்போராட்டம் அவளுக்கு வந்திருக்காது. அவனுடன் வாழ்ந்திருக் கலாம். இப்போது முடியவில்லையே... அவனைத் தழுவத் துடிக்கும் அதே நேரம் அவளை பின்சீட்டில் அமர வைத்துவிட்டு அவன் கண் முன்னாலேயே இன்னொருத் தியை பக்கத்தில் அமர வைத்துக் கொண்டு அவன் காரோட்டியதுதானே நினைவுக்கு வருகிறது. எப்படி இவனுடன் இழைவது?

அனுராதா தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி அவனைத் தள்ளி விட்டாள். அவளும் எழுந்து அமர்ந்து கொண்டாள்.

''என் மேல் உங்களுக்கு உண்மையிலேயே துளியளவா வது அன்பும் மரியாதையும் இருந்தால் கிட்ட வராதீர்கள்.''

ஆகாஷின் உடலில் இருந்த உணர்வுகள் காணாமல் போயின. அவளிடம் நெருங்காமல் விலகி அமர்ந்தான். நிறைவேறாத தாபமும் கோபமும் அவனின் வார்த்தை களில் வெளிப்பட்டன.

''ஏன்.. ஏன்.. சொல்லுடி.. ஏன் என்னை இந்தப் பாடு படுத்துகிறாய்? என் தேவைக்கு உன்னை நாடாமல்



வேறு யாரை நாட முடியும்? புரிந்து கொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தால் எப்படி? ராகினி என் கையைத் தொட்டுப் பேசலாம். சொப்னா காரில் என் பக்கத்தில் உட்கார்ந்து வரலாம். ஆனால் நீ.. நீ மட்டும் தானே என் கைகளுக்குள் வர முடியும்? உன்னோடு மட்டும் தானே என்னால் வாழ முடியும்? ஏண்டி பிடிவாதம் பிடிக்கிறாய். நீ எனக்கு வேண்டும் அனு... இப்போதே வேண்டும்..''

அவனுடைய வார்த்தைகளில் வெளிப்பட்ட தாகம் அவளைக் காந்தமாய் கவர்ந்து அவன் பால் ஈர்த்தது. அனுராதா தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

'பொறு அனுராதா... அவன் உன் இதயத்தை உணர்ந்து கொள்ளட்டும். அதன்பின் உன்னை சொந்தமாக்கிக் கொள்ளட்டும். அதுவரை வைராக்கியமாய் இரு... இது போன்ற சோதனைகளை வென்றுகாட்டு.. உன் பெண்மைக்கு அதுதான் மரியாதை...'

அனுராதா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் பார்வையின் அழைப்பை கண்டு கொள்ளாதவளாய் பேசினாள்.

''எனக்கு கொஞ்ச நாள் அவகாசம் வேண்டும்..''

''அடிப்பாவி.. எதற்கடி அவகாசம் கேட்கிறாய்...? இதற்கா..? உனக்கே இது நியாயமாய் இருக்கிறதா? நமக்கு கல் யாணம் முடிந்து ஒரு மாதம் ஆகப்போகிறதுடி...''

''நாம் ஒருவரையொருவர் புரிந்து கொண்டவர்களாய் இருந்திருந்தால் இந்த ஒரு மாத இடைவெளி கூட நம்மிடையே வந்திருக்காதே...''

''நீதான் என்னைப் புரிந்து கொள்ள மறுக்கிறாயே..''

dsc00622.jpg (3072x2304x24b jpeg)



"இப்போதும் நான்தான் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றுதானே எதிர்பார்க்கிறீர்கள்... நீங்கள் என்னைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லையே..."

"புரிந்து கொள்ள நீதான் விட மாட்டேன் என்கிறாயே..." ஆகாஷின் கை அவளது கையைப் பற்றி அழுத்தியது.

கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அனுராதாவின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது.

'இவன் இது ஒன்றில்தான் குறியாக இருப்பான்.. இவன் பாஷையில் ஒருவரையொருவர் புரிந்து கொள் வது என்பது ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொள் வது...'

ஒரு கணம் தன் வைராக்கியத்தைக் கைவிட்டு அவ னுடன் கலந்து விட்டால் என்ன என்று அவளுக்குத் தோன் றியது. ஏக்கத்துடன் தன் முகம் பார்ப்பவனின் தாபத்தை தீர்த்து விட்டாலென்ன என்ற வேகம் எழுந்தது.

'அதற்குப் பின்?' அனுராதா தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

'இது தினசரி நடவடிக்கையாக ஆகிவிடும். அவன் மனதில் என்ன நினைப்பான்? கழுத்தில் விழுந்த தாலிக் காக மனைவியென்ற கடமையை அவள் நிறைவேற்று கிறாள் என்றுதானே நினைப்பான்? நோ அதா் வே என்று அவனுடன் இசைந்து வாழ்வதாகத்தானே அந்த வாழ்க்கை இருக்கும்?'

நினைக்கவே சகிக்கவில்லை அனுராதாவிற்கு. அவள் தீவிரமான முகபாவத்துடன் கூறினாள்.



"இதோ பாருங்கள்... அனுராதா ஒன்றும் கிள்ளுக்கீரை யில்லை. நீங்கள் அவமானப்படுத்தும்போது அவமானப் பட்டுக் கொண்டு.. இழுத்து அணைக்கும் போது பதிலுக்கு தழுவிக் கொண்டு... உங்களுடன் குடும்பம் நடத்திக் கொண்டு இருப்பதற்கு... கொஞ்ச நேரத்திற்கு முன்னாடிதான் என்னை 'ஒழிந்து போ' என்று சொன்னீா கள். இப்போது என்னுடன் 'வாழ வா' என்கிறீர்கள். நீங்கள் 'போ' என்றவுடன் பெட்டியைத் தூக்க...'வா' என்றவுடன் பெட்டியை கீழே போட்டு விட்டு உங்களிடம் வந்து விட.. என்று ஒரு மரியாதை இல்லாத வாழ்க்கையை வாழ என்னால் முடியாது. நாம் ஒரே வீட்டில் இருக்க லாம்... ஆனால் நம் மனம் இரு வேறு திசைகளில் இருக் கின்றன. அவை ஒன்று சேரட்டும். அதன்பின் உடலால் ஒன்று படுவதைப் பற்றி நாம் யோசிக்கலாம்..."

"இன்று நடந்த நிகழ்விற்கு நான் மன்னிப்புக் கேட்டு விட்டேனே அனு.. நான் உன் ஆகாஷில்லையா? என்னை மன்னிக்கக் கூடாதா?"

'உன் ஆகாஷ்..' அனுராதாவின் கண்கள் கலங்கி விட்டன.

"நீங்கள் எனக்கு மட்டும் சொந்தமென்று என் இதயம் சொல்லட்டும். அதன்பின் காலமெல்லாம் உங்கள் காலடி யில் கிடப்பேன்.. அதுவரை என்னை நெருங்காதீர்கள்..."

அவளது கண்ணீர் கலந்த இந்த வார்த்தைகள் ஆகா ஷின் இதயத்தை துளைத்தன. அவள் மனதிலும் இந்த அளவிற்கு வேதனை இருக்கின்றதா? எதற்காக இந்த துன்பம் கொள்கிறாள்?

அவன் மனம் புரிந்தும் புரியாமலும் திகைத்தது.

dsc00623.jpg (3072x2304x24b jpeg)



# 19



அனுராதாவை முதன் முதலில் பார்த்த வினாடியிலிருந்து இன்றுவரை ஆகாஷிற்கு அவளைப் பற்றித் தோன்றும் ஒரே வார்த்தை 'திமிர் பிடித்தவள்' ஆகாஷைப் பற்றி அவள் நினைப்பதேயில்லை என்பதே அவனது பெரும் குறை. அவனை அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காது என்று தீர்மானமாய் நம்புகிறவன் அவன். தொண்டைமான் தாத்தாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு தனக்குக் கழுத்தை நீட்டியவள்.. தாலியின் மகிமைக்கு கட்டுப்பட்டு தன்னுடன் வாழ 'ஒகே' சொன்னாள் என்பதுதான் அவனது எண்ணம்.

இன்று என்னடாவென்றால் அந்தத் திமிர்பிடித்தவளின் கண்களில் கண்ணீர் தழும்புகிறது. சுயமரியாதையைப் பற்றி அவள் பேசுவதில் ஆச்சரியமில்லை. அவள்தான் 'சுயமரியாதை சுந்தரி'யாயிற்றே. ஆனால் இதயத்தைப் பற்றி ஏன் பேசுகிறாள்?

ஆகாஷிற்கு கோபம் வந்தால் மனதிற்குள் அவளை 'இதயமேயில்லாத ராட்ஸஸி' என்றுதான் திட்டுவான். இவளெல்லாம் இதயத்தைப் பற்றிப் பேசுவதும் இல்லாமல் இதயம் சொல்லட்டும் என்று வேறு சொல்கிறாள். இதுதான் ஆகாஷிற்கு சுத்தமாய் பிடிபடவில்லை. அவளிடம் கேட்கலாமென்றால் காலையிலிருந்து அவன் பண்ணி வைத்த ஏடாகூட வேலைகளால் ஏற்கனவே



கோபமாயிருப்பவள் மொத்தமாய் பிய்த்துக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது என்று மனச்சாட்சி மிரட்ட பயந்து போய் வாயை மூடிக் கொண்டான்.

'நீ எனக்கு மட்டும் சொந்தமென்று என் இதயம் சொல்லட்டும்.'

ஏன் இப்படிச் சொல்கிறாள்? அவன் சொந்தமாக வேண்டுமென்று அவள் ஆசைப்பட்டாளா? ஆகாஷின் மனம் 'அது இருக்காது' என்று திட்டவட்டமாய் மறுத்தது. அவளாவது.. அவனது காதலை விரும்பியிருப்பதாவது... விரும்பியிருந்தால் அன்னலட்சுமிபுரத்திலேயே தெரிவித்திருக்க மாட்டாளா? ராகினி உரிமை கொண்டாடிய போது... அவளுடன் உரிமைப் போராட்டம் நடத்தி அவளை வெளியேற்றி இருக்க மாட்டாளா? அதை விட்டுவிட்டு ஆகாஷைத்தானே வெளியேற்றினாள். இன்று மாலை அந்த சொப்பன சுந்தரி அவன் அருகே உட்கார்ந்து வந்தபோது அவளை இறங்கச் சொல்லி உடனடியாய் சத்தம் போட்டிருக்க மாட்டாளா? இவள் அப்படிச் செய்யவில்லையே...

'நான் உன் மனைவி. என் கண் முன்னால் அவள் உன்னருகில் அமரக்கூடாது. அது என் மரியாதைக்கு இழுக்கு. அவர்கள் சரியில்லாத பெண்கள். அவர்களை வீட்டுக்கு அழைத்து வராதே' இதுதானே அவள் கொண்ட கோபத்தின் சாராம்சம்.

எது எப்படியே.. அனுராதாவின் மனதில் வேதனை இருப்பதைக் கண்டு கொண்ட ஆகாஷின் உணர்வுகள் மாயமாய் மறைந்தன. அவள் இன்னும் டிபன் காபி கூட சாப்பிடவில்லை என்பது உறைக்க அவன் எழுந்து கொண்டான்.

''ஓகே.. லீவ் திஸ் மேட்டர். நீ சொல்வதற்கு நான் கட்டுப்படுகிறேன். இப்போது எழுந்து சாப்பிட வா...''

''வேண்டாம்.. எனக்குப் பசியில்லை...''

''எப்படி இல்லாமல் போகும்? செம டேஸ்டாய் செய்த வடையும் கேசரியும் ஆறிப்போய் கிடக்கிறது. காபி கூடக் குடிக்கவில்லை...''

''ரொம்பத்தான் அக்கறை...'' அவள் வாய்க்குள் முணு முணுத்தாள்.

''அக்கறைதாண்டி... நீதான் அவகாசம் கேட்டிருக் கிறாய். நான் கேட்கவில்லை. விட்டால் இப்போதே உன்னுடன் குடும்பம் நடத்தத்தான் பறந்து கொண்டிருக் கிறேன். உன் மேல் எனக்கு அக்கறையில்லாமல் எப்படிப் போகும்? வாய்க்குள் முணுமுணுத்தால் எனக்குக் கேட் காதா? நீ மனதுக்குள் நினைப்பதைக் கூடச் சொல்லு வேன். நீ எப்போது எப்படி நினைப்பாயென்று எனக்கு நன்றாகத் தெரியும். இதற்கு மைன்ட் ரீடிங்கெல்லாம் படித்துவிட்டு வரவேண்டிய அவசியமில்லை'' ஆகாஷ் சமையலறைக்குள் நுழைந்து கொண்டே கூறினான்.

அவன் எதையாவது பண்ணி வைக்கப் போகிறான் என்ற பயத்தில் அவனைப் பின் தொடர்ந்த அனுராதா,

''ஆமாம்.. பெரிதாய் என் மனதைத் படிக்கத் தெரிந்தவர் தான்.. ராகினியோடு வழியும்போதும் சொப்னாவிடம் அரட்டை அடிக்கும் போதும் என் மனது என்ன நினைக்கு மென்று படித்து தெரிந்திருக்க வேண்டியதுதானே...'' என்று கூறினாள்.

''அது மட்டும்தாண்டி தெரியவில்லை... இனிமேல் பாரேன். பெண்களின் நிழல் கண்டால் கூட தூர விலகி



விடுவேன்... நான் 'ஏகபத்தினி விரதன்' என்று உன் வாயாலேயே ஒப்புக் கொள்ள வைக்கிறேன் பாரேன்...''

''யார்... நீங்கள்.. ஏகபத்தினி விரதன்? ஏகப்பட்ட பத்தினிகளின் விரதன் என்று பெயர் வாங்கமாலிருந் தால்தான் ஆச்சர்யம்...''

''இப்படியே என்னைப் பற்றி உயர்வாய் நினைத்துக் கொண்டிருந்தால் இந்த ஜென்மம் பூராவும் நீ அவகாசம் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டியதாகி விடும். நல்லதாய் என்னைப்பற்றி நாலு வார்த்தை சொல்லிப் பழகு. நினைத்துப் பழக. அவகாசம் எதற்குக் கேட்டோம் என்று உருகி... மறுகி..'' ஆகாஷ் அனுராதாவைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

''ஊம். சொல்லுங்கள் உருகி.. மறுகி...'' அனுராதா தூண்டினாள்.

''அணை உடைந்த வெள்ளமாய் என்னிடம் ஓடி வந்து கட்டிப்பிடித்து அனலில் பட்ட மெழுகாய் கரைந்து விடுவாய்... ச்சூ.. ச்சூ... இது என்ன வாடை.. ஏதோ தீயும் வாசனை வருகிறதே'' ஆகாஷ் சுற்று முற்றும் பார்த்தான்.

அனுராதா தலையில் அடித்துக் கொண்டு அடுப்பை அணைத்தாள்.

''அனலில் பட்ட மெழுகு மட்டும் உருகாது. பாத்திரத் தில் தண்ணீர் ஊற்றாமல் அனலில் வைத்தாலும் அது உருகும். இப்போது எதற்கு அடுப்பை பற்ற வைத்தீர்கள்?''

''உனக்கு ஏதாவது செய்து கொடுக்கலாமே என்று தான்...''

''ஒன்றும் வேண்டாம் நகருங்கள். வடை.. சட்னி இருக் கிறது. ஈவினிங்கே இட்லி ஊற்றி வைத்து விட்டேன்.

dsc00625.jpg (3072x2304x24b jpeg)



அது போதும். சாப்பிட வாங்க...'' அனுராதா டைனிங் டேபிளில் தட்டைப் போட்டாள்.

''கேசரி இருக்கிறதா.. முறைக்காதே.. அது செம டேஸ்டாய் இருந்தது தெரியுமா? என் தட்டிலிருப்பதையும் அந்த சொப்னா நொட்டை விட்டுக் கொண்டு சாப்பிட்டு விட்டாள்...'' என்று கூறிக் கொண்டிருந்தவன் அனுராதாவிடம் பதில் வராததைக் கண்டு அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

அவள் விறைப்பாய் நின்று கொண்டு ஆகாஷை முறைத்துக் கொண்டிருந்தாள்.

'ஏன் இப்படி முறைக்கிறாள்...' காரணம் புரிய நாக்கைக் கடித்துக் கொண்டு அவசரமாய் கூறினான்.

''உனக்கு என்மேல் நம்பிக்கையே வராதா அனு? என் தட்டில் இருப்பதையும் முதலிலேயே அவள் தட்டில் கவிழ்த்து விட்டாள்... என்னவோ நான் சாப்பிட்ட மீதத்தை அவள் சாப்பிட்டதாய் நினைக்கிறாயா? இல்லைம்மா. இது நேரம் வரை போட்ட சண்டை போதாதா? நான் மனதில் சூது வாது இல்லாத பச்சைப்பிள்ளை அனு. என் வாயாலேயே நான் கெட்டுப் போகிறேன். கொஞ்சம் கருணைகாட்டும்மா...''

அவன் கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சவும் அனுராதாவிற்கு சிரிப்பு வந்துவிட்டது.

'நடிகன்.. என்னமாய் நடிக்கிறான்...'

ஆகாஷின் தட்டில் கேசரியை பரிமாறியவாறே கூறினாள்.

''சரி... சரி.. சாப்பிடுங்கள். அதற்காக பச்சைப் பிள்ளையென்று பிலிம் காட்ட வேண்டாம். இந்தப் பச்சைப்



பிள்ளை கொஞ்ச நேரத்திற்கு முன்னால் என்ன பாடு படுத்தியது என்பதை நான் மறக்கவில்லை...''

ஆகாஷ் அவளைக் காதலாய் பார்த்தான்.

''மறக்காதே அனு.. நான் உன்னுடையவன்... அதையும் மறக்காதே...''

அனுராதா பதில் பேசாமல் சாப்பிட ஆரம்பித்தாள்.

''இதற்கு மட்டும் பதில் சொல்ல மாட்டாயே...''

''பேசாமல் சாப்பிடுங்கள்...''

அன்று இரவு அனுராதா படுத்ததும் உறங்கி விட்டாள். ஆகாஷ் வழக்கம்போல நடை பழகிவிட்டுத் தூங்கப் போனான். இரவு விளக்கின் ஒளியில் ஒயிலாய் உறங்கிக் கொண்டிருந்தவளின் அழகில் லயித்து அவளது முகத்தையே பார்த்தான். தூக்கத்திலும் பிடிவாதம் தெரிந்த முகம்.

'ம்ம்... போயும். போயும் இந்தப் பிடிவாதக்காரியைப் போய் காதலித்தேனே...'

தன்னைத்தானே நொந்து கொண்டு உறங்கிவிட்டான் ஆகாஷ்.

படுக்கையில் மட்டும் விலகி நின்ற அனுராதா மற்றவற்றில் சிறந்த மனைவியாகவே இருந்தாள். காலையில் அவன் கண் விழிக்கும் போது மணக்க மணக்கக் காபி வந்தது. குளித்துவிட்டு வரும்போது சூடாய் டிபன் இருந்தது. அவன் அலுவலகம் கிளம்பும்போதே அவனுக்கும் தனக்கும் மதிய உணவுக் கேரியர்களை தயார் பண்ணிவிட்டு அவளும் கிளம்பி விடுவாள்.

ஆனால் ஒன்றில் அவள் பிடிவாதமாக இருந்தாள். ஆகாஷ் பக்கத்தில் உட்காராமல் பின்சீட்டில்தான் உட்காருவாள்.

''ஏய்ய்... நாலு பேர் பார்த்தால் என்னடி நினைப்பார்கள்?''

''மற்றவர்கள் நினைப்பைப் பற்றி கூட நீங்கள் கவலைப்படுகிறீர்களா? அன்றைக்கு சொப்னாவை பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு என்னை பின்சீட்டிற்கு அனுப்பும்போது அந்த நாலு பேரைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டீர்களா? இன்னொருத்தி உட்கார்ந்த இடத்தில் இனி நான் உட்கார மாட்டேன்.''

அனுராதாவின் கோபம் கண்டு ஆகாஷின் உடல் நடுங்கியது. நல்லவேளையாக சொப்னா காரில்தான் அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள். எசகுபிசகாக கட்டிலில் அவன் அருகே உட்கார்ந்திருந்தால்...?

# 20



ஒருமுறை ஆகாஷிற்கு டைபாயிடு ஜுரம் வந்திருந்தது. அப்போது அவன் மாடியறையில் தனியாக இருந்தான். கீழ்வீட்டில் குடியிருந்தவர்கள் வேளா வேளைக்கு கஞ்சி வைத்துக் கொடுத்தார்கள். அவனுக்கு உடல் நலம் சரியில்லையென்று கேள்விப்பட்ட சொப்னா அவனைக் காண அவனது அறைக்கே



வந்துவிட்டாள். சோர்வுடன் படுத்திருந்த ஆகாஷிடம் நலம் விசாரித்தபடி கட்டிலில் அவனருகே அமர்ந்து கொண்டு அவன் நெற்றியை வேறு தொட்டுப் பார்த்தாள்.

கஞ்சியை எடுத்துக் கொண்டு வந்த கீழ்வீட்டுக்கார பெண்மணி அன்று பார்த்த பார்வை இன்றும் ஆகாஷின் நினைவில் இருக்கிறது. கஞ்சியை அவளிடமிருந்து வாங்கிய சொப்னா அவள் முன்னிலையிலேயே ஆகாஷிற்கு ஸ்பூனில் கஞ்சியை எடுத்துப் புகட்ட ஆரம்பித்துவிட்டாள்.

நல்லவேளையாக கீழ்வீட்டிலிருந்தவர்களை திருமணத்திற்கு முன்னரே காலி பண்ணச் சொல்லிவிட்டான். ஒருவேளை அவர்கள் குடியிருந்து அந்த அம்மாள் யதார்த்தமாய் சொப்னா அவனுடைய கட்டிலில் அமர்ந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள் என்று அனுராதாவிடம் சொல்லியிருந்தால் என்ன ஆகியிருந்திருக்கும்...? நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கியது.

அவனையே தொட்டுப் பார்க்க விரும்பமாட்டாள். 'கடவுள் காப்பாற்றினார்' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான் ஆகாஷ்.

''என்ன தலைவரே.. பால்கனியில் உட்கார்ந்து கொண்டு சாமி கும்பிடுகிறீர்கள்?'' அனுராதா அவன் எதிரே வந்து அமர்ந்தாள்.

''உன்னைப் போல ஒரு புண்ணியவதிக்கு தாலி கட்டினால் ரோடெல்லாம் சாமி கும்பிட்டுக் கொண்டே போக வேண்டியதுதான்.'' ஆகாஷ் அவளை நோட்டம் விட்டவாறே கூறினான்.

''நல்ல காரியம்தானே செய்கிறீர்கள். அதற்கு எதற்கு இவ்வளவு சலிப்பு...'' என்று கூறியவள் சிவப்பு நிற நைட்டியில் இருந்தாள். தலைமுடியை தளர்வாய் பின்னலிட்டு பின்னலை வேறு முன்புறம் தூக்கிப் போட்டிருந்தாள். நெற்றியில் சிகப்பு நிற ஸ்டிக்கர். அவளது வெளிர் மஞ்சள் நிற மேனிக்கு சிகப்புக் கலர் எடுப்பாக இருந்து தொலைத்தது.

''என்ன இங்கே பார்வை?''

''பார்க்கக் கூடக் கூடாதா?''

''ஏன் கூடாது? உங்கள் பெண்டாட்டி நீங்கள் பார்க்கிறீர்கள். தாராளமாய் பாருங்கள். நான் என்ன தடையா சொல்லப் போகிறேன்?''

''ரொம்ம்ம்பத் தாராள மனசு உனக்கு... ம்ஹூம்.''

ஆகாஷ் பெருமூச்சு விட்டபடி இந்தியா டுடேயைப் பிரித்தான். ஜேசுதாஸின் படம் அட்டையை அலங்கரித்தது.

''இங்கே கொடுங்கள் பார்க்கலாம்...'' அனுராதா வாங்கிப் பார்த்தாள்.

''அவருக்கு ஏதோ அவார்டு கிடைத்திருக்கும்போல... கவர் ஸ்டோரி போட்டிருக்காங்க...'' என்றான் ஆகாஷ்.

''அவார்டு வாங்கத் தகுதியானவர்...''

''உனக்கு அவர் வாய்ஸ் பிடிக்குமா... ஆச்சுவலா நீ பி.சுசிலாவின் ரசிகை என்றில்லையா நினைத்தேன்.''

''சுசிலாம்மாவை பிடித்தால் மற்றவர்கள் குரலும் பிடிக்கக் கூடாது என்று அர்த்தமா? பி.சுசிலாவின் குரல்



தேன் குரல். அவர்களது குரல் பாடலுக்கு ஏற்றபடி மாறிவித்தை காட்டும்.

'அம்மம்மா.. காற்று வந்து ஆடைதொட்டுப் பாடும்..' என்று பதினாறு வயதுப் பெண்ணொருத்தியின் துள்ளலோடு பாடுகிறவர்கள்,

'தன்னந்தனிமையிலே... உடல் தள்ளாத வயதினிலே...' என்று அறுபது வயதுப் பெண்மணியின் முதிர்ந்த பக்குவப்பட்ட தொனியிலும் பாடுவார்கள்... அவங்க வாய்ஸ் ஸ்வீட் வாய்ஸ்...''

''சுசிலாவுடைய குரல் தேன்குரல் என்கிறாய். ஜேசுதாஸ் சாரின் குரலை என்னவென்று சொல்லுவாய்...''

''தெய்வீகக் குரல்..!''

''தெய்வீகக் குரல்...? எவ்வளவு அழகாய் சொல்கிறாய்.''

''உண்மையைத்தான் சொல்கிறேன். பி.சுசிலாவின் குரல் தேன் குரல் என்றால் ஜேசுதாஸின் குரல் தெய்வீகக் குரல். நான் சொல்வதைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்களேன்.''

''நீ சொல்லேன்..''

''ஒரு அழகான தாமரை மலர்கள் நிரம்பிய குளம். குளக்கரையில் பூக்கள் பூத்திருக்கும் மரம். அந்த மரத்தின் பூக்களில் ஒன்று உதிர்ந்து குளத்தில் விழுந்தால் எழும்புமே... ஒரு ஓசை.. அதைப் போன்ற மென்மையான குரல்தான் ஜேசுதாஸின் குரல்...''

ஆகாஷ் ஆச்சர்யத்துடன் அனுராதாவைப் பார்த்தான். அவனுடைய மூக்கு நுனியில் கோபமிருக்கும் முசுட்டு

dsc00628.jpg (3072x2304x24b jpeg)



மனைவிக்குள் இத்தனை ரசனையா? அவனது வியப்பான பார்வையைக் கண்டு அவள் புருவம் உயர்த்தினாள்.

''என்ன ஆச்சு...?''

''கலக்குறியேடி.. இன்னும் என்ன சொல்லப்போகிறாய்...''

''இது விளையாட்டில்லைங்க. ஜேசுதாஸ் ஒரு இசை உபாஸகர். அவர் மேடைக்கச்சேரி பாடும்போது ஏதாவது சத்தம் வந்தால் பாடுவதையே நிறுத்தி விடுவார். உங்களுக்கு ஒன்று தெரியுமா...?''

''தெரியுமே.. ஒன்று.. இரண்டு.. மூன்று...''

''போதுமே.. ஜேசுதாஸின் பாடல்களை நான் கேட்பதாக இருந்தால் எந்த வேலையும் செய்யாமல் அமைதியாய் கண்மூடி சேரில் சாய்ந்து கொண்டுதான் கேட்பேன். அது இரவு நேரமாக இருந்தால் இன்னும் பெட்டர்...''

அவள் தலையில் சூடியிருந்த மல்லிகையின் நறுமணம் காற்றில் கலந்து அவன் நாசியை வருடியது. இயல்பாய் சேரில் கால்களை சம்மணம் கட்டி அமர்ந்து கொண்டு அவள் உரையாடியது அவன் மனதிற்கு இதமாக இருந்தது. இவ்வாறு இருவரும் அமர்ந்து மனம் விட்டுப் பேசியிருந்தால் எத்தனையோ மோதல்களைத் தவிர்த்திருக்கலாமே என்று அவனுக்குத் தோன்றியது. அவ்வாறு இருவரும் பேச முடியாமல் போனது யார் செய்த குற்றம்?

தான் செய்த குற்றமென்றே இப்போது ஆகாஷிற்கு தோன்றியது. அவள் மனதில் என்ன இருக்கிறது



என்பதை அறிய முயற்சி செய்யாமல், அவள் சொன்னது போல் தன் மனதில் என்ன இருக்கிறது என்பதை அவள் அறியவில்லையே என்று அவள் மேல் குற்றம் சொல்லிக் கொண்டு இருந்தது, தான் செய்த பெரிய குற்றமென்று ஆகாஷ் நினைத்தான்.

திடீரென்று அவர்கள் இருவர் மீதும் மழைச்சாரல் தெறித்தது.

''ஸ்ஸ்சூ... மழை பெய்கிறதே...'' அனுராதா குதூகலத்துடன் எழுந்து பால்கனி கைப்பிடியோரம் போய் நின்று கொண்டாள்.

''என்னடி செய்கிறாய்...'' ஆகாஷ் அவளருகே போய் நின்று பார்த்தான். கொட்டும் மழையில் கைநீட்டி மழைத்துளிகளை உள்ளங்கையில் பிடிக்க முயன்றாள் அனுராதா. மேற்கூரையில் விழுந்து தெறிக்கும் மழைத் துளிகள் அவள் முகமெங்கும் சிதற...

''ஸ்ஸ்... ஆ...'' என்று அந்த சிலிர்ப்பை ரசித்துச் சிரித்தாள்.

மழையில் சின்னஞ்சிறு மழலை போல் மகிழ்வாய் விளையாடும் அவளை ரசித்தவாறே நின்று கொண்டிருந்தான் ஆகாஷ். மழை வலுத்தது. அனுராதாவின் உடல் நனைய ஆரம்பித்தது.

''உள்ளே வா அனு.. ஜூரம் வந்துவிடப் போகிறது...''

''இன்னும் கொஞ்ச நேரம் விளையாடுகிறேன்.. ப்ளீஸ்...''

''சொன்னால் கேள்.. உள்ளே வா...''

dsc00629.jpg (3072x2304x24b jpeg)



மனமில்லாமல் உள்ளே வந்தவளிடம் டவலை எடுத்து நீட்டினான்.

''சின்னக் குழந்தை போல் நனைந்து விட்டு வந்திருக்கிறாயே.. துவட்டிக் கொள்... இல்லாவிட்டால்...''

''ஜூரம் வந்துவிடும்...''

கலகலவென்று நகைத்தபடி டவலை வாங்கி துடைத்துக் கொண்டவளின் நனைந்த நீர்த்திவலைகள் ஆங்காங்கே தெறித்திருந்த முகத்தைக் கண்டதும் முத்தமிடும் ஆசை ஆகாஷிற்குள் குமிழ்விட்டது.

''அனு.. அது என்ன...'' அவள் முகம் நோக்கி கரம் நீட்டினான்.

''என்னது...'' புரியாமல் முகம் காட்டியவளின் முகம் பிடித்து இமைக்கும் பொழுதில் இதழோடு இதழ் பதித்து விட்டான்.

விலக முயலாமல் அவன் பிடிக்குள் அடங்கி அவள் நின்றது ஒரு நிமிடம்தான். அந்த ஒரு நிமிடத்திற்குள் ஒரு யுகம் கடந்தது போல் உணர்ந்தான் ஆகாஷ்.

அனுராதா முகம் விலக்கிக் கொண்டு கீழே விரைந்து விட்டாள் சற்று நேரம் கழித்து இரவு உணவு உண்ண டைனிங் டேபிளுக்கு வந்தவனின் முகம் பார்க்காமல் பரிமாறினாள் அனுராதா. தன்முன் இருந்த உணவில் பார்வையைப் பதிக்காமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஆகாஷின் கவனத்தில் அவள் முகச் சிவப்பு பட்டது.

நாணம்...! ஆகாஷின் மனம் குளிர்ந்தது.



# 21



''அனு..'' பரிமாறியவளின் கரம்பிடித்து நிறுத்தினான் ஆகாஷ்.

''ம்ம்...'' அவன் முகம் பார்க்கத் தடுமாறி நிலம் பார்த்தபடிக் கூறினாள் அனுராதா.

''என்னைப் பார்த்தால் பாவமாக இல்லை...?'' ஆகாஷின் குரலில் தாபம் இருந்தது.

''நானும் பாவம்தான்..'' அனுராதா மோகத்தீயில் மூழ்கும் வேதனையுடன் பேசினாள். அவனுடைய கரங்களில் சிக்கியிருந்த அவள் தளிர் விரல்கள் நடுங்கின.

அவள் பதிலைக் கேட்ட ஆகாஷின் உணர்வுகள் கட்டவிழ்ந்தன. எழுந்து அவளை நெருங்கினான். அவள் அவன் மார்பில் கை வைத்துத் தள்ளிவிட்டாள். சிரித்துக் கொண்டே விலகி சமையலறைக்குள் ஓடினாள். ஆகாஷ் பின் தொடர்ந்தான். அவள் அவனுக்கு முதுகுகாட்டி சமையலறை ஜன்னலில் முகம் புதைத்து நின்றாள். ஆகாஷின் கரங்கள் அவள் தோள் மேல் படர்ந்தன. அவளது பின்னங்கழுத்தில் குனிந்து முத்தமிட்டான். அனுராதா ஜன்னல் கம்பிகளை இறுகப் பிடித்துக் கொண்டு விழிகளை மூடிக் கொண்டாள். அவளைத் தன்புறமாய் திருப்பி அவள் முகம் பார்க்க முயன்றான் ஆகாஷ். விழி மூடிக்கிறங்கி நின்றாள் அனுராதா.

dsc00630.jpg (3072x2304x24b jpeg)



அவளது விழிகளில் இதழ் பதித்தான் ஆகாஷ். தாளாத பெண்மை அவனது மார்பில் தஞ்சம் புகுந்தது. மனநிறைவோடு அவளைக் கட்டித் தழுவி உச்சி முகர்ந்து நின்றான் ஆகாஷ்.

பிரிய மனமில்லாமல் பிரிந்தாள் அவள்.

''ஏண்டி...''

''சாப்பிட வாங்க..''

''அப்புறம் சாப்பிடுகிறேன். நீ ஏன்னு சொல்லு...''

அவன் குரல் கண்டிப்புடன் ஒலித்தது.

''இப்போது வேண்டாம்...''

அவள் குரல் நலிந்து ஒலித்தது.

''அதுதான் ஏன்..? உனக்கு என்னைப் பிடிக்கவில்லையா? எங்கே என் முகம் பார்த்துச் சொல்லு...''

அனுராதா துயரத்துடன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''என்னைக் கேள்வி கேட்காதீர்கள். இப்போது வேண்டாம் விட்டு விடுங்கள்.. தயவு செய்து என் உணர்வுகளுடன் விளையாடாதீர்கள்...''

''யார்...? நான் உன் உணர்வுகளுடன் விளையாடுகிறேனா? கொல்லாதேடி. அனு... இங்கே வா... என் முகத்தைப் பார்...''

ஆகாஷ் நெருங்க அனுராதா அவன் முகம் பார்க்காமல் பின் வாங்கினாள். ஆகாஷ் முரட்டுத்தனமாய் அவள் முகம் பற்றி தன் பக்கம் திருப்பினான்.

''என்னைப் பார்...''



அவள் பிடிவாதமாக கண்களை மூடிக் கொண்டாள். அவள் முகத்தில் தவிப்புத் தெரிந்தது. உடலில் மெலிதான நடுக்கம் ஓடியது. ஆகாஷ் அவளுடைய உணர்வு போராட்டங்களைக் கண்டு கொண்டான்.

''ஏன்.. என் முகத்தைப் பார்ப்பதற்கு என்ன..?''

''என்னால் முடியவில்லை...''

''அதுதான் ஏன் என்கிறேனே...''

''அதுதான் என்னால் முடியவில்லை என்கிறேனே...''

ஆகாஷ் அவளை விட்டுவிட்டான். அவள் முகம் பார்க்காமல் சாப்பிட்டு முடித்தான். மௌனமாக மாடியேறிவிட்டான். சற்று நேரம் கழித்து அனுராதா வந்த போது முகச்சுளிப்புடன் அவன் கண்களை இறுக மூடிக் கொண்டு படுத்திருப்பதைக் கண்டாள். தயக்கத்துடன் விளக்கை அணைத்து விட்டுப் படுத்து விட்டாள்.

மறுநாள் காலையில் ஜாகிங் போன ஆகாஷ் மழையில் சொட்ட சொட்ட நனைந்து போய் வீடு திரும்பினான். அனுராதா பதறிப்போய் டவலுடன் ஓடி வந்தாள்.

''என்ன இப்படி நனைந்து விட்டீர்கள்..?''

''மழை...''

ஒற்றைச் சொல்லுடன் பேச்சை கத்தரித்துக் கொண்டு அவள் நீட்டிய டவலைக் கண்டு கொள்ளாமல் குளியலறைக்குள் போய்விட்டான் ஆகாஷ்.

''இன்னும் ஒரு இட்லி போட்டுக் கொள்ளுங்கள்...''

வேண்டாமென்று வாயால் சொல்லாமல் கை நீட்டித் தடுத்தவன் அவள் முகம் பார்க்காமல் கை கழுவச் சென்றான். அனுராதாவிற்கு துக்கம் பொங்கியது.

'என் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டானா?'

அவளை அவளது அலுவலக வாயிலில் இறக்கி விட்டு விட்டு கல்லூரிக்குச் சென்றவன் மாலையில் அவளைக் கூப்பிட வரும்போது காய்ச்சலோடு வந்தான்.

சுணங்கிய அவன் முகத்தைக் கண்டு யோசனையுடனே காரில் ஏறினாள் அனுராதா.

'ஏன் சோர்ந்து தெரிகின்றான்?'

வீட்டிற்குப் போனதும் அவன் படுக்கையில் விழுந்து விடப் பதறிப்போய் அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். உடல் அனலாய் கொதித்தது.

''சொன்னால் கேட்காமல் மழையில் நனைந்து கொண்டே ஜாகிங் போனீர்களே... இப்போது என்ன ஆயிற்று பார்த்தீர்களா? காய்ச்சலை இழுத்துக் கொண்டு வந்துவிட்டீர்கள்?''

அனுராதா சுடச்சுட காப்பியுடன் வந்து அவனை எழுப்பி மாத்திரை கொடுத்துப் படுக்க வைத்துக் கொண்டே கடிந்து கொண்டாள்.

''காய்ச்சலைத்தானே இழுத்துக் கொண்டு வந்தேன்... சொப்னா மாதிரி யாரையும் அழைத்துக் கொண்டு வந்து விடவில்லையே.. எதற்கு இப்படிக் கோபித்து கொள்கிறாய்?''

காய்ச்சல் வேகத்திலும் கிண்டலாய் அவன் கூற அனுராதாவின் இதழ்களில் துயரப் புன்முறுவல் தோன்றியது.

இவன் மட்டும் அவள் இதயத்தை அறிந்து கொண்டவனாக இருந்திருந்தால் இந்தத் துன்பம் இல்லையே... அவள் பெருமூச்சுடன் எழுந்து வெளியில் சென்றாள்.



மறுநாள் அனுராதா அலுவலகத்திற்கு விடுப்புச் சொல்லிவிட்டு ஆகாஷின் அருகிலேயே இருந்து கவனித்துக் கொண்டாள். ஆகாஷ் கல்லூரிக்கு போனில் தகவல் சொல்லிவிட்டான்.

பிற்பகல் மூன்று மணி அளவில் வாசலில் காலிங் பெல் ஒலித்தது. அனுராதா போய் கதவைத் திறந்தாள்.

''ஹாய்....'' என்றவாறு சொப்னா நின்றிருந்தாள்.

'இவள் எங்கே வந்தாள்?' என்று எண்ணமிட்டபடி அனுராதா தலையை மட்டும் அசைத்தாள்.

''ஆகாஷ் எங்கே..?''

''அவருக்கு உடல்நிலை சரியில்லை... காய்ச்சல்...''

''தெரியும்... அதனால்தான் பார்க்க வந்தேன்...''

''அவர் டேப்லெட் சாப்பிட்டுவிட்டு அயர்ந்து தூங்குகிறாரே...''

''ஈஸிட்..? எங்கே தூங்குகிறார்..? மாடியில்தானே...''

அவளாகக் கேள்வியையும் கேட்டுப் பதிலும் சொல்லிக் கொண்டவள் ஒயிலாக மாடிப் படியேற ஆரம்பித்தாள். அனுராதா திகைத்து விட்டாள்.

'இவளென்ன ராகினியை விட மோசமாக இருக்கிறாளே... அவர் பெட்ரூம் வரை போகிறாளே..'

கோபத்துடன் அவளும் பின் தொடர்ந்தாள். வெகு சுவாதீனமாய்,

''ஆகாஷ்...'' என்று அழைத்தபடி பெட்ரூம் கதவைத் திறந்தாள் சொப்னா. அவளது குரல் கேட்டு உடல் தூக்கிப் போட கண்விழித்த ஆகாஷ்.

dsc00632.jpg (3072x2304x24b jpeg)



'என்னடா.. இது சொப்னாவின் குரல் போல இருக்கிறதே...' என்று திகைத்தபடி எதிரே பார்க்க அவள் நிஜமாய் நின்று கொண்டு,

"உடம்பு சரியில்லையா..?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவ்வளவுதான் திடுக்கிட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த ஆகாஷ் கோபத்துடன் சொப்னாவின் பின்னால் நின்று கொண்டிருந்த அனுராதாவைப் பார்த்துக் கத்தினான்.

"வாட் இஸ் திஸ் அனு? உனக்கு கொஞ்சம் கூட மேனர்ஸ் என்பதே தெரியாதா? இல்லை அது சுத்தமாய் கிடையாதா? வீட்டுக்கு வந்த விருந்தாளியை பெட்ரூம் வரை வர விடுவார்களா? ஹாலில் உட்கார வைத்து விட்டு என்னை எழுப்பிச் சொல்ல வேண்டும் என்ற அறிவு கூடவா உனக்கு இல்லாமல் போய்விட்டது? இடியட்..."

ஆகாஷிற்கு அவ்வளவு கோபம் வரும் என்பதை சொப்னாவும் அனுராதாவும் அன்று தான் உணர்ந்தார்கள். அவனது கோபம் கண்டு சொப்னாவின் முகம் சுருங்க அனுராதாவின் முகம் பூவாய் மலர்ந்தது.

அவளுடைய கணவன் பண்பாடு மிக்கவன். அவனுடன் பணிபுரியும் பெண்ணின் நாகரிகமில்லாத நடவடிக்கையை அவன் ஜாடையாகக் கண்டிக்கிறான் என்பது அனுராதாவிற்கு புரிந்து விட்டது.

'இவனுக்கு இது கூடத் தெரிகின்றதே...'



# 22



"அவங்களை ஏன் திட்டுகிறீர்கள் ஆகாஷ்... அவர்கள் பாவம் நீங்கள் தூங்குகிறீர்கள் என்றுதான் சொன்னார்கள்.. திட்ட வேண்டுமானால் என்னைத் திட்டுங்கள்.. நானாகத்தான் மாடிக்கு வந்தேன்..." சொப்னா கொஞ்சும் குரலில் கூறினாள்.

"நீங்கள் இதில் தலையிடாதீர்கள் சொப்னா. இது எனக்கும் அவளுக்குமான பிரச்சனை. அவளுக்கு வரவர பொறுப்பில்லாமல் போய்விட்டது. எனக்கு மட்டும் மூன்றாம் மனிதரின் முன்னால் அவளைத் திட்ட வேண்டுமென்ற ஆசையா? அப்படித் திட்டினாலாவது அவளுக்கு புத்தி வராதா என்று தான் திட்டுகிறேன். அனு.. முதலில் சொப்னா மேடத்தை அழைத்துக் கொண்டு போய் ஹாலில் உட்கார வை... குடிக்க ஏதாவது கொடு..." ஆகாஷ் சொப்னாவைப் பார்ப்பதைத் தவிர்த்து அனுராதாவிடம் அதட்டினான்.

சொப்னா அடிபட்ட பார்வை பார்த்தாள். என்றுமே சிரித்த முகத்துடன் பேசும் ஆகாஷா இது?

"நான் மூன்றாம் மனுஷியா ஆகாஷ்..."

"நிச்சயமாய்! சொப்னா தவறாய் எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் என்னுடன் வேலை செய்கிறவர்கள். என்னுடைய நல்ல சிநேகிதி. நாம் வேலை செய்யும் இடத்தில் சகஜமாய் பேசிக் கொள்ளலாம். அதற்காக என்

பெட்ரும் வரை வருவதென்பது சரிவராதது... உங்களுக்கு பால் போன்ற வெள்ளை மனது... இந்தப் பழக்கமெல்லாம் தெரிந்திருக்காது. ஆனால் இவளுக்கு தெரிய வேண்டாமா? என்னடா.. நமக்குத் தாலி கட்டின புருசன் காய்ச்சலில் கண் திறக்காமல் கிடக்கிறானே.. இந்த நேரத்தில் யார் வந்தாலும் தொந்தரவு செய்ய விடாமல் உட்கார வைத்துவிட்டு தகவல் சொல்ல வேண்டுமே என்ற எண்ணம் இவளுக்கு இருக்க வேண்டாமா? நீங்கள் பெட்ரும் வரை வருவது தவறு என்று இவள் உங்களுக்கு உணர்த்தியிருக்க வேண்டாமா? யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற கவலை இவளுக்கு கொஞ்சமாவது இருக்க வேண்டாமா?'' ஆகாஷ் பேசப் பேச சொப்னாவின் ஆர்வம் அடங்கி விட்டது.

''விட்டு விடுங்கள் ஆகாஷ்... அவர்கள் உங்கள் பிரண்ட்தானே என்று நினைத்திருப்பார்கள்...'' சொப்னா சமாதானமாய் கூறினாள்.

''அப்படி நினைக்கலாமா சொப்னா... பெண்களிடம் மனம் புண்பட பேசுவது என் வழக்கம் கிடையாது. அதனால் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் நான் மென்று விழுங்கிக் கொண்டு விழிப்பேன். இவள் பெண்ணுக்கு பெண் புத்தி சொல்வது போல் சொல்லியிருக்க வேண்டாமா? அன்றைக்கும் அப்படித்தான். நீங்கள் பாட்டுக்கு இயல்பாய் காரில் என் பக்கத்தில் உட்கார்ந்து விட்டீர்கள்.. நானும் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் இவள் வந்து சொல்லட்டும் என்று வந்தால் இவள் கூலாய் பின் சீட்டில் ஏறி உட்கார்ந்து விட்டாள்...''



''நீங்கள்தானே ஆகாஷ் அவர்களை பின்சீட்டில் உட்காரச் சொன்னீர்கள்...'' சொப்னா இடைமறித்தாள்.

''நான் சொல்வேனுங்க... நீங்கள் பக்கத்தில் இருக்கிறீர்கள் என்ற தர்ம சங்கடத்தில் சொல்லியிருப்பேன். இவள் என்ன செய்திருக்க வேண்டும்? ஒன்று உங்களை பின்சீட்டிற்கு போகச் சொல்லிவிட்டு என் பக்கத்தில் உட்கார்ந்திருக்க வேண்டும்.. இல்லாவிட்டால் உங்களையும் அவள் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.. இவள் செய்தாளா?''

''ஏன் நீங்கள் சொல்லியிருக்கலாமே...''

''சொன்னால் தெரிந்து கொள்கிற ஆளாக நீங்கள் இருந்திருந்தால் நானும் சொல்லியிருப்பேன். ஆனால் நீங்கள் அப்படியில்லையே'' ஆகாஷ் எரிச்சலுடன் கூற சொப்னா விக்கித்து விட்டாள்.

ஆகாஷ் அதைக் கண்டு கொள்ளாதவனாய் கருமமே கண்ணாய் அனுராதாவின் பக்கம் திரும்பி தன் அர்ச்சனையை தொடர்ந்தான்.

''இவள் பாட்டுக்கு பின் சீட்டில் உட்கார்ந்துவிட்டாள். நீங்களும் இறங்கி அவள் பக்கத்தில் உட்காரும் எண்ணமில்லாமல் இருந்தீர்கள். யாராவது அதை பார்த்துவிட்டால் என்ன செய்வது என்று நான் பதட்டத்துடன் காரை ஓட்டியது எனக்குத்தான் தெரியும்...'' என்று சொப்னா பக்கம் விடம் கூறியவன் மீண்டும் அனுராதாவின் பக்கம் திரும்பிக் கொண்டான்.

'இவ்வளவு பேசுகிறேன் அசைகிறாளா இவள்?' ''அனு.. இப்போது சொப்னாவை ஹாலுக்கு கூட்டிக் கொண்டு போகப் போகிறாயா இல்லையா...'' கண்கள்

சிவக்க உரத்த குரலில் அவன் கூறவும் அனுராதா மௌனமாய் சொப்னாவை ஓர் பார்வை பார்த்தாள்.

அந்தப் பார்வையை தாங்க முடியாத சொப்னா மாடிப்படி இறங்கினாள். அனுராதா அவளைத் தொடர்ந்தாள். அவமானத்தில் சொப்னாவின் முகம் கன்றியிருந்தது. அனுராதாவிற்கு அவளைப் பார்க்க இரக்கமாக இருந்தது.

''உட்காருங்கள்...'' அனுராதா சோபாவைக் காட்டினாள்.

''இருக்கட்டும் மிஸஸ் ஆகாஷ். நான் வந்த வேலை தான் முடிந்து விட்டதே. ஆகாஷைப் பார்த்துவிட்டேன். போய் வருகிறேன்...,'' சொப்னா வாசலை நோக்கி நடந்தாள்.

''நன்றாயிருக்கிறது... அவர் ஏதோ என் மேலிருக்கிற கோபத்தில் என்னைத் திட்டினால் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்வதா? அவருக்கு உடம்பு சரியில்லை... அதனால் சுள்ளென்று கத்திவிட்டார். எங்களுக்குள் இதெல்லாம் சகஜம். நீங்கள் கெஸ்ட். இதைக் கண்டு கொள்ளாமல் உட்காருங்கள். ஒன்மினிட்டில் காபியோடு வருகிறேன். உங்களுக்கு நான் கலக்கும் காபி பிடிக்கும் தானே. அப்புறம் என்ன அவசரம்?'' அனுராதா சொப்னாவின் கை பற்றி அமர வைத்தாள்.

சொன்னபடி ஒரே நிமிடத்தில் காபியோடு வந்தவள் சொப்னாவின் எதிரே அமர்ந்து சிரிக்கச் சிரிக்க பேசிக் கொண்டு இருந்தாள். மெல்ல.. சொப்னாவின் மனநிலையும் மாறியது. அவளும் அனுராதாவுடன் கலகலப்பாய் பேச ஆரம்பித்து விட்டாள்.

ஆகாஷ் முகம் கழுவி சட்டையை போட்டுக் கொண்டு கீழே வந்தபோது சொப்னாவும் அனுராதாவும் அவன்



வந்ததைக் கூடக் கவனிக்காமல் பேச்சில் ஆழ்ந்திருந்தனர்.

'என்னடா.. இது.. கனவு ஏதும் காண்கிறேனா...' ஆகாஷ் சந்தேகத்துடன் அமர்ந்து தொண்டையைக் கனைத்தான்.

''நான் சொல்லவில்லை.. இவர் வந்துவிடுவார்ன்னு.. என்னங்க நீங்க சொப்னாவிடம் பேசிக்கிட்டு இருங்க. நான் உங்களுக்கு சூடாய் காபி கொண்டு வருகிறேன்.''

அவனுடைய பதிலுக்காக காத்திராமல் அனுராதா சமையலறைக்கு ஓடினாள். ஆகாஷ் ஆச்சர்யத்தில் மூழ்கினான்.

''ஷி இஸ் வெரி கியூட் ஆகாஷ். யு ஆர் ஸோ லக்கி...'' சொப்னாவின் குரல் கேட்டு அவள் பக்கம் திரும்பியவன்,

''யெஸ் யு ஆர் கரெக்ட்...'' என்று பெருமையாய் சிரித்தான்.

''என்ன கப்ஸா விடுகிறார் சொப்னா..?'' அனுராதா சொப்னாவிடம் வினவியபடி ஆகாஷிற்கு காபியை நீட்டினாள்.

''உங்களைக் கல்யாணம் பண்ணிக்க அவர் கொடுத்து வைத்திருந்தாராம்...'' சொப்னா சிரித்தாள்.

''எதைக் கொடுத்து வைத்திருந்தாராம்...'' அனுராதா கிண்டலடித்தாள்.

''என் மனதை...'' ஆகாஷ் ஆழமாய் அவளைப் பார்த்தபடி கூறினான்.

சொப்னா விடைபெற்றுச் சென்றபின் கதவை மூடி விட்டு உள்ளே வந்த அனுராதாவைப் பார்த்து,

''இப்படி உட்கார்...,'' என்றான் ஆகாஷ்.

அனுராதா உட்கார்ந்தாள்.

''ஏண்டி.. நான் அவளை உட்காரச் சொல்லி காபி கொண்டு வரச் சொன்னால் என்னை எரிக்கிற மாதிரி ஓர் பார்வை பார்த்துவிட்டு உள்ளே போய் ஒரு மணி நேரமாய் காபி போடுவ... இப்ப என்னடாவென்றால் ஒன் மினிட்டில் காபின்னு அசத்துற... என்னடி விசயம்? இதில வேற மூழ்காத சிப்பே பிரண்ட்சிப்புதான்னு அவள் பாட்டுப்பாடாத குறையாக உனக்கு டாட்டா சொல்லி விட்டுப் போகிறாள்.. என்னதாண்டி இங்கே நடக்குது? எப்படி நீயாய் மலை இறங்கின...?''

''நானாய் ஒன்றும் இறங்கவில்லை. நீங்கள்தான் மலை இறக்கி விட்டீர்கள்...'' அனுராதா கண்கள் பளபளக்க கூறினாள்.

''நானா..?'' ஆகாஷ் புருவம் உயர்த்தினான்.

''யெஸ்... நீங்கள்தான்... நீங்கள் சொப்னாவிடம் பேசிய முறைதான் என்னை இளக்கிவிட்டது. ஒரு கணவன் அவன் மனைவிக்கு காட்டும் முக்கியத்துவத் தையும்.. மரியாதையையும் வைத்துத்தான் மற்றவர்களும் அவளுக்குத் தருவார்கள்... இனி மறந்தும் கூட சொப்னா உங்கள் பக்கத்தில் உட்கார மாட்டாள். வீட்டுக்கு வந்தால் ஹாலில் உங்களுக்காக வெயிட் பண்ணுவாள். எனக்கு அது போதும்.. இப்போது அவள் அவளுடைய லிமிட்டை உணர்ந்து விட்டாள். நானும் என் கணவருக்கு ஏற்ற மனைவியாக அவருடைய சிநேகிதிக்கு உபசரணை செய்தேன்...'' அனுராதா மூச்சுவிடாமல் பேச ஆகாஷ் வாய் பிளந்தான்.

இதுதான் அனுராதாவா?



# 23



இது ஏன் தனக்கு முன்னரே தெரியாமல் போனது? தனக்குள் கேட்டுக் கொண்டான் ஆகாஷ்.

ராகினியின் விசயத்திலும் ஆகாஷ் அளவோடு நடந்து அவளுக்கு புத்தி சொல்லியிருந்தால் அனுராதா அவனைப் புரிந்து கொண்டிருப்பாளோ? பொறாமையைத் தூண்டி விடுகிறேன் பேர்வழியென்று ராகினியோடு சேர்ந்து கொண்டு அனுராதாவை கிண்டலடித்தது தவறோ...? ஆகாஷிற்கு நினைக்க நினைக்க நெஞ்சம் கனத்தது.

அவளின் இதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிய அவன் மனம் ஆசைப்பட்டது. அனுராதாவிற்கு டைரி எழுதும் பழக்கம் இருந்தது. அன்னலட்சுமிபுரத்தில் அவனைப் பார்த்தது முதல் அவள் என்ன நினைத்தாள் என்பதை அறிந்து கொள்ள ஒரே வழி.. அவளது இதயத் தின் சாளரக் கதவுகளை திறப்பதுதான்.

ஆகாஷ் அவளது டைரிகளை திருட்டுத்தனமாய் தேடியெடுத்து படிக்க முடிவு செய்தான்.

உடல்நிலை சரியானதும் ஆகாஷ் கல்லூரிக்குச் செல்ல ஆரம்பித்தான். அனுராதாவும் அலுவலகம் சென்றுவிட் டாள். ஆகாஷ் அவளில்லாத சமயம் அவளது அல மாரியைக் குடைய நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்று சொப்னா வந்தபோது அவன் பதறிப்போய் எழுந்து வார்த்தைகளைக் கொட்டியது தற்செயலான விஷயம். இன்னும் சொல்லப் போனால் ஆகாஷ் கோபப்பட்டதற்கான காரணமே வேறு.

சொப்னாவை அவள் போக்கில் விட்டிருந்தால் அவள் இயல்பாக ஆகாஷின் கட்டிலில் அமர்ந்து அவனது நெற்றியைத் தொட்டுப் பார்த்திருப்பாள்... அத்துடனும் நில்லாமல் அவனுக்குக் கஞ்சி குடுக்கவும் கிளம்பியிருப்பாள். அது மட்டும் அனுராதாவின் கண் முன் நடந்திருந்தால்.. அந்தக் கணமே ஆகாஷை விட்டு அனுராதா பிரிந்து போயிருப்பாள். அதன் பின்னர் அனுராதாவோடு சேர்ந்து வாழும் வாழ்க்கையை கனவில் கூட ஆகாஷால் நினைத்துப் பார்த்திருக்க முடியாது.

அந்தப் பயத்தில்தான் அவன் சாவி கொடுத்த பொம்மை போல் கத்த ஆரம்பித்தான். கண் மண் தெரியாத அவனது கோபத்தில் வெளிவந்த வார்த்தைகள் சொப்னாவின் மீது அடி மனதில் அவனுக்கிருந்த அபிப்ராயத்தையும், மனத்தாங்கலையும் வெளிப்படுத்திவிட்டது. அதன் விளைவு அவனே எதிர்பாராத வகையில் இனிய திருப்பத்தை உண்டு பண்ணிவிட்டது.

புதிர் போன்ற அனுராதாவின் பூப்போன்ற மனதின் மறு பக்கத்தையும் அன்று அவன் தரிசிக்க நேர்ந்தது.

அவன் எதிர்பார்த்த தருணமும் ஓர் நாள் வாய்த்தது. கல்லூரியின் கல்ச்சுரல் புரோகிராமுக்காக அவனது வகுப்புக்கள் கேன்சலாக ஆகாஷ் வீடு நோக்கி காரை விட்டான். கதவு திறந்து வீட்டை உள்பக்கமாய் பூட்டி விட்டு மாடியறை நோக்கி நடந்தான். அனுராதாவின்



அலமாரியைத் திறந்து ஆராய்ந்தான். உடைகள்.. நைட்டிகள்.. உள்ளாடைகள்.. வேறு எவையும் இல்லை. யோசனையுடன் லாக்கரைத் திறந்து பார்க்க எண்ணி சாவியைத் தேடினான். அவளது புடவைகளுக்கு அடியில் அது கிடைத்தது. லாக்கரைத் திறந்தான். அவளது நகைகள்.. செர்டிபிகேட்ஸ் அடங்கிய ஃபைல்... அதைத் தவிர்த்து அழகான ஜரிகை எம்பிராயிடரி வேலைப்பாடுகளுடன் கூடிய பை அவனது கருத்தைக் கவர்ந்தது. எடுத்துப் பார்த்தான். அவன் தேடியது அதில் இருந்தது.

ஆகாஷ் தன் முன் கட்டிலில் பரப்பப்பட்டிருந்த பொருள்களைப் பார்த்தான். ஆண்கள் போடும் சட்டை ஒன்று.. அது ஆகாஷின் சட்டை என்பதைப் பார்த்தவுடன் கண்டுபிடித்து விட்டான். அன்னலட்சுமிபுரத்தில் அனுராதா நீட்டிய மோரில் நனைந்த சட்டை.... அழகாய் துவைத்து இஸ்திரி போட்டு வைக்கப்பட்டிருந்தது... ஒரு குறிப்பேடு... பிரித்துப் பார்த்தான். அவனது கையெழுத்து... அவன் அன்னலட்சுமிபுரத்தில் குறிப்புகளை எழுதிய நோட்டு... பேனா... அதுவும் அவனுடையது தான்...

அவளது லாக்கரில் இத்தனை வருடங்களாக இவற்றைப் பொக்கிஷம் போல் பாதுகாத்து வந்திருக்கிறாளா? ஏன்..?

ஆகாஷின் இதயத்தை மெல்லிய மயிலிறகு வருடிச் சென்றது. இவை சொல்லும் செய்தி ஒன்றுதான்.

இதயச் சாளரத்தை இறுக மூடிக்கொண்டு நடமாடும் அனுராதாவின் இதயத்தில் வாசம் செய்பவன் ஆகாஷ் மட்டும்தான்.

இதயம் படபடக்க அவளது டைரிகளைத் தேடினான் ஆகாஷ். லாக்கரில் அவையும் இருந்தன. அன்னலட்சுமி புரத்தில் அனுராதாவைச் சந்தித்த ஆண்டில் எழுதப்பட்டிருந்த டைரியை எடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான் ஆகாஷ்.

'................ இன்று அப்பா மொத்தமாக டிரெஸ் எடுத்து வந்திருந்தார். அக்காக்களும்... அம்மாவும் அவரைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். நான் போகவில்லை... எனக்குப் பிடித்ததை கை காட்ட நினைப்பதற்குள் அக்கா அதைப் பிடித்திருக்கிறது என்று சொல்லி எடுத்துக் கொள்வாள்... எனக்கு புது டிரெஸ் போடும் ஆசையே போய்விடும்.. எதற்கு வம்பு.. நான் போகப் போவதில்லை...'

ஆகாஷ் புருவங்கள் முடிச்சிட யோசித்தான்.

'ஸோ... இவள் விரும்பும் எதன் மீதும் மற்றவர் பார்வை படுவதை இவள் சகிக்கமாட்டாள்.. போச்சுடா..'

அடுத்த பக்கத்தைப் புரட்டினான்.

'..... இன்று திவாகரன் லவ் லெட்டர் கொடுத்து விட்டான். நான் பிரித்துப் படிக்காமல் கிழித்துப் போடப் போனேன். சுகந்தி பிரித்துப் படித்து விட்டாள். என் அழகை வர்ணித்திருக்கிறான். அவனுக்கு என்னைப் பிடித்திருப்பதால் எனக்கும் அவனைப் பிடிக்க வேண்டுமாம்... என் சம்மதத்தின் அடையாளமாக என் தலையில் மஞ்சள் ரோஜாவைச் செருகிக் கொண்டு நாளை நான் வர வேண்டுமாம்... அவனுக்கு அது பிடிக்கும்... இது பிடிக்கும் என்று ஆயிரம் கதை எழுதியவனுக்கு ஒரு விசயம் தெரியாது.. எனக்கு மஞ்சள் ரோஜாவே பிடிக்காது...'

ஆகாஷிற்கு சிரிப்பு வந்துவிட்டது.



'அடப்பாவி தினகரா... ஒரு மஞ்சள் ரோஜாவினால் உன் காதல் கன்ஸிடர் பண்ணப்படாமலே போய்விட்டதா? என் அழகான ராட்ஸஸி இன்னும் எத்தனை பேரின் இதயத்தை நொறுக்கினாளோ...'

சுவாரஸ்யத்துடன் அடுத்த பக்கத்திற்கு தாவினான் ஆகாஷ்.

'........ அம்மாவிடமிருந்து வழக்கமான பாட்டுக் கிளம்பிவிட்டது. நான் அன்னலட்சுமிபுரத்திற்கு போகக் கூடாதாம்... பக்கத்து வீட்டு பரிமளம் ஆண்டியின் பெண் லீவு நாளில் பாட்டுக் கற்று கொள்கிறாளாம். எதிர் வீட்டு பாட்டியின் பேத்தி லீவு நாளில் பரத நாட்டியம் கற்றுக் கொள்கிறாளாம்.. கோடி வீட்டு கோமளம் மாமியின் தம்பி பெண் லீவு நாளில் கம்ப்யூட்டர் கிளாஸ் போகிறாளாம்... நான் இது எதையும் கற்றுக் கொள்ளாமல் என் லீவ் நாளை வேஸ்ட் பண்ணுகிறேனாம்...

... என் அருமை அம்மாவே.. இந்த வீட்டில் நான் கடைக்குட்டி.. எல்லோருக்கும் கடைசியாய் பிறந்த பெண்.. எதிலும் கடைசி... ஆனால் அன்னலட்சுமி புரத்தில்...?

... என் தாத்தாவிற்கு நான்தான் எல்லாமும்... தாத்தா அதட்டினால் நீ பயப்படுவாய்.. அப்பா பயப்படுவார்.. ஆனால் தாத்தா...? நான் அதட்டினால் பயப்படுவார். அன்னலட்சுமிபுரத்து என் வார்த்தைக்கு கட்டுப்படுவார். அன்னலட்சுமிபுரத்து வீட்டில் நான் வைத்ததுதான் சட்டம்.. என் வார்த்தைக்கு மறு வார்த்தை தாத்தாவிடமிருந்து வராது.. அங்கு நான்தான் மகாராணி.. எனக்கு எதற்கம்மா பாட்டும், வீணையும், நாட்டியமும், கம்ப்யூட்டரும்.... தாத்தாவின் வீடு தரும் சந்தோசத்தை இவை தர முடியுமா?'

ஆகாஷ் ஒரு முறைக்கு பலமுறை அந்தப் பக்கத்தை ஊன்றிப் படித்தான். அவை சொல்லிய செய்தி அவனுக்கு மெல்ல.. மெல்ல புரிந்தது.

அனுராதா பத்தோடு பதினொன்றாய் இருப்பதை விரும்ப மாட்டாள். தன் வீட்டில் கடைக்கட்டி என்பதால்.. தான் முதன்மையாய் விளங்கும் தாத்தாவின் வீட்டையே விரும்பியிருக்கிறாள். அடிபணிதலை விரும்பாதவள்.. தாத்தாவின் செல்லப்பேத்தி. அதனால் குடும்பத்தில் சில அதிகாரங்கள் கிடைக்கப் பெற்றவள். தனக்குப் பிடித்ததை மட்டும் செய்பவள்.. மற்றவர் சொல்வதற்காக எதையும் செய்வதை விரும்பாதவள்...

ஆகாஷ் யோசனையில் ஆழ்ந்தான். இப்போது அனுராதாவின் இயல்பு அவனுக்கு முழுவதும் பிடிபட்டுவிட்டது.

யாருக்கும் அடிபணியாத இயல்புடையவள். யார் சொன்னாலும் கேட்டுக் கொள்ளாத தன்மையுடையவள்... கட்டாயப்படுத்தி இவள் மீது யாரும் தங்களது விருப்பத்தை திணித்து விட முடியாது.. அந்தக் கட்டாயத்திற்கு இவள் கட்டுப்படவே மாட்டாள்.

அப்புறம் எவ்வாறு தொண்டைமானின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு இவள் வாக்குக் கொடுத்தாள்?

## 24



எதற்கும் கட்டுப்படாதவள் தொண்டைமானுக்கு கட்டுப்பட்டு வாக்குக் கொடுத்தாள். அதுவும் எப்படி?



'நான் அவரைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் தாத்தா...'

அப்போதும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கத் துணிந்தவளாய்த்தான் அனுராதா இருந்தாள். ஆகாஷை திருமணம் செய்து கொள்கிறேன் என்று ஓர் வார்த்தை கூறவில்லை.

ஆகாஷ் டைரியில் ஆழ்ந்தான்... அவன் தேடிய பக்கம் வந்துவிட்டது. இதயம் படபடக்க படிக்க ஆரம்பித்தான்.

அன்றிலிருந்து அவள் எழுதிய டைரியின் அனைத்துப் பக்கங்களிலும் ஆகாஷின் பெயர் இடம் பெற்றிருந்தது.

'...... யார் அது..? பெயர் ஆகாஷாம்.. பெரிய மன்மதன் போல ஓர் பார்வை பார்த்துக் கொண்டு வீட்டிற்குள் வந்தான்.. அவன் என்னை விழுங்கி விடுவதைப் போல பார்த்ததைக் கண்டு பெண்களையே முன்னே.. பின்னே பார்த்திருக்காத பிறவியென்று தான் முதலில் நினைத்தேன். அப்புறம் பார்த்தால்.. ஆள் காலேஜ் லெக்சரராம்.. காலேஜ் வேறு கோ-எஜூகேஷனாம். அவன் பார்த்திராத பெண்களா..? அப்புறம் ஏன் என்னை அப்படிப் பார்த்தான்? டாக்டரேட் பண்ணப் போகிறானாம். வாராவாரம் குறிப்புகள் எடுக்க இங்கு வருவானாமே... ஆனால் ஒன்று.. ஆள் ஜம்மென்றுதான் இருக்கிறான்...'

ஆகாஷின் இதழ்களில் முறுவல் மலர்ந்தது.. அன்று அப்படி முறைத்துவிட்டு சைட் வேறு அடித்திருக்கிறாள்... 'கள்ளி'

'... நாளைக்கு அவன் வருவானா..? என்றுமில்லாமல் இன்று அன்னலட்சுமிபுரம் இவ்வளவு அழகாய் மாறிவிட்டதே... எதனால்..? ஊஹூம்.. நான் சொல்ல மாட்டேன்...'

ஆகாஷின் உடல் சூடேறியது. 'என்னை எதிர்பார்த்திருக்கிறாள்' அவன் பார்வை டைரியில் விழுந்தது.

'...... அவன் வந்தே விட்டான். அவனுடன் வம்பிழுக்க என் உள்ளம் விரும்பியது.. வம்பும் இழுத்தேன்.. அவனோ... நான் இழுத்த.. இழுப்பிற்கு வளைந்தும் கொடுத்தான்... என்னை வெட்கமில்லாமல் சைட்டும் அடித்தான்... 'வா போ'வென்று கூப்பிடுகிறான்.. தாத்தா வந்து விட்டால் அறியாப் பிள்ளை போல் முகத்தை வைத்துக் கொண்டு என் பக்கம் பார்வையையே திருப்பாமல் என்ன ஒரு பவ்யமாய் பேசுகிறான்.. நடிகன்... மகாநடிகன்... பெண்கள் வாடையே ஆகாத மாதிரி ஓர் பாவனை.. தாத்தாவின் முன்னாலேயே அவர் அறியாமல் என்னைப் பார்த்து கண்களை வேறு சிமிட்டுகிறான் அந்தத் திருடன்... என் மனதை என்னவோ செய்கிறதே... அவன் திருடன்தான்.. திருடியது எதை..? என் இதயத்தையா..? எனக்குத் தூக்கம் வரவில்லையே.. என் தூக்கத்தையும் அல்லவா அவன் திருடிவிட்டான்...'

ஆகாஷ் டைரியின் மேல் உதடுகள் படிய முத்தமிட்டான். டைரியின் அந்தப் பக்கத்தை தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். ஒன்றை நினைத்து.. ஒன்றிலேயே வாழ்பவள்... அவனை நினைத்தாளா? அதனால் தான் என் இதயத்தை அறிந்து கொண்டு என்னைத் தொடு என்று பதறினாளா? 'அனு... என் அனு...'

மீண்டும் டைரியை படிக்க ஆரம்பித்தான் அவன்.

'.... அவனுக்கு என்ன பிடிக்கும் என்று தாத்தாவிடம் கேட்டுக் கொண்டு சமைத்தேன். தாத்தாவே ஆச்சரியப் பட்டார்... ஒரு குழம்பு.. காய் வைக்கவே எனக்கு உடம்பு வணங்காது.. இன்று விருந்து சமைக்கிறேனே என்று..



அவனுக்காக நாள் முழுவதும் அடுப்படியில் தணலில் வெந்தாலும் அது எனக்கு பரம சுகம்தான்.. இது அவனுக்காக... ஆகாஷ்.. ஆகாயம் போல் பரந்தவன்.. என் மனதில் நிறைந்தவன்.. அவனை நான் காதலிக்கிறேனா..? என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்.. அந்த விடை என்ன தெரியுமா? ஆமாம்...!'

அனுபவித்து அந்தப் பக்கத்தைப் படித்தான் ஆகாஷ். ஆகாஷ் தொண்டைமானிடம் அவனது காதலைச் சொல்வதற்கு முன்னரே டைரியில் தன் காதலை சொல்லியிருக்கிறாள் அனுராதா.

அவ்வளவு தூரம் தன்னை நேசித்தவள் ஏன் அவன் மேல் வெறுப்பை வாரிக் கொட்டினாள்? புரியவில்லை ஆகாஷிற்கு.

புரிந்து கொள்ள வேண்டுமென்றால் டைரியைத்தான் படிக்க வேண்டும்.. அவன் நெஞ்சம் படபடக்க படிக்க ஆரம்பித்தான்.

'..... இன்று அவன் என்னை என்னவென்று அழைத்தான் தெரியுமா? மேனகையென்று அழைத்தான். அவன் தவத்தை கலைக்க வந்த மேனகையாம்.. குறிப்பு எழுதிக் கொண்டிருந்தான்... கால் கொலுசுகளால் சப்தமெழுப்பி அவன் கவனத்தைக் கலைத்தேன்... திரும்பி என்னைப் பருகுவது போல் ஓர் பார்வை பார்த்தான்... அந்தப் பார்வைக் கொன்றும் குறைவில்லை.. ஆனால் மேனகை போல் தவத்தை கலைத்துவிட்டேன் என்று கூறிக் கொண்டே பார்த்து வைத்தான். அதுதான் கொஞ்சம் இடிக்கிறது. எந்த தவத்தை கலைத்தேன்.. கல்வி தவத்தையா.. இல்லை அவன் ஆத்ம தவத்தையா..? அவன் கண்கள் என்னிடம் எதையோ கூற விரும்புகின்றன... சொந்தம்

பாராட்டுகின்றன.. அவன் விழியால் என்னை வளைக்கப் பார்க்கிறான்.. நான் வளைந்து விடாதவள் போல் பிலிம் காட்டினேன்.. மேனகையாமே.. மேனகை ஒரு குழந் தையைப் பெற்றதும் விசுவாமித்திரன் கை விட்டு விட்டாரே.. அது போல் இவனின் மோகமும் என்னைக் கைவிடுமா? இவனுக்கு என் மேலிருக்கும் தாகத்திற்கு பெயர் என்ன காதலா.. இல்லை மோகமா? எனக்கு அழ வேண்டும் போலிருக்கிறது... நான் நானாக இருந்தால் அழ நினைப்பேனா..? நான்தான்.. நானாக இல்லையே..'

ஆகாஷின் புருவங்கள் கேள்வியாய் மேலேறின. இது பெண்மையின் தவிப்பு.... தன் இதயம் கவர்ந்தவனின் இதயத்தில் தானிருக்க வேண்டுமே.. தன்மேல் அவன் கொண்டுள்ளது காதலாக இருக்க வேண்டுமே.. அது காலம் பூராவும் நிலைக்க வேண்டுமே.. என்ற ஆவேசம்.. ஆற்றாமை.. வேண்டுதல்.. இவை அத்தனையும் அவளது எழுத்தில் தெரிந்தது.

ஆகாஷ் தன்னையே நொந்து கொண்டான்.. அவள் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லையென்று தலையைப் பிய்த்துக் கொண்டேனே... ஒரு வினாடி யாவது அவள் மனதில் தன் மீது காதல் இருக்கிறதா... என்று யோசித்துத் தொலைத்தேனா... அதை விட்டு விட்டு அவளை ஏதோ விலங்கியல் பூங்காவில் வைக்க வேண்டிய பிராணி போல் பார்த்துக் கொண்டு பயந்து விலகி.. அவளை நினைக்கவும் முடியாமல்... அவளை மறக்கவும் முடியாமல் தவித்துக் கொண்டு கிடந்தேனே.. அவன் மட்டும் அன்னலட்சுமிபுரத்தில் தன் காதலை அவளிடம் சொல்லியிருந்தால் வீணாக இத்தனை வருடங்களை வெம்மையில் கழித்திருக்க வேண்டாமே...



ஓர் பெருமூச்சோடு அடுத்த பக்கத்தைப் புரட்டினான்.

'...... இன்று அந்த ஆள் காட்டி மோகினி.. வித்தாரக் கள்ளி.. ராகினி வந்திருந்தாள்.. ஆகாஷை விழுங்கி விடு வது போல் பார்த்தாள். வெட்கமில்லாமல் பேசினாள்.. என் மனம் பதறியது.. அவனின் பதில் நடவடிக்கை என்னவாக இருக்குமென்று அவன் முகம் பார்த்தேன்... அவனும் வெட்கமில்லாமல் அவளையும் பார்க்கிறான். ஊடே ஊடே என்னையும் பார்த்துக் கொள்கிறான்.. கடைசியில் இவனும் இவ்வளவுதானா.. ராகினி போன்ற ஓர் பெண்ணிடம் இழையுமளவிற்கு இவன் தரமில்லா தவனா... அவளைப் பார்த்த கண்ணால் என்னையும் பார்ப் பதா? அவளும்.. நானும் ஒன்றா? என் மேனி பற்றி யெரிந்தது. என் இதயம் வலித்தது. அவன் முகத்தில் விழிக்க விருப்பமில்லாமல் என் அறைக்குள் போய் விட்டேன்.. அவனது கார் கிளம்பும் ஓசை கேட்டதும் வெட்கம் கெட்டு என் கண்ணில் கண்ணீர் வழிந்தது.. வரலாமா.. இந்த அனுராதா அவனுக்காக அழலாமா...?'

ஆகாஷ் திக்பிரமை அடித்ததுபோல் உறைந்துவிட் டான். அவன் விளையாட்டாய் செய்தது... எப்படியெல் லாம் வினையாக மாறியிருந்திருக்கிறது. அதை அறியா மல் அவளை விழியால் துழாவி ஏமாந்தானே... வெளியே கடுமை காட்டும் அந்தப் பூவின் பேதை இதயம் எவ்வா றெல்லாம் வருந்தியிருக்கிறது.

ஆகாஷிற்கு தன் மேலேயே கோபம் வந்தது. எவ் வளவு கிராதகனாய் இருந்திருக்கிறான். அவளை சின்னஞ்சிறு பெண்ணாக நினைத்து அவள் உணர்வு களோடு விளையாடிப் பார்க்க நினைத்து அவள் இத யத்தை உடைத்துவிட்டானே... அனுராதாவின்

பொறாமைத் தீயை தூண்டிவிட்டு அதில் குளிர் காய விரும்பியவன்.. அந்தத் தீயில் அவளது மெல்லிதயம் பொசுங்கிப் போனதை அறிந்து அதிர்ந்தான்.

## 25



'........ அவன் முகம் பார்க்காமல் அனுப்பிவிட்டேன். ஆனால் இந்த வெட்கம் கெட்ட மனது அவனது வரவிற்காக ஏங்கி இந்த ஒரு வாரமும் தவித்து விட்டது. இன்று காலையில் அவன் வந்தவுடன் ஆவலாய் அவன் முகம் பார்க்க ஓடினேன்.. ஆனால் முந்திரிக் கொட்டை போல் ராகினி வந்து நின்று கொண்டாள்... ஜாலக்காரி..! அவள் பண்ணிய ஜாலம் பொறுக்காமல் கோபித்துப் பேசினால் அந்த சாகஸக்காரி... எனக்கும் ஆகாஷிற்கும் இடையே மோதலை உருவாக்கினாள்.. இவன்தான் ஆகட்டும் அவளின் சரஸப் பேச்சை ரசிக்காமல் இருந்திருக்கக் கூடாதா... அவளுடன் சேர்ந்து கொண்டு என்னை மட்டம் தட்டிப் பேசுகிறான்.. தனிமையில் என்னை என்ன வேண்டுமானாலும் பேசட்டும்.. அவள் முன் பேசலாமா... இவனையா நான் இத்தனை நாளாய் காதலித்தேன்.. என்மேல் இவனுக்குக் காதல் இல்லை... கை நீட்டி அழைக்கும் பெண்களின் பின்னால் போகும் கூட்டத்தைச் சேர்ந்தவன் தான் இவன்... இவனுக்கு நான் மரியாதை கொடுக்க வேண்டுமாம்... ராகினி சொல்கிறாள்.. வெட்கக்கேடு... யாருக்கு யார் சிபாரிசு செய்வது.. இந்தக் கயவனை நான் இத்தனை நாளாக என் மனதிற்குள்



நினைத்து பூஜித்தேனே... எனக்கு இவன் மேல் எந்த உரிமையும் கிடையாதா? இவனை நான் என்ன வேண்டுமானாலும் சொல்வேன்... 'வாடா.. போடா..' என்று கூடச் சொல்லுவேன்.. இவள் யார் அதைக் கேட்க.. நானென்ன இவளைப் போல் இவனது குடும்ப வரலாற்றை தெரிந்து கொண்டு ஆள் பிடிக்க அலைபவளா... இவனது குடும்பத்தின் சொத்து சுகத்தைப் பற்றிய எண்ணமே எனக்கு இருந்ததில்லையே.. இவன் என்ன படித்திருக்கிறான்.. இவன் என்ன வேலை பார்க்கிறான் என்ற நினைவே எனக்கு இருந்ததில்லையே.. எனக்கு தெரிந்ததெல்லாம் இவனது முகமும் பார்வையும் மட்டும்தானே.. இவன் சொத்து சுகமில்லாத படிப்பறிவில்லாத நாடோடியாய் இருந்திருந்தாலும் நான் இவனைத் தானே காதலித்திருப்பேன்.. ராகினிக்கு வேண்டுமானால் இவன் உயர்த்தியாய் இருக்கலாம்.. ஏனென்றால் அவளது கண்ணிற்கு தெரிவதெல்லாம் காரும், பங்களாவும், வழியும் வாய்ப்பும்தானே.. இவனுக்கும் அவளைத்தானே பிடிக்கிறது... அவளது புகழ்ச்சிதானே பிடிக்கிறது.. கூட்டிக் கொண்டு போ என்று சொல்லிவிட்டேன்.. அவளது ஆசைக்குரியவன் என் கண் முன் இருக்க வேண்டாம்.. வேண்டாம்.. வேண்டாம்.. வேண்டாம்.. வேண்டாம்...'

அனுராதா ஏறக்குறைய மூன்று நான்கு பக்கங்களில் இதைப் பற்றியே எழுதியிருந்தாள். ஒரு பக்கம் முழுவதும் 'வேண்டாம், வேண்டாம்' என்ற வார்த்தையை எழுதியிருந்தாள்.

ஆகாஷ் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான். அன்று அவளைத் 'திமிர் பிடித்தவள்' என்று

நினைத்தானே.. தற்பெருமை கொண்டவளென்று அனுமானித்தானே.. அவளது திமிர் எதனால் வந்தது..? 'அவனைக் காதலிப்பவள் நான்' என்ற உரிமையினால் வந்த திமிரல்லவா? அவளது தற்பெருமை எங்கிருந்து வந்தது? 'உன்னை உனக்காகவே காதலிக்கிறேன்.... உன் பெருமை எனக்கு எதற்கு?' என்றல்லவா அவள் கேட்டிருக்கிறாள்? அந்த எண்ணத்திலிருந்து வந்ததல்லவா அந்தத் தற்பெருமை?

அவன் முகம் பார்க்க விருப்பமில்லாமல் போனதற்கு யார் பொறுப்பு? ஒருவகையில் தானும் பொறுப்பு என்றே ஆகாஷிற்கு தோன்றியது.

'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் - அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு...'

என்றார் பொய்யா மொழிப் புலவர். அனுராதா பேசியதற்கு காரணம் என்ன என்று கண்டுபிடிக்காமல் அவளுக்கு 'திமிர் பிடித்தவள்' என்ற பட்டத்தைக் கொடுத்தானே.. அவனுக்கு என்ன அறிவு இருந்தது?

ஓர் நொடி.. ஒரேயொரு நொடி.. அவள் பக்கமும் என்ன நியாயமிருக்குமோ என்று சிந்தித்துப் பார்க்கத் தெரியாதவனுக்கு அவள்மேல் பழிசொல்ல என்ன தகுதி இருக்கிறது?

ராகினியின் மேல் ஓர் நாள் கூட அவனுக்கு ஈர்ப்பு இருந்ததில்லையே.. அப்புறம் ஏன் அவளையும் ஒரு மனுஷியாக நினைத்து பேசித் தொலைத்தான்... அவ்வாறு பேசுவதற்கு முன் அவனது காதலை அனுராதாவிடம் தெரியப்படுத்திவிட்டு பேசியிருந்தால் அது அனுராதாவை பாதித்திருக்காதோ..



எண்ணங்கள் சிலந்தி வலை... அதன் பின்னலில் சிக்கிய ஆகாஷ் அமைதியிழந்தான். என்றோ செய்த தவறிற்கு எப்படிப் பரிகாரம் செய்வது என்று துடித்தான்.

அன்று அவள் தொண்டைமானிடம் அவனது முகத்தைப் பார்க்க விருப்பமில்லையென்று சொன்னதன் காரணம் அவன்மேல் உள்ள அளவு கடந்த வெறுப்பினால் அல்ல.. அவன் மேலிருந்த அளவுகடந்த விருப்பத்தினால் என்பது இன்று அவனுக்குப் பிடிப்பட்டது.

ஆகாஷ் முகத்தை துடைத்துக் கொண்டு மேலே படிக்க ஆரம்பித்தான்.

'.... தாத்தா என் மனதை கண்டு பிடித்து விட்டார் என்று தோன்றுகிறது. உனக்கு யார் மேலும் இவ்வளவு கோபம் வராதே ராதா.. ஆகாஷின் மேல் ஏன் கோபிக்கிறாய் என்று இன்று கேட்டார்.. ராகினி செய்யும் தவறுக்கு அவன் எப்படி பொறுப்பாவான் என்று வேறு கேட்கிறார்... தாத்தா உங்களுக்கு தெரியாது.. இன்றைக்கு சாயங்காலம் அவன் காரில் ஏறிக் கொண்டு அவளிடம் கொஞ்சிப் பேசினான். அவள் கார் ஜன்னலோரம் குனிந்து அவன் பெண்டாட்டி போல் குழைந்து குழைந்து பேசுகிறாள்.. அவனுக்கு டாட்டா வேறு காட்டுகிறாள்... அவனுக்கு ஒன்றும் தெரியாதாம்.. பாப்பாவாம்... நான் மொட்டை மாடியில் அநாதை போல நின்று கொண்டு அவர்கள் சரஸமாடுவதைப் பார்த்துக் கொண்டு நின்றேன். அவர்கள் பேசியது காதில் விழவில்லை.. ஆனால் ராகினியிடம் தோன்றிய அசைவுகள் அவர்களது இணக்கத்தை உணர்த்தியதே.. தாத்தா நான் ஏன் வெட்கம் கெட்டு மொட்டை மாடிக்குப் போனேன் தெரியுமா? அவனை ஒளிந்திருந்து ஓர் முறை பார்க்க விரும்பினேன். அவனை மட்டும்

dsc00643.jpg (3072x2304x24b jpeg)



பார்க்கப் போனேன்.. அவளோடு அவனையும் சேர்த்துப் பார்த்துவிட்டேன்.. போதும் தாத்தா போதும்.. என் இதயம் வெடித்துவிட்டது. நான் அநாதையாகிவிட்டேன் தாத்தா.. என்கென்று அவனில்லை... அவனே எனக்கில்லை யென்று ஆகிவிட்ட பின்னால் மற்றவர்களின் சொந்தம் எனக்கு இருந்தாலென்ன... இல்லாமல் போனால் என்ன.. ஏதேனும் ஓர் ஆசிரமத்தில் சேர்ந்து சந்நியாசினி யாய் ஆகிவிட வேண்டும்... எனக்கு இந்தக் காதல் வேண்டாம்.. அது தரும் வேதனை வேண்டாம்.. தாத்தா.. எனக்கு சாக வேண்டும் போல் இருக்கிறதே... நான் என்ன செய்வேன்.. என்ன செய்வேன்...'

அந்தப் பக்கம் முழுவதும் கண்ணீர் துளிகள் பட்டு எழுத்துக்கள் சிதைந்திருந்தன.. ஆகாஷ் அவற்றைத் தடவிப் பார்த்தான். இவை அவனது காதலியின் கண்ணீர் பட்ட சுவடுகள்.. அவள் இதயத்தின் வலி தெரிந்த எழுத்துக்கள். இந்தக் கண்ணீரின் சுவடுகள் சொல்லும் அவளின் காதலின் தவிப்பை.. துடிப்பை... சோகத்தை..'

ஆகாஷின் கண்ணீரும் அவளின் கண்ணீர் பட்ட இடங்களில் பட்டு வெடித்துச் சிதறியது.

காதலித்தேன்... காதலித்தேன்... என்று சொல்லிக் கொண்டு திரிகிறானே.. இவன் இந்த அளவுக்கு அவளை நேசித்திருக்கிறானா? அவளின் காதலின் முன்னால் ஓடி ஒளிந்த தன் காதல் எம்மாத்திரம் என்றே அவனுக்குத் தோன்றியது.

இடது விழியில் தூசு விழுந்தால் வலது கண்ணும் கலங்கியிருக்க வேண்டும்... அவளின் துயரில் எழுந்த கோபத்தில் அவன் இதயம் கலங்கியிருக்க வேண்டும்...



நிழலாக அவளைத் தொடர்ந்திருக்க வேண்டும்... தொடர்ந்தானா?

## 26



அடுத்துப் படிக்க ஆகாஷிற்கு நடுக்கமாய் இருந்தது. என்ன எழுதியிருப்பாள் என்பது அவனுக்குத் தெரிந்தது தானே... ஒரு வழியாய் படிக்க ஆரம்பித்தான்.

'........ வெயிலில் களைத்து வந்திருந்தான்... எனக்கு மனம் தாங்கவில்லை... அவசரமாய் மோரைக் கலக்கி தம்ளரில் ஊற்றி ரெடியாக வைத்துக் கொண்டேன்.. தாத்தாவின் குரலுக்காக காத்திருந்தேன். அவரும் குரல் கொடுத்துவிட்டார்.. மோரை எடுத்துக் கொண்டு போனால்.. ராகினி ஜூஸுடன் வந்து நிற்கிறாள். மனம் வலிக்கத் திரும்பினால் இவன் விட மாட்டேன் என்று மோரைக் கேட்டான்.. கொடுக்கப் போகையில் ராகினி அதைத் தட்டிவிட்டு விட்டாள்.. அவன் உடலெல்லாம் மோர் கொட்டி நனைத்து விட்டது.. அவன் ராகினியை பார்த்த பார்வை அவளை சுட்டெரிப்பதாய் இல்லை... தாத்தா சின்ன அண்ணனின் சட்டையைக் கொடுக்கச் சொன்னார். கொடுத்தேன். அவனுடைய சட்டைய பாத்ரூமிலேயே விட்டுவிட்டு வந்துவிட்டான். ஆனால் அதற்குப் பின்னால் நடந்தது.. ராகினி அவன் கையைப் பிடித்து இழுக்க.. இவன் அவள் கைக்குள் தன் கையை விட்டுக் கொண்டு கெஞ்ச.. அவள் கொஞ்ச... என்னால்

அதற்கு மேல் தாங்க முடியாமல் போய்விட்டது.
வெடித்துவிட்டேன். அவன் வேண்டுமா.. இல்லை நான்
வேண்டுமா என்று தாத்தாவிடம் கேட்டேன். அவன்
போய்விட்டான்... என்னை விட்டு... என் வாழ்வை
விட்டு.. என் காதலை அறியாமல்.. என் வேதனை
புரியாமல்.. போயே விட்டான். இனி வரமாட்டான்...
அவன் நடந்த இடங்களில் நடந்து பார்க்கிறேன்.. அவன்
அமர்ந்த இடங்களில் அமர்ந்து பார்க்கிறேன்.. அவன்
விட்டுச் சென்ற சட்டையில் அவன் வாசனை.. என்று
தணியும் என் வேதனை. அவன் தொட்ட கையேடும்
பேனாவும்.. அவனின்றி தனியே மாடியறையில் கிடக்
கிறது... இனி இவைதானே என் நினைவுச் சின்னங்கள்..'

அவனை வெளியேற்றிவளின் இதயத்தில் புதைந்
திருந்த எண்ணங்கள் டைரியில் சிதறிக்கிடந்தன. அவ
ளின் காதலின் கதையை அவை கூறின. கண்கள் பனிக்க
அதை படித்து முடித்தவன் கைகளில் முகம் புதைத்து
அழுதான். பின் முகத்தை துடைத்துக் கொண்டு அவளின்
காதலைச் சொன்ன அடுத்த வருட டைரியைப் பிரித்துப்
படித்தான்.

'.... அன்னலட்சுமிபுரம் வெறிச்சிட்டு விட்டது.
அவனில்லாத இந்த வீட்டிற்கு.. அவனை நான் வெளி
யேற்றிய இந்த வீட்டிற்கு... தாத்தாவிற்காக மட்டுமே
வருகிறேன். அவன் அமர்ந்திருந்த இடத்தில் அமர்ந்து
வேப்பமரத்துடன் உரையாடிக் கொண்டிருக்கிறேன்...'

ஆகாஷ் அடுத்த பக்கத்தைப் புரட்டினான்.

'........ டிகிரி முடித்து விட்டேன்.. வேலையும்
கிடைத்துவிட்டது... இனிக் கல்யாணம் செய்து கொள்



என்கிறார்கள்... எப்படி..? என்னால் அவனை மறந்து
இன்னொருவனுக்கு கழுத்தை நீட்ட முடியுமா?'

ஆகாஷ் மனம் சிலிர்க்க பக்கங்களைத் தாண்டினான்.

'.... இன்று தாத்தாவிடம் பஞ்சாயத்து வந்துவிட்டது.
யாரோ ஒரு கஸ்டம்ஸ் ஆபிசராம்... சென்னையில்
பெரிய குடும்பமாம்.. ஒற்றைப் பிள்ளையாம்.. என்னை
ஏதோ ஒரு கல்யாணத்தில் பார்த்தார்களாம்.. என்னைக்
கேட்டால் நான் என்ன சொல்வேன்? முடியாதென்றேன்..
தாத்தாவிடம் புகார் பண்ணிவிட்டுப் போனார்கள்..
தாத்தா மௌனமாய் இருக்கிறார்...'

ஆகாஷ் ஆவலுடன் அடுத்த பக்கத்தைப் பார்த்தான்.

'.... தாத்தாவிடம் சொல்லிவிட்டேன். வேறு என்ன
செய்வது? இந்த உலகில் அவர் ஒருவர்தானே எனக்கு
ஆறுதல்... என் மனதை அவர்தானே புரிந்து கொள்வார்..
அதனால்தான்.. எல்லாவற்றையும் கொட்டிவிட்டேன்..
என் பேச்சில் குறுக்கிடாமல் பொறுமையாக எல்லா
வற்றையும் கேட்டார். கடைசியில் அவசரப்பட்டுட்டியே
ராதா.. பொறுமையாய் இருந்திருக்கலாமே... என்னிடம்
சொன்னால் நான் ஏதாவது வழி செய்வனே.. ஏன்
மறைத்தாய் என்றார். ஏன் மறைத்தேன்.. அவன் மனதில்
தீவிரம் இல்லாதபோது நான் மறைக்காமல் என்ன
செய்வது..? அவன் தீராத விளையாட்டு பிள்ளை..
என்னைப் பற்றி அவனுக்கு நினைவு இருக்கிறதோ
என்னவோ.. நான் எப்படி இதைச் சொல்ல முடியும்?
எனக்கு கல்யாணமே வேண்டாம் தாத்தா என்று அழு
தேன்... அவர் எதுவும் பேசாமல் மௌனமாய் இருக்
கிறார்...'

ஆகாஷ் தலையை உலுக்கித் தன் வேதனையைத் துரத்த முயன்றான். அனுராதாவின் காதல் பட்ட துயரங்களைப் படிக்க அவனுக்கு சகிக்கவில்லை. தன்னை விட அந்தஸ்தில் உயர்ந்த மாப்பிள்ளையை மறுத்துவிட்டு அவனுடைய கையை பிடித்தவளை எத்தனை முறை 'உன் அப்பா தேடிப்பிடித்து என் தலையில் உன்னைக் கட்டினார்' என்று சொல்லியிருப்பான்.

அடுத்து அனுராதாவின் டைரி சொல்லும் விவரங்களை அறிய பக்கங்களைப் புரட்டினான்.

'..... தாத்தாவிற்கு உடல்நிலை மோசமாகிவிட்டது... தந்தி வரவும் அன்னலட்சுமிபுரத்திற்கு பறந்து வந்தேன். தாத்தா படுத்த படுக்கையாய் ஆகிவிட்டார்.. என்னைக் கண்டதும் கண்களில் ஒளி வந்து விட்டது.. என் கையை இறுகப் பற்றிக் கொண்டு தட்டிக் கொடுத்தார்...'

டைரியின் அடுத்த பக்கங்கள் தொண்டைமானின் உடல்நிலையைப் பற்றியே பேசியது.. பதினைந்தாம் பக்கத்தில் ஆகாஷின் பெயர் வந்தது.

'...... இன்று அவன் வந்தான். தாத்தா கடைசியாய் பார்க்க வேண்டுமென்று சொன்னாராம்.. அப்பா வரச் சொன்னாராம்.. வீட்டில் பேசிக் கொண்டார்கள். தாத்தாவைப் பார்த்து கண்கலங்கினான். வீட்டிலிருப்பவர்களை தாத்தா வரச்சொன்னார்.. நானும் போனேன்.. அத்தனை பேரின் மத்தியிலும் தாத்தா அவனிடம் வாக்குறுதி கேட்டு விட்டார். என்னால் அதை ஜீரணிக்க முடியவில்லை. வாழ்நாளெல்லாம் தலை நிமிர்ந்து வாழ்ந்து பழக்கப்பட்ட என் தாத்தா.. வயோதிகக் காலத்தில் மகனிடம் கூட வந்து தங்காமல் சிங்கம்போல்



தனித்து வாழ்ந்த என் தாத்தா.. எனக்காக அவனிடம் கை நீட்டி வாக்குறுதி கேட்டார்.. அதை விட அதிசயமாய் அவன் உடனே வாக்குக் கொடுத்தான். தாத்தா என்னிடமும் கேட்டார்.. நான் என் மனதிலிருந்த முடிவைக் கூறினேன். அவனுடைய கையுடன் என் கையை சேர்த்துப் பிடித்து முத்தம் கொடுத்த என் தாத்தாவின் உயிர் பிரிந்துவிட்டது.. கடைசியில் கண் மூடும் முன்னர் என் மனதுப்பிரகாரம் என் கல்யாணத்தை நிச்சயம் பண்ணி விட்டுப் போய் விட்டார் என் தாத்தா... அவர் பின்னாலேயே சுற்றி வந்து வளர்ந்தவள் நான். என் மனமறிந்த வாழ்க்கையை எனக்குக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார் என் தாத்தா... ஒரு வார்த்தை கூட என்னைக் கடிந்து சொல்லாமல்.. ஒருவரிடமும் என் மனதிலிருப்பதை வெளிக்காட்டாமல்.. யாரிடமும் என்னை விட்டுக் கொடுக்காமல்.. வாக்குறுதி என்ற பெயரில் அவனைக் கட்டிப்போட்டு விட்டு காற்றோடு கலந்துவிட்டார் என் தாத்தா.. என் கண்ணீர் நிற்க மறுக்கின்றது.. தாத்தாவின் கருணைக்கு முன் என் பிடிவாதம் தோற்றுவிட்டது. நான் அவனை ஏற்றுக் கொள்ள சித்தமாகிக் கொண்டிருக்கிறேன்... அவன் என் தாத்தாவை மதித்து வந்தான்.. அவர் கேட்ட கடைசி நொடி வாக்குறுதியைக் கொடுத்து அவர் கண்மூடும் நேரத்தில் அவருக்கு மனநிம்மதியைக் கொடுத்தான். அதற்காகவாவது அவன் என்ன செய்தாலும் சகித்துக் கொண்டு அவன் காலடியில் வாழ்ந்து விடுவேன்... நன்றி தாத்தா...'

ஆகாஷின் விழிகளில் சுரந்த கண்ணீர் வற்ற வெகு நேரமாயிற்று.

# 27



ஆகாஷ் விழி மூடி தொண்டைமானைப் பற்றி நினைத்துப் பார்த்தான். ஆகாஷ் தன் காதலை வெளிப் படுத்தியதும் அவரிடம்தான்... அதை அனுராதாவிடம் சொல்லக்கூடாதென்ற வாக்குறுதியையும் பெற்றுக் கொண்டான். அதேபோல் அனுராதா தன் காதலை தன் தாத்தாவிடம் சொல்லிவிட்டு அதை மற்றவர்களுக்கு.. முக்கியமாய் ஆகாஷிடம் கூறக் கூடாதென்று அவளும் கூறிவிட்டாள்.

பாவம்.. அந்த வயோதிகர் என்ன செய்வார்? இரு வரும் நல்லவர்கள். இருவரும் ஒருவரையொருவர் காத லித்தனர். அதே சமயம் ஆகாஷ் தன்னை வெறுப்பதாக அனுராதா நினைத்தாள். அனுராதாவுக்கு தன்னை பிடிக்கவில்லையென்று ஆகாஷ் நினைத்தான். இதை யும் இவர்கள் இருவருமே தொண்டைமானிடம் தான் ஒப்பித்தார்கள்.

இவர்களை இணைத்து வைக்க தொண்டைமான் தன் இறுதி நேரத்தில் எடுத்த முடிவு இருவரையும் ஒன்று சேர்த்து வைத்துவிட்டது. அவர்களின் திருமணத்தை முடிவு செய்து விட்டு அவர் கண் மூடிவிட்டார். திருமணம் செய்து கொண்ட இருவரும் ஒருவர் அன்பை மற்றொரு வர் சந்தேகித்த வண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கின் றனர்.



இப்படி ஓர் துயரை இதயத்தில் சுமந்து கொண்டு அனு ராதாவால் எப்படி அவனுடன் ஒட்டி உறவாட முடியும்?

'என் இதயத்தை அறிந்துகொள்...' என்று அவள் கதறுவதில் அர்த்தமிருக்கிறதே...

ஆகாஷ் அனுராதாவின் டைரிகளை மூடி அவற்றை அன்புடன் தடவிக் கொடுத்தான். அவனைப் பொறுத்த வரை அவை டைரிகள் அல்ல. அனுராதாவின் இதயம். அவளது இதயத்தின் சாளரத்தை திறந்து வைத்து, ஆகாஷின் மனக்குமுறல்களுக்கு விடை அளித்த அட்சய பாத்திரம்.

அனுராதா அலுவலகத்திலிருந்து வந்தாள்... வழக்கம் போல் காரின் பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டாள். ஆகாஷ் அமைதியாக காரை ஓட்டிக் கொண்டு வந்தான். அவனது அமைதி அவளுக்கு சஞ்சலத்தை அளித்தது.

''ஏன் பேசாமல் வருகிறீர்கள்..?''

''என்ன பேச..?''

''இது என்னங்க புதிதாய் கேட்கறீங்க?''

''இன்று புதிதாய் நிறைய தெரிந்து கொண்டிருக் கிறேன்... ஒருவேளை அதனால்கூட இருக்கலாம்...''

ஆகாஷ் அமர்த்தலாய் கூற அனுராதா குழம்பினாள்.

'இவன் ஏன் இப்படிப் பிதற்றுகிறான்?'

''ஏங்க உடம்புக்கு ஒன்றுமில்லையே...''

''ஏண்டி நீ வேறு அனத்திக் கொண்டு வருகிறாய்?''

''இல்லை காய்ச்சல் வந்த உடம்பாச்சேன்னு கேட் டேன்..''

"ஏன் உனக்கு காய்ச்சல் வந்ததில்லையா..?"

"வந்திருக்கு... ஆனால்.."

"இப்ப என்ன.. காருக்குள் அமைதியாய் இருக்கக்கூடாது அவ்வளவுதானே.. இரு பாட்டைப் போடுகிறேன்."

டேப்ரிகார்டரில் பாட்டு ஒலிக்க ஆரம்பித்தது.

'எனக்காக வா.. நான் உனக்காக வா...
என்னைக் காணவா.. என்னில்
உன்னைக் காண வா வா வா...'

அனுராதா உதட்டைக் கடித்துக் கொண்டு ஜன்னல் புறம் திரும்பிக் கொண்டாள்.

"என்னடி.. உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு வருகிறாய்.. வேறு பாட்டு போடவா..."

வேறு பாடல் ஒலித்தது.

'நிலவைப் பார்த்து வானம் சொன்னது
என்னைத் தொடாதே...
நிழலைப் பார்த்து பூமி சொன்னது
என்னைத் தொடாதே...
நதியைப் பார்த்து நாணல் சொன்னது
என்னைத் தொடாதே...
நாளைப் பார்த்து இரவு சொன்னது
என்னைத் தொடாதே...'

அனுராதா கோபத்துடன் வெடித்தாள்.

"இன்றைக்கு என்ன ஒரு முடிவோடு இருக்கீங்



"ஆமாம்... இப்ப என்னங்கிற?"

"சை... எப்பப் பார்த்தாலும் இப்படிப் பாட்டுத்தான் போடுவது... தேடிப்பிடித்து பதிந்து வைத்திருக்கிறீர்களா?"

"எப்போது நமக்கு கல்யாணம் நிச்சயமானதோ.. அப்போதே இவற்றையெல்லாம் பதிந்து வைத்துவிட்டேன்..."

"என்ன ஓர் முன்யோசனை..." அனுராதா தலையில் அடித்துக் கொண்டாள்.

"இதில் தலையில் அடித்துக் கொள்ள என்ன இருக்கிறது? நம் கல்யாண வாழ்க்கை இப்படித்தான் இருக்குமென்ற யூகம்தான்.."

"உங்கள் யூகத்தை தூக்கி உடப்பில் போடுங்கள்.."

"ஏண்டி.. உன் யூகத்திற்கு என் யூகம் எந்த விதத்தில் குறைச்சலாகப் போய்விட்டது?"

"என் யூகத்தை நான் உங்களிடம் வந்து சொன்னேனா..."

"என்னிடம் சொல்லியிருந்தால் தான் நம் வாழ்க்கை விளங்கி இருக்குமே.. எந்தக் காலத்தில் நீ என்னை நம்பினாய்?"

"நம்பாமல்தான் உங்களுக்கு கழுத்தை நீட்டியிருக்கிறேனா?"

"இல்லையென்று சொல்கிறாயா?"

"எனக்கு இப்படிப் பூடகமாக கேட்டால் பதில் சொல்லத் தெரியாது..."

"அதானே.. அம்மணி நேருக்கு நேர் போட்டுத் தாக்குகிறவளாச்சே.."

''எதைப் பேசினாலும் சண்டைக்கு வருவது போலவே பேசுகிறீர்கள். நான் உங்கள் பேச்சுக்கே வரவில்லை...''

''இறங்கி பின் சீட்டிற்கு வந்து அடித்து விடுவேன். என்னிடம் பேச வராமல் வேறு யாரிடம் பேசுவாய்?''

''ஏங்க நான் அப்படிச் சொன்னேனா..?''

''நீ சொன்னதற்கு அப்படித்தான் அர்த்தம்...''

வீட்டுக்குள் கார் நுழைந்தது. ஆகாஷ் இறங்கி கேட்டை மூடிவிட்டு வரச் சென்றான். அனுராதா கதவைத் திறந்து கொண்டு வீட்டிற்குள் சென்றாள். மாடிப்படியேறி உடை மாற்றி முகம் கழுவ படுக்கையறைக்குள் நுழைந்தாள். கட்டிலை பார்த்தவள் அப்படியே அசையாமல் நின்று விட்டாள்.

கட்டிலின் மேல் அவளது டைரிகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. ஆகாஷ் அன்னலட்சுமிபுரத்தில் விட்டுச் சென்ற சட்டையும், குறிப்பேடும், பேனாவும் இருந்தன.

அனுராதா அவசரமாய் அவற்றின் அருகே சென்றாள். படுக்கையறைக் கதவு மூடும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள் ஆகாஷ் நின்று கொண்டிருந்தான்.

அனுராதா கோபத்துடன் அவனை முறைத்துப் பார்த் தாள்.

''இதெல்லாம் என்ன?''

''நான் உன்னிடம் கேட்க வேண்டிய கேள்வி இது...''

''இவை எப்படி வெளியே வந்தன?''

''நிச்சயம் கால் முளைத்து வெளியே வரவில்லை...''

''நீங்கள் காலையில் காலேஜிற்குத்தானே போனீர்



''போனேன்.. கல்ச்சுரல் புரோகிராம். அதனால் லீவ் விட்டிருந்தார்கள். வீட்டுக்கு வந்து விட்டேன்...''

''வீட்டுக்கு வந்தவர்... பேசாமல் கையடக்கி இருப்பது தானே.. என் பீரோவை ஏன் குடைந்தீர்கள்..''

ஆகாஷ் அதற்கு மேல் அவளை பேச விடாமல் அனு ராதாவை இழுத்து அவள் இதழ் மூடினான்... இப்போது அனுராதா விலகவில்லை.

# 28



ஆகாஷின் தழுவலில் வேகம் இருந்தது. 'உன்னைப் புரிந்து கொள்ளாமல் போய் விட்டேனே' என்ற தாபம் இருந்தது. அவளுடைய மனதில் தான் மட்டும்தான் இருக்கிறோமென்ற கர்வம் இருந்தது. இவை எல்லா வற்றிற்கும் மேலாக அவளின் இதயத்தின் சாரக் கதவுகளை திறந்து உண்மை உணர்ந்து விட்ட நெகிழ்வு இருந்தது.

அனுராதா அவனுடைய அணைப்பிலிருந்து விடுபட விரும்பவேயில்லை. ஆண்டுக் கணக்கில் அடக்கி வைத்திருந்த தவிப்பை அவன் உணர்ந்துவிட்டதால் எழுந்த எல்லையற்ற நிம்மதியுடன் அவனின் தோள் தழுவி முகம் புதைத்தாள். ஆகாஷ் அவளின் கூந்தல் கோதி அவளது உச்சந்தலையில் முகம் புதைத்தான். அனுராதாவின் உடல் லேசாய் நடுங்கியதே ஒழிய அவள் விலகவில்லை. அவளது பின்னங்கழுத்தில் முத்தமிட்

டான். அவள் இசைந்தே நின்றாள். அனுராதாவின் முகம் விலக்கி அவள் விழிகளை ஊடுருவிப் பார்த்தான் ஆகாஷ்.

எப்போதும் விழி திருப்பிக் கொள்ளும் அனுராதா அவன் விழியோடு விழி கலந்தாள். அவளது விழிகளில் எல்லையற்ற காதல் இருந்தது.

'கரையில்லாக் காதல் என்பது இதுதானோ...' ஆகாஷ் அவளை மீண்டும் அணைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டு தழுவிக் கொண்டான். அவள் அவனது அணைப்பில் அடங்கிக் கிறங்கி நின்றாள். ஆகாஷின் வாய் பாரதியாரின் பாடலைப் பாடியது.

''கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா
உன்மத்தம் ஆகுதடி...''

அனுராதாவை அணைத்த வண்ணம் கட்டிலில் சரிந்தான். அவள் அவன் மார்பில் முகம் புதைத்தாள். அவள் கண்களில் நீர் வழிந்தது. ஆகாஷ் அதைத் துடைத்தவாறு பாடினான்.

''உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவையன்றோ - கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ...''

... இறுக்கித்



''இன்னும் ஏன் கண்ணீர் விடுகிறாய்? நீயும் நானும் அழுத காலமெல்லாம் மலையேறி போயே போயாச்சு. இனிச் சிரி..''

''எப்படிச் சிரிக்க..? நான் உங்கள் மேலுள்ள காதலால் அழுதேன்.. நீங்கள் எங்கே அழுதீர்களாம்..''

''இது வேறா? ஏண்டி ஆண்பிள்ளை வாய்விட்டு அழுவானா? நான் மனதிற்குள்ளேயே அழுதேன்டி...''

''எதற்கு.. என் தாத்தா வாக்குக் கேட்டு என்னை உங்கள் தலையில் கட்டி வைத்து விட்டாரென்று தானே...''

''உன் புத்தி உன்னை விட்டு எங்கே போகும்? ஏண்டி.. உன் தாத்தாவிடம் மரியாதையும் அன்பும் பாசமும் வைத்தவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களில் யாரும் இப்படி ஓர் வாக்குறுதியைக் கேட்டால் உடனே கொடுத்து விடுவார்களா?''

''நான் உங்களைத்தானே காதலித்தேன்.. உங்களைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேனென்று தாத்தாவிடம் சொல்லிவிட்டேன். அதனால் அவர் உங்களிடம் வாக்குறுதி கேட்டார். உங்கள் பாஷையில் சொல்வதாக இருந்தால்... உங்களிடம் கேட்காமல் வேறு யாரிடம் கேட்பார்?''

''அடி என் புத்திசாலி பெண்டாட்டியே.. உன் பார்வையில் நான் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை.. ராகினி போன்ற பெண்களிடம் பல்லைக் காட்டுபவன்.. அவர்களது சாகஸப் பேச்சுக்களில் மயங்கி.. அவர்கள் 'தோ.. தோ..'வென்று அழைத்தால் வாலை ஆட்டிக் கொண்டு அவர்கள் பின்னால் பக்கத்து வீட்டு ஜிம்மி மாதிரி போய்

dsc00650.jpg (3072x2304x24b jpeg)



''நான் உங்களை அப்படிச் சொன்னேனா?''

''சொல்லவில்லை நினைத்தாய்...''

''ச்சு.. என்ன நீங்கள்.. நாய்.. பேயென்று சொல்கிறீர் கள்.''

''நாயென்று என்னை நினைத்து பேய் போல நீ மாறிப் போனாய்...''

''ச்சு.. என்னை விடுங்கள்...''

''விடுவதா.. உன்னையா.. இனிமேலா.. ஊஹூம்.. கடைசிவரை உன்னை விடுவதாக இல்லை என் கண் மணியே..''

''இந்தக் கொஞ்சலில் ஒன்றும் குறைச்சல் இல்லை...''

''மற்றவற்றிலும் குறைச்சல் இல்லை... இனி நீ பார்க்கத்தானே போகிறாய்.. அதுதான் உன் இதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிந்துவிட்டேனே... இனி உன்னால் தடை சொல்லவும் முடியாது.. நீ தடுத்தாலும் நான் கேட்கவும் மாட்டேன்...''

அவன் அவள் தோளை இறுக்கிப் பிடித்தான். அனு ராதாவின் முகம் சிவந்தது. அவன் பிடி இரும்புப் பிடியாய் இருந்தது. இன்பமான வலியை அவள் உணர்ந்தாள். ஆயினும் பேச்சை வளர்த்தாள்.

''ஆயிரம்தான் சொல்லுங்கள்.. என் தாத்தா கேட்டுக் கொண்டதால் தான் நீங்கள் கல்யாணத்திற்கு ஒப்புக் கொண்டீர்கள்..''

''அது என்னவோ உண்மைதான்.. ஆனால் உன் தாத்தா கேட்டுக் கொள்ளாமல் இருந்திருந்தால்.. நான் காலமெல்லாம் பிரம்மச்சாரியாய் இருந்திருப்பேன்.. அதுவும் உண்மைதான்..''



''என்னது..?'' விழிகளை அகல விரித்தாள் அனுராதா.

''ஏண்டி இப்படித் தெறித்து விழுந்து விடுவதைப் போல் கண்களை உருட்டி விழிக்கிறாய். உன் தாத்தா கேட்டுக் கொண்டாலும்.. உன் அபிப்ராயப்படி ஓர் உல் லாசியான.. ஊர் சுற்றுகின்ற ஆகாஷ் எனப்படும் நான்.. அகங்காரி.. அடங்காப்பிடாரி.. என்று மனதார நான் நம்பிக் கொண்டிருக்கும் உன்னைத் திருமணம் செய்து கொள்ள எப்படி சம்மதம் தருவேன்?''

அனுராதா விழித்தாள்... புரியாமல் அவனிடமே கேட்டாள்.

''அதுதானே.. ஏன் சம்மதம் சொன்னீர்கள்?''

புரியாமல் சிறு குழந்தைபோல் அவள் கேட்ட விதம் அவனுக்கு சிரிப்பை வரவழைத்தது. செல்லமாக அவளின் பின்னந்தலையில் ஒரு தட்டுத் தட்டினான்.

''ம்ம்... உணக்கையாய் இப்போது இந்தக் கேள்வியைக் கேளு. இதை முதலிலேயே நீ கேட்டிருந்தால்.. உன் இதயத்தை நான் அறிந்து கொள்வதற்கு முன்.. என் இதயத்தை நீ அறிந்து கொண்டிருப்பாய்...''

''இப்போது தான் சொல்லுங்களேன்...''

''நீ மட்டும் சொன்னாயா?''

''அது ஒன்று இருக்கின்றதா..? அப்போச்சரி.. நானாய் கண்டுபிடித்து விட்டு அதன் பின்னால் உங்களுடன் பள்ளி கொள்கிறேன். இப்போது என்னை விடுங்கள்...''

''அடிப்பாவி... முதலுக்கே மோசம் செய்கிறாயே... நீ இதிலேயே குறியாக இரு. விளங்கிவிடும். விலகுவதைப் பற்றி நீ நினைத்தாலே அடித்துவிடுவேன். ஒழுங்காய்.. மரியாதையாய்.. இப்படியே இரு...''

"அப்படியென்றால் சொல்லுங்கள்..."

"பிளாக்மெயில் பண்ணுகிறாயா?"

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்.."

"நீ என் பெண்டாட்டிடீ.. வேறு மாதிரி சொல்கிறாய்..."

ஆகாஷ் பலமாய் சிரித்தான். அனுராதா அவன் கையைப் பிடித்து பலமாய் கிள்ளினாள்.

"ஆண்பிள்ளைப் புத்தி இப்படித்தான் குதர்க்கமாய் நினைக்கும். பேசுகிற பேச்சைப் பார். இது என்னவோ நல்ல பிள்ளையாம். நான் நம்ப வேண்டுமாம்..."

"நம்பாவிட்டால் போ.. உன் தாத்தா ஏன் என்னை நம்பி வாக்குறுதி கேட்டார்.. அதை முதலில் தெரிந்து கொள்..."

"அதைத்தானே நானும் கேட்கிறேன்..."

அவன் புன்னகை மலரச் சொன்னான்... சொல்லச் சொல்ல அனுராதாவின் இதயத்தின் சாளரக் கதவுகள் மகிழ்வுடன் திறந்து கொண்டன.

# 29



"அனு.. உன் தாத்தா ஏன் என்னை அவரது கடைசி நேரத்தில் அழைத்து அந்த வாக்குறுதியைக் கேட்டா ரென்று உன்னை விட எனக்கு நன்றாகத் தெரியும். உன் தாத்தாவைப் பற்றி நீ அறிந்தது இவ்வளவு தானா? அவர்



பிரியமும், கனிவும் இருந்தாலும் அவள் வீட்டை விட்டு வெளியேற்றியதால் மனதில் வலியோடு விலகிப்போன என்னை அழைத்துப் பேத்தியின் விருப்பத்தை நிறை வேற்ற வாக்குறுதி கேட்கமாட்டார். இதை நீ முதலில் புரிந்து கொள்..."

"நீங்கள் தாத்தாவின் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவர் என்பதால் இருக்கலாம் அல்லவா?"

"உன் தாத்தாவிடம் எனக்கு இருந்தது மதிப்பும், மரியாதையும் தான் நன்றிக்கடன் இல்லை. என் வாழ்வை பணயம் வைக்கும் வாக்குறுதியை ஒருவர் மீது வைத் திருக்கும் மரியாதையின் பொருட்டு நான் கொடுப்பவன் அல்ல. இதை நீ இரண்டாவதாய் புரிந்து கொள்."

"அப்புறம் ஏன் வாக்குக் கொடுத்தீர்கள்...?"

ஆகாஷ் அவளை அணைத்து அவளது நெற்றியில் முத்தம் இட்டான். அவளது கன்னம் தடவி உச்சி முகர்ந் தான்.

"அனு.. மைடியர் அனு.." என்று கொஞ்சினான்.

"என்னங்க.." அவள் புரியாமல் வினவினாள்.

"நான் உன்னைத்தான் காதலித்தேண்டி என் முட்டாள் பெண்டாட்டியே.. உன்னை என் உயிருக்குயிராய் காதலித்தேன்.."

"பொய்.." அனுராதா நம்ப மறுத்தாள்.

"எது பொய்..? அன்னலட்சுமிபுரத்திற்கு நான் வந்த வேலை முதல் வாரத்திலேயே முடிந்துவிட்டது.. அது தெரியுமா உனக்கு? என் படிப்பிற்கு தேவையான குறிப்பு களை எடுத்துவிட்டேன். அதன் பின்னாலும் குறிப்

பெடுக்க நான் அன்னலட்சுமிபுரத்திற்கு வருகிறே
னென்று காரணம் சொன்னதுதான் பொய். அதை நீயும்
புரிந்து கொள்ளாமல் என் காதலையும் தெரிந்து கொள்
ளாமல் என்னிடம் வெறுப்பைக் காட்டி விரட்டினாய்..''

''அது.. எதனால்.. என்றால்..'' அனுராதா தவித்தாள்.

அவளது பூவிதழ்களின் மீது கை வைத்து அவள்
பேசுவதை தடுத்த ஆகாஷ்,

''வேண்டாம்டி.. சிரமப்பட்டுக் கொள்ளாதே.. எனக்குத்
தெரியும்.. உன் டைரிகளை படித்துவிட்டேன்.. பொது
வாக அடுத்தவரின் டைரிகளை.. அது கட்டின மனைவி
யாக இருந்தாலும் படிக்கக் கூடாதென்ற கொள்கை
யுடையவன்தான் நான்.. ஆனால் உன் இதயத்தை
அறிந்து கொள்ள எனக்கு வேறு வழி தெரியவில்லை.
அனு.. ஸாரி...'' என்று கூறினான்.

அனுராதா செல்லமாய் அவன் மார்பில் குத்தினாள்.

''நான் அதைப்பற்றி எதுவும் கேட்டேனா..?''

''கேட்காவிட்டாலும் நான் விளக்கம் சொல்ல
வேண்டுமில்லையா? அனு.. நான் அன்னலட்சுமிபுரத்
தில் முதன் முதலாய் கண்டபோதே என்னை நீ
கவர்ந்துவிட்டாய்.. உன் இயல்பான தோற்றமும்..
வெடுக் வெடுக்கென்றே பேச்சும்... தேவையில்லாமல்
வழியாத குணமும்.. நிமிர்வும் என்னை வசீகரித்து
விட்டது.. உன்னைப் போல் ஒருத்தியை நான் அதற்கு
முன்பும் கண்டதில்லை... பின்பும் கண்டதில்லை...''

ஆகாஷ் சொல்லச் சொல்ல அனுராதா நெகிழ்ந்து போய்
அவனது கரத்தில் முத்தமிட்டாள். மனைவியை ஆசை
யுடன் அணைத்துக் கொண்ட ஆகாஷ் தொடர்ந்தான்.



''நீ என்னை வசீகரித்து விட்டாய்.. உன்னைக் காணவே
என் படிப்பை சாக்காய் சொல்லி.. நான் அன்னலட்சுமி
புரத்திற்கு வந்தேன். உன்னிடம் வம்பிழுக்க எனக்கு
பிடிக்கும். அப்போதுதான்.. அவள் நம் வாழ்வில்
குறுக்கிட்டாள்...''

அனுராதாவின் முகம் வெறுப்பை பிரதிபலித்தது.

''அவளைப் பற்றிப் பேசாதீர்கள்... அவளை நினைத்
தாலே எனக்கு கொலை வெறி வருகிறது.. அன்று அவளை
அடிக்கவே போய்விட்டேன்.. தாத்தா தடுத்துவிட்
டார்...''

''விடுடி.. நீயெல்லாம் கோபப்படும் அளவிற்கு அவள்
பெரிய ஆளா? அனு.. அவளை மையமாக வைத்து
உன்னை வம்பிழுக்கவே நான் ஆசைப்பட்டேன்..
சத்தியமாய் அவள் என்ன பேசினாள் என்பதைக் கூட
நான் கவனிக்கவில்லை... அனு...''

''அவளை ஆர்வமாய் பார்த்தீர்களே..''

''உன் பொறாமையைத் தூண்டிவிடத்தான் அப்படிப்
பார்த்தேன்.. அடிக்க வராதே.. நான் பாவம்டி.. உன்
புருசன்.''

''திருடன்..''

''திருடன்தான். அவளை ஓர் விநாடி ஆர்வமாய்
பார்ப்பதுபோல் நடித்துவிட்டு உன் முகம் மாறுவதைப்
பார்த்துக் கொண்டே இருப்பேன். உன் முகத்தில் எள்ளும்
கொள்ளும் வெடிக்கும். அதைப் பார்க்க எனக்குப்
பெருமையாய் இருக்கும். என் பார்வை லேசாய் திசை
மாறினால் கூட நீ பொறுத்துக் கொள்ளாமல் கோபம்
கொள்வாய் என் மனதிற்குள் தென்றல் அடிக்கும்...''

dsc00653.jpg (3072x2304x24b jpeg)



"ஆனால் என் மனதில் புயல் அடித்ததே..."

"அதுதான் எனக்கு வருத்தம் அனு.. என் விளையாட்டு விபரீதமாய் போய்விடும் என்பதை நான் அறியவில்லை. நீ மட்டும் பொறுமையாய் இருந்திருந்தால் நான் உன்னிடம் என் காதலைச் சொல்லியிருப்பேன். உனக்கு ஒன்று தெரியுமா? நீதான் என் காதலை உணர்ந்து கொள்ளவில்லை. அந்த ராகினிப் பேய் நன்று உணர்ந்திருந்தாள்..."

"அவள்தான் விவரமானவளாயிற்றே..."

"அதுவேதான்.. அவளைப்போய் என்னுடன் இணைத்து எப்படி நீ நினைத்தாய் அனு.. நான் காரில் ஏறும்போது அவள் அருகே வந்து வேண்டுமென்றே பேசுவாள். நான் அவளுக்கு உறைப்பது போல் காட்டமாய்த்தான் பேசுவேன்.. எதுவுமே நடக்காதது போல் முகத்தை வைத்துக் கொண்டு அவள் டாட்டா சொல்லும்போதே எனக்கு யோசனைதான்..."

அவன் சொல்லவும் அனுராதா புரியாமல் அவன் முகம் பார்த்தாள். அவன் முகம் தீவிரமான சிந்தனையில் இருந்தது.

## 30



"அனு.. அவள் என்னிடம் வந்து பேசும்போது நான் ஒன்று சொன்னால் அவள் அதற்கு சம்பந்தமேயில்லாதது போல் வேறு ஒன்றைச் சொல்வாள். நான் வெறுப்புடன்



காரைக் கிளப்புவேன். அவள் எதுவுமே நடக்காதது போல் டாட்டா காட்டுவாள்.. அனு எனக்கு என்ன தோன்றுகிறது என்றால்.. நீ என்னைப் பார்க்க மொட்டை மாடிக்கு வந்து நின்றிருந்ததை அவள் பார்த்திருக்க வேண்டும். அதனால்தான் நீ என்னை தவறாக நினைக்க வேண்டுமென்று அப்படிச் செய்திருக்கிறாள்.." ஆகாஷின் முகம் கோபத்தில் சிவந்தது.

"அவளெல்லாம் ஏமாற்றும் அளவிற்கு நான் மக்காய் இருந்திருக்கிறேனே..." அனுராதா வேதனையுடன் சொன்னாள்.

"நீ ஏண்டி இதற்குப் போய் வேதனைப்படுகிறாய்? கோபம் இருக்குமிடத்தில்தான் குணம் இருக்கும்... குணம் இருப்பவளிடத்தில் தான் காதல் பிறக்கும். அவள் குணம் கெட்டவள்... அவளை நான் வெறுப்பாகத்தான் பார்ப்பேன். அவளால் ஒரு போதும் என்னைக் கவர முடியாது என்பதை அவள் நன்கு அறிவாள். அவளது நோக்கம் உன்னையும் என்னையும் பிரிப்பதாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவள் ஒரு முறை என்னிடம் 'அனுராதா தான் உங்கள் கண்ணுக்கு தெரிகிறாளா? நான் தெரியவில்லையா?' என்று கேட்டாள். நான் முறைத்துக் கொண்டே போய்விட்டேன். உன்மேல் எனக்கிருந்த காதலையும் ஆர்வத்தையும் உன்னை விட அவள் நன்கு அறிவாள். அதனால்தான் திட்டம் போட்டு நம் நிம்மதியை கெடுத்து விட்டாள்.." ஆகாஷ் பெருமூச்சு விட்டான்.

"சரியாகச் சொன்னீர்கள் அத்தான்..." அனுராதா ஆமோதிக்க.

"ஏய்... என்னவென்று என்னை அழைத்தாய்.. திரும்பச் சொல்லு..." என்று ஆகாஷ் அவளைக் கொஞ்ச ஆரம்பித்து விட்டான்.

dsc00654.jpg (3072x2304x24b jpeg)



முகம் சிவக்க அனுராதா அவன் மார்பில் புதைந்து கொண்டாள். சற்று நேரம் அவளிடம் கொஞ்சிக் கெஞ்சி அவள் முகம் விலக்கிப் பார்த்த ஆகாஷ் காதலுடன் அவளைப் பார்த்தான்.

''என் பெயர் ஆகாஷ்.. அத்தானா?'' ஆகாஷ் வம்பிழுத்தான்.

''நான் அப்படித்தான் கூப்பிடுவேன்..'' அனுராதா அவனது சட்டையின் பட்டனைத் திருகினாள்.

''இப்ப ஏண்டி பட்டனைப் பிய்க்கிறாய்?''

''ம்ம்... சும்மாயிருங்கள்..''

''நான் சும்மாதானே இருக்கிறேன்..''

''அத்தான்.. ப்ளீஸ்...''

''சரி அதை விட்டுவிட்டேன்.. ராகினி ஒரு ஸாடிஸ்ட்.. அவளது திட்டத்திற்கு நாம் பலியாகிவிட்டோம். உனக்கு என்னைப் பார்க்கவே பிடிக்காமல் போய்விட்டது. இதை உன் தாத்தாவிடம் நீ சொல்லி கொண்டிருப்பதை நான் கேட்டுவிட்டேன். இதில் என்ன ஸ்பெசாலிட்டின்னா.. நான் கேட்டுவிட்டதை உன் தாத்தா பார்த்து விட்டார்...'' ஆகாஷ் அன்றைய நாளின் நினைவிற்கு போனான்.

''எப்போது..'' அனுராதா விழி மலர்த்திக் கேட்டாள்.

''நீ எனக்கு காபி கொண்டு வர மறுத்தாயே அப்போது...''

''ஸாரி அத்தான்..''

''சரிடி பெண்டாட்டி.. அவரே எனக்கு அன்று காபி கொண்டு வந்து கொடுத்தார். உன் பேச்சுக்கு சமாதானம் சொன்னார்.. அப்போதுதான்.. நான் அவரிடம் உன் மீது எனக்கிருந்த காதலைக் கூறினேன்... நீ உன் காதலை



சொல்லலாமேயென்று கேட்டார். என்னை வெறுப்பவளிடம் எனது விருப்பத்தை எப்படிச் சொல்வது ஐயாவென்று கேட்டேன். உன் மேலிருந்த கரை காணாத காதலை அவரிடம் சொல்லிவிட்டு அதை உன்னிடம் சொல்லக் கூடாது என்று வேறு சத்தியம் வாங்கிக் கொண்டேன்...''

''நானும் அப்படித்தான் அத்தான். உங்கள் மேலிருந்த காதலைச் சொல்லிவிட்டு உங்களிடம் சொல்லக் கூடாதென்று சத்தியம் வாங்கினேன்.''

''நமக்குள் எதில் ஒற்றுமை இருந்ததோ இல்லையோ.. இந்த விசயத்தில் எவ்வளவு ஒற்றுமை பார்த்தாயா..? நீ என்னை வெறுக்கிறாயாம்.. உன்னிடம் என்னுடைய காதலைச் சொல்வது எனக்கு பிரஸ்டீஜ் இஷ்யூவாம்...''

''அடபோங்கத்தான்... நீங்க வேற..''

''என்னடி கதையை மாத்துக்கிறாய்.. இப்போதுதானே நீயும் நானும் ஒன்னு.. இது காதல் பிறந்த மண்ணுன்னு சொன்னேன்... இப்போது என்னடாவென்றால் நான் வேறு என்கிறாயே..''

''அடடா.. நானும் உங்களைப் போல்தான் கேணத்தனமாய் நினைத்தேன் என்று சொல்ல வந்தேன்...''

''சந்தடி சாக்கில் என்னை கேணை என்கிறாய்...''

''ஸ்ஸ்.. நீங்கள் என்னைக் காதலிக்காதபோது என் காதலை நான் சொல்வதை கௌரவ குறைச்சலாக நினைத்தேன்...''

''ஒன்றுபட்ட மனம் கொண்ட புருசன் பெண்டாட்டி.. நல்லவேளை தொண்டைமான் ஐயா தலையிட்டாரோ.. நாம் பிழைத்தோமோ.. அன்று காலையில் போன்

dsc00655.jpg (3072x2304x24b jpeg)



வந்தவுடன் அடித்து பிடித்துக் கொண்டு ஓடி வந்து அன்னலட்சுமிபுரத்து வீட்டிற்குள் நுழைந்தவுடன் நான் உன்னைத்தான் தேடினேன் தெரியுமா...?''

''நான் ஒளிந்து நின்று கொண்டு பார்த்தேன் தெரியுமா?''

''உன் தாத்தா கடைசி நேரத்தில் அந்த வாக்குறுதியைக் கேட்டதும் எனக்கு ஆனந்தத்தில் பேசவே வாய் வரவில்லை.. ஒரு வழியாய் வாக்குக் கொடுத்துவிட்டேன்...''

''என்மேல் அவ்வளவு கோபத்தையும் வெறுப்பையும் வைத்துக் கொண்டு எப்படித்தான் என் கழுத்தில் தாலி கட்டினீர்களோ...''

ஆகாஷ் அனுராதாவின் கழுத்தில் மூக்கை உரசினான்.

''கோபத்தை விட தாபம்தான் அதிகமாக இருந்தது. உன் மேலிருந்த வெறுப்பை விருப்பம் ஜெயித்து விட்டது...''

''நான் நல்லவள் தெரியுமா..?''

''நான் இல்லையென்று சொன்னதே இல்லையே.. நீ கோபக்காரியென்ற பயம்தான் எனக்கு.. வேறு குறையில்லை...''

ஆகாஷ் அனுராதாவின் தோள் பற்றி இழுத்துக் கொண்டான்.

## 31



எத்தனை யுகங்களாய் அறிந்ததைப் போன்ற ஜென்ம ஜென்மாந்திர பந்தம் ஒன்று அனுராதாவைப் பார்த்த



நொடியிலேயே ஆகாஷிற்கு ஏற்பட்டது. எவராலும் சலனப்படுத்த முடியாத அனுராதாவின் மனதை அவன் சலனப்படுத்தினான். அவள் அவனை விரும்பினாள். அவனோ அவளால் ஈர்க்கப்பட்டான்.

இருந்தும் இருவரும் ஒருவர் அன்பை ஒருவர் உணராமல் பிரிந்தனர். பிரிந்தபோதும் அனுராதாவின் இடத்தில் இன்னொருத்தியை நினைத்துப் பார்க்கக் கூட ஆகாஷ் விரும்பவில்லை... அனுராதாவோ அவனைத் தவிர வேறு யாரையும் திருமணம் பண்ணிக் கொள்ளக் கூடாதென்பதில் உறுதியாக நின்றாள்.

இருவரின் உள்ளமும் அறிந்த பண்பட்ட தொண்டைமான் இருவரையும் வாக்குறுதியால் கட்டிப்போட்டு விட்டுக் காலமானார். திருமணம் செய்து கொண்டு தம்பதிகளான பின்னும் ஒருவர் மனதை ஒருவர் உணராமல் இதயத்தில் வலியோடு இருவரும் பிரிந்தே வாழ்ந்தனர்.

அதிரடியாய் ஆகாஷ் நடவடிக்கையில் இறங்கி அவளது இதயத்தின் சாளரத்தைத் திறந்தான். அவன் பார்வையென்னும் காற்றுப்பட்டதும் அவள் இதயத்தில் பதுங்கியிருந்த காதல் உணர்வு கட்டவிழ்ந்து வெளியே வந்தது.

மோக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஆகா
ஷும் அனுராதாவும்.. இரவு உணவை மறந்தனர்.. ஆகா
ஷின் தாகம் பொங்கி எழ அனுராதா அவன் கைக்குள்
அடங்கினாள். நெஞ்சம் நிறைந்து விலகிச் சென்றவள்...
நித்தமும் சிந்தையில் வந்து அவன் நிம்மதியைக் கொன்
றவள்.. இன்று தென்றலாய் அவன் தேகம் தழுவினாள்..
குளிர் ஊற்றாய் அவனது தாகம் தீர்க்க மருகினாள்.

விடியலின் அருகாமையில்தான் பசியே அவர்களுக்கு உறைத்தது.

தன் கைக்குள் அடங்கியிருந்த அனுராதாவின் காதுகளில் ஆகாஷ் முணுமுணுத்தான்.

''அனு... பசிக்குதுடி..''

''அச்சச்சோ... நாம் நைட் சாப்பிடவே இல்லையே..''

அனுராதா பதறி விலகினாள்... ஆகாஷ் விட மறுத்தான்.

''இப்ப ஏன் எழுந்து போகிறாய்..?''

''போகாமல் டிபன் செய்ய முடியுமா?''

''இங்கேயே ஏதாவது பிஸ்கட் இருக்கான்னு பாரு..''

''அது எப்படிப் பசி தாங்கும்?''

''ஸ்ஸ்... எல்லாம் ஓர் அவசரத்திற்கு உதவுவது தானே... அது போதும்..'' ஆகாஷ் அவள் கன்னத்தில் வாசம் பார்த்தான்.

''எந்த அவசரத்திற்கு.. உதவுவதாம்..?'' அனுராதாவிற்கு சிரிப்பு வந்தது.

''இந்த அவசரத்திற்குத்தான்..'' ஆகாஷ் அவளை இறுக்கிக் கொண்டான். அனுராதா கிறங்கினாள்.

''ப்ளீஸ்.. கொஞ்ச நேரம் அத்தான்... நேற்று மதியம் சாப்பிட்டது.. எப்படிப் பசி தாங்கும்?''

''இது வரை தாங்கவில்லையா..? அது போலதான்... நீ கிட்ட வா..'' ஆகாஷ் கரம் நீட்டி அவளை அழைத்தான்.

அவள் விலகி எழுந்து அறைக்கதவைத் திறந்து கொண்டு விரிந்து கிடந்த கூந்தலை கொண்டையிட்ட வண்ணம் மாடிப்படிகளில் இறங்கினாள்.



அவளது அழகை ரசித்த வண்ணம் ஆகாஷ் அவளை ''அனு.. ஏய் அனு.. நில்லுடி..''என்று அழைத்த வண்ணம் தொடர்ந்து இறங்கினான்.

அனுராதா சமையலறைக்குள் நுழைந்து புடவையை இழுத்துச் செறுகிக் கொண்டு பரபரவென்று வெங்காயத்தை நறுக்க ஆரம்பித்தாள்.

ஆகாஷ் அனுராதாவின் பின்னால் நின்று கொண்டு அவளை அணைத்துக் கொண்டான். அனுராதா அவனுக்கு இசைவாய் நின்று கொண்டே வேலையைப் பார்த்தாள். அனுராதாவின் பின்னங்கழுத்தில் முகம் புதைத்துக் கொண்ட ஆகாஷ்.

''அனு... என்ன பண்ணுகிற..'' என்றான்.

''உப்புமா பண்ணுகிறேன்...''

அனுராதா சிரித்துக் கொண்டே அடுப்பை பற்ற வைத்து வாணலியை அடுப்பில் வைத்தாள். நெய்யை ஊற்றி வெங்காயத்தை போட்டு வதக்க ஆரம்பித்தபோது ஆகாஷ்...

''ஷ்ஆஆ.. என்ன ஓர் வாசனை பார்...'' என்று வாசம் பிடித்தான்.

அடுப்பில் நீர் கொதிக்க ஆரம்பிக்க வறுத்த ரவையை அதில் கொட்டி கிளற ஆரம்பித்த அனுராதா.

''நெய்யில் வெங்காயம் வதங்கினால் வாசம் வரத்தான் செய்யும்.. ஐந்து நிமிடம் பொறுங்கள்.. ரெடியாகிவிடும்..'' என்று கூறினாள்.

''உன் சமையல் வாசனையை யாருடி சொன்னது... உன் கூந்தல் வாசனையைச் சொன்னேன்..''

''அதுதானே பார்த்தேன்..''

அனுராதா செல்லமாய் கணவனின் காதைப் பிடித்து டைனிங் டேபிளில் அமர வைத்தாள். உப்புமாவை பரிமாறி,

''சாப்பிடுங்கள்..'' என்றாள்.

''நீயும் வா சாப்பிடலாம்..''

''ஒரே தட்டிலா..''

''ஒரே கட்டிலில் படுக்கிறோம். ஒரே தட்டில் சாப் பிடக் கூடாதா? பேசாமல் வாடி...''

இருவரும் சாப்பிட்டார்கள்.. விடியலின் போது எழுந் திருக்க மறந்து அயர்ந்து தூங்கினார்கள். பத்து மணிக்கு பதறி எழுந்து வேலைக்கு விடுப்புச் சொன்னார்கள். மீண்டும் முதல்நாள் கதையைத் தொடர்ந்தார்கள்.

## 32



''அனு.. அனு.. இங்கே வாயேன்.. சீக்கிரம் வா...'' ஆகாஷ் வாசலில் நின்று கொண்டு கத்தினான்.

அனுராதா அவசரமாய் வாசலுக்கு ஓடி வந்தாள்.

''ஏங்க... இப்படிச் சத்தம் போடறீங்க.. வாசலில் என்ன வைத்திருக்கிறீங்க..''

கேட்டபடி வந்தவள் திகைத்து நின்றாள். வாசலில் புத்தம் புதிய கார் நின்று கொண்டிருந்தது. ஆகாஷ் பெருமையுடன் கையைக் கட்டியபடி அதில் சாய்ந்து கொண்டு நின்றான்.



''என்னங்க புது கார் போல இருக்கே?''

''புதுக் கார் தான்...''

''நம்ம கார் எங்கே?''

''இதுதான் நம்ம கார்...''

''ச்சு.. பழைய கார் எங்கே...''

''விற்று விட்டேன்..''

''ஏன்..'' அனுராதாவிற்கு விடை தெரிந்திருந்தது.. அவனது கண்களும் அதையே கூறின.

''நீ என்னருகில் உட்கார மறுக்கும் கார் எனக்கு எதற்கு? அதனால்தான் விற்றுவிட்டு புதுக்கார் வாங்கிவிட்டேன்.''

''எனக்காகவா..?''

அனுராதா வாசலென்றும் பாராமல் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''உனக்காகத்தான் நான்.. கார் மட்டும் விதி விலக்கா..?''

''இதற்கு அப்போதே சொப்னாவை அருகில் உட்கார விடாமல் இருந்திருக்கலாமே..''

''அதைத்தான் அன்றே சொல்லி விட்டேனே.. இனி நான் குடும்பஸ்தன். அனுராதாவின் கணவன். உலக நடப்பு தெரிந்தவன்...''

வாசலில் ஆட்டோ சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த் தார்கள். பரசுராம் கைப்பெட்டியுடன் இறங்கினான். ஆகாஷ் முகம் மலர்ந்தான். வாசலை நோக்கி கையை விரித்துக் கொண்டு விரைந்தான்.

''டேய்.. பரசு..''

''ஆகாஷ்..''

dsc00658.jpg (3072x2304x24b jpeg)



ஆகாஷின் நீட்டிய கைகளுக்குள் புகுந்து கொண்டு ஆகாஷை கட்டியணைத்துக் கொண்டான் பரசுராம்.

"அனு.. இது யார் தெரியுமா..?" ஆகாஷ் பரசுராமின் கையைப் பிடித்துக் கொண்டு அனுராதாவிடம் கேட்டான்.

"நீங்கள் சொன்னால்தானே தெரியும்..." அனுராதா பரசுராமை ஆராய்ந்தபடி கூறினாள்.

அவளுக்கு ஆகாஷ் பரசுராமிடம் காட்டிய நெருக்கம் பிடிக்கவில்லை. அவனது மார்பில் சாய்ந்து நின்றிருந்த போது நொடிப் பொழுதில் ஆகாஷ் அவளை விட்டுப் பிரிந்து பரசுராமை கட்டித் தழுவிக் கொண்டது அனுராதாவின் மனதில் பொறாமையை உண்டு பண்ணியது.

'எத்தனையோ ஆண்டுகளுக்கு பின்னர் ஒன்று சேர்ந்திருக்கிறோம். இவன் யார் பூஜை வேளைக் கரடி போல் எங்கள் இருவருக்கும் குறுக்கே வர...'

அவள் சமையலறைக்குள் நுழைந்து காபி கலக்க பாலைச் சுட வைக்க ஆரம்பித்தாள். ஹாலில் பேச்சுக் குரல் கேட்டது. அவள் காபியைக் கலக்கி இரண்டு கப்களில் ஊற்றி எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தபோது பரசுராம் உற்சாகமாய் கூறிக் கொண்டிருந்தான்.

"இன்னைக்கு சன்டே.. நீங்கள் இரண்டு பேரும் லீவில் இருப்பீங்கன்னு தெரியும்.. அதனால் இன்றைக்கு முழுவதும் உங்களுடன் இருக்கலாம் என்கிற ஐடியாவோடு.. கிளம்பி வந்தேன்."

"கெட்டிக்காரண்டா நீ.. சரியாத்தான் யோசித்திருக்கிறாய்.." ஆகாஷ் பரசுராமின் தோளில் கை போட்டுக் கொண்டு கூறினான்.



"இந்தாங்க..."

அனுராதா இருவருக்கும் காபியை நீட்டினாள். அவள் மனம் பரசுராமைத் திட்டிக் கொண்டிருந்தது. சற்று முன்தான் ஆகாஷ் அவளிடம் கூறிக் கொண்டிருந்தான்.

"அனு... இத்தனை நாளாய் என் அருகே நீ உட்காராமல் கார் ஓட்டும்போது என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? இன்றைக்கு புதுக் கார் வந்திருக்கிறது.. கமான்.. கெட் ரெடி.. க்விக்."

"எங்கே.. கிளம்பச் சொல்கிறீர்கள்?"

"எங்கேயாவது போவோம்.. ஊர் சுற்றுவோம்.. தஞ்சை பெரிய கோவிலுக்குப் போகலாம். மணி மண்டபத்தைச் சுற்றலாம். இன்று ஊர் சுற்றுவதுதான் வேலை."

"நல்ல கதையாய் இருக்கே.. சமைக்க வேண்டாமா?"

"வெளியே பார்த்துக் கொள்ளலாம். கிளம்பு.. கிளம்பு.."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதுதான் பரசுராம் ஆட்டோவில் வந்து இறங்கினான்.

'முதன் முதலாய்... அவர் வெளியே போகலாம்ன்னு கூப்பிட்டார்... அது முடியாமல் போய் விட்டதே.'

அவள் மனம் சோர்ந்து போனாள்.

"அனு... டிபன் என்ன பண்ணப் போகிறாய்...? பரசு நான்வெஜ் வாங்கிட்டு வரவா.." ஆகாஷ் பரசுராமனிடம் கேட்டான்.

'இது வேறா.. இன்றைக்கு சமையல்காரி உத்தியோகம் தான்.'

அனுராதா முடிவெடுத்தபோது பரசுராமன் ஆகாஷிடம் அதை மறுத்து விட்டான்.

"டேய்.. நான் ஒரு முக்கியமான விஷயத்திற்காக வந்திருக்கிறேன். இன்றைக்கு நான்வெஜ் வேண்டாம்..."

'அப்பாடி..' அனுராதா உள்ளே செல்ல திரும்பினாள்.

"அனு இங்கே வா.. இவன் யார் என்று தெரியுமா? இப்படி உட்காரேன் சொல்லுகிறேன்."

அவன் பரசுராமின் அருகே உட்கார்ந்து கொண்டு அனுராதாவிற்கு எதிர் சோபாவைக் காட்டினான்.

அனுராதா முறைத்துக் கொண்டே எதிரே அமர்ந்தாள்.

"அனு.. இவனும் நானும் நகமும் சதையும் மாதிரி.. எல்.கே.ஜி.யிலிருந்து காலேஜில் பி.ஜி. வரை ஒன்றாகப் படித்தோம். நான் எம்.பிஃல் பண்ணிவிட்டு லெக்சரர் ஆகி விட்டேன். இவன் ஸ்டேட் கவர்ன்மென்டில் ஆபிசர் போஸ்டில் ஜாயின் பண்ணிட்டான்... காலேஜில் இவனுக்கும் எனக்கும் என்ன பெயர் தெரியுமா?"

ஆகாஷ் ஏதோ ஜோக் சொல்லியது போல் சிரிக்க பரசுராம்,

"டேய்... வேண்டாம்டா.. இதையெல்லாம் தங்கை கிட்ட போய் சொல்லாதேடா" என்று தடுத்தான்.

"அதெல்லாம் முடியாது.. சொல்லியே தீருவேன்.. எங்கள் இரண்டு பேரையும் ஜோடிப் புறாக்கள்னு சொல்லுவாங்க ஹோ... ஹோ..."

ஆகாஷ் விழுந்து விழுந்து சிரித்தான். அனுராதா சிரிக்காமல் பரசுராமை உர்ரென்று பார்த்தாள்.

'நீ என் புருசனுக்கு ஜோடிப் புறாவா. அப்போ நான் யார்?'



பரசுராம் தான் அனுராதாவின் பார்வை வித்தியாசத்தை உணர்ந்தான். யோசனையுடன் அவளைப் பார்த்தான்.

'இவள் ஏன் உர்ரென்று இருக்கிறாள். இன்னும் இவளும் ஆகாஷும் ஒன்று சேரவில்லையா.. நன்றாகத் தானே பேசிக் கொள்கிறார்கள்? அப்புறம் என்ன?'

"ஏண்டா அதுகிட்டப் போய் இந்தக் கதையை அளந்துக்கிட்டு இருக்க? நீ சொல்லு. எப்படி இருக்கு உன் கல்யாண லைப்...?"

"அமர்க்களமாய் இருக்கு.." ஆகாஷ் அனுராதாவைப் பார்த்து கண் சிமிட்டினான்.

அவ்வளவு நேரமும் இருந்த இறுக்கம் மறைய அனுராதாவின் முகத்தில் வெட்கம் வந்தது. பரசுராமின் மனதில் நிம்மதி வந்தது.

'அப்பாடா.. இரண்டும் ஜாயின் பண்ணிடுச்சு... போல..'

பரசுராம் அனுராதாவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே கூறினான்.

"என்னம்மா... என்னை தெரியாதது போல பார்த்துக் கொண்டு இருக்கிறாய்.. உங்கள் கல்யாணத்தில் நான் தான்ம்மா மாப்பிள்ளைத் தோழன்... அது மட்டுமா... ஏண்டா உன் கதையைச் சொல்லவா?"

"அதெல்லாம் அவளுக்குத் தெரியும்டா..."

பரசுராம் சொல்ல வந்ததை ஆகாஷ் தடுக்க அனுராதா புரியாமல் பார்த்தாள்.

"என்ன சொல்ல வருகிறார்..?"

"அது ஒன்னுமில்லை அனு... நீ போய் டிபன் பண்ணு."

''இல்லை.. எதுவோ இருக்கிறது.. நீங்கள் சொல்லுங்கள்.''

பரசுராம் முன்னால் சாய்ந்து அனுராதாவின் முகம் பார்த்துக் கூறினான்.

''ராதா...''

''ராதான்னு கூப்பிடுகிறீர்களே...''

''அனுன்னு கூப்பிட்டால் இவன் என்னை உண்டு இல்லைன்னு பண்ணி விடுவான். இத்தனை வருடமாய் காப்பாற்றி வந்த பிரண்ட்சிப் உடைய வேண்டுமா...? நீயே யோசனை பண்ணு... அனுங்கிறது அவன் மட்டும் கூப்பிடும் பிரத்யேகப் பேராம்... வேறு யாரும் அப்படிக் கூப்பிடக் கூடாதாம்...''

அனுராதாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''இது உங்களுக்கு எப்படித் தெரியும்? போனில் சொன்னாரா?''

''போனிலா.. உன்னைப் பார்த்த நாள் முதலாய் இந்த நான்கு வருடங்களாக ஒரே 'அனு' ஜெபம்தானே... ஒரு கூத்து நடந்தது தெரியுமா? இவன் எங்கள் வீட்டிற்கு வந்து ஒரு நாள் தங்கியிருந்தான்...''

''டேய் வேண்டாம்...'' ஆகாஷ் தடுத்தான்.

''போடா.. அன்று ராத்திரி தலையணையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கட்டிலில் இருந்து உருண்டு விட்டான்.''

''பரசு போதும்டா...''

''நீ கேளும்மா... இறங்கிப் போய் தலையணையை உருவப் போனால்... விட மாட்டேன் என்கிறான்.''

''அனு நீ உள்ளே போ...''



''நீ போகாதேம்மா... என் அனுவை என்னிடமிருந்து பிரிக்காதேன்னு ஒரே ரகளை பண்ணிட்டான். ஒரு வழியாய் இது தலையணைடா.. உன் அனு இல்லைன்னு கன்வின்ஸ் பண்ணுவதற்குள் எனக்குப் போதும் போதுமென்றாகி விட்டது...''

அனுராதாவின் முகம் ஒளிர்ந்து விட்டது. பரசுராமை பாசத்துடன் பார்த்தாள்.

''உங்களுக்கு பூரி கிழங்கு பிடிக்குமா அண்ணா.''

''செம வெட்டு வெட்டுவேன்.''

''அதுதான் காலை டிபன்.''

அனுராதா மான்போல் உற்சாகத்துடன் சமையலறைக்கு ஓடினாள்.

## 33



''அனு ரெடியா...?'' ஆகாஷ் கீழே நின்று கொண்டு கத்தினான்.

''ஏண்டா... லேடிஸ் டிரஸ் பண்ணும்போது அவசரப் படுத்தலாமா..? மெதுவாய் கிளம்பி வரட்டும்'' பரசுராம் ஆகாஷை கடிந்து கொண்டான்.

''உனக்கென்னடா.. பிரம்மச்சாரி.. சொல்லிட்டே.. என் கஷ்டம் எனக்கில்ல தெரியும். இந்தப் பெண்களை சமையலில் விட்டால் நொடியில் சமைத்து விடுகிறார்கள். டிரெஸ் பண்ணச் சொன்னால் மட்டும் மணிக் கணக்கில்

டைம் ஆகுது. அதுதான் ஒண்ணும் பிடிபட மாட்டேங்குது.''

''ஒண்ணு செய்..'' பரசுராம் தீவிரமான முகத்துடன் கூறினான்.

''என்னடா..?'' ஆகாஷ் ஆவலுடன் கேட்டான்.

''பேசாமல் இந்த ஆராய்ச்சியையும் பண்ணி இன்னொரு பி.எச்டி. பட்டம் வாங்கிடு. உன் வேலைக்கு உதவும்.''

''டேய்.. அடி வாங்கி ரொம்ப நாளாச்சா.''

அனுராதா மாடிப்படியில் இறங்கி வந்து கொண்டிருந்தாள். மயில் கழுத்து பிரிண்டட் சில்க் சேலையில் வெட்டித் தைத்த பிளவுஸ்.. தளர்வாய் பின்னலிட்டிருந்தாள். காதுகளில் முத்து ஜிமிக்கி. கழுத்தில் முத்து ஆரம். கைகளில் முத்து வளையல்கள்.

ஆகாஷ் சொக்கிப்போய் நின்றான். மனைவியின் மேல் வைத்த கண்ணை அவனால் விலக்கிக் கொள்ளவே முடியவில்லை. பரசுராம் அவன் முதுகில் ஓர் அறை வைத்து தந்நிலைக்கு வரவைத்தான்.

''எதுக்கு லேட்டாகுதுன்னு கேட்டாயே... இப்படி உன்னை மயக்கம் போட வைக்கத்தான் லேட்டாக்குச்சு என் தங்கை...''

''ஆனாலும் பரசு... இவள் இவ்வளவு அழகாக இருந்து தொலைக்கக் கூடாது. மனுசன் மேல் கொஞ்சமாவது கரிசனம் இருந்தால் இப்படி இவள் என்னை கிறங்கடிப்பாளா?''

''ஏண்டா பாவி இப்படிச்



''பின்னே என்னடா.. என் பால்ய காலச் சிநேகிதன் நீ. முதல் முதலாய் வீட்டுக்கு வந்திருக்கிறாய்... இவன் வராமலிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைக்க வைக்கலாமா இவள்?''

அனுராதா மகிழ்ந்து போய் விட்டாள். தன் மனதிலிருந்த எண்ணம்... தாபம்.. தன் கணவனுக்கும் இருக்கிறது என்ற நினைவில் அவள் இதயம் குளிர்ந்து விட்டது. நல்ல மனைவியாய் அவனை அதட்டினாள்.

''போதுமே.. என் கரிசனம் இப்போது முக்கியமில்லை. பிரகதீஸ்வரரின் தரிசனம் தான் இப்போது முக்கியம். வாங்க போகலாம்..'' என்று கூறி விட்டு ஒயிலாக வாசலுக்குச் சென்றாள்.

அவர்கள் தஞ்சை பெரிய கோவிலுக்குக் கிளம்பிக் கொண்டு இருந்தார்கள். பரசுராம் அன்று மாலையே ஊர் திரும்ப வேண்டுமென்று சொன்னதால் ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பி விட்டார்கள். மதியம் ஹோட்டல் எதிலாவது சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று ஆகாஷ் கூறி விட்டான்.

காருக்குள் ஆகாஷ் ஏறி டிரைவிங் சீட்டில் அமர்ந்து விட வீட்டை பூட்டி விட்டு சாவியை ஹேண்ட் பேக்கில் போட்டுக் கொண்டு வந்த அனுராதா திகைத்தாள்.

கடைசியில் புதிதாய் வாங்கியிருக்கும் காரிலும் கணவன் அருகில் அமரும் பாக்கியம் தனக்குக் கிடைக்காதோ... முதன் முதலாய் அதில் ஏறி அமரப் போகும் தான் பின் சீட்டில் தான் உட்கார வேண்டுமோ... தளர்ந்த நடையுடன் அனுராதா காரின் பின் சீட்டுக் கதவைத் திறக்கப் போகையில் ஆகாஷ் அனுராதாவை அழைத்தான்.

''அனு... முன்னால் வா...''

''இல்லை... அண்ணா உட்காரட்டுமே என்று...'' அனுராதா தடுமாறுகையில் பரசுராம் இலகுவாகச் சிரித்தான்.

''இது என்னம்மா பழக்கம். எவ்வளவுதான் நெருங்கிய உறவு.. நட்பாக இருந்தாலும்.. கணவன், மனைவி இருவருக்குமே அவர்கள் கொஞ்சம் தூரத்து உறவுதான். கணவன், மனைவி இருவருக்கும் இடையே வரும் உரிமை யாருக்கும் கிடையாது. ஆகாஷின் அருகே நீதான் உட்கார வேண்டும். அது உன் இடம். அதை எக்காரணம் கொண்டும் யாருக்கும் விட்டுத் தராதே...'' என்று கூறிக் கொண்டே அனுராதாவிற்கு முன் பக்கக் கதவைத் திறந்து விட்டான்.

அனுராதாவின் கண்கள் கலங்கி விட்டன. எவ்வளவு நல்லவன்.. பிறர் மனமறிந்து நடக்கும் இயல்புடையவன். இவன் வருகைக்காக முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்ட தன் சின்னப் புத்தியை எண்ணி வெட்கினாள் அவள். பரசுராம் பின் சீட்டில் ஏறிக் கொள்ள கார் தஞ்சை பெரிய கோவிலை நோக்கிப் பறந்தது.

ஓர் விமானம் போல் தோற்றமளித்த கோவிலின் வெளிப்புற தோற்றத்தை ரசித்தபடி அதன் நீண்டு அகன்ற வெளிப் பிரகாரத்தில் அவர்கள் நடந்து கொண் டிருந்தார்கள்.

''அண்ணா.. இந்தக் கோவிலைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று அனுராதா கேட்டாள்.

''ராஜராஜ சோழன் கட்டியது... அவ்வளவுதான் தெரி யும்.''



''இந்தக் கோவிலில் உள்ள பிரம்மாண்ட நந்தி சிலை வளர்ந்து கொண்டே இருக்கிறதாம்.. தெரியுமா?''

''ஈஸிட்... அது எப்படிடா ஆகாஷ்?''

''என்னைக் கேட்டால் எனக்கு என்ன தெரியும்? பட்... இந்தக் கோவிலின் நந்தி சிலையைப் பற்றி புராணக் கதை ஒன்று உண்டு. இந்தக் கோவிலின் நந்தி இரவு நேரங்களில் உயிர் பெற்று தஞ்சையைச் சுற்றி வந்ததாம். இறைவன் சிவன் ஆணியடித்து அதை ஒரே இடத்தில் அமர வைத்தாராம்...''

''சிவபெருமான் ஏன் அதைச் செய்தாராம்.''

''பக்தர்கள் பயந்து போய் அவரிடம் வந்து முறையிட் டார்களாம்.''

''ஹௌ நைஸ் ஸ்டோரி... ஆகாஷ் இங்கேதானே கருவூர் சித்தர் சந்நிதி இருக்கிறது..?''

''ஆமாம்.. அவரைப் பற்றிச் சொன்னால் இந்த ஒரு நாள் போதாது...''

''அண்ணா.. நீங்கள் பேசுவதெல்லாம் பழங்கால புராணக் கதைகள். நான் சொல்ல வருவது.. நம் கண் முன் நடந்த நிஜம்..''

''என்னம்மா சன் டி.வி. மாதிரி சொல்லுகிறாய்.. சரி சொல்லு.''

''நான்கைந்து வருடங்களுக்கு முன்னால் நான் ஒரு வார இதழை படித்துக் கொண்டிருந்தபோது அதில் ஒரு கவர் ஸ்டோரி வெளியாகி இருந்தது. நம் தமிழகத்தில் இருக்கிற ராஜ பரம்பரையைப் பற்றி அவர்கள் வீட்டிற்கே சென்று பேட்டி எடுத்து கட்டுரையாக வாரா வாரம்

வெளியிடுவார்கள். அது குமுதமா.. இல்லை ஆனந்த விகடனா என்று நினைவில்லை... நான் படித்த கவர் ஸ்டோரியில் தஞ்சாவூர் ராஜவம்ச இளவரசர் ஒருவரை பேட்டியெடுத்து போட்டிருந்தார்கள்...''

''ஐ ஸீ... அதில் என்னம்மா படித்தாய்?''

''அந்த ராஜவம்சத்து இளைஞரின் படிப்பு.. தொழில்.. வியாபாரம்.. பொழுது போக்கு.. அவர் திருமணம் செய்திருந்த ராஜ குலத்துப் பெண் என்று அலசி ஆராய்ந்திருந்தவர்கள்.. அந்தப் பேட்டியில் அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்கள்..''

''என்ன கேள்வி...?''

''தஞ்சை பெரிய கோவிலை சீரமைத்து கும்பாபிஷேகம் பண்ணும் பணியில் நீங்கள் ஈடுபட்டு இருக்கிறீர்களாமே... பழமையான இந்தக் கோவிலை புனரமைப்பது கூடாது... அப்படிச் செய்தால் தீ விபத்து போல ஏதாவது நேர்ந்து விடும்... என்று சொல்கிறார்களே.. உங்களுக்கு பயமாக இல்லையா என்று கேட்டிருந்தார்கள்...''

''வெரி இன்ட்ரெஸ்டிங்... அப்புறம்.''

''சரியாய் ஒரு ஆறு மாதமிருக்கும்... தஞ்சையில் தீ விபத்து... கும்பாபிஷேகத்தில் தீப்பிடித்து விட்டதுன்னு ஒரே பரபரப்பு... அப்போது குங்குமம் வார இதழைப் படித்தேன். அதில் முதல்வரின் மனைவி பேட்டி கொடுத்திருந்தார்கள்.''

''என்னவென்று...?''

''தீ விபத்தில் சிக்கி காயப்பட்டிருந்தவர்களைப் போய் பார்த்து என் கணவரும் நானும் ஆறுதல் கூறினோம்.



அந்த ராஜ வம்சத்து தம்பி எனக்குத் தெரிந்த பையன் தான்... சின்ன வயது.. பாவம்.. என்னைப் பார்த்ததும் கண்ணீர் விட்டு அழுதார்ன்னு சொல்லியிருந்தார்கள்.''

''அப்படியா..?''

''ஆமாம் அண்ணா. இதில் என்னைப் பாதித்தது எதுன்னா.. முதலில் நான் படித்த கவர் ஸ்டோரியில் உங்களுக்குப் பயமில்லையா? என்று கேட்ட கேள்விக்கு 'இல்லை.. நாம் இளைய தலைமுறை.. இது போன்ற மூடநம்பிக்கைகளை தவிர்க்க வேண்டும்' என்று சொன்ன அதே இளவரசர்தான் தீக்காயத்துடன் கண்ணீர் விட்டிருக்கிறார். அவர் ஏன் அழுதார்? இது இன்று வரை என் மனதில் உள்ள கேள்வி அண்ணா.''

''ராதா.. கடவுள் வாழும் கோவில்கள் மனித ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது அம்மா... விஞ்ஞானத்தில் கரை கண்டவர்கள் ஏராளம்... ஆனால் ஆன்மிகத்தில் யாரும் கரைகாண இயலாது. நம் இந்திய ஆன்மிகம் வரையறைக்கு அப்பாற்பட்டதம்மா. அதை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. கோவிலின் பழைமை குறையக் கூடாது. அவ்வாறு குறைந்தால் அது தீக்குளித்து தன்னை சரி பண்ணிக் கொள்ளும் என்பது இந்த கோவிலில் ஆண்டவன் வகுத்த விதி. அதை அலட்சிமாய் நினைத்து விட்டோமென்று அவர் கலங்கியிருக்கலாம்... சரிவா.. சாமி கும்பிடப் போவோம்.''

அவர்கள் பிரகதீஸ்வரப் பெருமானை வணங்கி வழிபட்டு விட்டு மணி மண்டபத்தைப் பார்க்கச் சென்றார்கள். மதிய உணவை பிரபல ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டுவிட்டு காவேரிக் கரைக்கு காரை விட்டார்கள். அகன்று ஓடி தஞ்சை மண்ணை செழிக்க வைக்கும்

காவேரித் தாயின் கரையில் அமர்ந்து கொண்டு பேசினார்கள்.

''அண்ணா.. இங்கே பக்கத்தில்தான் கும்பகோணம். இங்கே உள்ள சிவபெருமானின் கோவில்கள் எல்லாம் பிரம்மாண்டமானவை. அப்புறம் கும்பகோணத்தைச் சுற்றியுள்ள ஊர்களில்தான் நவக்கிரக ஸ்தலங்கள் இருக்கின்றன தெரியுமா? நீங்கள் இன்னும் ஓர் நாள் இங்கு இருந்தால் அவற்றையும் சுற்றிப் பார்த்து விட்டுப் போகலாம்.''

''இன்னொரு நாள் ஒரு வாரம் தங்கியிருப்பது போல் வருகிறேன் ராதா.''

அவர்கள் வீடு திரும்பியதும் அனுராதா காபி போட உள்ளே விரைந்தாள். அவள் காபியுடன் திரும்பி வந்ததும் பரசுராம் எழுந்து நின்று கொண்டு,

''ராதா ஒரு தட்டைக் கொண்டு வாம்மா'' என்றான்.

ராதா காபி டிரேயை டீப்பாயில் வைத்து விட்டு தட்டை எடுத்து வந்தாள். பரசுராம் அதில் பட்டுப் புடவை.. பேன்ட் சர்ட்.. பழம்.. வெற்றிலை பாக்கு.. ஆயிரம் ரூபாய் நோட்டு இவற்றை வைத்து அதன் மேல் ஓர் பத்திரிகையை வைத்தான்.

''இரண்டு பேரும் சேர்ந்து நில்லுங்கம்மா...''

இருவரும் இணைந்து நின்றவுடன் தட்டை எடுத்து இருவரிடமும் நீட்டி,

''எனக்குக் கல்யாணம்டா ஆகாஷ்.. நீ என் தங்கையுடன் வந்திருந்து நடத்திக் கொடுக்க வேண்டும்'' என்று கூறினான்.



''அது என் கடமைடா...'' ஆகாஷ் சந்தோசமாய் நண்பனைக் கட்டிக் கொண்டான்.

பழம், வெற்றிலை, பணம் துணியுடன் அழைப்பிதழ் கொடுப்பது ஓர் உயர்ந்த கௌரவத்தைக் கொடுப்பது போலாகும்.

அப்படி ஓர் கௌரவத்தை தன் நண்பனுக்கு தேடி வந்து கொடுத்த பரசுராமை விழியகலப் பார்த்தாள் அனுராதா.

அதே திருமண மண்டபம். அதே மொட்டை மாடி. அதே கைப்பிடிச்சுவரில் அமர்ந்து கொண்டு ஆகாஷ் இருக்க அனுராதா அவனை அணுகி அவன் தோளில் கை வைத்துத் திருப்பினாள்.

''எல்லோரும் கீழே உட்கார்ந்திருந்தால் நீங்கள் மொட்டை மாடியில் இருட்டில் நின்று கொண்டு என்ன செய்கிறீர்கள்?''

''இது மொட்டை மாடியில்லை. நினைவுச் சின்னம். இங்கே நின்று கொண்டு என் திருமண நாளை நினைத்துப் பார்த்தேன்...''

''நல்லாயிருக்கு உங்க கதை. வாசலில் சீரியல் லைட் மண்டபத்தில் மெல்லிசைக் கச்சேரி... ஜெகஜோதியாய் பிரகாசிக்கும் விளக்குகள்.. விருந்தினர்கள்.. இவைகள் எதுவும் நம் திருமண நாளை நினைவு படுத்தாதா?''

''இல்லை அனு.. இங்கே நின்று கொண்டு தான் நான் தவித்துக் கொண்டிருந்தேன். விரும்பாத பெண்ணின் கழுத்தில் விடிந்தால் மூன்று முடிச்சுப் போட வேண்டுமே என்று மருகிக் கொண்டிருந்தேன். பரசு வந்துதான் சமாதானப்படுத்தி அழைத்துப் போனான்.''

அனுராதா கோபத்துடன் கீழே போகத் திரும்பினாள். ஆகாஷ் அவள் கரம் பிடித்துத் தடுத்தான்.

''எங்கே போகிறாய்...''

''கீழே போய் பரசு அண்ணாவையே அனுப்புகிறேன்... உங்களை அவர் அழைத்துக் கொண்டு வரட்டும்...''

''இனி உன்னைத் தவிர யார் பின்னாலும் போக மாட்டேன் அனு...''

ஆகாஷ் அவளைக் கட்டித் தழுவி அவள் முகத்தில் இதழ் பதித்தான். கோபம் பறந்தோடிய அனுராதா தாபத்துடன் அவனைப் பதிலுக்குத் தழுவி தன்னோடு இறுக்கிக் கொண்டாள்.

ஒவ்வொருவரின் இதயத்திலும் ஓராயிரம் உணர்வுகள் ஒளிந்திருக்கும். இதயத்தின் சாளரத்தை எவரேனும் தட்டித் திறந்து விட்டால் அவை இதமாக வெளியேறி உயிர் கொடுக்கும்.

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.